"என் கடன் பணி செய்து கிடப்பதே"

குமரன்

ஆண்டு மடல்

சொந்தக்காரர்

தனவைசியன் கம்பெனி, லிமிடெட். காரைக்குடி.



சிறந்த வர்ண வேலைப்பாடுகளமைந்த அச்சுவேலை செய்து கொடுத்ததற்காக
குமரன் பவர் அச்சுக்கூடத்திற்கு, காரைக்குடி நகரசபை உபதலைவர்
திருவாளர் மு. ராம. பெரியணன் செட்டியாரவர்களால் கொடுக்கப்பட்ட

வெள்ளிப் பதக்கம்.

திருவாளர் மு. ராம. பெரியண்ணன் செட்டியார்.
குமரன் பவர் அச்சுக்கூடத்தின் திறமையை உணர்ந்து
வெள்ளிப் பதக்கம் பரிசளித்தவர்.

பொருளடக்கம்.

க. சிவகதி (பாட்டு):—அப்பர்.

உ. சென்ற ஆண்டு.

ங. நூல் நிலயப்பிரசாரம்:—தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர் S. வையாபுரிப்பிள்ளை.

ச. தீ வணக்கமே சிவ வணக்கம், நீர் வணக்கமே மால் வணக்கம்:—பண்டித எஸ். எஸ். ஆனந்தம்.

ரு. வெளிநாட்டுக் கோயில்கள் (படங்களுடன்).

சா. குறள்கற்கும் முறை:—பொ. திரிகூடசுந்தரம் M.A., B.L.

எ. சைவமும் ஜாதி வேற்றுமையும்:—டீ. எஸ். கந்தசாமி முதலியார் B. A., சாத்தூர்.

அ. ஆண்டுமடலுக்கோர் ஆங்கிலரசம்:—வி. ஆர். எம். செட்டியார், B. A.

கூ. பத்திரிகைத் தலைப்பாரம்:—அ. ஆறுமுகம், கோட்டாறு.

கO. தமிழின் தற்கால நிலை(பாட்டு):—பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள், யாழ்ப்பாணம்.

கக. பெண் கல்வி:—க. வீ. அழ. அழகப்ப செட்டியார்.

கஉ. வாலிபர்களின் முன்னேற்றம்:—ரெவரண்டு H. A. பாப்லி.

கங. ஓர் சமரச ஞானி:—கதை விநோதன்.

கச. தன்னரசின் பெருமை:—த. ராமகிருஷ்ண விஸ்வகர்மன் (வேதமாணுக்கன்)

கரு. முருகனும் அழகனும்:—தமிழ்த்தொண்டன்.

கசா. வேலைகிடையாத் திண்டாட்டம் (பாட்டு):—ஒரு பண்டிதன்.

கஎ. தண்டனை:—ரா. கி.

கஅ. அச்சேருத பாரதிபாடல்:—சி. சுப்பிரமணிய பாரதியார்.

கசு. இராமாயணத்தைப்பற்றிய சில குறிப்புக்கள்:—ஜ. கிருஷ்ணமூர்த்தி.

உO. பர்மா (படங்களுடன்):—சுவாமி அத்புதானந்தா.

உக. ஒருபறவையின் சிந்தனை(பாட்டு):—எஸ். தேசிக விநாயகம் பிள்ளை, திருவனந்தபுரம்.

உஉ. கணித சாஸ்திர விநோதம்:—நெல்லை நேசன்.

படங்கள் விபரம்.

ஆப்டோன் படங்கள்.

௧. இரண்டு சிறுவர்கள்:— மூன்று வர்ணப்படம்.
௨. கனம் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் (செட்டிநாட்டரசர்).

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலைக் கட்டிடங்கள்.

௩. கலைப்பகுதி.
௪. ரஸாயனப்பகுதி.
௫. மாணவர் விடுதி.

கோவில் கட்டிடங்கள்.

௬. கோலாலம்பூர் நகரத்தார் மடம்.
௭. செரம்பான் செல்வ விநாயகர் கோவில்.
௮. மலாக்கா சிவன் கோவில்.
௯. மூவார் தண்டாயுதபாணி கோவில்.
௧௦. சைகோன் தண்டாயுதபாணி கோயில் வெள்ளி ரதம்.
௧௧. பசுமந்தான் தண்டாயுதபாணி கோவில்.
௧௨. பினாங்குத் தண்ணீர் மலைமடம்.
௧௩. வாலப்பூர் மாரியம்மன் கோவில்.
௧௪. பினாங்கு சிவன் கோவில்.

11
050

பர்மா.

௧௫. பர்மியக்குடும்பம்
௧௬. பர்மியப்புங்கிகள் ஊர்வலம்.
௧௭. வெண்கலமணி.
௧௮. பர்மியப்பெண்.
௧௯. எருமை வண்டி.
௨௦. பச்சை குத்துதல்.

மலாய் நாட்டில் ரப்பர்.

௨௧. மரத்தில் பால் வெட்டுதல்.
௨௨. பக்குவப்படுத்துதல்.
௨௩. தகடாக்குதல்.
௨௪. கம்பர் சமாதி.

வேடிக்கைப் படங்கள்.

க. அருமையான சைகிள்; பேஷான சிகரட்!
உ. பெண்ணென்று கண்ணுக்குத் தெரிகிறது,
ங. மைனரும் தாஸியும்.
ச. சீட்டாட்டம்.
ரு. பட்டுக்கடை.
சு. நகைக் கடை.
எ. மோட்டார் வாங்குதல்.
அ. வெகு ஜோர்!
கூ. வாரண்டு.
க0. அடி உதை.
கக. மாணப் படுக்கை.

முத்திக்கு வழி.

கஉ. புராணப் பிரசங்கம்.
கங. நோய்ப் படுக்கை.
கச. எச்சலே கங்கா தீர்த்தம்!
கரு. வாத்தியார் வாயில் எலும்பைப் போட்டான்.

பெண் உரிமை

கசு. கல்யாண யோசனை.
கஎ. பத்து.
கஅ. இருபது.
ககூ. முப்பது.
உ0. நாற்பது.
உக. ஐம்பது.
உஉ. கல்யாணம்.
உங. சவுக்கடி.
உச. கேணிப் பாய்ச்சல்.
உரு. பாட்டிலோடு புறப்பட்டான்.

புருஷன் உரிமை.

உசு. ஷஷ்டியப்த பூர்த்திக்கு மனைவி.
உஎ. வாயில் பல்லா? பல்லில் வாயா?
உஅ. காதில் கை நுழையும்
உகூ. பெரிய உடல்.

௫0. குட்டை மயிர்.
௫க. முழநீள மூக்கு.
௫உ. பேஷான பெண்.
௫௩. கல்யாணம்.
௫ச. விதவையின் பரிதாபம்.
௫ரு. விட்டால் உலகம் மூழ்கும்.

"குமரன்"

தேனினு மினிக்கும் செந்தமிழ்ப் பத்திரிகை.

பேரறிஞரின் கட்டுரைகள் மிளிர்கின்றன.

செல்வச் சீமான்கள் கரங்களில் திகழ்வது.

சமூக சீர்திருத்தத்தில் முனைந்து நிற்பது.

வருடச் சந்தா.

வாரப் பதிப்பு.		மாதப் பதிப்பு.	
உள் நாட்டுக்கு ரூ.	**5-0-0.**	உள் நாட்டுக்கு ரூ.	**1-8-0.**
வெளி நாட்டுக்கு ரூ.	**6-0-0**	வெளிநாட்டுக்கு ரூ.	**2-0-0**

விளம்பரம் செய்வதற்குக் குமரனே சிறந்த பத்திரிகையாகும்.

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி (லிமிடெட்) காரைக்குடி.



30 NOV 1929
MADRAS

சிவகதி.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே"

—அப்பர்.

உ

சிவமயம்.

குமரன் ஆண்டு மடல்.

நாளென்செயும் வினைதா னென்செயும் எனைநாடிவந்த
கோளென்செயுங் கொடுங்கூற் றென்செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

காரைக்குடி, சுக்ல ஆண்டு ஆனித் திங்கள்.

சென்ற ஆண்டு.

சென்ற ஆண்டினை சமூக சீர்திருத்த முயற்சியில் மக்கள் பயன்படுத்தியுள்ளாரென்று கூறலாம். சமூக சீர்திருத்தம் மக்களுக்கு இன்றியமையாததென்ற உணர்வு எங்கும் பரவிவருகின்றது. மக்களின் இன்ப வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் ஆட்சிமுறை சீர்ப்படவேண்டுமோ அவ்வளவு தூரம் சமூக சீர்திருத்தமும் வேண்டப்படுவதாயிருக்கிறது. நமது நாட்டில் அரசியல் இயக்கத்தைவிடச் சீர்திருத்த இயக்கமே உரம் பெற்று வருவதைக் காணலாம். சுயஆட்சி பெற வேண்டுமென்ற விழைவினை வேண்டாமென்று வெறுப்பார் யாருமிலர். ஆனால் மக்களுக்குள்ளிருக்கும் உயர்வு தாழ்வுகளை, இடிப்புறாமல் வாழ்வதற்கு வேண்டியவாறு சீர்திருத்துதல் அவசியமென்பதே சமூகசீர்திருத்தக்காரரின் கருத்தாகும். தங்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்துள்ள உரிமைகளைப் பிறரடையாவண்ணம் தடுக்கும் மனப்பான்மை ஒழிதல் வேண்டும். பரம்பரையாகத் தாழ்த்தப்பட்டுக்கிடப்போர் அவ்வுரிமைகளைப்பெற அருகராதல் வேண்டும். இவ்வுரிமையைக் கூட நல்க மனமுறாது பிறரைத் தாழ்த்த வேண்டுமென்ற நோக்கங் கொண்டோர் செய்யும் சுயாராஜ்யக் கிளர்ச்சிக்குப் பொருளில்லையன்றோ? தங்களிடமுள்ள உரிமையைப் பிறர்க்கும் வழங்க விரும்பாத நிலையில் அன்னியரிடம் பெறும் உரிமைகளைப் பங்கிட்டுக்கொடுக்க முடியுமென்பதை யாரே நம்புவார்? இப்படிப்பட்ட அவநம்பிக்கை தகுந்த காரணங்களோடு தோன்றிவிட்டபடியால் சமூக சீர்திருத்த இயக்கம் உரம் பெற்று வருகிறது. உயர்குலத்தாரென்னும் காரணத்தால் பெற்றிருக்கும் உரிமைகளை யாவருக்கும் பொதுவாக விட வேண்டுமென்று அவர்களே முன்வந்து தியாகத்துடன் உழைத்தல்வேண்டும். அவ்வாறு

செய்வாராயின் சுயராஜ்யக் கிளர்ச்சிக்குப் பொருளுண்டு. சமூக வாழ்க்கையில் இந்திய மக்களுக்குள் சமத்துவமும் சுதந்திரமும் தோன்றுதவரை அன்னியரோடு சமத்துவமும் அவர்களிடமிருந்து சுதந்திரமும் பெறுவதென்பதற்குப் பொருளில்லை.

சுயமரியாதை இயக்கம்.

இவ்வியக்கம் தோன்றிய சில மாதங்கட்கிடையில் நாடு முற்றும் விரைவாகப் பரவி வருவதைக் காண்கிறோம். இவ்வியக்கத்தைப் போற்றுவார் பலர்; தூற்றுவார் சிலர். மௌனமுற்றுக் கிடப்போர் தொகைக்கும் குறைவில்லை. சுயமரியாதை இயக்கம் நாட்டில் வளர்ந்து வருவது பயன்விளைக்கத்தக்கதென்பதே நமது கருத்து. தூங்கிக்கிடக்கும் மக்களைச் சுயமரியாதை இயக்கம் தட்டி எழுப்புகிறது. காரணந்தெரியாது மக்களைப்பற்றி நிற்கும் எல்லா வழக்கங்களுக்கும் காரணங் காணவேண்டுமென்ற உணர்வையும் நல்குகிறது. காரணமில்லாமலும் மக்களுக்குத் துயரத்தைக் கொடுத்துக்கொண்டுமிருக்கும் வழக்கங்கள் பல பறக்கடிக்கப்படுகின்றன. இவ்வியக்கம் சிலருக்குத் தீமையாகத் தோன்றுவதையும் காண்கிறோம். இதைப் பற்றிப் பரப்பப்படும் பொய்க் கூற்றை விடுத்து நோக்கும்போது 'வரம்பின்றி இவ்வியக்கம் சென்றுகொண்டிருக்கின்றது; இதற்கொரு கட்டுப்பாடில்லை' எனக் கூறுவதாக அறிகிறோம். இஃதுண்மையே. ஒரு உணர்விலிருந்து ஊக்கமும் ஆண்மையும் கொண்டெழு மியக்கம் எழும்பொழுதே வரம்பு கட்டிக்கொண்டு புறப்படமுடியாது. மலையிற் பொழியும் பெருமழை தனக்கொரு வரம்பு கட்டிக்கொண்டு ஓடி வருவதில்லை. வெள்ளம் பெருக்கெடுத்தோடும்பொழுது தானே ஒரு வழியையும் ஏற்படுத்திக்கொள்ளுகிறது; அல்லது அதனருகே வாழும் மக்கள் வழி கோலிப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அப்படியே நமது மக்களது உணர்வினின்றும் எழும் இச்சுயமரியாதை இயக்கத்தை வரம்பில்லையென்று கூறுவோர் வரம்பமைக்க முயல்வாராக.

சைவர் மகாநாடு.

சுயமரியாதை இயக்கம் வளர்ந்து நாடெங்கும் பரவுவதால் சைவ உலகத்தில் ஒரு மாற்றம் காணப்படுகிறது. சேர்ந்ததெல்லாம்— எழுதிவைத்த நூலெல்லாம்— கட்டுக்கதையெல்லாம் சைவ சமயத்தின் மூலப்பொருள்கள்; அவைகளிற் கைபோடக் கூடாதென்று கூறிக்கொண்டு சோம்பிக் கிடந்த சைவ உலகம் இன்று எழுச்சியுறுவது மகிழ்ச்சிக்குரியது. கலப்பு மணமும், மக்கட் சமத்துவமும் இவைபோன்ற பிறவும் ஒளி வீசும்படி திருத்தமுற்ற சைவ சமயம் பார்ப்பன, சுமார்த்த நீதிகட்கு அடிமைப்பட்டுச் சாதி பேதத்தையும் பிற பல பேதங்களையும் தன்னதாக்கிக்கொண்டு மயங்கி நிற்கின்றது. அம்மாதிரியான மாசுகளை நீக்கி சமத்துவமும் நேர்மையும் கொண்ட சைவசமயத்தை நிலைநாட்ட வேண்டுமென்று சில அன்பர்கள் முயல்கின்றனர். சைவ உலகமாயினும், ஏனைய சமய உலகங்களாயினும் விழிப்படைவதும் எழுச்சியுறுவதும் நமக்குக் கழிபேருவகையை நல்குவனவாகும்.

கோயிற் பிரவேசம்.

உலக மக்கள் யாவரையும் படைத்த தாயும் தந்தையுமாக விளங்கும் ஆண்டவனை வழுத்துதற்கேற்பட்ட கோயில்களில் சாதி பேதம் வைத்துப் பலரை இழிவுபடுத்துங் கொடுமையை ஒழிக்கும்பொருட்டுக் கோயிற் பிரவேசங்கள் நாட்டில் நடைபெறத் தொடங்கிவிட்டன. ஆண்டவன் சந்நிதி எப்பொழுதும் பரிசுத்தமுடையதென்று கூறப்படுகிறது. மக்கள் யாவரும் ஆண்டவனின் குழந்தைகள் என்றும் கூறப்படுகிறது. ஆண்டவனின் குழந்தை ஆண்டவனின் சந்நிதியை அடைந்தால் தீட்டாகி விடுமென்று கூறுவது எவ்வளவு பொய்யும் கொடுமையுமாகுமென்பதை உணரவேண்

டும். இக்கொடுமை ஒழிவதற்காகச் சென்ற வாண்டில் இயக்கங்கள் தோன்றியுள்ளன.

அண்ணுமலை சர்வகலாசாலை.

தமிழகத்திற்குப் பேரும் பெருமையும் தரும் கல்விக்கோயில் சிதம்பரத்தில் காணப் பெற்ற இன்ப ஆண்டு சென்ற ஆண்டே யாகும். செட்டி நாட்டரசர் அண்ணுமலை யார் அள்ளி வழங்கிய எல்லையில் பொரு ளால் இந்நிலையம் காணப்பெறுகின்றது. தமிழகத்தின் சரித்திரத்தில் குறிப்பிடப் படும் முக்கியமான நிகழ்ச்சிகளுள் ஒன்ருகிய இந்நிகழ்ச்சியைப்பற்றிச் சென்ற ஆண்டு பெரிதும் புகழ்பெற்றதாகும்.

பெண் கல்வி.

சென்னை மாகாணத்தில் ஏழாவது வகுப்பு வரை இலவசமாகப் பெண்கல்வி போதிக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூற் றுக்குக் காலேயரைக்கால் வீதம் பெண் மக்கள் படித்துள்ள இத்தமிழ் மாகாணம் மூடவழக்கங்கட்கு ஆட்பட்டுக்கிடப்பதில் அதிசயமொன்றுமில்லை. ஈண்டு அறிவுப் பயிர் வளர வகையில்லாதபொழுது முட் செடிகள் நிறைந்து துயர் விளைப்பதை ஒவ் வொருவரும் அனுபவித்தே வருகின்றனர். அரசாங்கத்தாரின் முடிவு தமிழ் மக்க ளுக்கு நன்மைவிளைத்தல் கூடும்.

சீர்திருத்த மணங்கள்.

இவ்வாண்டில் சீர்திருத்த முறையில் மணங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஐயரும் ஆதித்திராவிடரும் ஒருபுறம்; முதலியாரும் முகமதியரும் மற்ருெருபுறம்;செட்டியாரும் நாயுடுவும் பிறிதொருபுறம் என விவாகங்கள் நடைபெறுகின்றன. கலப்பு மணமும் கணவ னிழந்த மாதர் மறுமணமும் நாட்டின் பிற் கால நிலைக்கு இன்றியமையாது வேண்டப் படுவனவென்று மகாத்மா காந்தியடிகளும் கூறியுள்ளார். தேசத்தின் கஷ்டநிலையையும் பொருளற்ற சடங்குகளையும் நோக்கும் போது கலப்புமணமும் இன்றியமையாத தாகின்றது. மாதரின் பரிதாப நிலையை நோக்கும்போது மாதர் மறுமணம் மிக மிக முக்கியமாகும். இத்துறையில் சென்ற ஆண்டு அபிவிருத்தியடைந்திருப்பது பெரி தும் குறிப்பிடத்தக்கது.

லாலா—பனகால்.

இந்திய மக்கள் சீர்திருத்தத்திற்கு ஆணி வேராக நின்றுழைத்த லாலாஜீயைச் சென்ற ஆண்டு நம்மைவிட்டுப் பிரிந்தது. தமிழகத் தின் மக்களுக்கு உணர்வை நல்கிய பனகால் அரசரையும் பிரித்துவிட்டது. இவ்விரு பெருந்தலைவர்களின் பிரிவு சமூகசீர்திருத்த உலகத்திற்கு ஆருத்துயரத்தைத் தந்திருக் கிறது. இவ்விருவருடைய ஸ்தானமும் நிறைவுபெருமல் இன்றளவும் இருப்பதைக் காணலாம். சீர்திருத்த இயக்கத்தில் முனை ந்து நிற்பார் அவ்விருவரையும் குறிக் கோளாகக் கொண்டு கடனுற்ற முந்துவா ராக.

அற்புதம்! உலகைப் பிரமிக்கச் செய்யும் ஆச்சரியம்!!

புரோபஸர் அன்பையன் அவர்களின்

புது வாழ்க்கை &

ஜீவரஹஸ்யம்.

என்னும் கோர்ஸ்களில்

மருந்தின்றி தாது சக்தி விருத்தியாகும் வழி

ஜோதிடமின்றி தன்னைப்பற்றி அறியும் வழி காணப்படுகின்றன.

50 கேள்விகளுட்பட சொற்பகாலம் வரை ஏழைகளும் வாங்கி வாசிக்க :விலை ரூ. 2-8-0க்கு கொடுக்கப்படுகின்றன.

ஜீவாத்மீக சாஸ்திரப்படி மனிதவர்க்கத்தின் முன்னேற்றம், கஷ்டம், நஷ்டம் வியாதிக்குரிய மறைபொருளான காரணங்களை தங்களின் ஜீவிய சுருக்கத்திலிருந்து சொல்லுவதோடு, ஆயுசு விர்த்தி, தனவிர்த்திக்கு வேண்டிய இயற்கையான வழிகள் காட்டப்படும். ஏராளமான நற்சாக்ஷி பத்திரங்கள் சார்ஜ் ரூ. 5. முதல் ரூ. 100. வரை அவரவர்களின் தேவைக்கு தகுந்த மாதிரி. முந்துங்கள். கடிதமூலமாவது நேரிலாவது தெரிந்து கொள்ளலாம்.

☞ இந்தியன் பையோ சைக்கலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட்,

நாசரேத் S. I. R. தென் இந்தியா.

நமது பலசரக்குக்கடை.

அஞ்சா நெஞ்சனால் எழுதப்பெற்று, தமிழறிஞர் யாவராலும் புகழப்படும் நூல் இது ஒன்றே. ஜாதி சமய முன்னேற்றத்திற்குச் சாதனமான உண்மைகள் பல மிளிர்ந்திலங்குவதால் தமிழ் இலக்கியத்தில் இஃது ஓர் முக்கிய ஸ்தானம் பெறுமென்பது யாவரும் அறிந்த விஷயமே. சொற்பப் பிரதிகளே கைவசமுள்ளன. வேண்டுவோர் விரைவில் எழுதுக! விலை அணா பத்தே.

கூழைரங்கன்.

இதுவும் அஞ்சா நெஞ்சனால் எழுதப்பெற்ற ஓர் இனிய அற்புத நவீனகம். தமிழ்ச்சுவை அறிவார்க்குத் தேனென இனிக்கும் என்பதில் ஐயமில்லை. இதன் விலை ரூபாய் ஒன்றுதான்.

தபாற்கூலி வேறு.

மானேஜர், "குமரன் புத்தகசாலை"

காரைக்குடி.



கனம் ராஜா ஸர். அண்ணுமலை செட்டியார் (நைட்)

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில்

தற்சமயமிருக்கும் கட்டிடங்கள்.



கலைப்பகுதி. (Arts)



ரசாயனப்பகுதி. (Science)



மாணவர் விடுதி. (Hostel)

நூல்நிலயப் பிரசாரம்.

தமிழ் லெக்ஸிகன் ஆசிரியர் திரு. S. வையாபுரிப்பிள்ளை.

"அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

வள்ளுவப் பெருந்தகையார் வெளியிட்டருளிய பேருண்மைகளுள்ளே தலைசிறந்து விளங்குவதாகும் இங்கே குறித்த திருக்குறளிற் போந்தபொருள். மக்களது அறிவு விளக்கத்தின் ஓர் அம்சமேயாகும் நாகரிகமெனப் படுவது. அவர்கள் பூமியில் தோன்றிய காலந்தொட்டுச் சிறிது சிறிதாக அறியாமையை வென்று அடிப்படுத்துவதே தந்தொழிலாக முயன்று வருகின்றார்கள். அறியாமையை முற்றும் அழித்தல் எக்காலத்தும் இயல்வதன்று. அறிவு வளருந்தோறும் அறியாமையும் ஒரு பக்கம் வளர்ந்து கொண்டே வருகின்றது. "அறிதோ றறியாமை கண்டற்றால்" என்பது வள்ளுவரது தெய்வத்திருவாக்கு. அறியாமையை மாயை என்று பெரியோர் கூறுவது பலபடியானும் பொருத்தமுடையதேயாகும். நமது அறிவுகொண்டு அறியாமையை அழிக்க அழிக்க, அது எத்தனையோ புதிய வடிவங்களைத் தாங்கி வந்து நம்மறிவைப் புறங்காண முயல்கின்றது. அறிவும் இளைத்தபாடில்லை. புதியவூக்கங்கொண்டு புதிய கருவிகள் பெற்று மாயம்போல் தோன்றிவரும் அப்புதிய வடிவங்களைத் தாக்கி அழிக்கின்றது. இங்ஙனமாக அறிவிற்கும் அறியாமைக்கும் இடைவிடாது போர் நிகழ்ந்த வண்ணமாகவே இருக்கின்றது. இவ்வாறு நிகழ்ந்துவரும் இடைவிடாப் போரின் கண்ணே மக்களைத் தகுதியுடையராக்கி அவர்கட்குப் புத்துயிரளித்துச் சிறிதுந் தளர்வெய்தாவண்ணஞ் செய்து வருவது கல்வியாகும். உயிரினங்கள் அழிவுருவண்ணம் காதலாதிய பற்றுக்களை இயல்பெனக் கருதும்படி அமைத்த இயற்கைத் தெய்வம் கல்வி யவாவினையும் மக்களிதயத்திலே ஊன்றி வைத்திருப்பது கவனித்தற்குரியது. இங்கே கல்வி யென்றது மிக விரிந்ததோர் பொருளில் உணரற்பாலது. கல்வியின்றி மக்கள் உயிர்வாழ்தல் தானும் இயலாததாகின்றது. அஃதின்றேல், உலக வாழ்விற் பெறத்தக்க உயர்தர வின்பங்கள் யாவும் இலவா யொழிகின்றன. 'விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல்—கற்றாரோ டேனையவர்' என்றபடி மக்களை மிருகங்களினின்று வேறுபடுத்திப்பிறவுயிரினங்கட்கில்லாத சிறப்பினையளிப்பது கல்வியாம். இத்தகைய அரும் பெருஞ் சிறப்புவாய்ந்த கல்வியின் இன்றியமையாமை மக்கள்—வாழ்வின் அதிபால்யப் பருவமுதற் கொண்டு நன்குணரப்பட்டதெனல் ஏலாது. குழந்தைகள் உணவின் இன்றியமையாமையை உணர்ந்தன்று உண்ணத் தொடங்குவது. அறிவுமுதிர்ந்த பிற்பருவங்களிலேதான் அதன் இன்றியமையாமையை உணருவது. இதுபோன்றே கல்வியின் ஆவசியகத்தை யுணர்தற்குமுன் மக்கள்—வாழ்வில் வெகுகாலம் சென்றிருத்தல் வேண்டும். உணரத் தொடங்கியதும் அவ்வுணர்வின்வலி நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கின்றது. தாங்கலாற்றாத இவ்வுணர்வின் பெருவலியால் கல்வியை மக்களிடையே பரக்க விதைத்தற்குத் தற்காலத்திற் கையாளப் பெற்றுவரும் அதிநூதனமுறைகளுள் ஒன்றாகும் நாம் இங்கே விவரிக்கப் புகுகின்ற நூல்நிலயப் பிரசாரம்.

காலந்தோறும் அவ்வக்காலத்திற் கிடைப்பனவாகிய சௌகரியங்களுக்குத்

தக்கவாறு கல்வியைப் பரவச்செய்வதற்கு ஒவ்வொரு சாதனம் ஏற்படுவதாகும். எழுத்துக்களே வழங்காத மிகப் புராதன காலமொன்று இருந்ததென நம்மால் இப்பொழுது நினைத்தற்கும் முடியவில்லை. எழுத்து வடிவிலமைந்த நூல்கள் அத்துணையளவாக நமது வாழ்வில் ஒன்றிப்போய்விட்டன. எனினும் எழுத்தியலாத காலமொன்று மக்கள்—வாழ்க்கைச் சரிதத்தில் உளதாயிருந்ததென்பது யாவரும் மறுக்கமுடியாத உண்மையாம். அக்காலத்திருந்த மிகச் சுருங்கிய கல்வி பரவி வந்தது கேள்விமூலமேயாதல் வேண்டும். இக்காரணத்தினலேயே முற்காலத்தில் கேள்வி—ஞானத்தை மிக விசேடமாகப் பாராட்டி வந்தனர். கல்வி மக்களிடையே பரவிக் கற்றற்குரிய நூல்கள் பலவாகப் பல்கிய காலத்தும், கேள்வி—ஞானத்திற்கெய்திய பெருமை சிறிதளவும் குறைவுபடவில்லை. இது பற்றியே 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்றார் வள்ளுவனரும். கேள்வி வாயிலாகக் கல்வி பரவிய முறை இவ்வாறெனவுணரத்தக்கது. நல்லறிஞர்கள் அங்கங்கே அருகிக் காணப்பட்டார்கள். அவர்களைத் தேடித்திரிந்து கண்டு, நெடுங்காலம் அடுத்திருந்து, அவர்களுக்குத் தொண்டுபுரிந்து வந்து, முடிவில் அவர்கள் யாது சொல்லவுடன்பட்டனரோ அதனை மாத்திரந் தெரிந்துகொண்டு அமையவேண்டியதாயிருந்தது. இம்முறையிலுள்ள சிரமங்களை நன்ருக மனங்கொள்ளுதல் வேண்டும். நல்லாசிரியர்களை வெகுகாலந் தேடித்திரிந்து கண்டுகொள்ளுதல், அவர்களுக்கு வருடக்கணக்காகத்தொண்டுபுரிந்து அவர்களோடு உடன்றிரிதல், அவர்கள் அன்புகொண்டு மனநெகிழுஞ் சமயத்தை எதிர்நோக்கியவண்ணமா யிருத்தல், முடிவில் மனங்கொண்டு அவர்கள் செல்லுதற்கொருப்பட்டன சிலவற்றைத் தெரிந்துகொள்ளுதல்—இத்தனை கஷ்டப்பாடுகள்! இங்ஙனங் கற்ற ஒரு சிலவும் பொருளுணர்தற்கரியவாய்ப் பெரும்பாலும் 'புதிர்'களாகவே இருந்தன. மேற்கூறியவாறு முயன்று வருந்தியபோதிலும், ஒரு சில ஆசிரியர்கள் முடிவுவரை யாதுங் கற்பியாதொழிந்திருத்தல் கூடுமென்று நாம் உணர்ந்தவளவில், நமது உள்ளம் பகீரென்று உடைகின்றது. எழுத்தியலாக்காலத்து நமது மூதாதையர்கள் கல்வியினருமை யுணர்ந்து பயின்று வந்த முறை இது.

பல நூற்றாண்டுகள் இங்ஙனஞ் சென்றன. நமது நாட்டில் எழுத்துக்கள் வழங்கப் பெறலாயின. மக்களது அறிவிற்கு அழியாமை நல்கியதுபற்றி இவ் எழுத்துக்கள் அட்சரங்களெனப்பட்டன போலும். அறிவின் விருத்திக்கும் மக்களது முன்னேற்றத்திற்கும் முதற்பெருங் காரணமாகிய இவ் எழுத்துக்களை புணர்த்தியவன் இறைவனாகவே கருதப்பட்டான். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்ற முதுமொழி நம் முன்னோர் எழுத்துக்களை எவ்வாறு போற்றி வந்தனரென்பதை நன்கு விளக்குகின்றது. கண்ணின்றி ஒருவனுக்கு உலகவாழ்வு இயலாதவாறு போல எழுத்தறிவின்றி உயிர் வாழ்வு கூடாதென்பது நன்குணரப்பட்டது. வள்ளுவரும் 'எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்று அருளிச் செய்தனர். இவ்வகைச் சிறப்புடைய எழுத்துக்கள் வழக்கியலவே, கல்வி கற்க விரும்புவோரது கருத்து இனிது முற்றுதற்குரிய கருவிகள் இப்பொழுது கை கூடுவவாயின. கற்றற்குரியன எழுதப்பெற்று நிலையான வடிவெய்தி நூல்களாய்த்திகழ்ந்தன. இவற்றைக் கற்பித்தற்குக் கல்விச்சாலைகள் அங்கங்கே கற்றறிந்தோரால் நடைபெற்றன. கலாசாலையிற் பாடஞ்சொல்லுவோர் 'கணக்காயர்' என்ற பெயரால் முற்காலத்து வழங்கப்பெற்றனர். 'கணக்காயர் நூலுரைப்போர்' என்பது திவாகரம். இக்கலாசாலைகளில் நெடுங்கணக்கும் வேறு சில நூல்களுமே ஓதியுணரப்பெற்றுவந்தனவென ஊகித்தற்கிடமுண்டு. காவியம்,

நூல்நிலயப் பிரசாரம்.

இலக்கணம், சாஸ்திரங்கள் முதலியன கற்க வேண்டுமாயின், இவற்றிலே வல்ல ஆசிரியர்களை யடுத்துக் கற்பதே முறையாயிருந்தது. ஆசிரியர்களதுபுகழ் பரவப்பரவ, அவர்கள்பாற் கல்விபயிலும் மாணவர்களும் அதிகரித்து வந்தார்கள். பலவகையானுந் தகுதியுடைய ஆசிரியர்கள் ஒரு சிலரே ஆங்காங்கு காணப்பட்டனராதல் வேண்டும். இக்கால முதற்கொண்டு நூல்கள் பெருகத்தொடங்கின.

பின்பு நாளடைவிற் கல்விச்சாலைகள் பலவாகப் பெருகின. கல்வியின்பெருமை நன்கு பரவுதலாயிற்று. காலத்தாலும் இடத்தாலும் நிலை பேறின்றி அருகிக்காணப்பட்ட கணக்காயர்கள் முதலினோரை மாத்திரம் நம்பிக் கல்வியை அவர்கள் வசமாகவிட்டொழிதல் நீடித்த நன்மை பயக்கமாட்டாதென உணரப்பட்டது. நீடித்து நிலைத்துநிற்க வல்லதாகிய தாபனமொன்றே கல்விநிலயமாருத்தல் வேண்டுமென்ற ஆவசியகம் நமது மூதாதையர் மனத்தில் வேரூன்றிவிட்டது. இவ்வகைக் கல்விநிலயங்களாகத்தகுவன திருக்கோயில்களைக் காட்டிலும் பிறிதொன்றில்லை. அன்றியும் பூர்வகாலத்தில் மக்களது கல்வியிற் பெரும்பகுதி சமயச்சார்பாக இருந்ததென்பது ஓர் சரித்திரவுண்மை. எனவே கற்கப்படும் பொருளை நோக்கினும் திருக்கோயில்களே கல்விக்குரிய தனி நிலயங்களாகக் கொள்ளுதற்குப்பெரிதுந் தகுதியுடையனவாயிருந்தன. இக்காரணங்களால் கோயில்களிலே கல்வி போதித்தற்குரிய சாலைகள் அமைக்கப்பட்டன. பெருமையிற் சிறந்துவிளங்கிய கோயில்கள் பெரும்பாலானவற்றில், நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உண்டி முதலியனவுதவிக் கல்விச் செல்வம் வழங்கப்பட்டது. இம் மாணவர்கள் முற்காலத்திற் சட்டர் என அழைக்கப் பெற்றார்களென்பது சிலாசாசனங்களால் விளங்குகின்றது. திருக்கோயில்களிலே தெய்வசந்நிதிகளிலே கல்வி பயிலப்பெற்று வந்ததென்பதன் அறிகுறியாகத் தான்போலும் தலையிடைகடைச்சங்கங்களில் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் குன்றமெறிந்த முருகவேள் முதலாயினர் வீற்றிருந்தனர் என்ற வரலாறு வழக்கிலெழுந்தது. கோயில்களைச்சார்ந்த கல்விச் சாலைகளில் நூல்கள் முதன்முதல் தொகுக்கப்பெறத்தொடங்கின என்று ஊகித்தல் தவறாகாது. ஞானாகாரமாய் ஒளிருந் திருச்சந்நிதிகளிலே கல்வியறிவு பரவுதற்குரிய அமைப்புக்கள் நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டனவென்று எண்ணுந்தோறும், அவர்கள்பால் நம்முள்ளம் பக்தியாற் கனிவெய்துகின்றது.

ஆனால் இடையீடின்றிப் பெருகிக் கொண்டே வந்த கல்விப் பரப்பிற்குத் திருக்கோயில்கள் போதியனவாகாத காலம் நெருங்கியது. கேவலம் சமயச்சார்பான கல்வியைத் தவிர, பிற கல்விகளைக் கோயில்களிற் கற்பிப்பது உசிதமெனச் சொல்லுதல் கூடாது. பிற சமய நூல்களையும் உலகியல் நூல்களையும் கற்றுணர்தலின் ஆவசியகம் நன்குணரப்பட்டது. எனினும் சமய உணர்ச்சியிலே தலைநின்ற பெரியோர்களது ஆட்சியின் கீழ்க் கல்விச்சாலைகளும் அவற்றிற்கின்றியமையாத நூல் நிலயங்களும் இருத்தல் வேண்டுமென்ற கொள்கை பெரிதும் விரும்பிப்போற்றப்பெற்றது. இதனால் சமயத்துறவிகள் வசித்தற்கென அமைந்த மடங்களிலே கல்வி பயிலப்பெற்று வந்தது. உலகவின்பங்களையெல்லாம் முற்றத்துறந்து ஞான சம்பாத்தியத்தின் பொருட்டுத் தம்மைத் தத்தஞ்செய்து வாழ்ந்துவந்த இத்துறவிகளால் கல்விக்குளதாகிய நன்மை இவ்வளவிற்றென்று வரையறுத்துக்கூறுதல் ஏலாது. தாமே ஆசிரியராயிருந்து கைம்மாறு கருதாது கல்வி போதித்து வந்தனர். ஆயுள் முழுவதும் மாணவராயிருந்து இடைவிடாது கல்வி பயின்று அறிவுச் செல்வத்தை ஈட்டி வந்தனர். அறிவு நூல்கள் பலவற்றையொருங்கு தொகுத்துப் பிரதிகள் பண்ணித் தங்கள் பரம்பரையினருக்கு என்றுமழியாத ஞானப்

பெருநிதியை நிக்ஷேபமாக வைத்தனர். சமயப்பற்றினுற் பகைமை பாராட்டாது, விரிந்துபட்ட கல்விப்பரப்பை தெரிந்து கைக்கொண்டு, அதனைப்பலருங் கொள்ளும்படி விதரணஞ் செய்தனர். உலக முழுவதும் கல்விநலந்துய்த்தற்கு இத்தகைய துறவிகளே காரணமாயிருந்தவர்கள். நமது நாட்டிற் பௌத்தத் துறவிகளும் சைனத்துறவிகளும் கல்வியின் பொருட்டுச் செய்துவந்த உபகாரச்செயல்களுக்கு நாம் என்றுங் கடப்பாடுடையராயிருக்கின்ருேம். இத்துறவிகள் தங்கள் திருக்கூட்டத்தை 'சங்கம்' என்ற பெயரால் வழங்கி வந்தனர். பலர் கூடியிருந்து ஆராய்ச்சிசெய்து வந்த கல்விக்கழகத்தினை நம்முன்னேர் இப்பெயரால் அழைத்து வந்தது இம்மகோபகாரிகள் புரிந்துவந்த நன்மையினது ஞாபகக் சின்னமாக விளங்குகின்றது. பௌத்த சைனத் துறவிகள் நமது நாட்டில் அருகிப்போய் விடவே, சைவ வைணவத்துறவிகள் தத்தம் மடங்களிற் கல்வியைப்போற்றி நூல்களைத் தொகுத்து வருவாராயினர்.

கல்வியின் எல்லைப்பரப்பு விரிந்து கொண்டே வந்தது. கேடில் விழுச்செல்வமாகவுள்ள இதனைத் தாமே மேலிட்டுக் கொண்ட பொறுப்பன்றிப் பிறிதொரு பொறுப்புமில்லாத மடங்கள், கோயில்கள் அங்கங்கே சிதறிக்கிடந்த கலாசாலைகள் முதலியவற்றில் ஒப்புவித்துவிட்டு அரசாங்கத்தினர் வாளாவிருப்பது தவறென்றுணர்ந்த காலம் வரலாயிற்று. கல்வியின் அருமை பெருமையும் இன்றியமையாச் சிறப்பும் அவர்களால் முற்காலந்தொட்டே நன்குணரப்பட்டனவேயாம். எனினும் அதனை அபிவிருத்தி செய்யும் கடமையைத் தாமே மேற்கொண்டு நேர்முகமாக விருத்தி செய்ய அவர்கள் முயன்ருர்களெனற்குச் சான்று இல்லை. கல்வியிற் சிறந்த அறிஞர்களையும் கவிவாணர்களையும் பொருள் முதலியன கொடுத்துப் போற்றி வந்தனரேயன்றிப் பிறவாறு கலாசாலைகள் நிறுவி ஞான விளைவு செய்வித்ததாகத் தெரியவில்லை. இதன் உண்மை எவ்வாருயினும், ஆங்கிலேயரசு நமது நாட்டில் நிலைபெறத் தொடங்கிய காலந்தொட்டு அரசாங்கத்தினர் தாமே நேரிற் கல்வியைப் போற்றிவருவாராயின ரென்பதிற் சந்தேகமில்லை. பிரதான நகரங்கள் பலவற்றில் சர்வ கலா சங்கங்கள் நிறுவப்பெற்றன. இவற்றின் ஆட்சியின் கீழாகக் கல்லூரிகள் பல அமைந்து நின்றன. நல்லறிவுடைப் பெருமக்களது நன்முயற்சியாலும் அரசாங்கத்தினரது உதவியாலும் கலாசாலைகளின் தொகை நாளுக்கு நாள் வர்த்தித்துக்கொண்டே வருவதாயிற்று. ஒவ்வொரு கலாசாலையிலும் நூல் நிலைய மொன்றிருத்தல் நியதியாயிற்று.

இங்ஙனம் பலவகையானும் கல்வி ஏற்றமடைதற்குத் தகுதியுற்ற இக்காலத்தில் நூல்கள் பெருகுதற்குரிய கருவியாகிய 'அச்சுயந்திரம்' நமது நாட்டில் ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டது. அளவற்ற நன்மைகள் இதனுல் விளைந்தன. வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான நூல்கள் இயற்றப்பெற்று வெளிவருவன வாயின. இந்நூல்கள் பலதிறத்தனவாயுள்ளன. அறிவென்னும் எல்லையற்ற பெருங்கண்டத்தினுள்ளே சிறிய சிறிய பகுதிகளை வரம்பு கட்டி உணர்ச்சி வசமாக்கிச் சுவாதீனப்படுத்தின இந்நூலினங்கள் மிகப் பூர்விக காலந்தொட்டு நாளிதுவரையுள்ள பெருமக்கள் பலரும் பற்பல மொழிகளில் நூல் வடிவா யெழுதிவைத்துள்ள கருத்துக்கள் யாவும் நமக்கு உதவுவனவாயின. இவ்வகை நூல்கள் விரைவில் நாடெங்கும் பரவுதற்குற்ற சௌகரியங்களும் அமைந்தன.

> கல்வி கரையில; கற்பவர்நாள்சில;
> மெல்லநினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
> ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
> பாலுண் குருகிற் றெரிந்து

என்ற செய்யுட் கருத்து ஔபசாரிகமன்றி உண்மையாகவே முடிந்தது.

நூல்நிலயப் பிரசாரம்.

அறிவினால் ஆராய்ந்து கற்றற்குரிய பொருள்கள் அளவின்றி மலிந்து பெருகினும்--கல்வியை நமது நாட்டிற் பரக்கவித்துதற்கு அரசாங்கத்தினரே நேரில் முயன்றபோதிலும்-நம்மவர்களில நூற்றுக்கு ௩ பேர் வீதமே எழுத்தறியும் அத்துணையளவு கல்வி பயின்றுள்ளார்கள். ௩௨-கோடி ஜனங்களுள்ள நம் நாட்டில் நூற்றுக்கு ௯௭-பேர்கள் எழுதவும் வாசிக்கவுந் தெரியாத நிரட்சர குக்ஷிகளாயிருக்கிறார்கள். மேலைத்தேயங்களிற் கல்வியறிவில்லார் நூற்றுக்கு மூன்று வீதத்தினும் குறைந்திருக்க, நமது நாட்டில் அத்துணையளவாகவே கற்றோர்களிருக்கின்றனர். நமது தேசமக்களை இருள்போற் சூழ்ந்திருக்கும் இவ்அறியாமையைப் போக்குதற்கு, அரசாங்கத்தினரும் கல்விமிக்க நல்லறிஞர்களும் கூடி யொன்றுபட்டு முயற்சி செய்ய வேண்டுவது ஆவசியகமாகின்றது. இம்முயற்சியில் இருதிறத்தாரும் ஒருங்குபோற்றுதற்குரிய பெருங் கருவியாயுள்ளது நூல் நிலயப் பிரசாரம்.

நகரங்களிலும் கிராமங்களிலும் ஆங்காங்குள்ள மக்களின் தகுதிக்கும் அளவிற்கும் ஏற்றவாறு, பலதிறப்பட்ட நூல்களையுந் தொகுத்து வைத்து வேண்டியோர்க்கு வேண்டுஞ்சமயத்து எளிதினுதவிக் கல்வியறிவைப்பரவச் செய்வதே நூல் நிலயப் பிரசாரத்தின் முக்கிய நோக்கம். அறிவு பெருகி வளர்தற்கு நூல்களைக்காட்டினுஞ் சிறந்த கருவி இல்லையென்றே கூறலாம். 'ஆசானுரைத்தது அமைவரக்கொளினும், காற்கூறல்லது பற்றலனாகும்' என்றார் பவணந்தியாரும். ஆசிரியரது துணை பெரிதும் வேண்டத்தகுவதும் போற்றத்தகுவதுமாகவே யுள்ளது. எனினும், கல்வி யெனப்படுவது கற்கும் மாணவன் நூல்களைத் தானே ஓதிபுணர்ந்து தானே சிந்தித்து ஆராய்ந்து துணிவதன் பயனாகவே அமையுமென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததாம். ஆகவே தாமே ஓதியுணர்தற்குரிய நூல்கள் மக்களிடையே பரவப்பரவ, கல்வியும் பரவி அஞ்ஞானமும் அகன்றொழியும் என்பது கூறவேண்டா.

நூல் நிலயங்கள் இக்காலத்தே புதிதாக ஏற்பட்டனவென்று நினைத்தல் தவறு. கடைச்சங்க நூல்களனைத்தும் தொகை நூல்களாகவுள்ளன. புலவர்கள் பலர் பாடியனவற்றைத் தனி நூல்களாகத் தொகுத்த காரணத்தாலே இப்பெயர் வழங்குதலாயிற்று. கடைச்சங்க நூல்களிற் பெரும்பாலனவற்றைத் தொகுத்தான் இன்னனென்றும் தொகுப்பித்தான் இவ்வரசனென்றும் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் தொகை நூல்கள் எழுந்தனவாயின், புலவர்கள் பலர் பாடிய நூல்கள் ஓரிடத்தே அரசர் முதலியோரால் போற்றி வைக்கப் பெற்றிருந்தனவென்பது உண்மையாகக் கொள்ளக்கூடியதே. இவ்வகை நூல்நிலயங்கள் விளங்கிய இடமே சங்கம் என வழங்கப்பெற்றதென்று கொள்ளுதல் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. கடைச்சங்ககாலம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டென்பர். அக்காலமுதற்கொண்டே தமிழ் நாட்டில் நூல் நிலயங்களிருந்து வந்தன வென்னுந் துணிபு ஒப்புக்கொள்ளத் தகுந்ததே. அரசர்களும், ஜைன சங்கத்தவரும், தேவாலய கர்த்தர்களும் நூல்நிலயங்களமைத்துப் போற்றி வந்தார்கள். தேவாரம் என்னுந் தெய்வப் பாடல்கள் சிதம்பரமாகிய திருக்கோயிலுள்ளே சேமித்து வைக்கப்பெற்றிருந்ததென்பது பிரசித்தம். கி. பி. ௫-ம் நூற்றாண்டில் வச்சிரநந்தியின் சங்கம் இருந்தமை நன்கறியப்பட்டதே. சீவகசிந்தாமணிக் காலமாகிய ௯-ம் நூற்றாண்டினிறுதியிற் சங்கமொன்றிருந்ததும் ஆராய்ச்சியாளரறிவர். மடாதிபதிகள் தத்தம் மடங்களிலே நூல்களைத் தொகுத்து வைத்துப் போற்றிவந்தமையும் யாவரும் அறிந்ததே. தஞ்சை அரண்மனையைச்சார்ந்த சரஸ்வதி மஹால் கலைவாணரது உள்ளத்தைக் கொள்ளை

கொள்ளுஞ் சிறப்புமிக்கதொரு நூல் நிலயமாக இன்றுவரை விளங்கி வந்திருக்கின்றமை நாம் நன்குணர்ந்ததே. எனவே மக்களால் நூல்களின் ஆவசியகம் உணரப்பெற்ற மிகப்பழையகாலந்தொட்டே நூல் நிலயங்கள் தமிழ் நாட்டில் உள்ளனவென்று கொள்ளுதல் வேண்டும்.

ஆனல் முற்காலத்திலிருந்த நூல் நிலயங்கட்கும் தற்காலத்தில் நிறுவப்பெறும் நூல் நிலயங்கட்கும் மிகப்பெரியதோர் வேறுபாடுண்டு. நூல்கள் இறந்துபடாமற் காத்தற்பொருட்டு ஓரிடத்துத் தொகுத்து வைத்தலே முற்காலத்து நோக்கமாயிருந்தது. பெரும்பாலும் பண்டை நூல்களே இவ்வாறு போற்றிவரப்பெற்றன. இந்நூல் நிலயங்கள் யாரேனு மொருவருக்குத் தனிப்பட வுரியவாயிருந்தன. நூல்கள் தவறிவிடாதிருத்தற்பொருட்டும் பழுதுபடாதிருத்தற்பொருட்டும் கடினமான நியமங்கள் கையாளப்பட்டு வந்தன. நிலயங்களிலிருந்து நூல்களைப் பெரும்பாலும் இரவல் கொடுப்பதே இல்லை. பொது ஜனங்கள் இவற்றால் சிறிதும் பயன்கொள்ளத் தகாத முறையில் இவைகள் அமைந்தன. தற்காலத்து வேண்டப்படும் நூல்நிலயங்களின் நோக்கம் முற்றிலும் வேறாகவுள்ளது. பொதுமக்கட்குப் பயன்பட்டு அவர்களது கல்வி விருத்தியாக வேண்டு மென்பதே இவற்றின் முக்கியமான தனிப்பெரு நோக்கம்.

இந்நோக்கத்தினை முற்றுவித்தற்குரிய உபாயங்களெல்லாம் நூல் நிலயப்பிரசாரத்திற்கு உரியனவேயாகும். பொது ஜனங்கள் அனைவரது உள்ளத்தையுங் கவருமாறு நகரம், ஊர், சிற்றூராதிய பலவிடங்களிலும் நூல்நிலயங்கள் அமைக்கப்பெறுதல் வேண்டும். மக்களின் விருப்பத்தையும் சௌகரியத்தையும் தகுதியையும் நோக்கி அவர்களுக்கு வேண்டும் புத்தகங்களைக்கொடுத்துதவுதல் வேண்டும். பரந்துபட்ட அறிவின் பல்வேறு பகுதிகளைப் பற்றிப் புதுப்புது நூல்கள் வெளிவர வெளிவர அவற்றையெல்லாம்பொது ஜனங்களிடையே பரக்கவிதைத்தல் வேண்டும். கல்வியறிவு இன்றியமையாததாகு மென்பதை வற்புறுத்திக்கூறி அதனையடைதற்குச் சாதனமாகுங் கருவி நூல்களைக்குறித்து உபந்நியாசங்கள் செய்துவரல் வேண்டும். சுருங்கக்கூறின் அரசியல் நெறிப்பட்ட ஒரு நாட்டிற் பல திறத்தாரும் உத்தம வாழ்வு வாழ்தற்கு வேண்டும் கல்வியறிவினைத்தையும் நூல்கள் மூலம் உதவுதற்குப் பலவகையாலும் முயற்சி செய்வதே நூல் நிலயங்கள் மேற்கொள்ளுதற்குரிய தனிப்பெருங்கடமையாகும்.

இந் நூல் நிலயங்கள் பல திறத்தனவாயிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. குழந்தை முதல் முதியோர் வரையுள்ள அனைவர்க்கும் கல்வியூட்டுதற்கான நூல் நிலயங்கள் ஆயிரக்கணக்காக அமைக்கப்பெறுதல் வேண்டும். இவைகளேயன்றிக் கல்வித்துறைகள் பலவற்றிற்குந் தனித்தனியே யுரிய நூல் நிலயங்களும் மிகப்பலவாக நிறுவப்பெறுதல் வேண்டும். மேலும் பற்பல கல்வித்துறைகளிலும் ஆராய்ச்சிக்கெனத்தனியாயமைந்த நூல் நிலயங்கள் பல ஸ்தாபிக்கப்பெறுதல் வேண்டும். பிற்கூறிய இரண்டு வகைநூல் நிலயங்களும் சர்வகலாசங்கங்களாலும் கலாசாலைகளாலும் நிறுவப்பெற வேண்டுவன வென்பது கூறாமலே அமையும்.

நமது நாட்டிற் பெரிதும் வேண்டப்படுவதாகும் பிறிதொரு நூல்நிலய வகையை இங்கே விசேடித்துக் கூறுதல் அமைவுடைத்தென்று எண்ணுகிறேன். அங்கங்கே கிடைப்பனவாகிய ஏட்டுப்பிரதிகளைத் தொகுத்துப் போற்றிப் பாதுகாத்தற்கெனத் தனி நூல்நிலயங்கள் பல முற்பட நிறுவ வேண்டுவது மிகப் பெரியதோர் ஆவசியகமாம். இக்கடமையை நாம் வெகுகாலமாக மறந்துவிட்டோம். எத்தனையோ அரிய நூல்கள் பாதுகாக்கப்பெறாது அழிந்

தொழிந்து போயின. நமது முன்னோர்கள் ஈட்டிவைத்துள்ள பெறற்கருஞ் செல்வங் களை நமது மடமையாலும் மடிமையாலும் பாழ்போகவிடுவதாயின், தமிழ் மக்கள் என் னும் பெயர்க்குத்தான்நாம் தகுதியுடையரா வோமோ? இன்னுஞ் சிறிது காலத்தில் இப் போது கிடைக்கும் ஏடுகள் தாமும் இறந்து போய்விடுமன்றோ! அதற்குமுன் ஏட்டுநூல் களை அங்கங்கே சேகரித்து வைத்து ஊர்ப்பொதுவிடங்களில் நூல் நிலயங்கள் அமைத்து ஏடுகள் பழுதுபடாவண்ணம் காப் பாற்றி வருதல் நமது பெருங் கடமையா கும். இம்முறையில் அரசாங்கத்தினர் எடுத்துவரு முயற்சி ஒரு சிறிதும் போதா தென்பதை விசனத்துடன் வற்புறுத்திக் கூறவேண்டிய திருக்கிறது. மதுரைத் தமிழ்ச்சங்கம் இம்முயற்சியின்கண் பெரி தும் உழைத்து வருகின்றது. எனினும் முயற்சியினளவு போதியதெனக் கருதக் கூடவில்லை. வருடத்துக்கொருமுறை அள வற்ற ஏட்டுநூல்கள் நெருப்பினும் நீரினும் அழிவெய்துவதைக் கண்டு வைத்தும் நாம் வறிதேயிருத்தல் அழகன்று. நமது முன் னோர்கள் இயற்றிவைத்துள்ள அரிய நூற் செல்வங்களைப் பரிபாலிப்பதன்கண் நாம் மேற்கொள்ள வேண்டுங்கடமையை இனி யேனும் உணர்ந்து உரியவாறு முயன்று வருவோமாக.

மேலே விவரித்தன போன்ற நூல்நிலயங் கள் நாடெங்கும் நிரம்புதல் வேண்டும். நமது நாட்டிலே நீடித்துக் குடிகொண்டிருக்கும் அறியாமையைக் கால்தரிக்கவொட்டாது வெருட்டுதல் வேண்டும். அறிவுச்சுடரின் பேரொளி நாடெங்கும் பரந்து வீசுதல் வேண்டும். அறிவின் வழித்தாய் ஒற்றுமை மிகுதல் வேண்டும். அறிவு சிறந்து ஒற் றுமை மிக்கு நம்மவர்கள் நல்லின்ப நெறி யிலே நிற்றல் வேண்டும். இத்தகைய நோக்கங்கொண்டே நூல் நிலயப் பிரசாரம் நிகழ்ந்து வருகின்றது. எல்லாம்வல்ல இறைவன் இப்பிரசாரத்தினை வாழ்வித் தருள்க. நமது தேசிய கவியாகிய பாரதி யின் நல்லுபதேசம் நம்மை வழிப்படுத்துக.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்.

வீடுதோறுங் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வி யிலாததோ ரூரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமென் னன்னை
கேண்மை கொள்ள வழியிவை

[கண்டீர்.

தீ வணக்கமே சிவ வணக்கம் நீர்வணக்கமே மால் வணக்கம்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்.

பேரிருள் அடர்ந்த தாயின் கருப்பையில் கட்டுண்டு கண்மூடிக் குருட்டுத்தன்மையிலிருந்த குழவி, கருப்பையைவிட்டு வெளிவந்தவுடனே தாயினும் இனிய மருத்துவச்சியால் கண்மாசு நீங்கப்பெற்றுக் கண் திறந்து முதலில் அக்குழந்தை கண்டது வெளியில் ஒளியேயாகும். நாள்தோறும் ஞாயிறு மறைந்த பின்னர் இரவில் விளக்கின் உதவியால் மக்கள் ஒருவருக்கொருவர் முகத்தையும், பிறபொருள்களையும் அறிகின்றோம். நள்ளிருளில் தூக்கத்தில் அழுந்திக்கிடந்து விழித்தவுடன் தீப்பிழம்பாகிய ஒளி உலகின் செயற்கையால் நமது கண்கள் பொருள்களை நிச்சயித்து மகிழ்கின்றன. காடு திருத்தி நாடாகுமுன் பண்டைக்கால மக்கள் பகலெல்லாம் உணவு தேடி உண்டு, தூயநீரில் குளித்து மகிழ்ந்து சூரியன் மறையவும், காட்டிலும், மலைப்புதல்களிலுமுள்ள கொடிய விலங்குகட்கும், பாம்பு, தேள் முதலிய நச்சுப்பிராணிகட்கும், பனி மழை முதலியவைகளின் வருத்தங்கட்கும் அஞ்சித் தங்கள் குடிசைகளில் புகுந்து, கற்களில் தீயை உண்டாக்கி, அச்சமுந் துன்பமும் தங்களை அணுகாதொழியத் தீயை நம்பி வாழ்ந்தார்கள். இன்று கல்வீடுகள் நெருங்கி அடர்ந்த நகரங்களில், மின்சார விளக்குகளில் வாழும் மக்களுக்குத் தீயின் அருமை தெரியாதென்றே சொல்லலாம். அக்காலத்து மக்கள் தமக்கு உயிர்த்துணையாய் முதன் முதல் கண்ட பொருள் தீயும் பெருந்தீக் கோளமாகிய ஞாயிற்று மண்டலமுமேயாகும். தாங்கள் கண்ணால் கண்டபொருள்களில் எல்லாம் மிகப்பெரியதும் ஒளிவிட்டெரியக் கூடியதும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததுமாகிய பொருள்களைக் கடவுளின் செயல் எனக் கருதி வணங்குவது நமது மூதாதைகளின் இயற்கை. தாம் கண்டவற்றுள் முதற்பொருளாகிய ஞாயிற்றின் பெயரையே முதற்கிழமைக்கும் இட்டழைத்தார்கள். இரண்டாவதாக இரவில் குளிர்ந்த கதிர்களால் தங்களை மகிழ்விக்கும் திங்களையே மறு நாளைக்குப் பெயரிட்டார்கள். அவர்கள் இரவெல்லாம் காடுகளில் தீத்துணையிலிருந்து கீழ்த்திசையை நோக்கி அருணன் உதயத்தை எதிர்பார்த்துத் தவங் கிடப்பார்கள்; கிழக்கு வெளுத்ததும் ஆடிப்பாடி மகிழ்வார்கள். அவர்கள் முதலாவதாகத் தீப்பிழம்பாகிய ஞாயிற்றையும், இரண்டாவதாக நீரையுமே துணையாகக்கண்டார்கள். இத்தீயையும், நீரையும் மக்கள் மட்டுந்தான் கண்டு மகிழ்ந்தார்கள் என்பதில்லை. பகுத்தறிவற்ற பறவைகளும் கொடிய விலங்கினங்களும்கூட நாள்தோறும் அதனைக்கண்டு மகிழ்கின்றன. அவை அதன் பயனை அனுபவித்தே உயிர்வாழ்கின்றன. இக்கால மக்களுக்கு அறிவு வளர்ந்து பல்வகை அவாக்கள் மிகுதிப்பட்டமையால் இவர்கள் இயற்கையின் அழகையும், அற்புதங்களையும் கண்டு மகிழ்வதற்கியலாதவர்களாகின்றார்கள். ஐம்பெரும் பொருள்களில் தீயானது வெளியே அண்டத்தில் காண்பதைப்போல், மக்கள் உடம்பாகிய பிண்டத்திலும் ஓரளவிலிருந்து மாறுபடாமலிருக்கும் வரையில் உடல் நலங் கெடாது நோயின்றி நெடுநாள் வாழலா

மென்னும் உண்மையையும் அக்காலத்து மக்கள் கண்டறிந்தார்கள். தாங்கள் வசிக்க வீடுகள் கட்டுவதிலும் நாள்தோறும் வாழ்க்கைக்கு வேண்டிய இயற்கைப் பொருள்களைத் தேடித் தொகுப்பதிலும், குளிர் காலங்களில் தங்களுக்குப் போதுமான ஆடைகள் உண்டாக்கிக்கொள்ள இபலாத அக்காலங்களில் தீயை வளர்ப்பதற்கு வேண்டிய உலர்ந்த கட்டைகளையும் மாட்டுச் சாணியையும் எண்ணெய் விதைகளையும், நன்றாக எரியக்கூடிய பாலுள்ள சுள்ளிகளையும், நெய்ச்சத்துள்ள மரக்கிளைகளையும் காட்டில் தேடி எடுத்துத் துண்டுகளாக்கி மழையில் நனையாதபடி பல இடங்களில் அவர்கள் சேமித்து வைப்பார்கள். தீயை உண்டுபண்ணத் தீப்பெட்டியில்லாத அக்காலத்தில் பல இடங்களில் எப்போதும் தீயை வளர்த்துக்கொண்டே சிலர் இருப்பார்கள். பனி, காற்று குளிர் முதலியவைகளுக்கும், கொசு, பேன், கம்பளிப்பூச்சி, மூட்டுப்பூச்சி, தெள்ளுப்பூச்சி, புழு, ஈ, தேன் ஈ, குளவி, வண்டு, மண்ணுண்ணி முதலியவைகட்கும் சாம்பல் விரோதப் பொருள் எனக் கண்டபடியால் அவர்கள் காலை மாலை நீராடினவுடன் தாங்கள் வளர்க்கும் தீயில் விழும் சாம்பலை உடம்பு முழுதும் பூசிக்கொள்வார்கள். பலருக்கும் பொதுவான பல இடங்களில் எரியைப் பெருக்கிக்கொண்டிருக்கும் வயது சென்றவர்கட்கு மற்றவர்கள் உணவு முதலியன கொண்டுவந்து கொடுத்து உதவி செய்வார்கள் பொதுவாக வானில்தோன்றும் ஞாயிறு திங்கள், உடுக்கள், மின்னல், இடி முதலியவைகளையும் எரிமலைகளையும் கண்டு உலகின்கண் நிகழும் எல்லாச் செயல்களும் ஒளியில் அடங்குமென்றும், அவ்வொளிகளெல்லாம் தீக்கடவுளின் காரியங்களென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். இறப்பு என்பது உடம்பிலுள்ள உயிர்த்தீ தன் அளவில் குறைந்து ஒடுங்கி அடங்கிப்போவதுதான் என்றும், தீயை வணங்குவதே கடவுளை வணங்குவதெனவும் தேர்ந்தார்கள்; குளிர் காலங்களிலெல்லாம் கூட்டமாய்த் தீக்காய்வார்கள்; பிற்காலத்தில் தாம்வசிக்கக் கல்லாலும், சுண்ணத்தாலும் வீடுகள் கட்டவும், ஆற்றங்கரை, குளக்கரைகளுக்குப் படித்துறைகள் வைத்துக்கட்டவும் கற்றுக்கொண்ட பிறகு, தீ வளர்க்கும் இடங்களில் மழை, காற்று முதலியவற்றால் அத்தீ அவியாதிருக்கவும், தீ வளர்க்கும் பொருள்களும் தாங்களும் நனையாமல் கூட்டங்களோடு அத்தீக் கடவுளை வணங்கவும் எல்லோர்க்கும் பொதுவாகக் கட்டிக்கொண்ட இடங்களே கோயில்கள் எனப்படும்.

இதனை ஆரியர்கள் யாகசாலை எனக்கூறுவர். தீயானது தங்களுக்குத் துன்பத்தையும், அச்சத்தையும், நீக்கி இன்பத்தைக் கொடுத்தமையாலும், சிவந்த நிறத்துடனிருப்பதாலும், தீக்கடவுளுக்கு உருத்திரன் என்றும், சிவனென்றும் பெயரிட்டார்கள். சிவமென்னும் செம்பொருளைத் தீயின் வழியாகவே வணங்கி வந்தார்கள். தீயே இறைவன் வெளிப்படும் வழி. தீயே சிவனுக்குப் பருவடிவம் என்பது அவர்கள் கொள்கை. அப்பழைய உண்மையைத்தான் இன்றும் தமிழர்கள் தங்கள் நடுவீடுகளில் தகழியில் தூய்மையான நெய்யும் திரியும் சேர்த்து விளக்கேற்றி நாள்தோறும் தீவழிபாடு செய்து வருகின்றார்கள். மக்கள் உயிர் நீங்குங்காலத்தில் விளக்கேற்றிச் சூடன் கொளுத்திச் சிவனை வணங்குவதும், மக்கள் தாய்வயிற்றினின்று பிறந்தவுடன் விளக்கேற்றிப்பார்த்து மகிழ்வதும் இக்கொள்கையைப் புலப்படுத்தும். எந்தப் பொருள்களைத் தீ விரைவில் பற்றி எரிக்கிறதோ அந்தப்பொருள்களை யெல்லாம் அவர்கள் விரும்பி வாங்குவார்கள்; பிற்காலத்தில் வந்த கற்பூரம் என்னும் சூடன் தீப்பற்றி எரிவதைக்கண்டு அதனைத்தீயிற்கொளுத்தி மகிழ்ந்தார்கள்; அது தீக்கடவுளுக்கு மிக இன்பமான பொருளெனக் கருதித் தீ வளர்த்தி வணங்குவதற்குக் கற்பூரத்தை

யும் எடுத்துக்கொண்டார்கள். மேலும் அவர்கள் வீடுகளில் நடைபெறும் நலங்கிங்குகளில் பாலுள்ள ஆல், அரசு முதலிய சுள்ளிகளைக்கொண்டு நடு வீட்டில் தீ வளர்த்தலும், ஆண்டுகள் தோறும் கார்த்திகை நாளில் கோயில்களின் முன் வானுற ஓங்கி வளர்ந்தெரியும் பெருந்தீ உருவைக்காணச் சொக்கப்பனை கொளுத்துவதும், மலைகளின் முகட்டில் விளக்கொளி காண்பதும் விளக்கில்லா கோயில்களில் கடவுள் இல்லை எனக்கூறுவதும், வீடுகளிலாயினும் அம்பலங்களிலாயினும் திருவிளக்கேற்றியே தெய்வந்தொழுவதும் செய்து வந்தார்கள். இப்பழக்கம் இந்துக்களிடம் மட்டுமே காணப்படுவதன்று. மற்றும் புத்தர் கிறிஸ்தவர், ஜெயினர் முதலியவர்களும் தங்கள் கோயில்களில் இன்றும் பகலிலும் மெழுகு திரியைக்கொளுத்தியே வணங்குகின்றார்கள். இந்துக்கள் இலட்ச விளக்கேற்றி விழாக்கொண்டாடுவதும் ஞாயிற்றைப்பூசிப்பதும் இவ்வுண்மையே யாகும். இதனையே அப்பர் சுவாமிகள்,

"எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கம் தாவதுணர்கிலார்
அரி அயர்க்கரியானை அயர்த்துப்போய்
நரி விருத்தம் தாகுவர் நாடரே" எனவும்,

"அருக்கன்பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கனுவான் அரனுருவல்லனே
இருக்குநான்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினை யார்கள்மனவரே"

எனவும் கூறுவதாலும், 'எரியலால் உருவமில்லை' 'சோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே' என்பன போன்ற வேறு பல பாடல்கள் தேவாரத்திலும், திருவாசகத்தினும் பெரிதும் பயின்று காணப்படுதலாலும் தீ வணக்கமே சிவ வணக்கமாகும். மக்கள் நீராடினவுடன் உடம்பிலுள்ள மயிர்க்கால், வியர்வைக்கால்களிலுள்ள நீரை இழுக்கவும், குளிர் நீங்கவும் தீயை யணுகுவதோடு, தீயின் அம்சமான சாம்பலைத் தீ தந்த பொருளென மிக அன்புடன் எல்லோரும் நெற்றி, மார்பு, கை கால் உடம்பு இவைகளிலெல்லாம் பூசிக்கொள்வார்கள். தென் இந்தியாவில் இது பிற்காலத்தில் சைவ சமயத்தாரின் குறிபாய் மட்டும் மாறிவிட்டது.

தீக்கடவுளாகிய சிவனை வணங்கும் இடங்களாகிய சிவாலயங்களில் ஆங்குள்ள கடவுள் தீக்கடவுள் என்பதை விளக்குவதற்காக இன்றும், மருந்துக்குணமுள்ளதும், நஞ்சுக்குப் பகையானதுமான பசும்புல், பல மூலிகைகளின் சத்துள்ள கோமயச்சாம்பலாகிய திருநீற்றை ஆங்குள்ள குருக்கள் எடுத்துக்கையில்கொடுத்து நீ எப்போதும் உயிர்த்தீயை உன் உடம்பில் ஓம்பி வளர்த்தால் நோயின்றி நீண்ட நாள் வாழ்வாயென்று சொல்லுகின்றார்கள். ஆதலால் இதுவரையில் நாம் சொல்லிவந்த காரணத்தாலும் இருளை அஞ்ஞானத்துக்கும், ஒளியை ஞானத்துக்கும் ஒப்பிட்டு ஞான சொரூபியும், ஜோதி வடிவினனும் கடவுள் என்று எம்மதத்தினரும் ஒரே முகமாகக் கூறுவதாலும் தீ வழிபாடே சிவ வழிபாடென்பதை யாவரும் ஒத்துக்கொள்வார்கள். தீக்கடவுள் தங்களைக்காப்பாற்றுகிறதென்றும் அதைத்திருப்திப்படுத்துவது தங்கள் கடமை என்றும் கருத்துடையவர்களாய் அத்தீயில் எண்ணெய், நெய் முதலிய பொருள்களைக்கொடுத்துத் தீ ஓம்புதலால் அத்தீக்கடவுளுக்கு மகிழ்ச்சியுண்டாகி நன்றாய் வளர்ந்து எரிவதாக அக்காலத்து மக்கள் நினைத்தார்கள். தீயின் அருகில் செல்லவியலாத வெப்பம் மிகுந்த காலங்களிலும், பகற்பொழுதில் இவர்கட்குப் பல வேலைகள் ஏற்பட்டதாலும் தீக்கடவுளுக்கு எப்போதும் இரை தேடிக்கொடுத்தாலன்றி எரிவது தணிந்து, அவிந்து போகிறபடியாலும் அம்மக்கள் கற்களினின்று அடிக்கடி தீயை வெளிப்படுத்தினார்களாதலாலும், இக்காரணங்களால் தீயை நேரே வணங்குவதைவிட தீ அடங்கியுள்ள கல்லைத் தீ வடிவிற் செய்து வணங்குவது மேலென்று பழைய கொள்கையில் சிறிது மாறினார்

கள். பிறகு தீ வெளிப்படக்கூடிய கடினமான கல்லில் தீச்சுடர் வடிவில் வாழைப்பூப் போல் உருவாக்கித் தீயை வணங்கும் இடங்களில் நாட்டி அக்கல்வடிவத்தையே தீ வடிவத்திற்குப்பதிலாக வணங்கத் தலைப்பட்டார்கள். எனினும் பலர் பழைய வழக்கத்தால் பகலும் இரவும் அக்கல் உருவிற்கு அருகில் சிறு விளக்கேனும் ஏற்றி வணங்குவார்கள். அதனோடு தாங்கள் இன்பமாய் நுகரும் நீர், பூ, பால், தேன், நெய், பழம் முதலிய அரும் பொருள்களெல்லாம் அக்கடவுள் தந்தனவென்று கருதி அக்கடவுள் வடிவத்திற்கு இட்டு மகிழ்ந்து பின்னர் அப்பொருள்களைத் தாங்கள் நுகருவார்கள். இவர்கள் மேற்சொன்ன நீர்ப்பொருள்களை அவ்வடிவத்தின்மீது அன்போடு பெய்யுங்கால் அப்பொருள்கள் நான்கு பக்கமும் வழிந்தோடி, வழிபாடு செய்யுமிடம், ஈரமும் சகதியுமாவது கண்டு அக்குறியைச் சுற்றி அடிப்பாகத்தில் ஒரு பீடிகையும் அதைச் சூழ ஒரு பள்ளமும் செய்து நீர், பால், தேன் முதலியன சேர்ந்து ஒரே முகமாகச் செல்வதற்காக அதில் ஒரு பாகத்தில் வாய்க்காலும் வைத்து அடியில் சேர்த்துக்கொண்டார்கள். அக்கல்வடிவத்தில் மேலுள்ள வாழைப்பூப்போன்ற தீக்குறி சிவலிங்கம் எனவும் அடிப்பாகத்திலுள்ள பீடிகை ஆவிடையார் என்றும் இக்காலத்தில் வழங்கப்படுகின்றன. உலகில் ஐந்து கண்டங்களிலும் மத சம்பந்தமாகப் பலதிறப்பட்ட மக்கள் இருப்பதால் கடவுள் வணக்கம் அவரவர் கருத்திற்கிசைந்ததே ஆகுமன்றி ஒருவர் கருத்து மற்றவருக்குப் பொருந்தாததாகும். இக்காலத்தில் கடவுளுக்கு இவ்வுருவ வணக்கம் வேண்டுவதில்லை என்றும், இது வீண்காலப்போக்கும், பொருளுக்குக் கேடும் ஆகுமன்றி வேறு பயனில்லையென்றும் தீ ஓம்பும் ஆரிய சமாஜத்தாரும், பிரம்மசமாஜத்தாரும் இன்னும் சிலரும் இதனைக்கண்டிக்கிறார்கள். இக்காலத்தில் இது ஒருவகை மக்களுக்குப்பொருந்துமாயினும், அக்காலத்தில் மக்கள் தீயை உண்டாக்க வேறு வகை ஒன்றும் தெரியாமல் கடினமான சற்களில் தீயை உண்டாக்கினார்களாதலால், கல்லில்தான் அத்தீக்கடவுள் அடங்கியுள்ளதெனக்கருதிக் கல்லை ஒளிவடிவத்திற்குப்பதிலாக வணங்கினார்கள். [இதன் உண்மையை அறியாமலோ, அல்லது சமயப்பகையினாலோ ஒளிவடிவாகிய சிவலிங்க உருவத்தை ஆண்குறி எனவும், அக்குறியைத்தாங்கி நீர் சூழ்ந்தோடும் பீடிகைக்கல்லைப்பெண்குறி எனவும் சொல்லுவோர் கூற்று பொருந்தாததாகும்.]

"நீர் வணக்கமே மால் வணக்கம்." தீக்கடவுளுக்கு இரண்டாவதாகக் கொண்ட நீர்க்கடவுளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். மால் என்றால் மயக்கத்தை கொடுப்பவன், அல்லது நாராயணன் எனப் பொருள்படும். நாராயணனே விஷ்ணு; நாராயணன் நீரிலிருப்பன்; கடலில் பள்ளிகொண்டிருப்பவன், நீலமேகவண்ணன், கடல்நிறவண்ணன், கார்மேகவண்ணன், கரியமேனியன் என வைணவ புராணங்களில் கூறுவதும் இக்கருத்தேயாகும். இனி நீருக்கும் நாராயணனுக்குமுள்ள தொடர்பை நோக்குவோம். நீரணுக்களின் திரட்சிகளாலாகிய மேகம் இருள் சூழ்ந்து இருக்கும்போது நீரானது கரிய நிறத்தை அடைகின்றது. இதனாலேயே நீரினை நாராயணன் அதாவது நீரையுடையவனென்றும், நீலமேகவர்ணன் என்றும், கரியமால் என்றும் வழங்குகின்றனர். தங்கள் உயிர்வாழ்க்கைக்கு நெருப்புக்கடுத்தது நீராக இருப்பதால் மக்கள் நீரையும் கடவுளாக வணங்கினார்கள். வைணவ கோயில்களில் இன்றும் கடவுளை வணங்கச்செல்லுவோருக்கு ஆங்குள்ளது அப்பு (நீர்) கடவுளே என்பதை உணர்த்த நீர்ப்பிரசாதமே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இப்பொழுது பழைய வழக்கப்படி நீர்ப்பிரசாதம் வழங்கின பிறகு பொங்கல், சர்க்கரைப்பொங்கல், வடை, தோசை, முதலியனவும் வழங்குகின்றார்

கள். இது பிற்காலத்தில் கோயில் மக்கள் கூட்டத்தை அதிகரிக்கவே செய்து கொண்ட ஆபாச வழக்கம். இதைக்கண்டு சிவாலயங்களிலும் பிரசாதங்கள் வழங்க ஆரம்பித்தார்கள். பழமையான தில்லை, சீரங்கம் முதலிய கோயில்களில் நீர்க்கடவுளாகிய நாராயணன் பெரிய உருவமாய்க் கடல் நிறமாக நீண்டு படுத்திருப்பதைக் காணலாம். தீக்கடவுளாகிய சிவன் தில்லை முதலிய சிவன் கோயில்களிலெல்லாம் நின்ற நிலையில் நடனம்புரிவதாகக் காணப்படுகின்றது. நீர் கீழ் நோக்குவதும், தீ மேல் நோக்குவதும் இயற்கை என்பதை இவ்வுண்மை உணர்த்துகின்றது. பிற்காலத்தில் சிவ விஷ்ணு ஆலயங்களில் விழா உருவங்களும் பல கடவுளர்களும் பல வேடிக்கை விநோதங்களும் சேர்ந்து பண்டைக்காலக்கருத்து மாறுபட மக்களுக்கு அக்கருத்தின் உண்மை மறந்துபோய்விட்டது. இதனால் அத்தீ வழிபாடே சிவலிங்க வழிபாடானதையும், நீர்வழிபாடே மால்வழிபாடானதையும் ஒருவாறு கூறினோம். இதனை வாசகர்களெல்லாம் ஒத்துக்கொண்டு பழைய முறையில் தீக்கடவுளை வணங்க வேண்டுமென்பது எனது கருத்தல்ல. பண்டைக்காலத்தில் இவ்வுருவ வணக்கங்களும், மதக்குறிகளும் வந்த காரணங்களைமட்டும் நான் எனது சிற்றறிவுக்கெட்டிய வண்ணம் கூறினேன். மனிதர்கள் அறிவு வளர வளரக் கடவுள் வழிபாடும் கடவுளைப்பற்றிய கொள்கைகளும் மாறுவதும் தத்துவங்கள் உயர்வதும் இயற்கையே யாகும், பிற்காலத்தில் கல்வி அறிவு வளரவளர முப்பொருள்களாகிய பதி, பசு, பாச இலக்கணங்களைப் பற்றிச் சித்தாந்த நூல்கள் ஒழுங்காக எழுதப்பட்டன. பழைய புராணக்கதைகளும், புதிய சித்தாந்தக்கருத்துகளும் கோயில்களில் கலந்து தற்காலம் காணப்படுகின்றன. தற்காலம் இந்து மதம் என்று சொல்லுகிற சைவ, வைணவ சமயங்களும் வேதாந்தமென்று சொல்லுகிற ஏகான்மவாத மதமும் கலந்து சீர்திருத்தமடையவேண்டும். இம்மதங்களைப் பிரித்துக்காட்டும் நெற்றியிலிடும் வெளிச் சின்னங்களை முக்கியமெனக் கருதாமல், கடவுள் ஒன்றென்னும் கொள்கைக்கு வரவேண்டும். பல்லாயிரக்கணக்கான சிறு தேவதைகளுக்கு உயிர்ப்பலிகளிட்டு பேயாட்டமாடும் பாமர மக்களுக்கு ஒரே தெய்வ உணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும். கடவுளைப்பற்றிய கொள்கை எல்லாம் மனிதனுடையமனத்தில் இருக்கவேண்டுமே யல்லாது அவரவர் மதச்சின்னங்களாலோ உடைகளாலோ தலைமயிரினாலோ நெற்றிகளிலிடும் குறிகளினாலோ வெளிப்படுத்திக் காட்டிக்கொள்ள வேண்டுவதில்லை. இக்கொள்கையைப் பரவச்செய்யவேண்டும்; இல்லையேல் நாட்டில் மக்கள் சமாதானமாக ஒற்றுமையோடு வாழ்வதற்கு வழி ஏற்படாது. மதத்தின் பெயரால் நெடுங்காலமாக நடைபெற்றுவரும் கொலை, களவு, பகை முதலிய மகா பாதகங்கள் வளர்ந்து கொண்டுதானிருக்கும்.

வெளிநாட்டுக் கோயில்கள்.

கோலாலம்பூர்.

இங்கு வத்துமலை என்னுமிடத்தில் நாட்டுக்கோட்டையாருக்குச் சொந்தமான தண்டாயுதபாணி கோவிலிருக்கிறது. சுபகிருது வருஷத்தில் கட்டப்பெற்றது. கோவிலில் வருஷப் படித்தரச்செலவு சுமார் ௬000 வெள்ளியாகிறது. பங்குனி உத்திரத்தில் பிரபலமான திருவிழா நடைபெற்று வருகிறது. உற்சவம் மூன்றுநாள் நடைபெறும். உற்சவச் செலவுமட்டும் ௧௨000 வெள்ளியாகும். காணிக்கைவகையில் ௬000 வெள்ளிவரை வசூலாதல் கூடும். மகேசுவரபூசை முதலிய வசதிகட்காக ஒரு பெரிய நகரத்தார் மடம் கட்டப்பட்டிருக்கிறது. இது ௧௯௨௨-ல் கட்டி முடிக்கப்பெற்றது. இதற்கு ௭0,000 வெள்ளி செலவாகி யிருக்கிறது.

உற்சவ காலத்தில் முதல்நாள் ௫000 பேருக்கும் இரண்டாம் நாள் ௧௫,000 பேருக்கும் மூன்றாம் நாள் ௫000 பேருக்கும் சாப்பாடு நடைபெறும். ஜாதி பேதமின்றி உணவளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆதித்திராவிடர் முதலிய எல்லா வகுப்பினருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தாரே பரிமாறுகின்றனர். இந்தக்காட்சியைக் கண்டவர் நாட்டுக்கோட்டையாரின் உண்மை யன்பினைப் போற்றாதிருக்க முடியாது. வெள்ளி ரதம் ௭0,000 வெள்ளி செலவிட்டுச் செய்யப் பெற்றிருக்கிறது. மற்ற வாகனங்கள், திருவாபரணங்கள், சுவர்ண அங்கிகள் வகையில் சுமார் ௭0,000 வெள்ளி செலவிடப் பட்டிருக்கிறது. சுமார் ௨,00,000 வெள்ளி பெறுமதியான கட்டிடங்கள் உள்ளன.

கோலாலம்பூர் நகரத்தார் மடம்.

செரம்பான்.

இவ்வூரில் நாட்டுக்கோட்டையாரின் செல்வ விநாயகர் கோயில் ஒன்றிருக்கிறது.

செரம்பான் செல்வ விநாயகர் கோயில்.

இக்கோயில் திருப்பணி ருத்ரோற்காரி-௵ தை௴ ௭௳ ஆரம்பிக்கப்பட்டு குரோதன௵ ஆவணி௴ ௧௮௳ கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. அக்ஷய ஆவணியிலிருந்து ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தியில் உற்சவம் நடக்கிறது. கோயில் கட்டிடத்துக்கு ௩௯000 வெள்ளி செலவாகி யிருக்கிறது. உற்சவச்செலவு ௩௫00 வெள்ளி; கோயில் படித்தரச்செலவு வருஷத்தில் ௩000 வெள்ளி. ௫000 வெள்ளி செலவிடப்பட்டு ஒரு சிறு ரதம் செய்யப் பெற்றிருக்கிறது. இக்கோயில் டவுனிலிருந்து ஒரு மைல் தூரத்தில் மலை அருவியுள்ள இயற்கைவளமமைந்த இடத்தில் கட்டப்பெற்றிருக்கிறது.

மலாக்கா சிவன் கோயில்.

மலாக்கா என்பது பழய நகரமாகும். இது டச்சுக்காரரிடமிருந்த காலத்திலேயே இக்கோவில் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நாலு காலம் பூசை நடக்கிறது. நல்ல நிலைமையில் இக்கோவிலிருக்கிறது. சன்யாசி மலை என்ற ஒரு இடத்தில் உற்சவம் சிறப்பாய்க் கொண்டாடுகின்றனர். சிவன் கோயிலிலிருந்து சுவாமியை சன்யாசி மலைக்கு ரதத்தில் கொண்டு போகின்றனர். அங்கு மூன்று நாள் உற்சவம் நடைபெறுகிறது. திருவிழாச்செலவு ௧000 வெள்ளிக்கு மேற் செல்வதாகத் தெரிகிறது. சன்யாசி மலையிலுள்ள கட்டிடங்களுக்குச்

மலாக்கா சிவன் கோயில்.

வெள்ளிக்கு மேலாகும். ௧0,000 ஜனங்களுக்கு உணவளிக்கப்படும். இக்கோவிலின் படித்தரச் செலவு வருஷத்திற்கு ௫000 வெள்ளியாகும். மரரதம், மயில் வாகனங்கள், கேடகம் முதலியன உண்டு. இவைகட்கு ௧0,000 வெள்ளிவரைச் செலவிடப்பட்டுள்ளது. இவ்வூர் Johore எனும் தனி ஸ்டேட்டிலுள்ளது. இந்த ஸ்டேட்டு சிங்கப்பூரின் எல்லையையொட்டி அழகுபெற அமைந்திருக்கும் ஒரு சிறிய சமஸ்தானமாகும்.

சுமார் ௬0,00 வெள்ளிவரைச் செலவாகியிருப்பதாகத் தெரிகிறது.

மூவார்.

இங்குள்ள நகரத்தார் தண்டாயுதபாணி கோயில் துந்துபி ஆவணிமீ உ௬உ புதிதாகக் கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்யப்பெற்றது. இக்கோவிலின் கட்டடச் செலவு ௧௧0,000 வெள்ளியாகும். கும்பாபிஷேகச் செலவு மட்டும் ௧0,000 வெள்ளியாகி யிருக்கிறது. ஆண்டு தோறும் திருக்கார்த்திகையில் நான்குநாள் உற்சவம் நடைபெறுகிறது. உற்சவச் செலவு ௫000



மூவார் தண்டாயுதபாணி கோயில்.



சைகோனில் நகரத்தார் தண்டாயுதபாணி
கோயிலிலுள்ள வெள்ளி ரதம்.



பசுமந்தான் தண்டாயுதபாணி கோவில்.



பினுங்குத் தண்ணீர் மலை மடம்.



வாலப்பூர் மாரியம்மன் கோவில்.



பிளுங்கு சிவன் கோயில்.

குறள் கற்கும் முறை.

திரு. பொ. திரிகூடசுந்தரம் M. A., B. L.

மனிதனுடைய மனோசக்திகள் மூன்று என்று கூறுவர் மேனாட்டு உளநூல் புலவர். அவையாவன: அறிவு, உணர்ச்சி, ஆன்மா. அதனால் உலகில் மனிதன் ஆக்கும் நூல்கள் எல்லாம் இம்மூன்று சக்திகளில் ஏதேனும் ஒன்றைப்பற்றி நின்று அதை வளர்க்கும் தன்மையுடையனவாகும். ஆகவே நூல்களும், ஞானம் வளர்க்கும் அறிவு நூல்கள், உணர்ச்சியைப் பெருக்கும் அனுபவ நூல்கள், ஆன்மலாப வழி கூறும் அறநூல்கள் என மூவகைப்படும். கணிதம், சோதிடம், ரசாயனம் முதலியன கூறுபவை அறிவு நூல்கள்; காவ்யங்கள், சிற்பம், ஓவியம், இசை முதலியன அனுபவ நூல்கள்; தர்ம சாஸ்திரங்கள், சுவிசேஷங்கள் இதோபதேசங்கள் முதலியன அறநூல்கள். இம்மூன்றுவித நூல்களில் இறுதியில் கூறப்பட்ட அறநூல்கள் மற்ற நூல்களைப் போலவே உலகிலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் மலிந்து தோன்றும். ஆனால் அவைகள் எல்லாம் ஒரேவிதமான சிறப்புடையன என்று கூறுதல் முடியாது. உலகில் காணப்படும் அறநூல்களில் வெகு முக்கியமானவை சிலவேயாகும். அச்சிலவற்றுள் நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியில் உள்ள திருக்குறளும் ஒன்றே என்பது யாவரும் அறியவேண்டியதாகும்.

முன்னோர் புகழ்மொழி.

தமிழ்நாட்டில் காணப்படும் தர்ம நூல்களில் எல்லாம் திருக்குறளே தலைசிறந்தது என்பதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. ஆனால் தமிழ் மக்கள் அது அகில லோகத்திலுள்ள அறநூல்களில் எல்லாம் முதன்மையானது என்று கூறுவர். அம்மட்டோ; திருவள்ளுவர் தேவர், திருக்குறள் தேவவாக்கு என்பதும் அவர்கள் அபிப்பிராயம். திருவள்ளுவர் பெயர் எங்கு வந்தாலும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்றே கூறப்படுவர். கலைகளுக்குத் தெய்வமாகிய வாணியே,

"வள்ளுவன் வாயதென் வாக்கு"

என்று உறுதிகூறியிருப்பதாகத் திருவள்ளுவமாலை செப்புகின்றது. அக்காலத்திருந்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா [நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த [நூன்முறை"

என்று திருக்குறளைப் போற்றுகின்றான். சங்கப்புலவர்களில் ஒருவராகிய காரிக்கண்ணனார் திருக்குறளை,

தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமே லயன்"

என்று பாடியிருப்பதையும் கவனிக்க. இக்காலத்துத் தமிழன்பர் திருக்குறள் தரணியில் உள்ள தர்ம சாஸ்திரங்களில் தலைசிறந்தது என்று சாற்றுவதுபோலவே சங்கப் புலவர்களும்,

"முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினு மில்"

என்றும்,

'அப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழி மூழ்குவார்'

என்றும்,

"எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்"

என்றும் புகழுரைகள் புகன்றிருக்கின்றனர்.

தற்காலத் தமிழர்.

முற்காலத்துப் புலவர்கள் பலர் முப்பா

லைப் போற்றிப் புகழ்ந்து வந்ததோடு அமையாது அவர்கள் செய்யும் நூல்களிலும் குறள் வெண்பாக்களைக் கையாண்டும் வந்திருக்கின்றனர். வள்ளுவர் காலத்திற்குச் சமீபத்தில் எழுந்த மணிமேகலை என்னும் வண்டமிழ்க் காவியத்தில் அதன் ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு
[தெழுவாள்"
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என்று பாடியுள்ள அடிகள் யாவரும் அறிந்ததே. தமிழ்க் காவிய உலகில் தலைசிறந்த காவ்யமாய் கவின்பெற விளங்கும் கம்பராமாயணத்தின் பல பாகங்களிலும் வள்ளுவர் குறளின் சொற்களும் பொருளும் பொலிந்து காணப்படுவதைக் கற்றோர் அனைவரும் அறிவர். தமிழ் பாஷையில் உள்ள காவியங்களில் சிறந்தது கம்பராமாயணம்; அறநூல்களில் சிறந்தது திருக்குறள். அதனாலேயே தமிழ்மொழிக்குக் கதியாவார் இருவர்; கஃகான் கம்பனையும், திஃகான் திருவள்ளுவரையும் குறிக்கும் என்று தற்காலப்புலவர்களில் ஒருவர் கூறியிருக்கிறார். இன்னும் இதுபோல் வேறுவிதமான பல சிறப்புகளும் பண்டிதர் பகர்வர். தமிழ்ஆங்கிலம் இரண்டிலும் சமமாகப் பாண்டித்தியம் படைத்திருந்த ஆசிரியர் சுந்தரம் பிள்ளை,

வள்ளுவர்தம் திருக்குறளை மறுவற நன்குணர்ந்
[தோர்கள்
உள்ளுவரோ மனுவாதியொருகுலத்துக்
[கொருநீதி

என்று மனோன்மணீயப் பாயிரத்தில் பாடியுள்ளார். இதர தமிழ்ப் புலவர்கள்,

"திருக்குறள் சில சொல்லிற் பல பொருளும் செறிந்து நவை நண்ணுதாக, கழி பொருளுங் கருதணியும் நோக்குமிடந் தொறுங்கிடந்து களிப்புச் செய்கின்றது" என்றும்,

திருக்குறள் என்னும் செந்தமிழ் வேதம்
நற்றமிழ்ச் செல்வம்பெற்ற நன்னாட்டின்முன்
மற்றைய பன்மொழி யுற்ற புன்னாடெலா
மன் பொருளுடையார்முன் வறியவர் போல
என்செய்வா மென்றேக்கற்று நிற்ப

என்றும்,

பன்னா லுள்ளுயர் நன்னூலாப்
புரிவுற வருளிய விரிவுறு பொருள்சேர்
தெய்வத் திருக்குறள் மெய்மலிநூல்

என்றும் கூறுநிற்கின்றனர்.

மேனாட்டார் புகழுரை.

இங்ஙனம் தமிழ்ப்புலவர்கள் முன்னாள் முதல் இன்னாள்வரைத் திருக்குறளைச் சென்னிமேற்கொண்டு வாழ்த்தி வந்திருப்பது அவர்களுக்குத் தங்கள் தாய்பாஷையினிடமும் அதில் அகப்பட்டுள்ள அருங்குறளினிடமும் அமைந்துள்ள அன்பின் மிகுதியால் விளைந்ததோ, அன்றி அவர் கூறியுள்ள புகழுரைகளுக்குப் புகலற்குரிய சான்றுகளும் உளவோ என வினா எழக் கூடும். அதற்குத் தற்காலத்தில் தமிழன்னைக்குப் புத்துயிர் அளிக்க அவதரித்த செந்தமிழ்க்கவி திலகமாம் ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போலிளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை

என்று விடைபகர்ந்திருக்கின்றார். ஆனால் நாமாக நாம் புகழும் புகழுரைகள் எல்லாம் பொய்யல்ல; உண்மையே என்று உரைத்துக் கொண்டால் போதுமோ?

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல்வேண்டும்

அன்றோ? ஆம்; உண்மைதான். அங்ஙனம் அயல்நாட்டாரும் திருக்குறளைப் புகழ்ந்திருக்கின்றனர். தமிழ் மொழியின்பால் தங்குதடையில்லாத பேரன்புபூண்டு அனு

தினமும் அதற்குழைத்துவந்த ஆங்கிலப் புலவர் போப் என்பவர்,

"திருக்குறளுக்கு இணையான இலக்கியம் இவ்வுலகில் எங்கும் இல்லை; அதைச் சரிவர நன்குணரும் தமிழ்மக்கள் அயலாரிடம் கற்றுக் கொள்ளவேண்டிய அடிப்படையான அறவிஷயங்கள் யாதும் கிடையாது" என்று பொருள்படும்படி கூறியிருக்கின்றார். அவரைப் போலவே தமிழ்நாட்டில் இயேசு கிறிஸ்துவின் தர்மோபதேச போதகராயிருந்த டாக்டர் கால்டுவல், பிரஞ்சுதேசத்துப் பிரபல ஆசிரியர்களில் ஒருவராகிய ஜூலியன் வின்ஸன், இத்தாலி நாட்டிலிருந்து இங்கே வந்து 'தமிழ்மொழி' கற்றுப் பாண்டித்தியமடைந்து தேம்பாவணி என்னும் செந்தமிழ்க் காவியம்செய்து வீரமாமுனிவர் என்று தமிழர்களால் அழைக்கப்பட்டுவந்த பெச்ஷி பாதிரியார் முதலியவர்களும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அதுமட்டுமன்று; அவர்கள் திருக்குறளைக் கற்றலோடு நில்லாது தங்களைப்போலவே தங்கள் தங்கள் நாட்டாரும் அதைக் கற்றுப் பயன் அடையவேண்டுமென்று கருதி அவரவர்கள் தாய்பாஷையில் அதை மொழிபெயர்த்துத் தங்கள் நாட்டாருக்கு உதவியிருக்கின்றனர். ஆகையால் தற்சமயம் திருக்குறள் தாரணியில் நாகரிகம்பெற்ற பல தேசங்களிலும் பயிலப்பட்டு வருகின்றது. அவ்வுண்மையை நோக்கியே பாரதியார் செந்தமிழ் நாட்டின் சிறப்பைப் பற்றிச் செய்யுள் செய்தபொழுது

> வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
> வான்புகழ் படைத்த தமிழ்நாடு

என்று கூறி மகிழ்ந்திருக்கின்றார். ஆகையால் உலகத்திலுள்ள அறிஞர் அனைவரும் போற்றும் ஒரு நூலாகிய திருக்குறளைத் தமிழர்களாகிய நாமும் இடைவிடாது போற்றுதல் கடனாகும்.

போற்றும் முறை.

ஆனால் அதைப் போற்றும் முறையாது? புகழுரை நிகழ்த்தலா? அன்று; அன்று. அதற்கு இதுவரைக் கிடைத்திருக்கும் கீர்த்தி மொழிகள் போதும். பழயமொழிகளை நாம் பகரவும் வேண்டாம்; புதுமொழிகள் கூறத் தலைப்படவும் வேண்டாம். பின் செய்யவேண்டுவது என்ன? போற்றுதல் என்பதற்கு உண்மையான பொருள் அறிதல்; அறிந்து அனுஷ்டித்தல் என்பதுவே. ஏதேனும் ஒரு பெரிய விஷயத்தைப் போற்றவேண்டுமா: அதன் உண்மையான சாராம்சத்தைச் சரிவர அறிந்துகொள்ள வேண்டும், அறிந்துகொண்டு அதை அனுஷ்டிக்க வேண்டும்; ஏதேனும் ஒரு பெரியாரைப் போற்றவேண்டுமா: அவருடைய குணதிசியங்களையும் அவர் கூறியுள்ள இதோபதேசங்களையும் கோதறக் கற்க வேண்டும். கற்றபின் அவர் குணநலன்களைப் பெறவும் அவர் உபதேசப்படி உயிர் வாழவும் முயலுதல் வேண்டும். அதுபோல் ஏதேனும் ஒரு பெருநூலைப் போற்ற வேண்டுமா: அதைக் கற்கும் முறையறிந்து கசடறக் கற்று அதன் பின் அதற்குத் தக நிற்க அனுதினமும் ஆள்வினை யாற்றவேண்டும்.

தற்காலத்தில்.

ஆனால் தற்காலத்தில் தமிழ்நாட்டில் எந்த விஷயமானாலும் அது போற்றப்படும்முறை தவறுடையதாகவே காணப்படுகின்றது. வாய்கொண்டமட்டும் வாயளாவப் புகழ்வதே போற்றும்முறை என்று கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. சில உதாரணங்கள் தருகின்றேன். விஷயம் முக்கியமானதால் வாசகர் கவனமாய் வாசிக்க வேண்டுகிறேன்.

தமிழ் மொழி.

சர்வலோகத்திலுள்ள சகல பாஷைகளிலும் தமிழ்மொழியே தலைசிறந்தது என்பது தமிழர்கள் அபிப்பிராயம். அவ்வபிப்பிராயம் சரியா தவறா என்ற விஷயத்தை இப்பொழுது ஆராயவேண்டுவதில்லை.

தமிழ்மொழி தலைசிறந்ததென்றே வைத்துக் கொள்வோம். அத்தகைய மாண்பு மிகப் படைத்த பாஷையைத் தாய்மொழியாகக் கொண்டோர் அதைப் போற்றுவது எங்ஙனம்? தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியை ஒருபொழுதும் மறப்பதில்லை என்பதற்குத் தமிழ்நாடெங்கும் அநேகமாத் தினந்தோறும் பத்திரிகைகளில் அதைப் பற்றி எழுதும் வியாசங்களும் அதைப்பற்றிச் செய்யும் சொற்பொழிவுகளுமே போதிய சான்றாகும். ஆனால் அவ்வியாசங்களிலும் சொற்பொழிவுகளிலும் காணப்படுவதென்ன? வெறும் புகழ்ச்சி மொழிகளே. அவைகளில் முற்காலப் புலவர் மொழிந்த

"கடல்வரைப்பின் இதன்சுவை யாவரே களிக்கற்
பாலார்"

* * *

"மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா
[மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும்
[படுமோ"

* * *

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே
[கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை எட்டிலே
தவழ்ந்தபேதை"

* * *

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததுமுதலை
உண்டபாலனை யழைத்ததும் எலும்புபெண்ணுரு
[வாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததுங்கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்சொற்களோ
[சார்தீர்"

முதலிய பாடல்களும், இக்காலத்துப் புலவர் புகன்றுள்ள

"ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து
[சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்து
துமே"

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவதெங்குங் காணோம்"

* * *

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

* * *

"யாரறிவார் தமிழருமை என்கின்றேனென்
அறியாமை யன்றோ மதுரைமூதூர்
நீரறியும் நெருப்பறியும் அறிவுண்டாக்கி
நீயறிவித் தாலறியு நிலமுந்தானே"

முதலிய செய்யுள்களுமே காணப்படும். உண்மையில் அத்தமிழ் மொழியை அன்போடு வளர்க்கும் முறைகள் எதுவும் காணப்படுவதில்லை. காணப்பட்டாலும் அதுகூறும் புலவர்கள் அம்முறைகளை அனுஷ்டானத்தில் உபயோகிப்பதில்லை. புகழ்வதெல்லாம் தமிழ்மொழியை; ஆனால் பேசுவதும் எழுதுவதும் பிறபாஷைகளிலேயே. ஆங்கிலம் அறியாத தமிழ் ஆசிரியர்களும் தங்கள் கையெழுத்திடுவது தமிழிலன்று, ஆங்கிலத்திலேயே. இங்ஙனம் இவர் செய்வது அன்னை மொழியின்பாலுள்ள அன்பைக் காட்டுமோ? அன்னை அன்னை என்று கூறிவிட்டு ஆகாரம் கொடாத ஒருவனுக்கு அன்னையிடம் அன்பு இருப்பதாக யாரேனும் அறையஇயலுமோ?

சைவ சமயம்.

அதுபோலவேதான் சமய விஷயத்திலும் சைவர்கள் எங்கு பார்த்தாலும் சமயத்தின் அவசியத்தையும் தங்கள் சைவ சமயத்தின் உயர்வையும் நாடெங்கும் வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் சாற்றிவருகின்றனர். அவர்கள்

"சைவ சமயமே சமயம்"

என்றும்,

"சைவத்தின்மேற் சமயம் வேறில்லை"

என்றும் இயம்பி வருகின்றனர். அஃதோடமையாது ஏனைய மதங்களை இழித்துரைத்தும் வருகின்றனர். ஆனால் இவர்கள் இவ்வாறு தங்கள் கொள்கையே சரியானது;

பிறர் கொள்கை எல்லாம் பிழையானது என்று கூறிவருவது உண்மையில் சைவத்தையோ அல்லது சமயத்தையோ போற்றியதாகாது என்பது என் அபிப்பிராயம். சைவ சமயத்தைப்போற்றுவதற்குரிய ஓரே வழி அதன் உண்மையான சாராம்சமாகிய சமரசத்தன்மையையும், சமத்துவக்கொள்கையையும், சகலஜீவராசிகளும் அன்பு செய்வதே சமய வாழ்வென்னும் தத்துவத்தையும் அறிந்து அக்கொள்கைகளை அனுஷ்டானத்தில் கொண்டுவர முயல்வதேயாகும். அம்முயற்சியில் அணுவளவும் அன்பு செலுத்தாது வீணே தங்கள் சமயமே தரணிச் சமயமாயிருத்தற்குத் தகுதியுடையது என்று கூறுவதும் சைவசமய நூல்கள் கூறுவனவெல்லாம் சரியானவைகளே; தவறு லவலேசமும் கிடையாது என்று வற்புறுத்துவதும் சைவத்திற்கும் சமயத்திற்கும் ஒருங்கே கேடு சூழ்வதாகும்.

மகாத்மா காந்தி.

மேற்கூறியது போலவே நமது நாட்டில் மகாத்மா காந்தியைப்போற்றுவோர் பலருளர். அவர்கள் யாரைக்கேட்டாலும் ஒவ்வொருவரும் அடிகளின் மேன்மையைத் தெளிவாய் விளக்கிவிடுவார்கள். அவரே அவனியில் உள்ள பெரியோர்களில் எல்லாம் பெரியவர் என்று கூறவும் செய்வர். அவர் பிறந்த இக்காலத்தில் தாங்களும் பிறந்துவாழும் பெரும் பாக்கியத்தைக் குறித்து பெறற்கரிய பேறு பெற்றுவிட்டதாகப் பெருமகிழ்ச்சி எய்துவர். யாரேனும் அடிகளைக் குறைகூறின் உடனே அவரோடு சமர்புரியவும் தயாராயிருப்பர். ஆனால் மகாத்மா காந்தி கூறும் உண்மை உபதேசங்கள் எவை? அவற்றை அனுஷ்டிக்கும் முறைகள் எவை என்பதை அவர்கள் ஒருபொழுதும் சிந்திப்பதில்லை. அவற்றை ஒருவேளை அறிந்தாலும் அவைகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்று கூசாது கூறிவிடுவர். காந்தியடிகளின் உபதேச சாரம் உண்மையும் அஹிம்சையும் என்பதும், அவற்றை அனுஷ்டிக்கும் வழிகள் ராஜீய விஷயத்தில் சுயராஜ்யம் பெற முயற்சித்தல், சமூக விஷயத்தில் ஜாதி வேற்றுமை பாராது தீண்டாமையை ஒழித்தல், பொருள் விஷயத்தில் கதர் தரித்து ஏழைகளைக் காப்பாற்றல் என்பதும் யாவரும் தெள்ளிதில் அறிய அவரே அனுதினமும் கூறிவருகின்றார். ஆனால் அவரை வீணே புகழ்வதோடு மட்டும் நிற்பவர் அவற்றை உணர்வதிலர். ஆகையால் அவர்கள் உண்மையில் அவரைப் போற்றியவர்களாகார்.

திருக்குறள்.

அது போலவே திருக்குறளைப்போற்ற வேண்டுமாயின் வீணே பல புலவர் கூறியுள்ள புகழுரைகளைத் திரும்பத் திரும்பக் கூறிப் பிரசங்கங்கள் செய்வதும் வியாசங்கள் வரைவதுமன்று. திருக்குறளைக் கற்க வேண்டிய முறையாகக் கற்று அதில் கூறப்பட்டுள்ள அறவிஷயங்களை அறிதலும் அறிந்தபின் அவற்றை அனுஷ்டிக்கமுயல்வதுமே திருக்குறளைப்போற்றும் வழியாகும். இவையே திருக்குறள் விஷயத்தில் நாம் செய்யவேண்டியவை என்பதைச்சங்கப்புலவர்களில் ஒருவரும் தெளிவாய்க் கூறியிருக்கின்றார்.

"உள்ளுத லுள்ளியுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற் பால"

அவர் கூறும் வண்ணம் செய்தால்

"அறனறிவோ மான்ற பொருளறிவோ மின்பின்
திறனறிவோம் வீடு தெளிவோம்"

அதனோடு பிணக்கிலா

"வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புல
[வோர்க்
காய்தொறு மூறு மறிவு."

அறியும்வழி.

அப்படியானால் திருக்குறள் நூலின் உள்ளுறை உபதேசங்களின் சாரத்தைக் கிரகிக்கும் வழியும் அனுஷ்டிக்கும் வழியும் என்ன? நூல்கள் அறிவுநூல்கள், அனுபவ நூல்கள், அறநூல்கள் என மூவகைத்து

என்று முன்னமே கூறினேன். அதனால் அந்நூல்களை அறிந்து அனுஷ்டிக்கும் முறைகளும் மூன்று வகைப்படும். உதாரணமாக கணித நூலாகிய அறிவு நூலைப்போற்றுவதெங்ஙனம்? எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்று கருதுவது மட்டுமன்று. கணக்கு முறைகளை எல்லாம் கசடறக்கற்று அவற்றைத் தினசரி வாழ்க்கையில் உபயோகிப்பதாகும். சாதாரணமாக நமது பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் "எல். ஸி. எம். ஜி. ஸி. எம்" என்னும் கணிதமுறைகளை, அரைகுறையாகக்கற்பதும், அவற்றைப்பள்ளிக்கூடத்திற்கு வெளியே உபயோகியாது அகற்றிவிடுவதும் உண்மையில் கணிதத்தைப்போற்றியதாகாது.

காவ்யமாகிய அனுபவ நூலைப்போற்றும் முறை என்ன? ஏதேனும் ஒரு காவ்யத்தை எடுத்துக்கொண்டால் அது அப்படிச்சிறப்புடையது, இப்படிச்சிறப்புடையது என்று பலரறியப் பகர்வதன்று. அதன் கவிகளில் ஏதேனும் ஒன்றிரண்டை எடுத்து அவற்றிற்கு விரிவுரை நிகழ்த்துவதும் அவற்றில் காணப்படும் சொற்பொருள் நயங்களை நவில்வதுமன்று. உண்மையில் ஒருவன் ஒரு காவியத்தைப்போற்றவேண்டுமானால் அவசியமாய்ச்செய்யவேண்டியது அதை முழுவதுமோ அல்லது அதன் முக்கிய, தனித்து நிற்கக்கூடிய பாகங்களில் ஏதேனும் ஒன்றையோ அடிமுதல் கடைசிவரை வாசிக்கும் வண்ணம் இடையில் வேறெதிலும் இதயத்தைப்புகவிடாது வாசித்து அதன் பயனாகக்கவிஞன் அதில் பொதிந்துள்ள உணர்ச்சியைத் தம்மனத்திலும் உண்டாகச்செய்து கொள்வதும் அவ்வுணர்ச்சி மூலமாகக்கண்டு கவிஞன் உணர்த்தும் உண்மைகளைத்தானும் அவ்விதமாகவே உணர்ச்சி மூலம் உணர்ந்து கொள்வதுமேயாகும். இதுவே காவ்யம் கற்கும் முறை.

இனி அறநூல் கற்கும் முறை யாது! அறநூலில் கூறப்பட்டுள்ள நீதிகளில் தலைசிறந்தது எது? அதை அனுஷ்டிக்கும் வழி யாது? என்று அறிதலும் அறிந்து அதன்படி நிற்க முயல்தலுமேயாகும். ஆனால் அறநூல் கற்று அதன் சாராம்சத்தை அறிய வேண்டுமானால், அம்முயற்சியில் இறங்குமுன் மறவாது ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய சிலவிஷயங்கள் உள. அவைகளைப் புறக்கணித்துவிட்டால் உண்மை உபதேசத்தை உய்த்துணர முடியாது. இவைகள் எல்லாம் அநேகமாக மூன்று விஷயங்களில் அடங்கும்.

முதல் விஷயம்.

எந்த நூலை எடுத்துக்கொண்டாலும் அதை இயற்றிய ஆசிரியர் மனிதரே; அதனால் அவர் நிறைகுணத்தரல்லர்; குறைபாடுடையவரே; அவர் நூலில் தவறுகள் இருக்கலாம் என்ற விஷயத்தை மறக்கலாகாது.

> "நெல்லுக்குமியுண்டு நீருக்கு நுரையுண்டு
> புல்லிதழ் பூவிற்குமுண்டு"

என்பது நாலடியார் கூற்று. தவிர நாம் கற்க விரும்பும் திருக்குறளின் ஆசிரியராகிய திருவள்ளுவரே

> "அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
> இன்மை யரிதே வெளிறு"

என்று எச்சரிக்கை செய்திருக்கின்றார். ஆகையால் சங்கப்புலவர்கள் வள்ளுவரை அயனென்றும் அவனிப்புலவர்களில் எல்லாம் தலைசிறந்தவர் என்றும் கூறியிருப்பதால் அவர் நூலில் குற்றம் காணக்கிடைகுமோ; வள்ளுவரும் தவறு செய்யக்கூடியவர் என்று செப்ப முடியுமோ என்று நினைத்தல் கூடாது. தேவரும் மனிதரும் குற்றம் செய்தால் அது குற்றமேயன்றிக் குணமாய்விடாது. அதனாலேயேவள்ளுவர்

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப் [பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று கூறியுள்ளார். அவர் வாக்கைப் பின்பற்றியே அவர் நூலை ஆராய்தல் அறிவுடையார் கடன். அவ்வாறு ஆராய்வதற்காக நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ள

வேண்டிய விஷயத்தைக் கீழ்க்கண்ட அறநெறிச் சாரச்செய்யுள் தெளிவாய் விளக்குகின்றது:—

காய்த லுவத்த லின்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றா கெடும்.

இவ்விஷயத்தை மறவாது திருக்குறளை ஆராயப் புகுந்தால் திருவள்ளுவருடைய கொள்கைகளில் சில தவறுடையனவாகத் தோன்றும்; அவ்விதம் தோன்றினால் அத்தவறுடைய குறள்களை அகற்றிவிடுதல் அவசியம். அங்ஙனம் செய்ய மனோதைரியம் இல்லாதார் குறளைக் கற்றுப் பயன் ஒரு பொழுதும் அடையார். உதாரணமாக, குறளாசிரியரின் 'பெண்ணின் உரிமை'க் கொள்கையை இக்காலத்து அறிஞர் யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆண் பெண் அனைவரும் சரி நிகர் சமானம் என்பதே சரியான கொள்கை. ஆனால் வள்ளுவர் இச் சமத்துவக் கொள்கையை ஒப்புக்கொண்டதாய்த் தெரியவில்லை. சாதாரணமாக நமது ஆடுமாடுகள், தட்டு முட்டுச்சாமான்கள், நிலம் பணம் முதலியவைகளை நமது பொருளாகக் கொள்வது போலவே ஆண்களின் பொருள் பெண் என்று வள்ளுவர் கூறுவதாய்க் காணப்படுகின்றது. வள்ளுவர் மனைவியின் இலக்கணத்தைக்கூறும் அதிகாரத்திற்கு 'வாழ்க்கைத்துணை நலம்'என்று மகுடம் சூட்டியுள்ளதிலிருந்து அவர் பெண்ணை ஆணுக்குச் சமானமாகவே மதித்துவந்தார் என்று சொல்லமுடியாது. சமமாக மதித்திருந்தால் மனைவிக்கு இலக்கணம் கூறியது போலவே கணவனுக்கும் இலக்கணம் வாழ்க்கைத்துணை நலத்தின் கீழ் கூறியிருப்பார். பெண்ணுக்குக் கூறியிருக்கும் இலக்கணமும் மனைவி கணவனுக்குத்தாழ்ந்தவளே; அவனுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதற்கமைந்த அடிமையே என்னும் விஷயத்தையே விளக்கமாகத்தெரிவிக்கின்றது.

"பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை [ஞாலத்
தறம்பொருள் கண்டார்கணில்"

என்னும் குறளையும் அதற்கடுத்து வரும் ஒன்பது குறள்களையும் கவனித்தால் பெண் ஆணின் "பொருள்" என்னும் தவறான கொள்கை காணக்கிடப்பதை அறியலாகும். இக்கொள்கை தவறானதால் வள்ளுவர் கூறுவதெல்லாம் தவறு என்றோ, அவர் நூலைக் கற்கவேண்டுவதில்லை என்றோ கூறுவதாக நினைக்கவேண்டாம். வள்ளுவரும் தவறு கூறக்கூடும் என்பதை மறத்தலாகாது என்பதை வற்புறுத்துவதே என் நோக்கமாகும்.

இரண்டாவது விஷயம்.

உண்மைகள் சாஸ்வதமானவை, தற்காலத்தவை என இருவகைப்படும். சாஸ்வதமான உண்மைகளைத்தான் எல்லா தேசத்து அறிஞர்களும் எக்காலத்தும் ஒப்புக்கொள்வர். அந்தந்தக்காலத்திற்கும் அந்தந்த தேசத்திற்கும் மட்டும் உண்மையாய் உள்ளவைகளை யாரும் மறுக்காது ஒப்புக்கொள்ள முடியாது. காலமும் தேசமும் மாறும் பொழுது முதலில் உண்மையாய்த்தோன்றியவை பின் பொய்யாய் விடும். ஆகையால் ஏதேனும் ஒரு அறநூலை உதாரணமாக திருக்குறளை ஆராயப்புகுந்தால் அதில் மேற்கூறிய இரண்டுவிதமான உண்மைகளும் காணப்படலாம். அப்பொழுது நாம் செய்ய வேண்டியது யாதெனில் சாஸ்வதமான உண்மைகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளைத்தள்ளிவிடவேண்டும். அப்பொழுதுதான் குறள் கற்பதின் உண்மைப் பயனை அடைவோம்.

மூன்றாவது விஷயம்.

மேற்கூறிய இரண்டுவிதமான உண்மைகளும் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றுமென்பதில் சந்தேகமில்லை. அந்த முரண்பாடு மட்டுமே அறநூல்களில் காணப்படும் என்று நினைக்கவேண்டாம். சாஸ்வதமான உண்மைகள் என்றோமே அவற்றிலும் கூட

முரண்பாடு தோன்றக்கூடும். உண்மை உரைத்தல் என்பது என்றும் எத்தேசத்தும் எள்ளளவும் மாருத சாஸ்வத உண்மையாகும். ஆனல் வள்ளுவர் வாய்மை என்னும் அதிகாரத்தில் வாய்மையின் இலக்கணத்தை இரண்டுவிதமாக வகுத்துக் கூறுகின்றார். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடு உடையனவாகத் தோற்றுகின்றன.

> தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச்சுடும்.

> மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு
> தானஞ் செய்வாரிற் றலை.

என்னுங் குறள்களில் அறிந்ததைச்சொல்வதே வாய்மை என்று கூறுபவர்

> வாய்மையெனப்படுவதியாதெனின் யாதொன்றுந்
> தீமையிலாத சொலல்
> பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்குமெனின்

என்னுங்குறள்களில் நிகழ்ந்ததோ நிகழாததோ, அறிந்ததோ அறியாததோ பிறர்க்குத்தீமை விளையாதது நன்மை தருவது பேசுவதே வாய்மை என்று கூறுவதாகக் காணப்படுகின்றது. இத்தகைய முரண்பாடுடைய குறள்கள் விஷயத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை என்ன? முதலில் முரண்பாடு இல்லாத விதமாய் அவைகளுக்குப் பொருள் கூற முடியுமா என்று பார்க்கவேண்டும். ஆனல் முரண்பாடு இல்லாமல் பொருள் கூற முயலும்பொழுது அம்முரண்பட்ட குறள்களில் உயர்ந்த தர்மத்தைக் கூறும் குறள்களைப் பொருளற்றவையாய்ச் செய்துவிடலாகாது. வேறு பொருள் கூறவேண்டுமானல் தாழ்ந்த தர்மம் சாற்றும் பாசுரங்கட்கே பகர்தல் வேண்டும். இரண்டாவதாக முரண்பாடில்லாமல் பொருள் செய்ய முடியாவிட்டால் உயர்ந்தநீதி உரைப்பவைகளைக் கொள்ளவும் தாழ்ந்த தர்மம் உரைப்பவைகளைத் தள்ளிவிடவும் தயங்கக்கூடாது. அப்படிச் செய்வதால் நாம் தவறு செய்தவர்களாகவும் மாட்டோம்; குறளாசிரியர்க்கு இழிவு தேடியவர்களாகவும் மாட்டோம்.

இன்னொரு விஷயம். சாஸ்வதமான உண்மைகளை உரைக்கும்பொழுது சில சமயங்களில் மேற்கூறியது போன்ற முரண்பாடு காணப்படாமல் வேறோர் வித்தியாசம் காணப்படக்கூடும். அப்பொழுதும் நாம் அக்குறள்களின் பொருளையுணர்வதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு நல்ல விஷயத்தை ஒரு சாஸ்வதமான உண்மையை உரைக்கும்பொழுது அதற்கு வள்ளுவர் பல படிகள் வகுத்திருக்கக்கூடும். எல்லோரும் திடீரென்று மேல்படியில் கால் வைத்துவிட முடியாதென்று கொண்டு நீதிவழிகளைப் படிப்படியாய் மேலேறும் வண்ணம் வகுத்திருக்கக்கூடும். அப்பொழுது நாம் அங்ஙனம் வகுத்துள்ள பல படிகளையும் நன்கு பகுத்து அறிவதோடு அவற்றின் கடைசியான மேல்படி யாது என்பதையும் அறிந்து அதுவே வள்ளுவருடைய உத்தமக் கொள்கை; அதையே நாமும் நமது லட்சியமாகக் கொள்ளவேண்டும் என்றும் உணர்தல் வேண்டும்.

உதாரணமாக வள்ளுவர் அறன்வலியுறுத்தல் என்னும் அத்தியாயத்தில் அறம் செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்திக் கூறுகின்றார். அறம் என் செய்ய வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் கூறுகின்றார். ஆனல் உண்மையில் விஷயத்தை நன்குஆராய்ந்த பெரியோர்களால் அறம் செய்யவேண்டியதற்குக் கூறப்படும் காரணம் ஒன்றேயாகும். அது, மனிதனுடைய இயற்கையான செயல் அறம் செய்தல் என்பது. மறம்தான் மனித இயற்கைக்கு விரோதமான செயல். ஆகையால் ஒருவன் அறம் செய்தால், பயன் கருதிச் செய்தலாகாது; அறம் செய்தலே மனித குணம் என்று நினைத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

குறள் கற்கும் முறை.

வள்ளுவர் அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் அறம் செய்ய வேண்டியதற்குப் பல காரணங்கள் கூறுகின்றார். அறம் செய்தால் சிறப்பும் செல்வமும் கிடைக்கும்; அறத்தினூங்காக்கமில்லை; அது பொன்றுங்கால் பொன்றாத் துணை; அதுவே சிவிகை ஊர்பவனுகச்செய்வது; அதனாலேயே இன்பம் வரும் என்பன அவர் கூறும் குறள்களில் காணப்படும் காரணங்கள். இவைகள் எல்லாம் அறம் செய்வதால் ஏற்படும் நன்மைகளை நவில்கின்றன. அதுபோல அறம் செய்யாததால் ஏற்படும் தீமைகளைக்கூறும் குறள்களும் உள. ஆனால் முன் கூறியபடி நன்மை தீமைகளை மனத்திற்கொண்டு செய்வது உண்மையில் அறமாக மாட்டாது. அறமானாலும் அது தாழ்ந்தபடியிலுள்ள அறமேயாகும். இவ்வுண்மை வள்ளுவருக்குத் தெரியாததொன்று அன்று.

அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது."

அப்படியானால் வள்ளுவருக்கு உயர்ந்தபடியில் உள்ள அறம் தெரியுமோ? தெரியும். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்திலேயே அதைக் கூறியிருக்கின்றார்.

'செயற்பால தோருமறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.'

மனிதன் செய்யவேண்டியது யாது? அறமே. செய்யாது விலக்கற்பாலது யாது? பழியே என்று கூறியிருப்பதைக் கவனிக்க. இங்ஙனம் பல படிகள் கூறியிருப்பதையும் கவனித்து இவைகளில் உயர்ந்தது எது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியது குறள் கற்கப் புகுவார் கடன்.

ஆரம்ப முறை.

மேற்கூறிய மூன்று விஷயங்களை மறவாதவர்களே ஆசிரியரின் உண்மையான உயர்ந்த உபதேசங்களை உய்த்துணர்ந்துகொள்ள முடியும். இனி நூலை எடுத்து உபயோகித்துக் கொள்ளவேண்டிய விதம் என்ன? முன்னாலேயே திருக்குறள் அறநூல் என்றும், அதனால் அதை அறநூல் கற்கும் முறையில் கற்கவேண்டும் என்றும் கூறினேன். திருக்குறள்போன்ற அறநூல்களைக் கற்கும்முறை யாது? ருஷ்யா தேசத்தில் சில வருஷங்களுக்கு முன்னர் வாழ்ந்து உலகம் போற்றும் உத்தம ஞானியாயும் உயர்ந்த ஆசிரியராயும் இருந்த டால்ஸ்டாய் என்பவர் தமது சமய நூலாகிய கிறிஸ்துவ சுவிசேஷங்களைக் கற்கும் முறை இதுவென்று விளக்கியிருக்கின்றார். கிறிஸ்துவின் சுவிசேஷங்கள் கிறிஸ்தவ வேதமாயிருப்பதுபோல் திருக்குறள் தமிழ்நாட்டினரின் வேதமாயிருப்பதால் டால்ஸ்டாய் சுவிசேஷத்திற்கு வகுத்த முறை திருக்குறளுக்கும் பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை. அவர் கூறும் முறைப்படி முதலில் நூலை எடுத்து ஓதப் புகுபவர் உரைகள், விரிவுரைகள் வியாக்கியானங்கள் எதையும் கையில் எடுத்தலாகாது. தம் சொந்த அறிவின் துணையை மட்டுமே கொண்டு கற்க ஆரம்பிக்கவேண்டும். அர்த்தமாகாத பதங்களுக்கு அகராதியைப் பார்த்து அர்த்தம் அறிந்துகொள்ள வேண்டும். அவ்வளவே. அதன்பின் கையில் ஒரு பச்சைப் பென்சிலை எடுத்துக்கொண்டு நூலை ஆரம்ப முதல் ஒழுங்காகக் கற்றுவர வேண்டும். படித்து வரும்பொழுது எந்த பாகங்கள் பொருள் விளங்குகின்றனவோ அந்த பாகங்களை மட்டும் பச்சைக் குறியிட்டுக் கொண்டே செல்லுதல்வேண்டும். நூல் முழுவதையும் அவ்விதம் ஓதியபின், மறுமுறையும் ஆரம்பத்திலிருந்து படிக்க வேண்டும். அப்படி மறுபடியும் படிக்க ஆரம்பிக்கும் பொழுது சிகப்புப் பென்ஸில் ஒன்று கையில் எடுத்துக்கொள்ள வேண்டும்; முன்னால் பச்சைக் குறியிட்டவைகளை மட்டுமே படித்து அவைகளில் எவை பொருள் நனி விளங்குகின்றனவோ அவைகளுக்குச் சிகப்புக் குறியிட்டுக்கொண்டே படித்து முடிக்க வேண்டும். பச்சைக் குறியிட்டுப் படிக்கும் பொழுது பொருள் விளங்கியதாகக் காணப்பட்ட சில பாகங்கள் இப்பொழுது மறு

படியும் ஊன்றி உய்த்துப் படிக்கும்பொழுது பொருள் விளங்காது போவது உண்டு. இனி சிகப்புக் குறியிட்டவைகளை மட்டுமே மற்றுமோர்முறை கற்கத் தொடங்கி இன்னும் நன்றாய் அர்த்தம்புரியும் பாகங்களுக்கு நீலக் குறி இட்டுச்செல்லல் வேண்டும். இவ்வாறு பன்முறை படித்துவந்தால் இறுதியில் நன்றாய் ஐயம் திரிபறப் பொருள் விளங்கிய பாகங்கள் வெகு சிலவாகவே தோன்றும். ஆனால் இந்தச் சில பாகங்களே ஆசிரியரின் கருத்து முதிர்ந்து காணும் விஷயங்கள் என்று கொள்ளலாகும். இம்முறையைத் தழுவி எத்தனைபேர் எவ்வளவு அறிவிற் குறைந்தவர்கள் கற்றாலும் அவர்கள் எல்லோருக்கும் அணுவளவும் சந்தேகமின்றி அர்த்தம் தெரிந்த பாகங்கள் எல்லாம் ஒன்று போலவே காணப்படும். ஆகையால் அவற்றையே ஆசிரியரின் உண்மையான உயர்ந்த உபதேசங்கள் என்று கொள்வதற்குத் தடையென்ன என்று டால்ஸ்டாய் கேட்கின்றார்.

அறிவு குறைந்தவர்களுக்கு அர்த்தமாகும் பாகங்களே ஆசிரியரின் உயர்ந்த உபதேசங்கள்; அவைகளே ஆசிரியர் கருத்தின் சாரம் என்று எங்ஙனம் இயம்ப இயலும் என்று சிலர் கேள்வி எழுப்பக்கூடும். இவ்விதமான சந்தேகம் "அறிவு நூல்"களுக்குப் பொருந்துமேயன்றி அவையொழிந்த இதர நூல்களுக்குப் பொருந்தாது. காவ்யங்களைக் கற்று அவைகளின் உண்மைக் கவிச் சுவையை அறிவதற்குப் பேரறிவு வேண்டியதில்லை. இப்படிச் சொல்வதை வைத்துக் காவ்யம் கற்க அறிவே வேண்டியதில்லை என்று கூறுவதாகக் கருதற்க. அறிவு வேண்டியதுதான்; ஆனால் அவ்வறிவு காவ்யத்தின் கவிச்சுவையின் இலக்கணத்தை அறிவதற்காக வேண்டுமே தவிர, காவ்யத்தின் கவிச்சுவையைப் பருகுவதற்கு அவ்வளவாக வேண்டியதில்லை. எவ்வளவு அறிவு குறைந்தவனாயினும் கவியின்ப அனுபவம் இல்லாதவன் என்று கூறமுடியாது. அறிவு நிறைந்தவன் கவியின்பத்தை அதிகமாக அனுபவிக்கக் கூடும்; அதுவுங்கூட முற்றிலும் உண்மையென்று கூறிவிட முடியாது. சில வேளைகளில் அறிவு குறைந்தவனே அதிகமாகக் கவியின்பம் துய்க்கக் காண்கின்றோம்.

அதுபோல் அறநூல் கற்று அதன் சாரத்தை அறிவதற்குப் பேரறிவு தேவையில்லை. உண்மையில் ஒழுக்கத்தின் பல அம்சங்களையும் அனுபவத்தில் ஆராய்ந்து அறிந்து அவற்றை உலக க்ஷேமார்த்தத்தின் பொருட்டு உரைக்க விரும்பி நூல் செய்யும் உயர்ந்த உத்தம ஆசிரியர்கள் எழுதும் அறநூல்கள் எல்லோரும் கற்றுப் பயன் படுத்திக் கொள்ளக்கூடியவைகளாகவேயிருக்கும். அவர்கள் எழுதுவது கற்றோர்க்காகமட்டுமன்று; தங்கள் கல்வித்திறனைக் காட்டுவதற்காகவுமன்று. அவர்கள் நூல் வகுப்பதற்குரிய காரணம் செகத்தோர் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விதமாய் சித்தாந்த உண்மைகளைத் தெரிவுறுத்தும். திருமூலர் கூறுவது போல்

"நான்பெற்ற வின்பம் பெறுக விவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்குவன்"

என்ற கருத்தேயாகும். ஆகையால் அவர்கள் தாங்கள் கண்ட உயர்ந்த உண்மைகளைத் தாழ்ந்த அறிவுடையோரும் அறிந்து பயன் அடையுமாறே நூல் செய்வர் என்பது நிச்சயம். அவ்விதமாகவே திருவள்ளுவரும் தம் திருக்குறளைச் செய்திருக்கின்றனர் என்பது என் அபிப்பிராயமட்டுமன்று; ஆதிகாலத்திருந்த அருந்தமிழ்ச் சங்கப்புலவர்கள் கருத்துமாகும். வேதம் முதலிய இதர தர்ம சாஸ்திரங்கள் கற்றுப் பொருள் தெரிந்து கொள்ளுதல் எல்லோர்க்கும் எளிதன்று; எல்லோர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனேயே வள்ளுவர் குறளை

வகுத்தார் என்பது அவர்கள் அபிப்பிராயம்.

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்
முன்பறியச்சொன்ன முது மொழி நூல்— [மன்பதைகட்
குள்ள வரிதென்று அவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

அதனாலேயே கோதனர் என்னும் புலவர்

வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று

என்று பாடியிருக்கின்றனர். அங்ஙனம் எல்லோர்க்கும் பயன் தரும்படி நூல்யாத்தல் அரிய தோர் காரியம் என்பதை அரிசில் கிழார் எடுத்துக்கூறுகின்றார்:

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ்சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப்பொருள்விளங்கச் [சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

இவர்கள் கூற்றும் என் அபிப்பிராயமும் உண்மை என்பதை நான் கூறும் வண்ணம் அகராதி மட்டும் துணையாகக்கொண்டு ஆராயப்புகுவார் யாவரும் அறிந்து கொள்வர். தேவர் செப்பும் "செம்மை நெறியிற் றெளிவு பெற" வேண்டிய தெல்லாம் பக்தி சிரத்தையே யாகும். ஆசிரியர் கூறும் உண்மைகளை அறிய வேண்டுமென்னும் ஆசையிருந்தால் நிச்சயமாய் உண்மைகளை அறிந்துகொள்ள முடியும். உண்மையில் ஆசையுள்ளவன் உண்மையைக்காணுது போகான். அன்பில்லாதவனே அணுவளவும் அறியான்.

"அருட் கண்ணிலாதார்க்கு அரும்பொருள் [தோன்று
அருட் கண்ணுளோர்க்கு எதிர் தோன்றும்"

என்பது திருமூலர் உறுதிமொழி.

ஆகையால் யாரும் குறள் கற்கப் போறிவும் பிறர் துணையும் தேவை என்று கருத வேண்டாம். சில சமயங்களில் பொருள் காண்பது அரிதாகத்தோன்றினும் சிறிது முயற்சி செய்தால் போதும்; பொருள் விளங்கிவிடும். வள்ளுவர் பொருள் கஷ்டப்பட்டுத்தெரிந்து கொள்ளும்படி எந்தக் குறளையும் இயற்றியிருக்கமாட்டார்; ஏனெனில் அவரே

"எண் பொருள வாகச்செலச் சொலித் தான் [பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு"

என்று வற்புறுத்தியிருக்கின்றார். தவிர, கஷ்டம் ஏற்பட்டாலும் அதற்காகக்காரியத்தைக் கைநழுவ விடலாகாது.

"அருமையுடைத்தென்று அசாவாமை [வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்றும் வாக்களிக்கின்றார். மேலும்,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்."

ஆகையால் டால்ஸ்டாய் கூறும் வண்ணம் குறளைக்கற்பார் குறளாசிரியரின் தேர்ந்த கருத்து இதுவென்று கண்டு கொள்ளுதல் முடியாத கார்யமன்று. அவ்விதம் கற்று அறிவதே பயன் அடையும் பாதையுமாகும்.

அறநூல் கற்பது எதற்காக? வாழ்க்கை என்னும் கடலில் உள்ள கற்பாறைகள் நீர்ச்சுழிகள் முதலிய அபாயங்களை முன் கூட்டி அறிந்து அவைகளினின்றும் விலகி நன்னெறியில் நின்று வாழ்க்கையின் லட்சியத்தையும் அதன் பயனாக நித்திய இன்பத்தையும் அடைவதற்காகவே. கப்பலோட்டும் மீகாமன் உபயோகிக்கும் கடல்மார்க் கப்படம் போலவே வாழ்க்கை லட்சியம் விரும்பும் மனிதர் வள்ளுவர் குறளை உபயோகிக்க வேண்டும். வள்ளுவரே "ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் இழுக்கலுடையுழி யூற்றுக் கோலற்றே" என்றும் கூறியிருக்கின்றார். அங்ஙனம் வள்ளுவர் குறளைத் தம் வாழ்க்கைத்துணையாகக் கொள்ள விரும்புபவர் அதைத்தாங்களாகவே கற்றுப் பொருள் தெரிந்து அனுஷ்டிக்க முயலுதல் வேண்டும். அப்பொழுதுதான் அது

பயன் அளிக்கும். குழந்தையைப்போஷிப்பது குழந்தை தானகவே எடுத்துண்ணும் ஆகாரமே யன்றி குழந்தையின் தாயார் குருவியைப்பார், காக்கையைப்பார் என்று விளையாட்டுக்காட்டி வேண்டாம் என்று மறுக்கும் குழந்தைக்குத் திணிக்கும் சோறு பலகாரம் முதலியன வல்ல. இவைகள் போஷிப்பதற்குப்பதிலாக நோய்களையே வருவிக்கும். அதுபோல்தான் நாமாகக் கற்று அறியும் குறள்களும் பிறர் உரை கொண்டு கற்கும் குறள்களும்.

உரைகளின் உபயோகம்.

இங்ஙனம் கூறுவதால் உரைகளே அனுவசியம் என்று உரைப்பதாக நினைக்கவேண்டாம். நான் உரைப்பதெல்லாம் முதலில் நாமாகவே குறளைக் கற்றுணர முயலுதல் வேண்டும்; அப்பொழுது சில குறள்களை நன்ருய் அறிந்துகொள்வோம்; அவை நமது அனுபவத்திற்கும் சரியாயிருக்கும்; அதன் பின்னர் நமக்குப் பொருள் நன்ருய் விளங்காத ஏனைய குறள்களைக் கற்பதற்காக உரையாசிரியர்கள் துணையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். அங்ஙனம் கடைசியாக உரைகளைக் கையாளப் போகும்பொழுதும் நான் மேலே ஆசிரியர் விஷயத்தில் மறவாதிருக்க வேண்டும் என்று கூறிய மூன்று விஷயங்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் அவசியம்.

தவிர உரையாசிரியர்களின் துணையை உபயோகிப்பதில் மற்றுமோர் கஷ்டமுண்டு. அவர்கள் ஆசிரியர் கருத்திற்கிணங்கவே உரை கூறுவதாக எவ்வளவுதான் உறுதி கூறினும் அவ்வுறுதி மொழியை நம்பிவிடலாகாது. நம்பிவிடவும் முடியாது. யார் நூலைப் படித்தாலும் தம் மனோபாவத்திற்கிணங்கவும் தம் உபயோகத்திற்கு வேண்டிய முறையினுமே கற்பார்கள். ஆகையால் உரையாசிரியர் கூறும் உரை ஒரு முகமாக விருக்கும். நாம் கற்கப்புகும் முறை வேறு விதமாக விருக்கும். நம்முடைய உபயோகத்தைக் குறித்தே நாம் கற்கப்புகுகின்ருேம். ஆகையால் அதற்கிணங்கவே நாம் அவ்வுரைகளை உபயோகித்துக்கொள்ளல் வேண்டும். ஆனுலும் எல்லா அறநூல்கள் விஷயத்திலும் 'யாண்டும் மறவாமே நோற்பது ஒன்றுண்டு.' அது எந்த பாகத்தை எடுத்துக்கொண்டாலும் அதற்கு உயர்ந்த, விரிவான, யாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விதமாகப்பொருள் காணமுயலல் வேண்டும் என்பதாகும். உரையாசிரியர் எவ்வளவு பெரியவராக மதிக்கப்பட்டிருந்தாலும், அவரைவிட நாம் எவ்வளவு அறிவில் குறைந்தவர்களாக விருந்தாலும், விரிவான உரையல்லாதவைகளை அறவே அகற்றிவிடத் தயாராயிருக்க வேண்டும். உதாரணமாக எல்லோரும் பொதுமறை என்று போற்றும் திருக்குறளின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில் கூறப்பட்டுள்ள முதற் குறளில் காணப்படும் ஆதிபகவன் என்பதற்குப் பொதுவான பதமாகிய கடவுள் என்பதைப் பொருளாகக் கூருமல் உமையொருபாகன் என்று பொருள் கூறுவது பிசகாகுமல்லவா?

> "அறத்தான் வருவதேயின்பம் மற்றெல்லாம்
> புறத்த புகழுமில"

என்னும் குறள் பொதுவாக அறத்தின் லட்சணத்தைக் கூறும் அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் காணும்பொழுது குறளில் காணும் அறம் என்பதற்கு இல்லறம் என்று பொருள் இயம்புதல் எவ்விதத்திலும் ஏற்காது அன்ருே?

> "உண்ணுமையுள்ள துயிர்நிலை யூனுண்ண
> அண்ணுத்தல் செய்யா தளறு"

என்னும் குறளில் காணப்படும் அளறு என்னும் மொழிக்கு நரகம் என்று பொருள் கூறுவதை நம்பிக்கைமாத்திரமே ஆதாரமாகவுள்ள நரகக்கொள்கை என்று கூறுபவர் ஏற்றுக்கொள்ளா ரன்ருே? துன்பம் என்று பொருள் கூறினுல் எல்லோரும் ஒப்புக்

கொள்வர்; அதனுல் அப்பொருள் கொள்வதே சிறப்புடைத்தாகும்.

முடிவுரை.

மேற்கூறிப் போந்தவண்ணம் குறளைக் கற்பதே பயனளிக்கும் பாதை என்பது என் அபிப்பிராயம். என் அனுபவமும் அதுவே. எல்லாக் குறள்களையும் கற்றுக் கொள்வதைவிட சில குறள்களையேனும் கற்று அதன்படி நடந்து அதன் உண்மை உபயோகத்தை உணர்ந்துகொள்வதே மேன்மை தருவதாகும். அப்படி ஒன்றிரண்டு குறள்களையாவது அனுபவ உரைகல்லில் தீட்டிப் பொருள்கண்டு பயன்பெறுபவனே உண்மையில் திருக்குறளைப் போற்றுபவனுவான். அப்படிப்பட்டவனுக்கே அந்நூல்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—
[குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத்திருமலர்
[போன்ம்.

ஜெயலெக்ஷிமி விலாஸ்,

சுகபோக ஜீவிய சிந்தாமணி லேகியம்.

இல்லறமே நல்லற மேன்று
இயம்பினர் மெய்யறிவுடை யோர்

என்பதற்கிணங்க அந்யோன்ய வாழ்க்கையை விரும்பும் தம்பதிகள் அபின் கஞ்சா முதலிய லாகிரி வஸ்த்துக்கள் சேர்ந்த ஔஷதங்களை உண்ட உடனே கிளர்ச்சியை அடைந்தாலும் அடுத்த நிமிஷமே தளர்ச்சியைக் கொடுத்து இரத்தம் சுண்டி உதடு வெழுத்து ஒழி மங்கி மூலக்கிராணி உண்டாகி பலநாள் தொந்தரவுகளை அடையும் நண்பர்களின் நன்மைக்கென்றே பால், பழச்சத்து வேர் வித்து, விழுது, வகைகளால் செய்த இந்த ஜீவியத்தை உண்பதினுல் வெட்டைப் பிடிப்பு காஷம் நிகைப்பு அஜீர்ணம் நீரளிவு முதலிய துரித ஸ்கலிதத்தையுமாற்றி நல்ல இரத்தம் ஊறி நரம்புகள் முறுக்கேறி ஸ்திரிகளுக்கும் புதிய உணர்ச்சியைக் கொடுத்து என்றுமில்லாத சுகபோகத்துடன் சந்தானவிருத்தியை உண்டுபண்ணும்.

30 நாள் சாப்பிடக்கூடிய டின் ஒன்றுக்கு ரூ. 5—0—0

இன்னும் பல லேகியங்கள் தைலங்கள் வாசனை சாமான்கள் நாவல்கள் பலவும் கிடைக்கும். விலாசம் தெரிவித்தால் ஜெயலெக்ஷிமி இனுமாய் அனுப்புகிறோம்.

ஜெயலெக்ஷிமி விலாஸ்,

AMMAPET, TANJORE DT.

மைனர் திருவிளையாடல்.

காட்சி க.

"அருமையான சைக்கிள்; பேஷான சிகரெட்."

காட்சி உ

"முதல்தரமான விஸ்கி! பெண்ணொன்று கண்ணுக்குத் தெரிகிறது!"

காட்சி ௫.

"மைனரும் தாஸியும்."

காட்சி ச.



“ தாஸி வீட்டில் சீட்டாட்டம்.”

காட்சி ரு.

"தாஸிக்குச் சேலையெடுக்கிறார்."

குமரன் அண்டு மடல்.

காட்சி ௬.

"நகை பூட்டுகிறார்."

காட்சி எ.



"மோட்டார் வாங்கி நோட்டெழுதுதல்."

காட்சி அ.



"வெகு ஜோர்"

காட்சி ௯.

"வாரண்டு வந்திருக்கிறது"

காட்சி க௦.



வீட்டிற்கு வந்து பெண்டாட்டி பிள்ளைகளை அடித்துக் கொல்கிறான்.

காட்சி கக.



சாகும்போது மனைவி மக்கள்தான் பக்கத்திலிருந்து உதவுகின்றனர். தாஸிகளும் டாபர்களும் நண்பர்களும் போனவிடந்தெரியவில்லை.

சைவமும் ஜாதி வேற்றுமையும்.

சாத்தூர் திரு. டீ. எஸ். கந்தசாமி முதலியார் B. A.

ஜாதி வேற்றுமை என்பது பண்டைய ஆரிய மக்களால் தமிழ் மக்களிடைப் புகுத்தப்பட்ட ஓர் தீமை. ஜாதி என்னும் வட சொல், பிறப்பொன்றினாலேயே ஒருவருக்கு ஏற்றமும் தாழ்வும் உண்டு என்னும் கொள்கையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனப் பன்னூற்றாண்டுகட்கு முன்னர் எழுந்த பேரற நூல் அறமுழக்கம் செய்துள்ளது. அவ்வறநூல் எழுந்த காலமே தமிழர் நாகரிக முதிர்ச்சி யடைந்திருந்தகாலம். அந்நூலைத் துருவி ஆராய்வார்க்கெல்லாம் அப்பேரற நூல் செய்த பேராசிரியருக்கு ஜாதி வேற்றுமை உடன்பாடில்லை யென்பதும், அவ்வேற்றுமை உணர்ச்சி தமிழறிஞர் மன நிலைக்கு முரணுடையதென்பதும் நன்றாக விளங்கும். மக்கள் இருவகை யாவார் என்றும், அவர் மெய்ந்நெறிக் கண்ணொழுகும் மக்களும், அம்மெய்ந்நெறி யொருவி தீநெறிப்பட்டொழுகும் மக்கட் பண்பிழந்த கயவரும் ஆவார் என்றும், அவ்விருவகையினரும் அவ்வவர் தொழிலினாலும், பண்பினாலும் வேறுபடுவர் என்றும் பொய்யா மொழி கூறுகின்றது. அக்காலத்திலேயும் ஆரியர்கள் தங்கள் நூலாலும் ஒழுக்கத்தாலும், தமிழர் ஒழுக்கத்தைத் திரித்து நற்பாலில் பிரை பெய்தாற்போல் கலக்கினர். ஆகவே ஜாதி என்பது ஆரிய மக்களால் தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட்ட நன்கொடையும் மூலதனமும் ஆகும். அந்நன்கொடை பெற்ற தமிழ் மக்களோ அதனைப் பல்கச் செய்து வளம்படுத்தினர். அவ்வாரிய மக்களோடு வந்த ஜாதிகள் நான்கெனின், தமிழ் மக்களிடை இப்போது காணப்படும் ஜாதிகள் எண்ணிறந்தன. ஜாதி வேற்றுமை நம் இந்திய நாட்டில் காணப்படுவது போல் வேறெந்நாட்டிலும் காணப்படுவதில்லை. உற்று நோக்குமிடத்து, அது கூர்த்தமதியும் தடித்த தன்னல விருப்பமும் உடைய கூட்டத்தார் பிறரை வஞ்சித்து மயக்கி ஆள்வதற்குப் படைத்துக்கொண்ட ஒரு பெரும் படைக்கலம் ஆகும்; அல்லது ஜனசமூகத்தில் சிற்சில குணங்களும் சிறப்பியல்புகளு முடைய கூட்டத்தார்கள் தத்தம் குணங்களும் சிறப்பியல்புகளும் வழுவாது தம் வழிப் பிறந்தாரிடை அமைதல் வேண்டுமென்னும் நோக்கமுடையார் ஒருங்கு கூடித் தோற்றுவித்த ஓர் கட்டுப்பாடுமாகும். எக்காரணம் கொண்டு அது எழுந்ததாயினுமாகுக. அது தீமை பயக்கும் தன்மை என்பது அறிஞர் யார்க்கும் ஒப்ப முடிந்ததாம்.

ஜாதி என்னும் வடசொற் பொருளுணர்த்தும் தமிழ்ச் சொல் ஒன்றுமில்லை. குடி, குலம் என்பன வேறு பொருள் தருவன. அச்சொல்லின்மையே தமிழர்களுக்குள் பண்டைக்காலத்து ஜாதிவேற்றுமை இல்லை யென்பதை நிலைநிறுத்தி வலியுறுத்தும் தக்க சான்று. பல்லாயிரவாண்டுகட்கு முன்னர் புகழ்படைத்த தமிழ் மக்களின் பெயர்களை நோக்குமிடத்து, அவர் பெயர்களுடன் ஜாதியை யுணர்த்தும் பெயர்கள் தொடுக்கப்படாமலிருப்பதைக் காணலாம். அதை நோக்குங்கால் அக்காலத்துள்ளோர்களும், சின்னாட்களுக்கு முன் செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மகாநாடு போன்ற மற்றோர் மகாநாட்டின் கொள்கைக்குக் கட்டுப்பட்டுத் தத்தம் பெயர்களைச் சூட்டிக்கொண்டார்களோ எனக் கருத இடமுண்டு.

தனிப்பட்டவர்களின் சுயநலத்தினாலோ அல்லது சிற்சிறு கூட்டத்தாரின் செருக்கினாலோ தோற்றுவிக்கப்பட்ட ஜாதி என்னும் பயிர், சமயம், மதம் என்னும் நீரால் வளர்க்கப்பட்டு செழித்தோங்கி நிற்கின்றது. எச்சமயமேனும் அச்சமயிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக்கத்திற்கும் ஜாதி உணர்ச்சி வேண்டற்பாலதெனக் கூறத் துணிந்தால் அதனின் வேறு புன்சமயம் ஒன்றுமில்லை. எல்லாச்சமயங்களும் அவ்வச் சமயங்களைச் சார்ந்தவர்கள் வீடு பேறடைய வேண்டுமெனக்கருதுகின்றன. ஓர் சமயத்தைச் சார்பவன் எந்த ஜாதியிற் பிறந்தாலென்? அச்சமயக் கொள்கைகளை அவன் பின்பற்றி ஒழுகினால் அவனுக்கு வீடு பேறுண்டன்றே? இறைவன் மக்களின் பிறப்பு நோக்கி உயர்வு தாழ்வு கருதான் என்பது எல்லாச் சமயிகட்கும் உடன்பாடு. எச்சமயத்திலேனும் அச்சமய உரிமைகட்கும் நலங்களுக்கும் உரியரல்லாத சமயிகள் உண்டென்னின் அச்சமயத்தினால் அவர்கள் அடையும் நன்மை ஒன்றுமில்லை. சுமார்த்தர் முதலிய பிராமணர் ஜாதி வேற்றுமையைப் பெரிதும் பாராட்டிவரினும், அவர்களும் மக்களிடைக் காணப்படும் ஜாதி வேறுபாட்டிற்குத் தங்கள் சமயநூலில் ஆதாரம் உண்டென்று சொல்லக் கூசுகிறார்கள். அவர்கள் தங்கள் சமயநூலில் கூறப்படும் ஜாதி என்னும் சொல்லுக்குப் பொருள் 'பிறப்பு வேறுபாடு' என்பதில்லையென்றும், அது ஒருவன் அகப்பண்பையும் தொழிலையும் குறிக்குமென்றும், ஒரு ஜாதியிற் பிறந்தார் மற்றொன்றிற்குரியராதல் இயலுமென்றும் கூறுகின்றனர்.

நுண்ணிதில் ஆராயுமிடத்து மக்கள் நிற வேற்றுமையே ஜாதி வேற்றுமைக்கு அடிப்படையாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. செவ்விய நிறத்தோடு வடபுலனின்று தென்புலத்தில் கலக்கப்புகுந்த ஆரிய மக்கள் தம்மின் பல்வேறளவில் செம்மை குறைந்த நிறமுடைய மக்களை வெவ்வேறு ஜாதியினராகக் கருதினர். மக்கள் தத்தம் உடல் நிறத்தால் செருக்கடைவதும், தத்தம் செவ்விய நிறத்தால் உயர் பிறப்பாளர் என்று தம்மைக் கருதுவதும் நாகரிக உணர்ச்சிகள் பலவும் நனியோங்கப் பெற்றிருக்கின்ற இற்றை நாளிலும் காணலாம் என்றால், இருண்ட அக்காலத்தில் அச்செருக்குடையார் பலர் இருந்தனர் என்று கொள்ளுதல் பொருந்தும். ஜாதி என்னும் வடசொற்கிணையான மற்றொரு வடசொல் 'வர்ணம்' என்றிருப்பதே மேற்கூறிய கொள்கையை வலியுறுத்தும். வர்ணமெனினும் நிறமெனினும் ஒக்கும்.

சமயங்கள் பல; பலநிறத்தன. சமயங்கள் பலவாயினும் தென்னாட்டில் சிறப்பாய்விளங்குவது சைவசமயமாகும். சிவனை முழுமுதற் கடவுள் என்று கொண்டு வணங்கிச் சிவநன்னெறியில் ஒழுகுபவர் சைவர் எனப்படுவர். அவர் சமயம் சைவம் எனப்படும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி"

என்ற மணிமொழிகள் படிப்பார் உளம் விட்டகலா; கேட்பார் செவி விட்டு நீங்கா; அம்மணிமொழிகள் சைவ சமயிகள் கொண்டுள்ள குறிக்கோளின் பெருமையையும் அவர்கள் கொள்கைகளின் உயர்வையும் காட்டும். அகில லோகங்கட்கு மிறைவன் சிவபெருமான் என்பதையும், அவனே "மருவி எப்பொருளும் வளர்ப்போன்" என்பதையும் சைவர்கள் அறிவார்கள். அத்தகைய சிவன் விரும்பித் திருக்கோவில் கொண்டுள்ள இடங்கள் தென்னாட்டிற் பல உண்டு. சிவனை வணங்குகின்றவர் வடநாட்டிலிருப்பினும் அவர் அவனை மூவரிலொருவன் என்று மயங்குகின்றார். அவர் அறியார். அவர் சிவன தீடில் பெருமையையும் அறியார். அவன் பிறவியாக்கைப் பெரியோன் என்பதையும் அறியார். அவர் ஏதோ ஒரு கூட்டத்துக்குத் தெய்வம் என்று அவ

னைக் கருதியுள்ளார். சிவன் முழுமுதற் கடவுள் என்னும் கொள்கை தென்னாட்டிலே தான் விளங்குகின்றது. சிவபெருமான்எல்லா நாட்டிலும் விளங்குபவனாயினும், தென்னாட்டைச் சிறப்பாகக் கொண்டகாரணத்தாலும், அவன் தங்கள் உளமே புகுந்தவதனாலும், தங்கள் நாட்டின்பால் வைத்துள்ள பேராதரத்தாலும், சைவர்கள் தங்கள் சிவபெருமானைத் தென்னாடுடைய சிவனென்றும், தென்பாண்டி நாட்டான் என்றும், பாண்டி நன்னாடுடையான் என்றும் பலவாறாகக் கூறி மகிழ்ந்தனர். எனினும் தங்கள் சிவபெருமான் எல்லையற்ற பரம்பொருள் என்பதைச் சிறிதும் மறந்திலர். அச்செம்பொருளின் அடிவணங்கி வீடுபேறடைதற்குரியரல்லாத மக்களும் ஜாதியும், நாடும் நகரமும் இல்லையென்பதை யறிந்து கண்ணுதலான் கருணைக்கு எல்லா ஜாதியாரும், எல்லா நாட்டாரும், எல்லா சமயத்தாரும், எல்லா நெறியாளரும் உரியராவர் என்னும் பொருள் அள்ளூறிய நெஞ்சத்தாராய்ச் சைவ சீலர்கள் தங்கள் தென்னாடுடைய சிவனை 'எந்நாட்டவருக்கும் இறைவன்' எனப் போற்றி வணங்கலாயினர். சிவன் பாண்டிநன்னாடுடையனாயினும், அவன் ஆணை செல்லா நாடுமில்லை இடமுமில்லை. அவன் அருட்கால் வீசா உள்ளமுமில்லை. அத்தகைய பெருமை வாய்ந்த சைவ சமயமும் எம்மக்களையேனும் எச்சமயத்தையேனும் வெறுப்பதில்லை.

'விரிவிலா அறிவினார்கள்
வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும்
எம்பிராற் கேற்றதாகும்'

என்று சொல்வேந்தர் ஓதுவதை நோக்குக! விழுமிய நோக்கமும் உயரிய சீலமும் உடைய சைவசமயத்தின் நெறிநின்றொழுகுவோர் உள்ளத்தில் ஜாதி வேற்றுமை உணர்ச்சிக்குச் சிறிதேனும் இடமுண்டா? இனிச் சிவநெறியொழுகிய பெரியார் சரிதங்களைச் சிறிது ஆராய்ந்து சைவ சமயத்தில் ஜாதி உணர்ச்சிக்கிடமுண்டா வென்று உசாவுவாம்.

நம்நாட்டில் விளங்கும் சமயங்கள் சில பெண்களுக்கு சமய உரிமைகள் அனைத்தையும் வழங்கவில்லை. இரு பிறப்பாளர்கள் எனக் கூறிக்கொள்வார் கூட்டத்தில் மகளிர் மட்டும் ஒரு பிறப்பாளர்களாயுள்ளார்கள். மகளிர் வேதங்களை ஓதுதற்கும், மறைமொழி சிந்தை செய்வதற்கும் உரியரல்லர் என அவர்கள் கருதுகின்றார்கள். சைவ சமயமோ எனின் ஆடவர்க்களிக்கும் எல்லாச் சமய உரிமைகளையும் மகளிர்க்குமளிக்கின்றது. ஆடவர்க்கென ஓர் ஏற்றமும் மகளிர்க்கென ஓர் தாழ்வும் சைவ சமயம் அமைக்கவில்லை.

எக்குலத்திலும் ஒருவன் தோன்றலாம். எந்த ஜாதியிலும் ஒருவன் பிறக்கலாம். அது சுட்டி அவனுக்கு உண்டாகும் இழுக்கும் பெருமையுமில்லை. அவன் எங்குமீசன் எனக் கருதி மெய்யன்புடையனாய் ஒழுகின் அவன் புகழெய்தி வீடடைதற்குரியன்; புலைத்தொழில் செய்பவனாக ஒருவன் இருப்பினும், இறைவன்பால் ஈடில் அன்புடையனாயின் கடவுளோடொப்பக் கருதப்படுவன் எனத் தமிழ்மறை பறையறைகின்றது. 'சங்கநிதி பதுமநிதி' என்ற அருமைத் திருவாக்கை உற்று நோக்குக. எவன் எந்த ஜாதியிற் பிறந்தாலும், அதனால் மட்டும் உண்டாம் பயன் ஒன்றும் இல்லை. இறைவன் திருவடி தொழுதல் வேண்டுமெனக் கூறுகின்றது. ஒருவன் பெருமை சிறுமைக்குக் கட்டளைக் கல் அவன் இறைவன் அடிபேணலும் பேணாமையுமேதான் என்பது அரசர் திருவாக்கின் பொருளாகும்.

பண்டைத்தமிழ் மக்களிடை ஜாதி வேற்றுமை இருந்ததில்லை என்றும், ஆனாற் பிற்காலத்திலே தமிழ் மக்களிடைப் புகுத்தப்பட்டதென்றும் கண்டோம். சிவநன்னெறியிற் செவ்விதின் ஒழுகிய அடியாருள்ளத்தில் ஜாதி வேற்றுமை உணர்ச்சி பண்டைக்

காலத்திலிருந்ததா என்று ஆராய்வோம். தொண்டர் புராணத்திற் கூறப்படும் அடியார் கூட்டங்களைச் சிறிது ஊன்றி நோக்குங்கள். அவ்வடியார்களுள் இல்லறத்தில் நின்று அறம் இயற்றினர் பலர். துறவறத்தினின்று துன்பில் பதம்பெற்றார் சிலர். ஆனால் அவர்களுள் எவரேனும் தாம்பிறக்கப்பெற்ற ஜாதியின் உயர்வையோ, பிறர் பிறந்த ஜாதியின் இழிவையோ முறையே நோக்கி மகிழ்ந்தோ இகழ்ந்தோ வாழ்ந்தார்களா? திருஞானசம்பந்தர் சீர்காழியிற்றோன்றிய அந்தணர்; மிக இளைஞர். திருநாவுக்கரசர் வேளாளர் தோன்றல்; வயதில் மிக முதியர். அவர் தில்லை மன்றுளாடும் சிவபெருமான் திருநடனம் கண்ணுற்று, பின் காழிவேந்தரைக் காணுமாறு தில்லையினின்று காழி நோக்கிப் புறப்பட்டார். அதனைக்கேட்ட காழிவந்த ஞானச்செம்மலார், தம்மிருக்கையினின்று புறப்பட்டு அன்பர் குழாத்தொடும் விரைந்து சென்று அரசரை எதிரேற்கத் தலைப்பட்டார். அப்போது சிந்தையில் என்றும் நீங்காப் பேரன்புடையராய், திருமேனியிற்றாம்நோற்ற நோன்பினால் விளைந்த அசைவுடையராய், தாம் உடுத்திய கந்தையும் மிகை என்று கருதும் துறவுடையராய் கையில் உழவாரப் படையுடையராய், கண்களில் மல்கிய கண்ணீருடையராய், வெண்ணீறு சண்ணித்த மேனியுடையராய்ச்சொல்லரசர் எதிர்நோக்கி வரக்கண்ட கவுணியக் கன்றும் தாம் தமது உள்ளக்கிழியில் ஓயாது எழுதிப்பார்த்த தொண்டர் திருவேடத்திற்கு இலக்கியம் நேரே வெளிப்பட்டு நிற்பதைக்கண்டு அரசரைத் தொழுது நின்றார். அக்காலை ஞானச்செம்மலார் தாம் மறையவர் என்று வாளா இருந்திலர்; வணங்கினர். அரசரும் பிள்ளையாரைப் பேராதரத்தொடும் இறைஞ்சி நின்றார்.

பின்னொரு காலத்தில் திருஞான சம்பந்தர் திருச்சாத்த மங்கைக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய அடியார்கள் சூழ்தரச் சென்றபோது, அவ்வூர் மெய்யடியார்களுள் ஒருவரும், அந்தணர் குடியிற்றோன்றியவரும், ஆகிய திருநீல நக்கரென்பார் பிள்ளையாரைத் தம் வீட்டிற்கழைத்துத் தக்க ஆற்றால் உபசரித்தார். அப்போது ஞான சம்பந்தரும் மற்றும் பலரும் திருநீல நக்கரது வீட்டினுட்செல்லப் பாணர் மட்டும் வெளியே நின்றார். பாணர் 'தீண்டப்படா' வகுப்பினைச் சார்ந்தவர். திருநீலநக்கர் மனையிற் செல்ல உரிமையுடையரல்லர். பாணரைத் தம்மோடு காணப்பெறாத கவுணியர் கோன் "பாணர் எங்கே?" என்று திருநீல நக்கரை வினவி, அவர்க்குத் தகுந்த உறையுள் கொடுக்குமாறு திருநீலநக்கரை வேண்டினர். திருநீலநக்கரும் பாணர் பெருமை நோக்கியும் அவர்க்கு வேண்டுவன செய்ய மறந்தமைக்கு இரங்கியும் மனமழிந்த சிந்தையராய், பாணரிடம் சென்று அவரை வீட்டினுள் அழைத்துக் கொடுவந்து யாகசாலைக் கண்மையில் இடங்கொடுத்தமர்த்தினர். யாகவன்னியும் நீலநக்கர் செய்கையை உவந்து பாராட்டியதுபோல் முன்னினும் பன்மடங்கு கொழுந்துவிட்டெரிந்தது. அடியாரெல்லாம் அளவளாவி மகிழ்ந்திருந்தனர்.

காழியர்கோன் திருவெருக்கத்தம்புலிருக்கு அடியார் குழாத்தொடும், யாழ்ப்பாணரோடும் சென்று அங்கு திருக்கோயில்கொண்டிருந்த சர்வேசுரனை வழிபடுங்கால் யாழ்ப்பாணரைப் பெற்ற பெரும்பேறுடையது அப்பதி என அதனைப் புகழ்ந்து பாடியுள்ளார். ஆகவே அப்பதிக்கு விளைந்த ஏற்றமெல்லாம் யாழ்ப்பாணர் பிறந்தருளப் பெற்ற பேறொன்றே என்று பிள்ளையார் கருதுகின்றார் என்று புலனாகின்றது.

சொல் வேந்தர் திருப்பழனம் சென்று பொருப் பரையன் மடப்பிடியைப் போற்றி மீளுங்கால் திங்களூர் வழிவந்தார். திங்களூரில் அந்தணர் குடியிற் றோன்றிய அப்பூதியார் கூவல் குளம் தண்ணீர்ப்பந்தல் முதலிய அறநிலையங்கள் எடுத்து திருநாவுக்கரசரைக் காணும் பேறு பெற்றில்லாத போதே

அவர்பால் பேரன்பு கொண்டு தமது மக்கட்கும் மற்றும் எல்லா உடைமைகட்கும் அச்சொல்லரசர் பேரே பெயராக இட்டு அவர் திருப்பெயரே மந்திரமாக வழுத்தி எல்லை இல்லாதோர் இன்பம்எய்தி வாழ்ந்துவந்தார். அப்படி வருங்கால் பழனம் நின்று திரும்பி வரும் நாவரசர், குளிர்தூங்கும் பரப்பினதாய் அவ்வழிக்கரையில் நிறுவப்பெற்றுள்ள தண்ணீர்ப் பந்தருட் சென்று தண்ணீரின் சுவை ஆர்ந்து அப்பந்தரின் எம்மருங்கும் தம் பெயரே எழுதப்பெற்றிருந்ததை நோக்கி அப்பந்தரை அப்பெயரிட்டு அங்கமைத்தார் யார் என உசாவுவாராயினர். அங்குள்ளார் வாயிலாக அதனை அமைத்தார் திங்களூர் அப்பூதியடிகளார் என, அறிந்து திங்களூர் அப்பூதியடிகள் மனைக்குச் சென்றார். மங்கலமாம் திருவேடத்தொடுவரும் அரசர் திருவுருவத்தைக் கண்டதுமே தம்மனையினின்றும் எழுந்து வந்து நல்வரவேற்று நின்ற அப்பூதியடிகளை நோக்கித் தாண்டக வேந்து "ஐயரே! தாம் அமைத்த தண்ணீர்ப் பந்தற்கு நும்பேர் சூட்டாதே வேறொரு பேர் சூட்டியதென்"? என வினவினார். இம்மொழிகளைக் கேட்டவுடனே அப்பூதியடிகளாருக்குக் கங்குகரை இல்லாத சீற்றம் உண்டாயது. அடியாரிடத்தும், அதனினும் அப்பமூர்த்திகளிடத்தும் கரையிலாக் காதல் கொண்டிருந்த அப்பூதியார் செவியில் "வேறொரு பெயர்' என்ற வெம்மை மொழிகள் தாக்கிச் சுட்டன. அங்ஙனம் வேறொரு பெயர் எனக் கூறிநின்ற அடியார் திருநாவுக்கரசர் என்பதை ஓராராய் அவரை நோக்கி, மங்கலமாய சிவவேடத்தைத் தாங்கி நின்ற பெரியீரே! நினைத்தாலும் சொன்னாலும் சுடுகின்ற வெம்மை மொழியை இங்ஙனம் கூறினீர். மெய்வேடம் தாங்கி நின்ற நீவிர், அன்று பல்லவ அரசன் கல்லொடு சேர்த்துக் கடலிற் பாய்ச்சியபோது யாதொரு இடையூறும் இலராய்க் கல்லே மிதப்பமாகச் சொல்லே துணையாகக் கரைவந்தேறிய பெருமையையுடைய அண்ணலாரை உலகமெல்லாம் அறியுமே! நீவிர் அறிந்திலிரோ? அப்பெரியாரை அறியாத பெரியீர் நீவிர்யாவர்? உமது உறைவிடம் யாது? நீவிர் அறியப் படற்குரியீர்!' எனக் கூறினர்.

இது நிற்க, அப்பூதியார் தாம் அங்ஙனம் கடிந்து பேசியபோது தம் முன் நிற்பார் தம் மனமெலாம் கொள்ளை கொண்ட நாவரசர் என அறியார். நாவரசரை அதற்குமுன் அவர் கண்டதில்லை. அவர் புகழைமட்டும் செவி மடுத்து இன்புற்றிருந்தார். நாவரசரைக் காணாதிருந்த காலத்தும் அவர்பால் அவருக்கு அன்பு எல்லையின்றி வளர்ந்தது. நாவரசர் வேளாளர் என்பதையும் அவர் அறிவார். அப்பூதியடிகளார் நாவரசரிடத்து வைத்திருந்த அன்பையும் நன்மதிப்பையும் ஒருபக்கம் நோக்கி இப்போது பிராமணர்கள் அறுபத்து மூவர்களிடத்தும், மற்றும் தம் குடியிற் பிறவாத ஏனைய அடியாரிடத்தும் அவர்கள் கொண்டுள்ள வெறுப்பும் மற்றொரு பக்கம் நோக்கினால் சைவ மெய்யடியார்களுக்கு ஜாதி வேற்றுமை யுணர்ச்சி இன்மையும், அடியாரல்லாதாரிடத்தே அஃது உண்மையும் வெளியாம்.

நீவிர் யாவர் என வினவப்பட்ட நாவரசர் அப்பூதியாரது பெருமையை உள்ளவா நினைத்தவராய் விடைகூறுவார் 'சைவசமயத்துப் பிறக்கும்படியான பெரும் பேறு வாய்த்தும் அச்சமயத்திலேயே என்றும் வாழும் ஊழிலாது சமண்சமயமாகிய பெரும் பௌவத்திற் செலுத்தப்பட்டு ஆழ்த்தப்பட்டபோது அவ்வருகக் கடலினின்றும் ஏறும் வழியறியாது மயங்கி அல்லற்பட்டுழன்றேன்; அக்காலத்து பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான், அவ்வருகக் கடலினின்று எளியேனை ஏற்றுவிக்கத் திருவுளம் கொண்டு சூலை நோயாகிய பெருந்துணை கொடுத்து அதன் வழியாக அருகக் கடலினின்றும் ஏற்றுவித்தபோது, அச்சூலையைத் தானும் சிவபெருமான் அருட்பேறென்றும் அருகக்கடல் கடந்தேறுவதற்குக்

கைவந்த தோணி என்றும் அறியமாட்டாச் சிறியேன் அடியனேன்'' எனக் கேட்டார் உளங்கரையப் பணிவுடன் கூறினர். உடனே அப்பூதியடிகளார் தம்முன் நிற்பார் தமது ஒழியாக் காதற்கு உரியராய சொல்வேந்த ரென்பது தெளிந்து, தானும் அவர் திருவடி மிசை வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று, பரவிப் போற்றி, மனையுட் சென்று தமது மனைவியாரையும் அருமை மக்களையும் தேடற்கரிய செல்வம் தானே வலிய வந்து கிட்டியது போல் பெருவகை கொண்டு அவர்களையும் அவர் திருவடிமிசை வீழ்ந்து வணங்கும்படி செய்து அப்பெரியாரிடத்தினின்று வரிசையிற் திருநீற்றுக் காப்புப் பெற்றுச் சிந்தைமலி உவகையுடனிருந்தார்.

அப்பூதியார் அப்பமூர்த்திகளைத் தமது இல்லத்தில் திருவமுது கொள்வதற்கு இசைவித்து திருவமுது சமைக்கும்படி தமது மனைவியாரை ஏவ அவரும் அறுவகைச் சுவையுடன் சமைத்த திருவமுதைச் சிறிதும் வேற்றுமையின்றித் தாமும் தமது அருமைப் புதல்வர்களும் அடியாருடன் ஒருங்கிருந்து திருவமுதுண்டு மகிழ்ந்தனர்.

வன்றொண்டர் வேளாளரான ஞாயிறு கிழார் மகளார் சங்கிலியாரையும், பதியிலார் குலத்து வந்த பறவைநாச்சியாரையும் மணம் செய்தனர்.

ஆகவே சைவசமயத்தைப்போல் விரிந்த நோக்கமும் உயர்ந்த கொள்கைகளும் வேறு எச்சமயத்தினும் இல்லை என்று சொல்லலாம். அங்ஙனம் கூறுவதற்கு ஒருவற்கு மனம் துணியாவிட்டாலும் இச்சமயத்திற் காணப்படா விரிந்த கொள்கைகளும் பரந்த நோக்கங்களும் வேறே எச்சமயத்திலும் காணப்படா என்றேனும் சொல்லலாம். சைவசமயிகள் குறைபாடுடைய ஒழுக்கமுடையராயிருக்கலாம். அவர்கள் ஜாதிப் பற்றுடையராக இருக்கலாம். ஜாதி வேற்றுமையூறிய உணர்ச்சியுடையராக இருக்கலாம். ஆனல் அக்குறைபாடுகள் சைவசமயத்திற்கு உண்டு என்றுவது அதனைச்சார்ந்தால் அச்சமயிகளிடம் தோன்றின என்றுவது கூறுதல் மெய்ம்மையாகாது. எந்தச் சமயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்; அந்தச் சமயம் அதனை ஆக்கியோர் ஆக்கியபோது அதனிடைப் பெய்து வைத்த தூய்மையான குணங்களும், இயல்புகளும் கருத்துக்களும் அதனைப் பின்பற்றுவாரிடத்தே காணப்படுகின்றனவா என்று உற்று நோக்குங்கள். சமயம் என்பது வளராது என்றும் ஒரே படித்ததாக நிற்கக்கூடிய பொருள் என்று சிலர் கருதுகிறுர்கள்; அது தவறு. சமயம் உயிருடைப் பொருள் போலவே காலம் தோறும் அதனைச் சார்கின்ற பற்பல மக்களின் வளர்ச்சியாலும், தளர்ச்சியாலும் அம்மக்களோடு கலப்பெய்துகின்ற வேற்று மக்களின் குணத்தினலும் இயல்பினலும் அவ்வப்போது மாறுதலடைந்து வளர்ந்தும் தளர்ந்தும் வேறுபாடடைகின்றது. சைவ சமயத்தைப் பின்பற்றி ஒழுகும் தமிழ்மக்களிடை முன் இல்லா ஜாதி வேற்றுமை பிறரால் புகுத்தப்பட்டபின் அது மக்களிடை வேரூன்றி விட்டது. அதைப் போக்க வேண்டுமென்றுல் சைவசமயத்தையே அடியோடு போக்கிவிட்டால் இவ்வேற்றுமையும் அடியோடு போய்விடும் என்று சில நல்லறிவாளர்கள் கூறுகின்றுர்கள். அவர்கள் கூற்றை ஆராயுங்கால் அதனடிப்படையில் சைவ சமயத்தைப் பாழ்செய்யும் கேடுகளை அறவே இன்னே நொடிப்பொழுதில் போக்க வேண்டும் என்னும் பேரூக்கம் தங்கி நிற்பதைக் காணலாம். அவ்வூக்கமேதான் அங்ஙனம் அவர்களைச் சொல்லும்படி ஏவியது என அறியக்கிடக்கின்றது. அக்கேட்டினைப் போக்க மற்றுமோர் வழியுண்டு. அஃதாவது சைவசமயத்தில் ஒழுகலாற்றினை இடை இடையே வந்து கலக்கிய கேடுகளை அறவே போக்கி அச்சமயத்தை மீண்டும் தூய்மை செய்து புத்துயிர் பெறச் செய்தல். பண்டைத் தமிழர்களுக்கு ஜாதி வேற்றுமையின் மீது எப்போதும் வெறுப்பு என்பதைக்

காட்டுவதற்கு வேறொரு சான்று வேண்டுவ தில்லை. ஜாதி உணர்ச்சி தமிழ் மக்களிடத் தில் புகுத்தப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் ஜாதிப்பிரிவு தமிழ் மக்களுக்கே என்றும் உரியது என்று மயங்கி இருக்கும் இக்காலத்திலும் பல்லாயிரவர்களாக தமிழ் மக்கள் ஒருங்குகூடி அவ்வேற்றுமையை அறவே ஒழித்துவிட வேண்டுமென்று உறுதி செய்து தக்க வழிகள் நாட மடிதற்று நிற்பதே போதும்.

"பெரியோரை வியத்தலுமிலமே
சிறியோரை இகழ்த லதனினுமிலமே."

நம்பிக்கையுள்ள இடம்! நாணயமான சரக்குகள்!!

புதுமாதிரி ஜரிகைச் சேலைகள் 12 முழம் சேலைகள் 1-க்கு விலை ரூ 30 முதல் ரூ 60 வரை; 16 முழம் சேலை 1-க்கு ரூ 45 75 முதல் ரூ 100 வரை.

ஷை மாதிரி உடல் ஜரிகை புட்டா சேலைகள் 12 முழம் சேலை 1.க்கு ரூ 40, 60 முதல்; ரூ 100. வரை 16 முழம் சேலை 1-க்கு விலை ரூ 50, 75 முதல் ரூ 150 வரை.

கராச்சிக்கரை சேலைகள் 12 முழம் சேலை 1-க்கு ரூ 20, 25, 50 வரை; 16 முழம் சேலை 1-க்கு விலை ரூபாய் 25, 30, 50, 75 வரை மேலே கண்ட சேலைகள் பிங்க், சாக்லெட், ரோஸ், புளூ, ஆரஞ்சு, ஸ்கப், கிரீம் முதலிய எல்லா நிறங்களிலும் கிடைக்கும்.

வேண்டுகோள் திருப்தியில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு வேறு சரக்குகள் அல்லது பணம் கொடுக்கப்படும்.

மற்றும் கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காபூல் பெருங்காயம் உத்திராக்ஷ ஜபமாலைகள், கண்டிகள், கெவுடுமணிகள், உல்லன் போர்வைகள் முதலியன எல்லா விலைகளிலும் நயமான சரக்குகளாக அனுப்பிக் கொடுக்கப்படும்.

இனும்! குமரன் பத்திரிகையைக் குறிப்பிட்டு எழுதுவோருக்கு

பாக்கிங் சார்ஜ் இனும்!!

விலாசம்:—
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

Address:—
Silk Pitamber Co,
BENARES, CITY.

ஆண்டுமடலுக்கோர் ஆங்கில ரசம்

வி. ஆர். எம். செட்டியார். **B. A.**

"ஓர் உண்மைக்கவியின் செவியில் புலிக் குரலும் தாய்ப்பாஷையாகும்."

—ஜான் கீட்ஸ்.

"உலகம் காதல் மயங் கலந்த இன்பந் தான். தனிமையில்லை. மலைகள் வானத்தை அளாவி முத்தமிட, அலைகள் ஒன்றை யொன்று தழுவ, சூரியன் பூமியைக் கட்டிக் களிக்க, சந்திர கிரணங்கள் சமுத்திரத் தில் முத்தாட, என்மனம் பொங்கி இச்சுவை யறிய காதலியின் முத்தமே விழைகின் றது."

—ஷெல்லி.

"சிற்பியின் ஒவியம் மனோதத்துவம்; ஓவியம் எழுதுவோனுக்கு உலகம் ஓர் ஓவிய மாம்; உண்மைக் கவிக்கு உலகம் ஓர் காவிய மாகும். மனோ ஜாலத்தால் கற்பனையின் வேகத்தால் கவிஞன் கவி பாடுவதும், சிற்பி யின் மனம் சிற்பத்தில் தோய்ந்து படிவ தும், ஓவியக்காரனுக்கு உலகம் தன் மனோ குணக் கண்ணுடியாய் பிரதிபிம்பிப்பதும் உண்மையினும் உண்மையே"

—ஆஸ்கார் ஒயில்ட்.

"சிற்ப ரகசியமும், உலகரசியமும், இயற்கையின் ரகசியமுமே எனது ஆவல்."

—ஆஸ்கார் ஒயில்ட்.

"உலக வாழ்க்கையில் துன்பம் இருண்டு ஓங்கி முடிவற்றிருக்கின்றது. முடிவுற்ற துன் பமே உலக வாழ்வு.

—வேர்ட்ஸ் ஒர்த்.

"ஜீவிய அழகே நித்தியானந்தம்."

—ஜான் கீட்ஸ்.

"நாம் கடவுள் கரத்தினுல் வீசிய கவண் கல். இப்புவியில் விழுந்த பின் எதிர்த்துச் செல்லமுடியாது".

—விக்டர் ஹியூகோ.

"ரோஜா மலர் ஆடைகளைந்து தலைக்விந்து நீராடும்போது ஸ்தனரேகை பளீர் பளீரென மிளிர்கின்றது."

—ஷெல்லி

"இருண்ட மரத்திற்கு இலையும் மலரும் எப்படி அவசியமோ, அதுபோல் எனக்குச் சொல்லும் சொற்பெருக்கும் அவசியம்."

—ஆஸ்கார் ஒயில்ட்.

"பொய்யும் பழிச்சொல்லும் மலிந்த இவ் வுலகில் சத்தியமே முறிந்து துடிக்கின்றது.

—அலெக்சாண்டர் போப்.

"அரை உண்மையே அடமான பொய்; முழுப்பொய்யான தனிப் பொய்யைக் கண்டு, கண்டிக்கலாம்; ஆனல் சிறிது மெய் கலந்த பொய்யைக் காண்பதும் கண்டிப்ப தும் அரிது."

—டெனிசன்.

"இன்று துன்பக்கண்ணீர்; நாளை இன்பக் கண்ணீர்.

—பிரையண்ட்.

"குழந்தையே தெய்வத்திருமேனி. குழந் தையே மானிடவாழ்க்கையின் சங்கிலிக் கோர்வை."

—ஆஸ்கார் ஒயில்ட்.

"பழிச்சொல் பட்டாக்கத்தியினும் கொடியது. பழிபேசும் நாவோ கொடிய

விஷப்பாம்பு. பழிச்சொல் வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்து, உலக முழுதும் பொய்யே என்று உத்தண்டமாய்ப் பேசும்.''

—ஷேக்ஸ்பியர்.

"உலக மாயை பலவர்ண ஜாலக்கண்ணாடி; ஞான ஒளிபெற்ற உண்மையின் ஜோதியைத் தடுத்துக் கெடுக்கின்றது.''

—ஷேல்லி.

"உண்மை உபதேசிக்க ஆத்மநேசம் அவசியம்.''

—மார்சல்.

"தன் பிழையறிந்து வருந்துவோர்க்கே கடவுள் கடாக்ஷம்.''

—ஆலிவர் கோல்ட்ஸ்மித்.

"இயற்கையே கடவுள். வேறு தனிப் பெருங் கடவுளேயில்லை. எல்லாம் இயற்கையின் செயல். ஒவ்வோர் வித்திலும் காரண காந்தம் கலந்து பரந்து விண்ணும் மண்ணும் அளாவி விரிந்து நிற்கின்றது. இயற்கையின் செயல் கடவுளை யார் என்று கேட்கின்றது.''

—ஷேல்லி.

''சமநிலையற்ற சிநேகம் இளைத்தவனுக்கே துன்பம்.'' —கோல்ட்ஸ்மித்

''சபலஸ்திரீ கற்பழிந்தால் சாபங்கொடுப்பதில் யாது பயன்?''.

—கோல்ட்ஸ்மித்

"மனத்தில் அடிக்கும் மனச்சாட்சியே தெய்வத் திருவொளி; அதுவே கடவுளின் ஆணை; மனச்சாட்சியை மறந்து மீறி நடப்பது அரிது; மனச்சாட்சியை மறந்தோர்க்கே சட்டமும் வேதமும் தேவை.''

—ஆன்ஹட்சின்ஸன்.

"இவ்விரவின் அழகைப்பார்! சந்திர ஒளி படர்ந்த, நட்சத்திரமிழைத்த கருமேக விண்ணிலே, காதலுக்கு ஓர் தூங்குதிரை வீசியிருக்கும் அழகைப்பார்! இதுவே அமைதிக்கு ஓர் அணியெனலாம்.''

—ஷேல்லி.

''ஒரு புஸ்தகத்தில் நூறு குறைகள் தோன்றலாம்; நிறைந்த குறைகளே சிறந்த அழகென்றும் நிரூபிக்கலாம்; பல பிழைகள் நிரம்பிய புஸ்தகம் நகைச்சுவை ததும்பி நிற்பதும் உண்டு; ஒரு பிழையுமின்றிச் சுவையற்றிருக்கும் மந்தமான நூல்களும் பல உள.''

—கோல்ட்ஸ்மித்

''பெரியார் சரித்திரம் நமக்கு ஓர் நல் வழி.''

—லாங்பெல்லோ.

''காதலின் கண்ணிலே நாணம் எனும் பனித்துளி உலாவல் கண்டேன்; காதலின் வாயிதழிலே புன்முறுவல் அலையக் கண்டேன்.''

—தாகூர்.

''புத்தகத்தின் மகிமையே அதி அற்புதம்; அதுவே மனங்கொண்ட மாளிகை; கர்ப்பனைக் கோவில் அழியா இன்பம்; நூல் எழுதும் வீரனே சுத்தவீரன்; சிறந்தவீரன்; ஜெயவீரன்.''

—கார்லைல்.

''பிறர் அபிப்பிராயங்களை அடிமைகள்போல் உட்கொண்டு பிறரைப்பார்த்துக் கண்மூடி அறிவின்றி நடிப்பது உலக இயல்பு; ஆனால் தன் மனத்தில் தூண்டி எழுந்த தன் சொந்த அபிப்பிராயம் தான் சாலச்சிறந்தது.''

—ஆஸ்கார் ஒயில்ட்

"கோயில் குருக்களே உண்மையைக் கொன்று உலகத்தைக் கொலைக்களமாக்கி அழித்தவர்.''

—ஷேல்லி.

ஓர் அழகிய புஸ்தகம் எழுதினால் உலகப் பழியின் விஷத்தையும் மாற்றலாம்; தீயோரின் தீச்சொல்லையும் வேருடன் களையலாம்.''

—ஆஸ்கார் ஒயில்டு.

ஆண்டுமடலுக்கோர் ஆங்கில ரசம்

வி. ஆர். எம். செட்டியார். **B. A.**

"ஓர் உண்மைக்கவியின் செவியில் புலிக் குரலும் தாய்ப்பாஷையாகும்."

—ஜான் கீட்ஸ்.

"உலகம் காதல் மயங் கலந்த இன்பந் தான். தனிமையில்லை. மலைகள் வானத்தை அளாவி முத்தமிட, அலைகள் ஒன்றை யொன்று தழுவ, சூரியன் பூமியைக் கட்டிக் களிக்க, சந்திர கிரணங்கள் சமுத்திரத்தில் முத்தாட, என்மனம் பொங்கி இச்சுவை யறிய காதலியின் முத்தமே விழைகின்றது."

—ஷெல்லி.

"சிற்பியின் ஓவியம் மனோதத்துவம்; ஓவியம் எழுதுவோனுக்கு உலகம் ஓர் ஓவியமாம்; உண்மைக் கவிக்கு உலகம் ஓர் காவியமாகும். மனோ ஜாலத்தால் கற்பனையின் வேகத்தால் கவிஞன் கவி பாடுவதும், சிற்பியின் மனம் சிற்பத்தில் தோய்ந்து படிவதும், ஓவியக்காரனுக்கு உலகம் தன் மனோகுணக் கண்ணாடியாய் பிரதிபிம்பிப்பதும் உண்மையினும் உண்மையே"

—ஆஸ்கார் ஒயில்ட்.

"சிற்ப ரகசியமும், உலகரகசியமும், இயற்கையின் ரகசியமுமே எனது ஆவல்."

—ஆஸ்கார் ஒயில்ட்.

"உலக வாழ்க்கையில் துன்பம் இருண்டு ஓங்கி முடிவற்றிருக்கின்றது. முடிவுற்ற துன்பமே உலக வாழ்வு.

—வேர்ட்ஸ் ஒர்த்.

"ஜீவிய அழகே நித்யானந்தம்."

—ஜான் கீட்ஸ்.

"நாம் கடவுள் காத்தினால் வீசிய கவண் கல். இப்புவியில் விழுந்த பின் எதிர்த்துச் செல்லமுடியாது".

—விக்டர் ஹியூகோ.

"ரோஜா மலர் ஆடைகளைந்து தலைக்விந்து நீராடும்போது ஸ்தனரேகை பளீர் பளீரென மிளிர்கின்றது."

—ஷெல்லி

"இருண்ட மரத்திற்கு இலையும் மலரும் எப்படி அவசியமோ, அதுபோல் எனக்குச் சொல்லும் சொற்பெருக்கும் அவசியம்."

—ஆஸ்கார் ஒயில்ட்.

"பொய்யும் பழிச்சொல்லும் மலிந்த இவ்வுலகில் சத்தியமே முறிந்து துடிக்கின்றது.

—அலெக்சாண்டர் போப்.

"அரை உண்மையே அடமான பொய்; முழுப்பொய்யான தனிப் பொய்யைக் கண்டு, கண்டிக்கலாம்; ஆனால் சிறிது மெய் கலந்த பொய்யைக் காண்பதும் கண்டிப்பதும் அரிது."

—டெனிசன்.

"இன்று துன்பக்கண்ணீர்; நாளை இன்பக் கண்ணீர்.

—பிரையண்ட்.

"குழந்தையே தெய்வத்திருமேனி. குழந்தையே மானிடவாழ்க்கையின் சங்கிலிக் கோர்வை."

—ஆஸ்கார் ஒயில்ட்.

"பழிச்சொல் பட்டாக்கத்தியினும் கொடியது. பழிபேசும் நாவோ கொடிய

விஷப்பாம்பு. பழிச்சொல் வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்து, உலக முழுதும் பொய்யே என்று உத்தண்டமாய்ப் பேசும்.''

—ஷேக்ஸ்பியர்.

"உலக மாயை பலவர்ண ஜாலக்கண்ணாடி; ஞான ஒளிபெற்ற உண்மையின் ஜோதியைத் தடுத்துக் கெடுக்கின்றது.''

—ஷேல்லி.

"உண்மை உபதேசிக்க ஆத்மநேசம் அவசியம்.''

—மார்சல்.

"தன் பிழையறிந்து வருந்துவோர்க்கே கடவுள் கடாக்ஷம்.''

—ஆலிவர் கோல்ட்ஸ்மித்.

"இயற்கையே கடவுள். வேறு தனிப் பெருங் கடவுளேயில்லை. எல்லாம் இயற்கையின் செயல். ஒவ்வோர் வித்திலும் காரண காந்தம் கலந்து பரந்து விண்ணும் மண்ணும் அளாவி விரிந்து நிற்கின்றது. இயற்கையின் செயல் கடவுளை யார் என்று கேட்கின்றது.''

—ஷேல்லி.

"சமநிலையற்ற சிநேகம் இணைத்தவனுக்கே துன்பம்.'' —கோல்ட்ஸ்மித்

"சபலஸ்திரீ கற்பழிந்தால் சாபங்கொடுப்பதில் யாது பயன்?''.

—கோல்ட்ஸ்மித்

"மனத்தில் அடிக்கும் மனச்சாட்சியே தெய்வத் திருவொளி; அதுவே கடவுளின் ஆணை; மனச்சாட்சியை மறந்து மீறி நடப்பது அரிது; மனச்சாட்சியை மறந்தோர்க்கே சட்டமும் வேதமும் தேவை.''

—ஆன்ஹட்சின்ஸன்.

"இவ்விரவின் அழகைப்பார்! சந்திர ஒளி படர்ந்த, நட்சத்திரமிழைத்த கருமேக விண்ணிலே, காதலுக்கு ஓர் தூங்குதிரை வீசியிருக்கும் அழகைப்பார்! இதுவே அமைதிக்கு ஓர் அணியெனலாம்.''

—ஷேல்லி.

"ஒரு புஸ்தகத்தில் நூறு குறைகள் தோன்றலாம்; நிறைந்த குறைகளே சிறந்த அழகென்றும் நிரூபிக்கலாம்; பல பிழைகள் நிரம்பிய புஸ்தகம் நகைச்சுவை ததும்பி நிற்பதும் உண்டு; ஒரு பிழையுமின்றிச் சுவையற்றிருக்கும் மந்தமான நூல்களும் பல உள.''

—கோல்ட்ஸ்மித்

"பெரியார் சரித்திரம் நமக்கு ஓர் நல்வழி.''

—லாங்பெல்லோ.

"காதலின் கண்ணிலே நாணம் எனும் பனித்துளி உலாவல் கண்டேன்; காதலின் வாயிதழிலே புன்முறுவல் அலையக் கண்டேன்.''

—தாகூர்.

"புத்தகத்தின் மகிமையே அதி அற்புதம்; அதுவே மனங்கொண்ட மாளிகை; கர்ப்பனைக் கோவில் அழியா இன்பம்; நூல் எழுதும் வீரனே சுத்தவீரன்; சிறந்தவீரன்; ஜெயவீரன்.''

—கார்லைல்.

"பிறர் அபிப்பிராயங்களை அடிமைகள்போல் உட்கொண்டு பிறரைப்பார்த்துக் கண்மூடி அறிவின்றி நடிப்பது உலக இயல்பு; ஆனால் தன் மனத்தில் தூண்டி எழுந்த தன் சொந்த அபிப்பிராயம் தான் சாலச்சிறந்தது.''

—ஆஸ்கார் ஒயில்ட்

"கோயில் குருக்களே உண்மையைக் கொன்று உலகத்தைக் கொலைக்களமாக்கி அழித்தவர்.''

—ஷேல்லி.

ஓர் அழகிய புஸ்தகம் எழுதினால் உலகப் பழியின் விஷத்தையும் மாற்றலாம்; தீயோரின் தீச்சொல்லையும் வேருடன் களையலாம்.''

—ஆஸ்கார் ஒயில்டு.

பத்திரிகைத் தலைப்பாரம்.

கோட்டாறு திரு. அ. ஆறுமுகம்.

ஓர் உபாத்தியாயர் தன் மாணாக்கரை நோக்கி "நீங்கள் சிறிது காலமாகப்பத்திரிகைகள் படித்து வருகிறீர்களல்லவா? அவைகளின் குணதோஷங்களைப்பற்றிச்சிந்தித்து வருகின்றீர்களென்றெண்ணுகின்றேன்; உங்கள் விசாரணையின் பயனை அறிய விரும்புவதால் ஒவ்வொருவரும் தத்தம் உணர்ச்சியினை வரிசையாகத் தெரிவியுங்கள்" என்று சொன்னார்.

அப்பணி தலைக்கொண்ட மாணவருரை வருமாறு:—

நச்சினார்க்கினியன்: "சில சில பத்திரிகைகள்தான் நல்ல உறைகளும் சித்திரப்படங்களும் தாங்கிவருகின்றன; எல்லாவற்றிற்கும் அப்பொலிவமையின் கண்டோர்மனத்தைக் கவரும்" என்றான்.

ஸத்திய தருமன்: எழுந்து பணிந்து நின்று, "ஐயனே! எங்கள் வாசிப்புச்சாலைக்கு வரும் பல பத்திரிகைகள், வாசித்துத் தேர்ந்தவர்களையுத்தேசித்து எழுதப்படுவனவாயிருக்கின்றன. அவைகளிலுள்ள வியாஸங்கள் என்னையொத்த மாணவர்கள் படிக்க இடர்ப்படும்படி அச்சுப்பிழை பொதிந்திருக்கின்றன" எனக்கூறி முடித்தனன்.

நல்லார்க்கு நண்பன்: "என் ஸகோதரன் ஸத்தியதருமன் அறிவித்தபடி பத்திரிகைப்பிழைத் துன்பம் என்னையும் வாட்டுவதால் எனக்கு வாசிக்க ஓடுவதில்லை. மேலும் வயது முதிர்ந்த கருக்களையகற்ற மனமொவ்வாது சில அச்சாலயங்கள் சிக்கனம் பிடிப்பது பெருங்கஷ்டத்தைத் தருகிறது" என விண்ணப்பித்து உட்கார்ந்தான்.

அழுக்கறுத்தான்: "எனக்கு முன்னுரைத்த இரு நண்பர் கூற்று எனக்கும் பொருத்தந்தான். அதற்குமேலொன்று தெரிவிக்கவிரும்புகின்றேன். ஆனால், அவ்வுரை பிழைபாடாமோவெனுமையம் நாவைத்தடுக்கின்றதையனே!" என்றான்.

அது கேட்ட உபாத்தியாயர் "அஞ்சவேண்டாம்; மனநிகழ்ச்சி அறிவி" எனப்பணித்தார். அவ்வாறு தேற்றப்பட்ட அழுக்கறுத்தான் "தங்கள் கட்டளைக்கிணங்க நாங்கள் எழுதி ஒப்புவிக்கும் வியாஸங்களில், முன்னுக்குப்பின் முரண்படவெழுதுதல். தக்க காரணமன்னியில் இரட்டித்துரைத்தல், ஐயுறுங்கருத்துடைப் பதப்பிரயோகம் முதலியவை வழுவாமெனக்கண்டித்து வருவதுண்டு. அவ்வழக்கு, பத்திரிகைகளுக்குப் பொருந்துவ தன்றெனும் விதியுளதோ?" என வினவி நின்றான்.

அதற்கு, உபாத்தியாயர் "பத்திரிகைப்பிரவர்த்தகர் எழுதினுஞ்சரி; பிறிதொருவர் எழுதினுஞ்சரி; குற்றங் குற்றமே" என விடையளித்ததோடு சாயுங்காலப்பிரிவு மணியோசை கேட்டலும் மாணவர் வெளிக்கிளம்பினர்.

அப்பால் பத்திரிகாசிரியத்தொழிலில் ஈடுபட்டோரின் தலைச்சுமைப் பளுவினைப்பற்றி சிந்தித்த உபாத்தியாயரின் மனநிகழ்ச்சி வருமாறு:—

அம்மம்ம! சிறுவர்களும் குறைகூறும்படியாகவன்றோ இத்தொழிலிருக்கின்றது. சுயமதிப்புடையோரெவரும் முக்காலும் ஊன்றி விசாரியாமுன்னர் இப்பளுவினைத் தலைமேலேற்றிக்கொள்ள இசையமாட்டார்தானே? 'செய்வினை திருந்தச் செய்' என்று விதித்திடல் எவர்க்குமெளிது. திருத்தமுற வினையாற்றல் தேவர்க்கு மரிது. ஆகையாற்றானே அமரர் பெருமை புகலவெழுந்த புராணங்களும் அன்னார் சிறுமையினையும் சேர்த்து விளக்கிப்போந்தன. அதுசரி. 'எண்ணித் துணிக கருமந் துணிந்தபி னெண்ணுவ மென்பதிழுக்கு' என்றாரே பொய்யில் புலவர். எவரும் சாக்குப் போக்குச்சொல்லி தப்பித்துக்கொள்ளவிடக்கூடாதென்றுன்னியேகொல் இப்பெரியார் நூலெழுதத் துணிந்தமை? எவரையும் ஓடி ஒளித்துத் திரைமறைவில் நின்றுகொள்ளவிடார் வள்ளுவமூர்த்தி.

பத்திரிகைப்பிரவர்த்தக மென்ன ஸாமாந்யமா? தாங்கித்தாங்கியோர் துரைத்தனத்தை நடத்திவிடலாமென்போர்க்கும், பத்திரிகை யொன்றினை நடத்துவதெனின், மூலச்சூடுண்டாம். என்?

இராஜாதி ராஜனுக்கும் அறிவூட்டி நல்வழிப்படுத்துவது, பத்திராதிபர் கடமையாகையாலென்க. ஆரம்பப்பாடசாலை மாணவன் முதல், முற்றக்கற்றறிந்த பண்டிதர் வரையிலும் படித்தறியும்படியான விஷயங்களைத்தாங்கி, தன்னுயிர் நிலைநிற்குமளவும், உரியகாலத்து வெளிவந்து, நிலவுந்தன்மையதன்றோ பத்திரிகை. இதன் தலைமேலேறியிருக்கும் பாரமென்னென்பேம்? ஓர் டைடானஸ் (Titanus) தான் சுமக்குமா? அறுபதாயிரம் டண்ணெலாமா? இல்லை. தூக்கியும், அளந்தும் திட்டப்படுத்துந் தகைமைத்தன்றது.

தற்காலம் இந்நாட்டின்கண் நிலவும், தமிழ்ப்பத்திரிகைகட்குள், தமிழ்த்தாய்க்கழகு செய்வன எத்தனை? எண்ணிக் காணுமின்!

மனுமக்கள் பொதுப்பட ஒருவர்க்கொருவர்குருவெனல் பிழையாகாது. எங்ஙனமெனின்: குருவறியாக் கருமமொன்று சீடனுக்கும், தந்தைகாணா விந்தையொன்று மைந்தனுக்கும், புலப்படல் கூடுமாற்றானென்க. அஃதெங்ஙனமிருப்பினும், உலகிற் கறிவூட்டும் வினை படிப்படியாக நால்வர்பாற் சுமந்து நிற்கின்றதெனலாம். அவர்கள், தாய், தந்தை, குரு, துரைத்தனம் நடத்துவோர் என்பேம். இந்நான்கு குருமூர்த்தங்களையும், சீர்திருத்தச் சிறப்புற்ற நாட்டாரனைவரும் ஒருங்கே பெற்றிருந்தும், ஒருநாட்டு மக்களோடு பிறிதொரு நாட்டாரை எல்லாவிஷயங்களிலும் ஒப்பென மதிக்க எவருந் துணியார். இதனுள் நுண்ணிய ரகஸிய மொன்றுமில்லை. அதனை வெளிப்படுத்த ஓர் பிரகஸ்பதி யுதிக்கவும் வேண்டாம். அறிவின் விசாலம் ஆகாச விரிவினையொப்பது. அவ்விரிவின்கண் எம்முன்னோரேறிக் கண்டனர் ஓர் திசை. யாமும் காணுதும் வேறோர் புறமென வூக்கங்கொள்வோர் முன்னணிசெல்வர். எம் தந்தையளந்தனர் எவ்வுலகெல்லையும்; எமக்கோர் வினைக்கிடை வைத்திலர் கருணையால். யாம் செயவல்லது உண்பதோ டுறங்கல், எனும் பாடமோதுனர் சோம்பியிருந்து தேம்பித்திரிவர். இப்பெரும்பிழை இழைப்போர், தந்தை கொண்டன யாவும் சரி, சரி; யாமதிற் கையிடல் தீமைக்கிடனும்; தாய்வழி கோடல் தனையர்க்குறுதி; தந்தை சொல்மிக்க மந்திரமேது? சோதிடம் பார்த்தபின் சொக்கா தரிப்பர் என்னப்பா; சோதிடமன்றோ சகலர்க்கும் வேதம்: என்பன போன்ற ஆணிமந்திரத் தியானத்திலிருந்து, அறிவிலிகளாய் உயிர் துறப்பர். இத்தரத்தினரையும் இவர்தந் தோழர் பலரையும், சீர்திருத்தமுற்றோர் வகுப்பிலன்றோ சேர்க்கின்றனர்! தந்தைக்கு முன்னேறிச் செல்லுமவனுடன் பித்துப்பிடித்த மற்றப்பேயரை எவ்வா றுவமிப்பது? இதுவே மக்களிடைக் காணப்படும் பெரும் பான்மை வேற்றுமைக்கு ஏது. இத்தமிழ் நாட்டிற்றான் மேற்கூறிய மூடங்கள் நிறைந்த முடங்கள் மந்தை மந்தையாயுலாவுகின்றன. இவைகளின் மனமுடத்திற்கெண்ணெயிட்டு மூடக்காட்டினை வேரறக்கல்லிச் சுட்டெரிப்பதற்கு ஒரு ஈ. வே. இராமன் போதாவே! தவமிழைத்தேனும் பல ஈ. வே. க்களைப் பெறல்வேண்டும். இது நிற்க,

முன்னுரைத்த நால்வகைக் குருக்களைப்பற்றி விசாரிப்பாம்.

நம் தமிழ் நாட்டினைப் பொறுத்தமட்டில் அக்குருமாரிடமிருந்து பெறும் நன்மை சுத்தச் சூன்யமேயென அறியக்கிடக்கின்றது. நம் தாம் தந்தையர் யாதறிவர்? மானங்கெட்ட பித்தனொருவன் மருளாடி வேடம்பூண்டால், மாரியாத்தாள் பிச்சையிடென மடிவிரித்து இரந்து நிற்பர். குடுகுடுப்பைக்காரனைக் கண்டதும் நடு நடுங்கிப் பதறுவர். குறத்தி குறியில் பெருத்த மதிப்பு; பண்டாரம், பரதேசி, ஸந்யாசி, பதியாடி, இக்கூட்டத்தினர்களெல்லாம் நம்குடும்பயோக க்ஷேமங்களறிந்துரைக்கும் திப்பிய ஆத்துமாக்களென்று மதிக்கப்பெற்று நம்மவரால் பூஜிக்கப்படுகின்றார்கள். தாய் தந்தையரெனு மிரு குரவர்களும், தம்முன்னோரிடமிருந்து வழியே கற்றறிந்து கொண்ட அருவருப்பான கொள்கைகளில் ஒன்றினையுந் தவறவிடாது, தம்மக்கட் சோதிவைத்த பின்னரே சாகின்றனர். ஆகையால் அக்கொள்கைகளனைத்தும் தலைமுறை வரிசைப்படி ஒன்று பத்து நூறெனப் பெருகி நம்மிழிநிலைமையினை மேலோங்கும்படி செய்து வருகின்றன. இதுவே தாய் தந்தையர் தந்துதவுஞ் செல்வம். மூன்றாவதாம் குருவோவெனின்: அரசியற் பிரமாண விதிப்படி பத்துமணிக்கு ஹாஜர் வைத்து, கா + டு = காடு—காளைக்குக் கொம்பு இரண்டு என்றெலாம் கற்றுக்கொடுத்துக் களைப்புறவே வீடு செல்வர். இம்முறை கற்றுத்தேறும் மாணவர், பத்துக்கொன்று

ஏழாவது வகுப்புத் தேர்வுச் சீட்டுப் பெற்று வெளியேறுவர்.

இத்துடன் மூன்று குருமார் கதை முடிவுபெற்றது. நான்காவது குரு துரைத்தனமாகும். இந்திய துரைத்தனத்தார் செல்வாக்கும், நீண்ட ஆயுளும், இந்நாட்டு மக்களின் அறியாமை எனும் பீடத்தின்மேல் அஷ்டபந்தன மந்திரச் சடங்கு செய்து, துரைத்தனச்சாமி நிலைகுலையா வண்ணம் பசை மருந்து சாத்தி, ஆண்டாண்டு தப்பாது கும்பாபிஷேக மரியாதைகள் செய்யப்பெற்று, வலிவற்று மேலோங்கி வருகின்றன. இங்ஙனமிருக்கவும் நான்காவது குருவெங்ஙனம் எமக்கறிவூட்டுவது? அஃது தனக்கூறு விளைப்பதாமே. இம்முறைகளால் நம்மனோர்க்கு நான்கு குருமாரும் நாஸ்தியாயினமை விளங்கிற்று.

இவ்வித வறுமையுற்றநிலையும் எம்மைக் கைதூக்கும் பொறுப்பும், ஆற்றலும், பிறவும் எவர்க்குளதெனச் சிந்தித்தல் நம் கடனாகின்றது.

எமது வறுமை முதலிய குறைபாடுகளையும், எம்மிடை தலைமுறை தத்துவமாக வேரூன்றி வளர்ந்திருக்கும் மடக்கொள்கைகளையும், பழைமை, பழைமை மற்கடப் பிடிவாதங்களையும் பேய்க்கூத்துகளையும் அடியோடு மாய்த்து, இந்தியச்செல்வமா மழகிய மணிமண்டப மியற்றி, அதன் நடுவில் சுதந்திரத் தெய்வப் பிரதிட்டை பண்ணி அப்பால் அச்சிங்காரமேடை எவ்வாற்றானுஞ் சிதைவுறா வகை நாடி, கண்ணுங் கருத்துமாய்க் கிட்டி நின்று காத்து, நம்மை எழிலுறச் செய்யும் பொறுப்பினை, நம் நாட்டுப் பத்திரிகை யெனும் மாபெரு மொற்றைத் தூணினிடத்து ஒப்புவிக்கும் வழி யொன்றேதான் நமக்குளதெனத் தெளிகின்றேன். ஏன் ஒற்றைத்தூணெனின்: பிறிதொரு தூ ணின்மையாலென்க.

இவ்வொற்றைத்தூணின் தற்கால நிலை அத்துணைச் சால்புடைத் தன்றெனல், இதன் முற்பகுதிகளிற் கண்டனம். என் செய்வோம்? பாரதத்தின் தவக்குறையே யன்றோ?

இக்குறைபாட்டினைப் பாரத மக்கள் ஒருங்கே யுணர்ந்து, பத்திரிகைகள்தான் நம்முயிரெனுந் தத்துவமறிந்து, அவைகள் எண்ணில் நூறு,ஆயிரமெனும்படி நாட்டில் பெருகவும், பெருகுமவை தத்தம் கடமைகளைச் செவ்வனே நடத்திச் செல்வவந்தன் பெற்றெடுத்த அருமை மகவென வளரவும், போதிய ஆதரவளித்தும், நம்மீடேற்ற வழியினைச் செப்பனிடுவதே அறிஞர் கடன்.

தமிழின் தற்கால நிலை.

பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள்.

தெண்டிரை சூழ்ந்த செழும்பூ வதனில்
கண்டிடும் பாஷைக ளவைகளிற் கவின்பெற
விளங்குவ தாரியந் தமிழென விரண்டென
களங்கமில் பெரியோர் கருத்தொரு மித்துப்
புகன்றன ரன்னதிற் பொய்யாத் தமிழ்மொழி
வழக்கினில் நிலவி வரம்பிலாப் புகழொடு
இழுக்கிலாச் சங்கத் தெழுந்து வளர்ந்தது
அன்னதன் பெருமைக் கவிர்மதி முடித்த
கண்ணு தற்பிரான் கலந்தா ராய்ந்ததும்
அறுமு கப்பிரா னகத்திய முனிக்கு
மறுவற விலக்கணம் வழங்கி மகிழ்ந்ததும்
தக்கசான் றாகும் தகைமைசே ரிம்மொழி
இக்கா லத்தி விழிநிலை யெய்தி
நிற்கு நிலைமை யிரங்குதற் குரித்தே
தமிழெனுந் தனித்தாய் தன்னரு மைந்தர்
கெழுதகை யிழந்து கெடுமதி யுற்று
மாற்றார் வலையில் மயங்கி விழுந்து
தன்னை மறந்து தன்சொற் கடந்து
அன்னிய மொழிதனி லார்வமிக் குற்று
அன்னோர் பழக்க வழக்கமே யரிதென
நினைந்தவை தம்மை நித்தலும் பேணி
வருவதைக் கண்டு வருந்தி நற்றாய்
படும்பா டெம்மாற் பார்க்கவும் படுமோ
இப்பெருந் துயரினின் றெம்மன்னை நீங்க
தப்பிலாச் சட்ட நிரூபண பேரவை
அங்கத் தினர்க ளார்வமுற் றெழுந்து
பொங்கிடு மாங்கில பாஷையிற் புகட்டிடும்
நியாயம் வைத்தியம் நிலைபெறு மியற்கை
இரசா யனம்முத விலங்கிடு சாத்திரம்
களங்க மிலட்சர சேத்திர கணிதம்
வளம்பெறு தர்க்கம் வானசாஸ் திரமிவை
உளங்கொண் டெம்மவ ருறுதிபெற் றுய்ய

விளங்கிடு தமிழ்மொழி தன்னில் விரித்து
போதனை செய்வதற் கேற்ற புகழ்சேர்
சர்வ கலாநிலை தாபித் திடுதற்
கேற்ற முயற்சி யினிதி னெடுத்தல்
சாற்றிடு மறங்களிற் றலைசிறந் ததுவே
தாய்மொழி தழைத்திடி னன்றோ வங்நிலம்
ஒய்விலாப் புகழொ டுயர்ச்சிபெற் றிருப்பது
ஆங்கில வங்க வாரிய மொழிகள்
ஓங்கிமுன் னணியில் நிற்பது மவ்வந்
நாடுக ளெங்கணுந் தம்புகழ் நாட்டி
வீறுட னிற்பதும் வீடாத் தமிழ்மொழி
பின்னணி நின்று பின்னப் படுவதும்
எங்நில மாக்களு மெளிதி லறிவர்
இக்குறை நீக்குதற் கிதுவே சிறந்த
நெறியா தலினால் நேர்மையோ டெம்மவர்
மறுதலை யின்றி மனமொரு மித்து
மாணவர் மகிழ்ந்து மனங்கொளற் கேற்ற
மாண்புடை யாசா ரியருமற் றைய
வசதிகள் பலவுடைத் தாகி வாலறி
வுற்றோர் பலரும் உயர்த்துதற் கிடனாய்
அரசின ரங்கீ காரம் பெற்றும்
பல்வகை யான பரீட்சைக ளமைத்தும்
அவ்வப் பரீட்சையிற் றேறினோர்க் காமுறை
வேதனம் நன்கு விதித்தா தரித்தும்
மாதா மொழியை வளர்த்தல்
ஓது மெம்மவர்க் குயர்ந்ததோர் கடனே.

முத்திக்கு வழி.

காட்சி க.

புராணிகர்:—மகா பெரிய பாவங்களைச் செய்தாலும் இறந்த பிறகு அவர்களுடைய எலும்பில் ஒன்று கங்கையில் நனைக்கப்பட்டால் முத்தியடைவது திண்ணம்.

காட்சி உ.



மனைவி:—சாகப்போகிறீர்களே! ஏதாவது தெரிவித்தால் செய்கிறோம்.

கணவன்:—ஒன்றும் வேண்டாம். முன் புராணிகர் சொன்னபடி என்னுடைய எலும்பைக் கங்கையில் போட்டுவிடுங்கள்.

காட்சி ௬.

புதுப் பையன்:—என்ன ஐயா! நீங்கள் பேசும்போது எச்சல் தெரிக்கிறது.

வாத்தியார்:—அடே முட்டாள்! என்னடா சொல்லுகிறாய்! என்னுடைய வாயி லிருந்து வரும் எச்சல் கங்கை நீருக்குச் சமானம். தெரியுமா?

காட்சி ச.

வாத்தியார்:—அடே மடையா! என்னடா எலும்பை என் வாயிலே போட்டு விட்டாய்!

பையன்:—எங்கப்பா இறக்கும்போது எலும்பைக் கங்கையில் போடச் சொன்னார். காசிக்குப் போகச் செலவுக்குப் பணமில்லையென்று எங்கம்மா தினம் அழுதுகொண்டே இருக்கிருள். உங்கள் வாய் கங்கைக்குச் சமானமென்று நீங்கள் நேற்றுச் சொன்னதால் எலும்பைப் போட்டு என் தகப்பனரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன்.

பெண் கல்வி.

திருவாளர் க. வீ. அழ. அழகப்ப செட்டியார்.

கல்வியானது மக்களனைவருக்கும் மிகவும் இன்றியமையாதது. கல்வியால் அறம் பொருளின்பமாகிய பயன்கள் இம்மையில் மிக விளையாதொழியினும்

'ஒருமைக்கட் டான்கற்றகல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

என்று செந்நாப்போதார் கூறியவாறு அது வரும் பிறவிகளிலும் தொடர்ந்து அப்பயன் களை விளைத்து உயிர்க்கு அரணுதல் ஒருதலை. கலையினுட் சேர்க்கப்படாத வித்தைகளும் தொழிற்றிறங்களும் மற்றும் எத்தனையோ உள்ளன. மேல் நாட்டினரின் ஆராய்ச்சியால் உண்டாகிய புதிய கலை வகைகளும் பல. இவை யாவும் எல்லாராலும் கற்றற்பாலவையல்ல. கற்க வேண்டியனவும் அல்ல. இவற்றிற் பெரும்பாலன தொழிற்பயிற்சியென்னும் பெயரால் வேறு பிரித்தெண்ணத்தகுவன. மாந்தரனைவரும் ஒருதலையாகக்கற்கவேண்டிய கல்வியாவது அறிவை வளர்த்து மக்கட்பண்பை நெறிப்படுத்துமுண்மையை உணர்த்தி, இம்மை, மறுமை வீட்டின்பங்களை நல்க வல்லனவாய்ப் புலத்துறை முற்றிய சான்றோர்களாலியற்றப்பட்டுள்ள இலக்கியங்களையும் விதி நூல்களையும் உண்மை நூல்களையும் கற்றுணர்தலாம்.

கல்வியானது யாவருக்கும் வேண்டற்பாலது என்பதை நோக்கியே ஔவைப் பிராட்டியார் "இளமையிற்கல்" என அருளியுள்ளார். மற்றும் "கல்வியே கருந்தனம்" என்பதிலிருந்து கல்வியானது பல்வகைச் செல்வங்களினுள் ஒன்றாகக்கருதப்படுகின்றதென்பது தெள்ளிதிற் புலனாகின்றது. கல்வியின் இன்றியமையாச் சிறப்பு நோக்கியே

'எண்ணென்ப வேனையெழுத்தென்ப விவ் [விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'

எனத் தெய்வப்புலவரும் அருளிச்செய்வாராயினர்.

மேற்கூறப்பட்ட காரணங்களால் கல்வியின் மாபெருஞ்சிறப்பு நனி விளங்குகின்றது. இனிப்பெண்கள் கற்க வேண்டுவன யாவையென நோக்குவோம். இந்தக்காலத்தில் பெண்கல்வி விரைவில் யாண்டும் பரவி வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கல்வி வேண்டாமென மறுத்தவர் பலரிருந்தனர். ஆனால் இப்பொழுதோ அங்ஙனம் மறுக்கக்கூடியவர்கள் மிகச்சிலரே யென்பதிற் சற்றேனும் சங்கையில்லை. சில அறிவிலிகள், பெண்கள் படித்தால் காதற் கடிதங்களெழுதவும், தன்னிச்சைபோலிருக்கவுமே முற்படுகின்றார்களேயல்லாமல் கணவன் சொற்படி நடக்கமாட்டார்களென நவில்கின்றனர். ஐயோ! பாவம்!! இவர்கள் இங்ஙனம் பிதற்றுதலுக்கு நம் முன்னோர்களுடைய பண்டைப்பெருமையை உணராததே காரணமாகுமன்றிப் பிறிதொன்றுமில்லை. பண்டு, பெண்மணிகள் கல்வியைக்கசடறக்கற்று மாசற்ற வாழ்க்கையை இனிது நடாத்திவந்தார்களென்பது பின் வரும் சான்றுகளால் நன்கு அறியலாகும்.

ஔவை, பொன்முடியார், நச்சள்ளையார் முதலியவர்கள் கற்றறிந்த சிரோமணிகளன்றோ? இவர்களால் ஆக்கப்பட்ட செய்யுட்கள் எட்டுத்தொகை நூல்களில் பல

காணக்கிடக்கின்றன. அகஸ்தியருடைய பன்னிரண்டு மாணுக்கருள் ஒருவராகிய காக்கைபாடினியாரைப் பெண்குலத்தி லுதித்தவளெனக்கருதுகின்றனர். மற்றும் அரச குலத்தவர்களும் கல்வி கற்று வந்தார்களென்பதற்கு மங்கையர்க்கரசியார் போதிய சான்ருகும். தெய்வப்புலமை வாய்ந்த காரைக்காலம்மையார் மனைத்தக்க மாண்புடையவளாய் விளங்கினளன்ருே? சூடிக்கொடுத்த நாச்சியார் கோவிந்தனருளால் புலமை பெற்று விளங்கினவரன்ருே? இத்தகைய மாது சிரோமணிகளெல்லாம் கற்றதனல் உலகம் மெச்சும் உத்தமப்பெண்டிர்களாகவில்லையா? உந்தியார், அம்மானை முதலிய பெயர்களால் பாடப்பட்டுள்ள அனேக பாசுரங்கள் அக்காலத்துப்பெண்கள் பாடியனவாகவே தெரியவருகின்றன.

இந்து தேசத்து நம்முன்னேருடைய நிலையை நன்கு அறிந்திருந்தால் பெண்கல்வி வேண்டாமென மறுக்க எவரும் முற்படார். நாகரிகம் பெற விருப்பமுடைய ஒவ்வொரு தேசத்தவரும் முக்கியமாய்த் தங்களுடைய பெண்களைக் கல்விபயில்விக்க வேண்டும் என்பதையும், ஒவ்வொருவனும் தான் பிரதமத்தில் கற்றுக்கொள்ள வேண்டிய யாவற்றிற்கும் அன்னையாகிய பெண்பாலே தனக்குப் போதினியாயிருக்கிருள் என்பதையும் நம் புராதன முன்னேர் உணர்ந்த அவ்வளவு நன்ருய், உலகத்தில் வேறு எந்தத்தேசத்தவரும் அறிந்திலர். உலகத்திலுள்ள பூத பௌதிக சம்பந்தமான யாவற்றின் இயக்கத்துக்கும் ஒவ்வொரு அதிதேவதை இருக்கிறது என்னும் சித்தாந்தத்தை நம்மனேர் பண்டைக்காலந்தொட்டு அனுஷ்டித்து வருகின்ருர்கள். கல்விக்கு அதிதேவதை சரஸ்வதியன்ருே? இப்பிரமாண மொன்றைக் கொண்டே பெண்ணுக்குக் கல்வி இன்றியமையாதது என்பதை நன்கு அறியலாம்.

'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

என்ற குறட்பாவின் கருத்துப்படி அன்னை நன்ருய் கற்றுணர்ந்தவளாயிருந்தால் அவளுடைய அறிவு விசாலப்பட்டிருக்கும். அதற்கேற்றபடி அவளுடைய நடை, உடை, பாவனைகளும் அமைந்திருக்கும். அவைகளெல்லாம் அவ்வன்னை பின் பாலை அருந்திக்கொண்டுவரும் குழந்தையின் மனத்தில் படிந்துவிடும். இளமைப் பருவத்தில் அந்தப்படி மனத்திற்பதிந்த தோற்றங்களும் நடையுடை பாவனைகளும் நன்ருய் வேரூன்றிவிடும். இது மனே தத்துவ லட்சண சாஸ்திரிகள் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதொரு சித்தாந்தமன்ருே?

இன்னும் நம் முன்னேர் பெண்கல்வியை விசேஷமாகக்கொண்டு அதைப்பாராட்டி வந்தனரென்பது பின் வரும் செய்யுளால் அறியலாகும்.

'அன்னை தயையும் அடியாள்பணியு மலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும் மின்னனைய
வேசிதுயிலும் விறன் மந்திரி மதியும்
பேசி லிவையுடையாள் பெண்'

அதாவது ஒருவனுக்கு அன்பில் தாயைப் போலவும், பணிவிடை செய்வதில் அடியாளைப்போலவும் இருப்பவளே மனையாட்டி என்று பொருள்பட மேலோர் மனைவிக்கிருக்கவேண்டிய ஆறு குணங்களையும் கூறியிருக்கின்ருர்கள். கணவனுக்குக் கிரகாச்சிரம தர்ம விஷயங்களில் யுக்தாயுக்தத்தைச் சொல்லுவதிலே மந்திரியைப்போன்ற புத்தியை மனையாள் பெற்றிருக்கவேண்டுமென்று மேலோர் கூறியிருப்பாராயின், அவள் கல்வித்தேர்ச்சியுடையவளாயிருத்தல்வேண்டுமென்றும், ஒருவருக்கு மனையாட்டியாயிருக்கவேண்டிய ஒவ்வொரு பெண்ணும் அவசியம் கல்விபயின்றிருத்தல் வேண்டுமென்றும் நம்முன்னேராகிய மேலோர் அபிப்பிராயங்கொண்டார்களென்பதற்கு ஐயம் யாது?

இஃதிங்ஙனமிருக்கச் சில அறிவிலா மாந்

தர் அர்த்தத்தை அறியாது 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்பதைப்பிரமாணமாகக்காட்டி "பேதைமை" என்பது கல்வியின்மையல்லவா என்று சொல்லி வாதாடுகின்றனர். இதனுடைய உண்மைப் பொருளாவது உத்தமஸ்திரீகளுக்கிருக்கவேண்டிய குணங்களுள் மடம் என்பதொன்று. அதுவே பேதைமையாகும். அஃது இயற்கை அவிவேகம் அன்று. சகலவிஷயங்களையும் தெரிந்திருந்தும் கணவன் முன்னிலையில் மரியாதைபாராட்டி, அவன் தன்னை ஆலோசனை கேட்கும்வரையில் ஒன்றும் அறியாதவள் போல் சும்மா இருத்தலே பதிவிரதா தருமம் என்பது நம்முன்னோர் சித்தாந்தம். மடம் என்பதற்கு இதுவே பொருளென்பதைப் பரிமேலழகியார், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர் தத்தம் அகல உரைகளில் வெள்ளிடைமலை போல் விளக்கிக்காட்டியுள்ளார்.

'தங்கணாயகரிற் றெய்வம் தவம் பிறிதில வென்றெண்ணும், மங்கைமார் சிந்தை போலத்தூயது மற்றுங்கேளாய்' என்னும் கம்பநாட்டாழ்வார் வாக்கின்படி உத்தம ஸ்திரீக்குத் தன் பர்த்தாவே தெய்வமென்பதும் அவனை வழிபடுதலன்றி அவளுக்கு வேறு தவ முதலியவை கிடையாவென்பதும் நம்முன்னோர் சித்தாந்தமாகையால், கணவன் முன்னிலையில் அவர்கள் தெரிந்தும் தெரியாதவர்களைப்போலிருக்கின்றார்களேயன்றிப் பிறிதன்று.

> குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
> நல்லம் யாமென்னு நடுவு நிலைமையாற்
> கல்வியழகே யழகு'

என்னும் வெண்பாவில், குஞ்சி (ஆண் மயிர்) அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் (கோடிய ஆடையின் கொய்சகத்தின் அழகும்) ஆண்பாலர்க்குரித்தாயினும் மஞ்சளழகு என்பது பெண்பாலர்க்கே சிறப்பு வகையால் உரித்தா னென்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை. இத்தியாதி பிரமாணங்களினாலும், நியாயங்களினாலும் பெண்கள் அவசியம் கல்வி பயிலவேண்டுமென்பது காதலா மலகம்போல விளங்குகின்றதல்லவா?

இனி, பெண்கள் எத்தகைய கல்வியைக் கற்க வேண்டுமென்பதே திட்டப்படுத்தபட வேண்டும். இக்காலத்தில் பெண்களுக்கு ஆங்கிலக்கல்வியோடு தமிழ்க்கல்வியும் பயிற்றப்படுகிறது. ஆனால் அவர்கள் பயிலும் முறைசரிதானோ என்பது ஈண்டு ஆராயத்தக்கது. மாணாக்கர்களுக்கு உள்ளதைப்போலவே மாணாக்கிகளுக்கும் பாடத்திட்டங்கள் அமைந்துள்ளன. அது பொருந்தாததாகும். ஆண்பிள்ளைகள் கல்விகற்றுத்தேர்ந்து உத்தியோக முறை, கைத்தொழில் முறை யநுசரிக்கவேண்டியவராவர். பெண் பிள்ளைகளோவெனில் கல்விகற்றுக் குடும்பக் காரியங்களைச்சீர் பெறநடத்த வேண்டியவராவர். இதனாலேயே பொய்யில் புலவர் மனைவிக்கு "வாழ்க்கைத்துணை நலம்" என அமைத்துக்கூறுவர். அதன் பொருட்டுப் பெண்மக்களுக்குக் குடும்பத்தை நடத்தக் கூடிய சிறப்பு இயல்புகள் அமைந்திருத்தல் வேண்டும். அதனால் அவர்களுக்கு இல்லாண்மை, சுகாதாரம் முதலிய பாடங்கள் அமையவேண்டும். உத்தியோக முறையில் பயில விருப்பமுள்ள பெண்டிர் இத்தகைய நூல்களைப் பயின்று வருவதோடு சரித்திரம், பூகோள சாஸ்திரம், வான சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் முதலியவற்றையும் பயிலுவது அமைவுடையதாகும். சரித்திர நூல்களில் நம் நாட்டுச்சரித்திரங்களை முன்னர் பயின்று பின்னர் பிறநாட்டுச்சரித்திரங்களையும் பயிலுவது ஏற்றதாகும். இவற்றை விட்டு அயல் நாட்டுச்சரித்திரங்களைக் கற்பதிலே காலத்தை கழிப்பது கூடாதாம்.

தென்னாட்டில், இன்னும் பெண் கல்வியின் அவசியத்தை உணர்ந்தார்களில்லை. அதிலும் செட்டிமார் நாட்டிலோ ஆண்

பிள்ளைகள் பயிலுவதே மிக அரிது. பெண் பிள்ளைகள் கற்கின்றார்களா இல்லையா வென் பதைக்கேட்கவாவேண்டும்! பெண் பாலால் தற்காலம் அதிகமாகக் கல்விகற்கப்படுவது பிராமணர்களின் குலத்திலும் மலையாள மக்களின் குலத்திலுமேயாகும்.

இனியும் இந்தவிதமாகப் பெண்கள் கற்பிக்கப்படாதிருந்தால் நமது தேசமானது முன்னேற்ற மடையாது. ஒரு தேசமானது உன்னதமான நிலையை அடையவேண்டுமாயின் அந்நாடு முழுவதும் கல்வி கற்ற தாய்மார்கள் வாழும் நாடாக .இருத்தல் வேண்டும்.

நாட்டுக்கோட்டை நகரத்தாரென்னும் தன வைசியர்கள் ஆலயங்களைப்புதுப்பித்தலிலும், குளங்களைவெட்டுவதிலும் செல்வத்தை வாரி இறைப்பதினால் நாடு நலம் பெற்றுவிடாது. நாடு நலம் பெறக் கல்வி இன்றியமையாதது. அதிலும் இந்நாளில் பெண் கல்வி மிகவும் அவசியமானது. இனி மேலாவது தனவைசிய மக்கள் இதை உணர்ந்து தத்தம் நகரங்களில் அநேக பெண்பாடசாலைகளை அமைத்தல் வேண்டும். தணிகை முருகன் திருவருளால் இவ்விந்திய நாடு முழுவதும் பெண்கல்வியானது விசேஷமாகப்பரவி, கற்றறிந்த தாய்மார்களாகத்திகழும் புனித நாடாக விளங்குவதாக!

கணிதசோதிடத்தைக் கொண்டு

உங்கள் அதிருஷ்டத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சுக்	சூரி-புத		கேது
	ஸ்ரீராமர் ஜாதகம்		லக் சந் குரு
செவ்			
ராகு		சனி	

பூர்வ சூரிய சித்தாந்தம், தாத்கால சூரிய சித்தாந்தம், ஆரியபடீயம், இராஜா மிருகாங்கம், பராசரர் சித்தாந்தம், முதலிய ஜோதிட சித்தாத்தங்களை ஆராய்ந்தவரும் பல ஜோதிட நூற்களின் ஆசிரியரும் ஆகிய அடியிற் கண்டவரால் பர்கித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும், ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப் ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று, விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும் புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம், எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீய மாகவுமிருக்கும், உங்கள் ஜாதக: நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி:

முதலியார் பேட்டை, புதுச்சேரி

பெண் உரிமை.

காட்சி க.

தாய்:—பெண் பெரிதாகிவிட்டதே!

தகப்பன்:—ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து முடித்து வருகிறேன்.

காட்சி ௨.

பெண்ணின் தகப்பன்:—அழகானபெண். எவ்வளவு கொடுப்பீர்?

மாப்பிள்ளை:—நான் நன்றாகப் படித்திருக்கிறேன். வயது இருபத்தொன்றாகிறது. பதினாயிரம் ரூபா தருகிறேன்.

காட்சி ௫.



''நான் இருபதாயிரம் தருகிறேன்''

காட்சி ச.

"நான் முப்பதாயிரம் தருகிறேன்"

காட்சி ரு.

''நான் நாற்பதாயிரம் தருகிறேன்''

குமரன் ஆண்டுமேடல்.

காட்சி ௬.

"எனக்கு ஒரு காலில்லை; ௫௦, ௦௦௦ தருகிறேன்"

காட்சி எ.

௫0, 000 கொடுத்த குடிகார நொண்டிக்குப் பெண் கொடுக்கப்பட்டது. பெண் அழுதுகொண்டே மணையில் இருக்கிறாள்.

காட்சி அ.



நொண்டிப் புருஷன் சவுக்கா லடிக்கிறான்.

காட்சி கூ.

"என்னால் இனி அடிவாங்க முடியாது; கிணற்றில் விழுகிறேன்; தெய்வமே! என்னையும் உன்னோடு சேர்த்துக்கொள்."

காட்சி கο.

இவள் போனுலென்ன? பணத்தைக்கொடுத்தால் எத்தனை பெண் வேண்டுமானுலும் கட்டப் பலர் தயாராக இருக்கின்றனர்.

வாலிபர்களின் முன்னேற்றம்.

ரெவரெண்டு H. A பாப்லி.

உலகமெங்கணும் இக்காலத்தில் வாலிபர்கள் ஊக்கங்கொண்டு எழுந்து முன்னேறிச் செல்கின்றார்கள். எத்தேசத்திலும் வாலிபர்கள் ஒன்றுகூடி உற்சாகத்தோடு பல இயக்கங்களை நடத்தி வருகின்றன ரென்பதை நாம் காணலாம். கடந்த பூலோக யுத்தத்தில் பலதேசத்து வாலிபர்கள் சேனைகளைச் சேர்த்து, சுகபோகங்களைத் துறந்து, போர்புரிந்து உயிர்விடத்தக்க நிலையில் அகப்பட்டார்கள். சைன்யத் தலைவர்கள் மூத்தவர்களானாலும் சைன்யத்தின் அங்கங்களெல்லாம் வாலிபர் மயமாயின. இதனாலே வாலிபர்கள் கையாளும் முறைகள் பயனளிக்கும் வகையில் மாறியிருக்கின்றன. பெரியவர்களின் செய்கைகளால் உலகத்திற்கு மகத்தான ஆபத்துக்கள் நேர்ந்துவிட்டன வாதலால் தாங்கள் வேறுவிதமாக உலக நடவடிக்கைகளை நடத்துவோமென்று நினைத்து எத்தேசத்திலும் வாலிபர்கள் எழுந்து, வாலிபர் சங்கங்களை ஏற்படுத்தினார்கள். அதுவுமன்றித் தங்கள் தேசத்தின் முன் எழுச்சிகளில் தாங்களும் பங்குபெற வேண்டுமென்று விரும்பி எழுந்தனர்.

இவ்வியக்கங்களில் பற்பல நோக்கங்கள் இருக்கின்றன. பிரஹ்லாதனைப்போல கடவுள் நோக்கக் காட்டின வழியில் செல்ல வேண்டுமென்பது ஓர் நோக்கம்; உலகிலிருக்கும் பல பெருந்தீமைகளை நிக்கிரகம் செய்ய முடியாமற் போனதால் அவைகளை நீக்கக்கருதி அதற்கென்று தாங்கள் ஒன்றுசேர்ந்து முயல வேண்டுமென்பது ஓர் நோக்கம். இத்தீமைகள் யாவையெனில்: யுத்தமானது கைத்தொழிலாளிகளின் அடிமைத்தனம், பெண்பாலாரின் துன்பங்கள் முதலியன. மறு ஜன்மத்தில் மோக்ஷமடைய வேண்டுமென்பதோடு இவ்வுலகத்தில் தெய்வராஜ்யத்தை நிலைநிறுத்த வேண்டுமென்பது வாலிபர் கருத்து. துன்பங்களைச் சகித்து இவ்வாறு முயல்வதனால் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றலாமென்று நம்பித் துணிந்து,

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்

என்பதுபோல கருமமே கண்ணாயினாராய்ச் சேர்ந்து உழைக்கின்றார்கள்.

இந்தியாவிலே இவ்வியக்கங்களில் பெரும்பான்மையாய்ப் பங்குபெற்று வருகிற வாலிபர் நகரவாசிகளே யென்பதை யறியலாம். ஐரோப்பா கண்டத்திலோ கிராம வாசிகளாகிய வாலிபர்கள் அநேகர் சேர்ந்து பங்கு பெறுகின்றார்களென்பது மெய்யே. இந்தியாவின் நகரங்களில் மாத்திரம் இவ்வகையான உழைப்புக்கள் நடைபெறுவதால் நாட்டின் முன்னேற்றத்தை நல்கிவிடாதென்பதை யாவரும் அறிவர். நமது இந்திய தேசத்தில் அறுபது நகரங்கள்தான் இருக்கின்றன. இவைகளுடன் சிறிய நகரங்களைச் சேர்த்தால் ஐந்நூற்றுக்குள் அடங்கும். அவைகளில் வசிக்கின்ற ஜனங்கள் இரண்டு கோடிக்கு மேலானவர்களல்ல. ஆதலால் முக்கியமாக கிராமங்களில் வாலிபர் முன்னேற்ற முண்டாகவேண்டும். இந்தியாவில் எழு லட்சம் கிராமங்க ளிருக்கின்றன. இவை

யெல்லாவற்றிலு முள்ள வாலிபர் சீர்திருத் தப்படவேண்டு மென்பதற்கு ஐயமின்றே. சில கிராமங்களில் காங்கிரஸ் மகாசபை பிரயத்தனம் செய்வதைக் காணலாம். ஒய். எம். ஸி. ஏ. சங்கத்தார்களும் சில கிராமங் களில் வேலை செய்கின்றார்கள். இந்திய சைவ சங்கத்தினரும் அவ்வாறு வேறு சில கிராமங்களில் உழைக்கிறார்கள். "அறுப்பு மிகுதி; வேலையாட்கள் சொற்பம்" என்பது மெய்யே. பட்டணங்களில் வாலிபர்களால் பற்பல நல்ல ஏற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும் கிராமங்களில் மிகக் குறைவு. அதுவுமன்றி முன்னேற்ற மடை வதற்கேற்ற பொதுவான ஏற்பாடுகள் இல்லை. இந்தியாவின் க்ஷேமலாபம் கிரா மங்களின் மேம்பாட்டை மூலாதாரமாகக் கொண்டுள்ளது. இதுகொண்டே பொய்யில் புலவர்,

"உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து"

என்று உரைத்தனர். ஆதலால் நாம் யாவ ரும் கிராமங்களின் நிலையைப்பற்றிக் கவலை யெடுத்து விசேஷமாக கிராம வாலிபர்களை முன்னெழுப்பிவிட முயற்சி செய்தல் மேன் மையாகும். ஸ்ரீமான் வெங்கட்டரமணி அவர்கள் கிராமங்களின் நிலையைச் சீர்திருத் தும் முறையைப்பற்றி மனோரம்யமாக எழு தினார். அவ்வாறு முயற்சி செய்வதற்கு நகரத்தின் வாலிபர்கள் கிராமங்கட்குள் போய் உழைப்பது அவசியமாகும். மகாத் மாஜி 'யங் இந்தியா' பத்திரிகையில் வாலிபர் களின் இயக்கத்தைக் குறித்து எழுதினதா வது:— "நமது வாலிபர்கள் அநேக உத்தம எண்ணங்களும் விருப்பங்களு முடையவர் களாயினும் செய்கையில் நடப்பிக்கத் தக்க வகையாக இன்னும் அவைகளைக் காண்பித் திலர்" என்பதே யாகும். வாலிபர்களின் முன்னேற்ற இயக்கத்தின் நோக்கம் யாதெ னில் அவர்களின் உத்தம விருப்பங்களையும் எண்ணங்களையும் உத்தம கிரியைகளிலே வெளிப்படுத்த வேண்டுமென்பதே. இந் நோக்கத்தை நமது தேசத்தின் கிராமவாசி களிடத்தில் எப்படி நிறைவேற்றுவதென் பதை இப்போது விசாரிக்கலாம்.

பயிர் செய்யும்போது நான்கு கேள்வி களைக் கேட்கவேண்டும். (க) விதைகள் சுத்த முள்ளனவா? (உ) நிலத்தின் தன்மை யென்ன? (ங) காலக்குறிப்புக்கள் எவை? (ச) பயிரை எவ்வாறு பிரயோஜனப்படுத்த லாம்?

சில நிலவகைகள் நெற்பயிருக்கு உரியவை; சில கரும்புக் குரியவை; சில சோளத்துக் குரியன; பருத்திக்குரியவை சில. அந்தந்த நிலத்தின் தன்மையை ஆராய்ந்தறிந்து பயிர் செய்ய வேண்டும்; ஏற்றவாறு தக்ககாலத் தில் தக்க பயிரை விளைவிப்பது அவசிய மாகும்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறி தெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று திருவள்ளுவனார் சொன்னது போலக் குறிப்புகள் மெத்த மேம்பாடுடைத் தாம். பங்குனி மாதத்தில் சோளம் விதைப் பது வீண். அன்றியும் பயிரைப் பயன்ப டுத்தும் வகையையும் நினைத்தல் வேண்டும். மிளகாய்ச் செடி வைத்தால் அதிக லாபங் கிடைக்குமா அல்லது புகையிலை பயிர் செய் தால் அதிகலாபங் கிடைக்குமா என்பதை யோசிக்கவேண்டும். இவ்வாறாகக் குடியா னவர்கள் ஆராய்ந்து பார்ப்பது வழக்கம். அதுபோல கிராமவாசிகளிடத்தில் ஜனசமூக சீர்திருத்த உழைப்பாளிகள் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டல் வேண்டும். சில கிராமங்களில் கல்விப்பயிற்சி இன்றியமை யாததாக இருக்கிறது. வேறு சிலவற்றில் சுகாதார நிலை சீர்ப்படுத்த வேண்டுவது முக் கியமாக இருப்பதைக் காணலாம். வேறு சில கிராமங்களில் கைத்தொழில்களை உண் டாக்க வேண்டும். சிலவற்றில் கள் முத

லிய குடிவகைகளை நீக்குதல் வேண்டும். மற்றைய சில கிராமங்களில் பயிர் செய்கிற விஷயத்தைச் சீர்திருத்த வேண்டும். இப்படியே ஒவ்வொரு கிராமத்திலும் அததற்கேற்ற வகையில் முயற்சி செய்த லவசியமாகும். பொதுவாகச் சுருக்கிச் சொன்னால் பின்வரும் சிறப்பான இயக்கங்கள் வேண்டியனவென்று சாதிக்கலாம்.

(க) கல்விப்பயிற்சி— பெரியோர்களைப் பயிற்றல் மிகவும் அவசியமான ஓர் முயற்சி. தென்னிந்தியாவிலே மூன்று கோடி ஜனங்களுக்கு அதிகமான பேர் எழுத வாசிப்பதற்குத்தெரியாதவர்களாம். இவ்விஷயத்தில் பெருமுயற்சி அவசியம். பெரியோர்களைப் பயிற்றத்தக்க பொதுவழி வகைகளைக்கண்டு பிடித்துக் கையாள வேண்டும்.

(உ)பயிர்செய்யும் வகைகளைச்சீர்திருத்தம் பண்ணுவது மிகவும் சிறந்த முயற்சி— நமது கிராம ஜனங்கள் அநேகர் தரித்திரநிசையில் விழுந்து கிடக்கிறதற்குக் காரணம் யாதெனில் விவசாய அபிவிருத்திக்கேற்ற நூதன முறைகளைக் கையாளாமையே யாம். விவசாயக் கலாசாலையில் வழங்கும் இ ப் பு தி ய முறைகளைக் குடிகளுக்கு வெளிப்படுத்தக் கூடிய பிரசாரகர்கள் இல்லாமல் அப்படிச் செய்ய முடியாது.

(ங) கைத்தொழில் அபிவிருத்தி அவசியம்— ஒரு குடியானவன் பன்னிரண்டு மாதங்களில் ஆறுமாத வேலை மாத்திரம்செய்வானென்பது யாவரும் அறிந்த விஷயம். சும்மா விருக்கிற மற்ற ஆறுமாத காலத்தில் கைத்தொழி லொன்றைச் செய்திருந்தால் பணம் சம்பாதிக்கலாம். இதற்கென்றே மகாத்மாகாந்தி நூல் நூற்கிற வேலையை அதிகப்படுத்தவேண்டும் என்று உரைத்து எவ்விடத்திலும் இம்முயற்சியை நடத்திவருகின்றார். இதோடுகூட தேனீக்களை வளர்த்தல், நெசவு முதலியவை ஏற்படுத்தல் பயன் தரும்.

(ச) சுகாதார நிலை சீர்திருத்த வேண்டியது— முக்கியமாய் கிராமவாசிகள் சுகாதார சட்டங்களை அறியாதவர்களாயிருக்கின்றார்கள். க்ஷய ரோகம், விஷபேதி, வைசூரி முதலிய வியாதிகள் நமது கிராமங்களில் பேயாட்டம் செய்கின்றன.

(ரு) சுதேசிய உணர்ச்சி யுண்டாக்க வேண்டும்— நகரங்களிலும் முக்கியமாகக் கலாசாலை மாணவர்களிடத்திலும் இக்காலத்தில் தேசிய உணர்ச்சி அதிகரித்துக் கொண்டேவருகின்றது. கிராமவாசிகளிலோ இது மிகவும் சொற்பம். தேசிய எழுச்சியை விரும்பி அதற்கென்றே உழைத்து வரும்படியான மன முண்டாகத்தக்கதாக வாலிபர்கள் நமது தேசத்தின் பூர்வ மேம்பாட்டையும் நிகழும் சிறப்பையும் வெளிப்படுத்திக் கிராமவாசிகளுக்குள் புது நம்பிக்கையையும் துணிவையும் உண்டாக்க வேண்டும். ஆலோசனைகளுக்காகக் குணசீல முள்ள பிரதிநிதிகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு கிராமவாசிகள் விஷயங்களை அறியவேண்டும். இதுவே நமது தேச க்ஷேமலாபத்தின் மூலாதாரம்.

இவையெல்லாம் சுதேசிய உணர்ச்சியுள்ள வாலிபர் செய்யத்தக்க முயற்சிகளாம். இமய கிரிமேலே பனிக்கட்டி மிகுந்து நிற்கின்றது. ஆனால் அந்த உயர்ந்த பதவியை அடைந்த அப்பனிக்கட்டி அவ்விடத்தில் நிலைநிற்காமல் கீழே யிருக்கிற சம பூமியில் செழிப்புண்டாக்கத்தக்கதாக நதிகளாக ஒழிகிக் கொண்டே வந்து அழகுள்ள தோட்டங்களையும் ஆனந்த ஜீவியத்தையும் உண்டாக்கி விடுகின்றது. அவ்வாறகவே கல்விப்பயிற்சி பெற்ற வாலிபர்கள் கல்வியின் பயன்களைத் தங்களுக்கென்றே செலவாக்காமல் அவைகளை அநேகருக்கு உபயோகப்படுத்துவது அவசியமாகும்.

"தங்குறை தீர்வில்லார், தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே யென்று."

ஓர் சமரச ஞானி.

'கதை விநோதன்'

இற்றைக்குச் சற்றேறக்குறைய சநு௦ ஆண்டுகட்குமுன் வட இந்தியாவில் ஒரு பெரியார் தோன்றினர். இவர் பெயர் குருநானக் என்பது. இடைக்காலத்தில் இருள் கிழித்து எழுந்த ஞானசூரியருள் இவர் ஒருவராவர்.

இளமையிலேயே இவர்பால் சில ஆச்சரியமான அருங்குணங்கள் காணப்பட்டன. குழந்தை நானக் அதிகமாகப்பேசுவதில்லை; அதிகமாக உண்பதில்லை; எப்பொழுதும் தனிமையாக இருந்து எண்ணமிட்டுக்கொண்டிருப்பார். ஆறுவயது கடந்ததும், நானக் கிராமப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.

கணக்காயர்.

கிராம உபாத்தியாயர் எழுத்துக்களைச் சொல்லிக்கொடுக்க விரும்பி 'ஹரி' என்று தொடங்கினர்.

நானக்:—(பளிச்சென்று கணக்காயர் கண்களை நோக்கி) ஐயரே! உமக்கு 'ஹரி'யைப்பற்றி ஏதாவது தெரியுமா? 'ஹரி'யைக்குறித்து நீர் ஏதாவது சொல்லிக்கொடுக்க முடியுமா? சொற்பதம் கடந்த சோதியான ஹரியைச் சொல்லத்தான் முடியுமா? எழுதிக்காட்டமுடியுமா?

கணக்காயர்:—குழந்தாய்! உன்னைப்போல் எத்தனை குழந்தைகளுக்கு நான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். நீ யார் என்னைக்கேட்பதற்கு? அரிச்சுவடி படிக்கலாம், வா.

நானக்:—'அரி' யென்றால் என்ன? 'சுவடி' யென்றால் என்ன? அரியை அறிவிக்கும் சுவடி எது? அச்சுவடியை நீர் படித்திருக்கிறீரா? அதைப்படித்ததால் நீர் அடைந்த பயன் என்ன?

கணக்காயர்:—(கோபங்கொண்டு) சிறுவனே! நீ சுத்த அதிகப்பிரசங்கியாயிருக்கிறாய். முதல் எழுத்து எழுதத்தெரியாத உனக்கு உயர்ந்த தத்துவங்களைக்குறித்து என்ன தெரியும்? பார்வையில் பையனாயிருக்கிறாய்; பேச்சில் பிஞ்சிலே பழுத்த ஞானிபோலக் காணப்படுகிறாயே!

நானக்:— நான் சிறுவன் தான். எனினும் ஞானத்தையடைய ஒருவாறு முயற்சிசெய்து வருகிறேன்.

கணக்காயர்:—(கடுங்கோபத்தோடு) அப்படியானால் உனக்குத்தெரிந்ததைச் சொல்லு பார்ப்போம்.

நானக்:—உபாத்தியாயரே! கோபம் வேண்டாம். அமைதி குடி கொள்ளாத உள்ளத்தில் 'அரி' யெனும் சோதி குடி கொள்ளுவதில்லை. உலகமெல்லாம் அரிமயமே. அரியை முதலெழுத்தாக வுடையது பாஷைமட்டுமோ? உலகமே

அரியை முதலெழுத்தாகவுடையது. சிறுவன் என்றும் தாழ்ந்தவனென்றும் இகழாமலும், பெரியவனென்றும் உயர்ந்தவனென்றும் பெருமை பாராட்டிக்கொள்ளாமலும் சம நோக்கோடு வாழும் அறிஞரது உள்ளத்திலே தான் அன்புக்கடவுளாகிய 'அரி' தன்னைத்தானே எழுதிக் காட்டுவார். வேறுவிதமாக அரியை அறியமுடியாது; எழுதமுடியாது; பிறருக்குச்சொல்லிக்காட்டவும் முடியாது.

கணக்காயர்:—(கட கடவென்று சிரித்துக் கொண்டு) பையா! உனக்கு இவ்வளவுதான் தெரியும்; நீ இதை யாரோ ஒரு பைராகியிடம் அல்லது சாமியாரிடம் படித்திருக்கிறாய். படித்ததைக் கிளிப்பிள்ளை போல் சொல்லுகிறாய். வேத வேதியர் வேள்விகளாலும் பல வேறு கிரியைகளாலும் விரதங்களாலும் வருணாச்சிரம தர்மத்தாலும் அறிய முயலும் சோதியைக்குறித்து நீ பேசுவது தகுமோ?

நானக்:—(அமைதியாக) உபாத்தியாயரே! உமக்கு மதத்தின் உண்மையான தத்துவம் விளங்கவில்லை. வேத வேள்விகளாலும் வருணாச்சிரம (அ)தர்மங்களாலும் இறையொளி விளங்குவதுண்டா? அறியாமை! அறியாமை! ஏட்டில் கிடக்கும் ஏழுகோடி மந்திரங்களும் விரதங்களும் நாட்டிலுள்ள உண்மையறிவைப் புகைத்து விட்டன. கடவுளுக்கு வேதியர் முதலான தரகர்கள் புரோகிதர்கள் வேண்டுமோ? பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருணாச்சிரமதர்மமும் கடவுள் நெறியாமோ? வேளவிச்சாலைகளில் நடைபெறும் உயிர்க்கொலைகள் வயிற்றுச்சாமிக்கு விருந்தாகுமேயன்றி, வேறு சாமியைத் திருப்தி செய்வதுமுண்டோ? யாக பசுவாகிய ஆடுகளைக்கொடுத்தும், பழம் பணம் முதலான காணிக்கைகளைக் கொடுத்தும், கடவுளை வசப்படுத்த முயல்வது பேதைமையன்றோ? லஞ்சம் வாங்கும் ஓர் அதிகாரியாகக் கடவுளைக் கருதுவது அறிவுடைமைக்கு அழகாகுமோ? உள்ளத்தின் உண்மையொளியே கடவுளைக்காட்டும் கைவிளக்கு. மக்களுள்ளமே கடவுள் திருக்கோயில். தியாகமே கடவுளுக்குரிய வேள்வி. பிறப்பால் வேற்றுமை பாராட்டாது ஏழைமக்களுக்குச் செய்யும் பணியே கடவுளுக்கினியவழிபாடு. அன்புதோய்ந்த இதயமே ஆண்டவனுக்குரிய காணிக்கை.

கணக்காயருக்குக் கோபம் பொங்கியது. அவர் சிறுவனைத் தண்டோபாயத்தால் திருத்தவேண்டுமென்று திருவுளம் பற்றினார். அச்சமயத்தில் அவருக்கு அடிக்கடி தானம் வழங்கும் ஓர் பிரபுவின் வேலைக்காரன் வந்து, 'எஜமான் வரச்சொன்னார்' என்று அவரை அழைத்துச்சென்றான்.

வைத்தியர் வருகை.

நானக் வீட்டுக்குத் திரும்பினார். ஓர் அறைக்குட் சென்று தாளிட்டுக்கொண்டு, ஆலோசனை செய்யத்தொடங்கினார். அச்சிறு மூளையில் எத்தகைய பேராலோசனை தோன்றின? யாரே அறிவர்? சிறப்பாகக்

கணக்காயர் மடமையும் பொதுவாக ஜனங்களின் மடமையும் சிறுவருள்ளத்தில் பல எண்ணங்களை எழுப்பின. அலையலையாகப் பொங்கிய எண்ணங்களின் அடித்தலத்தே அன்பு கடலெனப் பெருகி நின்றது. நானக் தன்னை மறந்தார்; உலகை மறந்தார். அவருள்ளம் சோகமற்று யோகமுற்றது. இங்ஙனம் இயற்கையாகவே சமாதி நிலையடைந்த சிறுவரைக்கொண்டு அறையின் கதவைத்திறக்கச்செய்வது, அவரது பெற்றோருக்குப் பெருங்கஷ்டமாகப் போய்விட்டது.

கதவு திறக்கப்பட்டபின், பெற்றோர் அவருக்கு உணவு கொடுத்தார்கள். ஆனால் அவர் அன்று உணவு கொள்ளவில்லை; பேசவுமில்லை. மீண்டும் அறைக்குள்ளிருந்து கண்மூடி நிஷ்டை கூடினார். நயமாகவும் பயமாகவும் பெற்றோர் கூறிய வார்த்தைகளை அவர் அலட்சியம் செய்யவேயில்லை. அவர்கள் பெரிதும் பயந்து அப்பக்கத்தில் பிரசித்திபெற்றிருந்த வைத்தியரொருவரை வரவழைத்தார்கள்.

வைத்தியர் வந்தார்; நாடி பார்ப்பதற்குக் கையை நீட்டச்சொன்னார். ஆனால் நானக் தன் கைகளை நீட்டவில்லை. அவர் கைகளைக் கட்டிக்கொண்டு வைத்தியரை நோக்கி, 'நீர் யார்? உமக்கு என்ன வேண்டும்?' என்று வினவினார்.

வைத்தியர்:—(அமைதியாக) நான் உன் கை பார்க்க விரும்புகிறேன். நாடி பார்த்து உன்னைப் பிடிக்கும் நோய் இன்னதென்று கண்டுபிடிப்பேன். நான் வைத்திய பண்டிதன். குழந்தாய்! உனக்கு வாய்க்கு ருசியான மருந்து தருவேன். மருந்தைச் சாப்பிட்டால் உன் பீடை பறந்துபோம். உடம்பில் நல்ல இரத்தம் ஊறும்; ஆரோக்கியமும் பலமும் உண்டாகும்.

நானக்:—ஐயோ! வைத்தியரே! என் நோயைக்கண்டுபிடிக்கப் போகிறீரா? நாடி பார்த்துக் கண்டுபிடிக்கும் உடல்நோய் எனக்கில்லை. என்னுடைய நோய் உள்ளத்தைச் சேர்ந்ததென்பதை நீர் அறியீர். நீர் உண்மையான வைத்திய சாஸ்திரியானால், என் நோயைக்கண்டுபிடித்துச் சொல்லும், பார்க்கலாம். நோய் இன்னதென்று அறிந்தாலல்லவா நீர் மருந்தைக்குறித்து ஆலோசனை செய்யலாம். ஐயோ! வைத்தியரே, நீரே நோயாளியாக இருக்கும்போது, என்னை எவ்வாறு சுகமாக்கப்போகிறீர்?

வைத்தியர்:—சிறுவனே! நீ அதிகமாகப் பேசுகிறாய். உன் கையை நீட்டு; நாடிபார்த்து உனக்கு வேண்டிய சிகிச்சை செய்வேன்! உன் துன்பத்தையெல்லாம் உடனே வெளியாக்கிச் சுகம் தருகிறேன்.

நானக்:—ஓ, வைத்தியரே! எனக்குச் சுகம் தர உம்மால் முடியுமா? உம்மைப் போன்றவர்களைப்பற்றிய துன்பமல்லவா என்னைப் பீடிக்கிறது? நீங்கள் நோயுற்றிருந்தும் உங்கள் நோயை அறியாமலிருக்கும்போது, நான் எவ்வாறு சுகம் கொண்டிருப்பேன்? அன்பரே! நான் என் நோயை அறிந்திருக்கிறேன்; நீர் உமது நோயை அறியவில்லை. நோயாளி நோயாளியைக்குணப்படுத்துவதுண்டா? பண ஆசையால் நீர் என் நோயைக்குணப்படுத்தப் போவ

தாகப் பாசாங்கு செய்கிறீர். ஐயோ! வைத்தியரே! உமது நெஞ்சைத்தின்னும் விஷ நோயை நீர் குணப்படுத்த முயற்சி செய்யவில்லையே!

வைத்தியர் வாயிழந்து மௌனியானர். பிறகு அவர் தந்தையை நோக்கி,"ஐயா! நான் உம்மை ஏமாற்றி காசுபறிக்கத்துணிய வில்லை; உம்முடைய மகனுக்கு உடல் நோயில்லை; பின்னளில் இவன் உலகத்திற்கே ஒரு வைத்தியநாதனுக விளங்கப்போகிருன் என்று என் உள்ளம் சொல்லுகிறது. சமூக நோயினைக் களையும்பொருட்டு ஞான பண்டிதனுகிய ஈசன் காலமறிந்து, இடையிடையே தன் தூதர்களாகிய மருத்துவர் களை அனுப்புவதுண்டு. அத்தெய்விக மருத்துவர்களில் உமது மகனும் ஒருவன் என்று நினைக்கிறேன். சமூக நாடி பார்த்து, நோய்வாய்ப்பட்டு வருந்தும் உலகிற்கு ஞான மருந்து கொடுக்கும் உண்மை வைத்தியனுக்குப் போலிவைத்தியனுகிய நான் எவ்வாறு மருந்து கொடுப்பேன்!" என்று அனுதாபத்தோடு கூறினர்.

பூணுலின் பயன் என்னே?

ஒன்பதாம் ஆண்டில், பெற்றோர் வழக்கப்படிச் சிறுவனுக்கு உபநயனம் செய்ய (அதாவது பூணூல் அணிய) விரும்பினர். அருமை மகனுக்கு உபநயனத்தை ஓர் கலியாணம் போல் சிறக்கக் கொண்டாடிப் பார்க்க வேண்டுமென்று பெற்றோர் விரும்பினர். உபநயன விழாவிற்கு உறவினரும் புரோகிதரும் பண்டிதருமான ஜனங்கள் பலரும் வந்திருந்தனர்.

பூர்வ அங்கமான சடங்குகளெல்லாம், இனிது நிறைவேறின. நானக் புன்னகை புரிந்து கொண்டிருந்தார். நல்ல முகூர்த்தத்தில் நானக்மீது புரோகிதர் பூணூலை அணிவிக்க முயன்ருர். அப்போது நானக் தடுத்து "புரோகிதரையா! இப்பூணூலின் பயன் என்னே? இந்த முப்புரிநூலினை ஏன் தரித்துக் கொள்ள வேண்டும்?" என்று வினவினர்.

புரோகிதர்:— அப்பா! சிறுவனே! பூணூல் உயர்ந்த ஜாதியின் அடையாளம். பூணூல் உன்னைப் புனிதமாக்கும். வேள்வி செய்யவும், தட்சிணை பெறவும், தானம் வாங்கவும் பூணூலே பிராமணனுக்கு அதிகாரம் தருகிறது. பிராமணனையும் க்ஷத்திரிய வைசியரையும் பூணூல் இருபிறப்பாளராக்குகிறது. தாழ்ந்த வருணத்திலிருந்தும் உயர்ந்த வருணங்களைப்பிரித்துக்காட்டுவது பூணூலேயன்ருே? நூலோரே மேலோர் என்பது இறைவன் திருவுளம்; சாஸ்திர சம்மதம். நூலோரே, நூலணியத் தகாதவர்க்குத் தெய்வங்களாவர்.

நானக்.— அப்படியானுல் கடவுள் பூதேவர்களைப் பிறக்கும்போதே பூணூலோடு படைத்துவிட வேண்டாமா? நூல் அறிந்தவர் நூலோரா? நூல் அணிந்தவர் நூலோரா! தெய்வத்திற்கும் வருணபேதமுண்டோ? மக்களைப் பல வருணங்களாகப் பிரித்து வைப்பது பூணூல்என்ருல்,அதனை அணிவதைப் பார்க்கிலும் அணியாமலிருப்பதன்ருே தெய்வ சம்மதமாகும்? நான் பிரிவின்—பிளவின்-அறிகுறியை விரும்பவில்லை. ஒற்றுமையின்—சகோதர தர்மத்தின்—அறிகுறியையே விரும்புகிறேன். ஓ, புரோகிதரே! இருபிறப்பு என்று சொன்னீரே! இரண்டாவது பிறப்பு இன்னதென்பதை அறிவீரா? ஊனப்

பிறவியை ஞானப்பிறவியாக்குவ தன்றோ, மாற்றிப் பிறக்கும் மறு பிறவியாகும்? நூலறிவாலும் நுண்ணறிவாலும் பெறத்தக்க இப்பிறவியினைப் பஞ்சின் வெண் ணூலினை அணிவதால் பெறுதல் எப்படி? ஊன்பயில்வேள்வி புரிய உதவும் பூணூல் எனக்கு வேண்டாம். ஞான வேள்வி புரிந்து மக்களை நன்மக்களாக்க வல்ல நன்னூலே எனக்கு வேண் டும். பேதை மக்களிடமிருந்து தானமும் தட்சிணையும் வாங்க உத வும் புன்மையே பூணூலின் தன் மையென்றால், ஏழைகளுக்காக இரங்கிக் கரையும் என் உள்ளம் இப்பூணூலை அணிந்து கொள்ள வும் ஒருப்படுமோ? இத்தகைய பூணூல் என்னை எவ்வாறு புனித மாக்குதல் கூடும்? ஓ, ஐயரே! புரோகிதரே! நீர் எவ்வளவு கால மாக இப்பூணூலை அணிந்து வரு கிறீர்? உம்மை இன்னும் இது புனிதமாக்கவில்லையே! உமது அழுக்குடம்பில் பூணும் அழுக்கு நூல், உமது அழுக்கு மூட்டை யான நெஞ்சிற்கன்றோ சான்று தருகிறது? ஐயோ! ஆண்டவனே! நூலை அணிவதால் மாத்திரம் மக்கள் புனிதம் அடைவரென் றால், சீர்திருத்தம் எவ்வளவு எளிதாக விருக்கும்? மாற்றிப் பிறக்கும் அறிவு பெறாத மக் கள் நூலோரென்றும் மேலோ ரென்றும் பொய்யுரைத்து வயிறு வளர்ப்பது அந்தோ! கொடுமை, கொடுமையேயன்றோ?

புரோகிதர்:—பையனே! நீ பரம வேதாந்தி யாகப்பேசுகிறாய். உனக்கு என்னால் பதில்சொல்லமுடியாது. அப்பா! நாம் நமது அற்ப அறி வைக் கொண்டு சாஸ்திரங்களைச் சோதனை செய்யலாகுமோ? நாம் முன்னோரான மகரிஷிகளைக்காட் டிலும் புத்திசாலிகளாவோமா? பெரியோர் வாக்கை வேதவாக் காகக்கொண்டு, முன்னோர் சென்ற நெறிதிறம்பாது வழக் கங்களை அனுஷ்டித்து வருவதே சிஷ்டாசாரமாகும். இரு பிறப் பாளரான துவிசர்களுக்கு உப நயனம் இன்றியமையாத சிஷ்டா சாரங்களில் ஒன்றல்லவா?

நானக்:—மனிதனுக்கு நயனம் அல்லது கண் இரண்டு. ஊனக்கண்க ளான இரு கண்களோடு அகக் கண்ணாகிய ஞானக்கண் பெறு வதே உபநயனமாகும். பிற் காலச் சாத்திரக்காரர் இதைப் பூணூல் அணிவதோடு சேர்த் துக் குழப்பிவிட்டார்கள். ஞா னக்கண் பெறுவதே உண்மை யான சிஷ்டாசாரம். குருட்டுத் தனமாக ஆடுகளைப்போல் முன் னோரைப்பின்பற்றுவதால், ஞா னக்கண் மழுங்கிப்போகும். புரோகிதரே! உமக்குமுன் மூட ரில்லையா? மூர்க்கரில்லையா? மட மை உம்மோடுதான் பிறந்ததா? இந்நாளிலுள்ள புரோகிதருக்குத் தான் அது ஏகபோக உடைமை யோ? இறந்தவரெல்லாம் சிறந்த வரா? முன்னோரெல்லாம் முனி வரா? சாஸ்திரங்களில் அபிப்பி ராய பேதங்களில்லையா? ஞானக் கண் கொண்டு தேடித்துருவிச் சோதித்தாலொழிய, வேத சாத் திரக்குப்பைகளில் உண்மை மணி

களைக் கண்டெடுத்தல் கூடுமோ? கைவிளக்கு அற்பமானதாயினும் அதன் ஒளி, இருளிடை நமக்கு வழிகாட்டுவதில்லையோ? கடவுள் அருளிய கைவிளக்கினை அவித்துவிடுவோர் உண்மை காண்பதுண்டோ? புரோகிதரே! வேள்வித்தீயை அவித்துவிட்டு, உமது உள்ளத்திடையே நின்று சுடரெறிக்கும் ஞானத்தீயை வளர்க்குமாறு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

புரோகிதர்:—சிறுவனே! நீ அழகாகப்பேசுகிறாய். ஆனால் முகூர்த்தம் தவறிப்போகிறது. உன் உபநயனத்திற்காக உன் தந்தை எவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறார்? உன் தாயார் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்? ஊராரும் உறவினர்களும் நண்பர்களும் பெரிதும் ஏமாற்றமடையமாட்டார்களா! உனக்காக வேண்டாமென்றாலும் எங்களுக்காகவும் ஊரார் வாயை மூடுவதற்காகவும் நீ இப்பூணூலை அணிந்துகொள்ள வேண்டாமா?

நானக்:—ஐயரே! உமக்காகவும் பிறர்க்காகவும் நான் இந்தக்காரியம் செய்ய முடியாது. மன மெய் மொழிகளில் மெய்ம்மை பூண்டு வாழ்வதே 'மூன்று நூலுடைய' உண்மையான பூணூல் அணிந்து கொள்வதாகும். இப் பூணூலையே அணியுமாறு, ஐயரே! உம்மையும் நான் வேண்டிக்கொள்கிறேன்.

உயர்தர விவசாயம்.

பன்னிரண்டாவது வயது கழிந்தது. நானக் அதிக அளவில் ஏகாந்தத்தை விரும்பினார்; பலவகையான தியானங்களையும் யோக முறைகளையும் அனுஷ்டித்து வந்தார். துறவிகளோடு உறவு கொண்டார். இயற்கையோடு தோழமை பூண்டார். ஏழை மக்களோடும் தாழ்த்தப்பெற்ற மக்களோடும் தாராளமாகக்கலந்து சகோதர நேயம் பாராட்டுவார். இவரது வழக்க ஒழுக்கங்கள் பெற்றோருக்குத் திருப்தி கொடுக்கவில்லை. அவர்களுக்கு இவரைப்பற்றிய கவலை அதிகரித்தது. ஒருநாள் இவர் தகப்பனார் இவரை அணுகி, ஒழுக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளுமாறு தூண்ட முயன்றார்.

"அப்பா! மகனே! ஊரார் உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று கருதுகிறார். சிலர் நீ சுத்த சோம்பேறியென்று தீர்மானித்துவிட்டார். ஜனங்கள் சொல்லும் பழிச்சொற்களை என்னால் பொறுக்க முடியவில்லை. நீ ஏதாவது ஒரு தொழில் முறையில் தலையிட்டுக்கொள்வது நன்றென்று கருதுகிறேன். நமது வயல்களை நீ ஏன் போய்ப்பார்த்து வாலாகாது? வழியெல்லாம் நல்ல மரங்கள், சோலைகள்! இயற்கையழகில் ஈடுபட்ட உன் உள்ளத்திற்கு நமது வயல்களிருக்கும் இடம் வரை உலாவிச்சென்றுவருவது இன்பமாக இருக்குமல்லவா? அப்பொழுது ஜனங்களும் நீ சோம்பேறியென்ற அபிப்பிராயத்தை விட்டுவிடுவார்கள். நீ ஏதாவதொரு முயற்சியைக் கைக்கொள்வதற்கு இதுதான் தக்க தருணம். நமது விவசாயத்தை நீ மேற்பார்க்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

நானக்:— ஐயா! என்னைப் பித்தனென்றும் சுத்த சோம்பேறி யென்றும் ஜனங்கள் கருதுவதில் ஓரளவு உண்மை புண்டென்பதை நான் மறுக்கவில்லை. இந்த ஜன சமூகத்தை எவ்வாறு திருத்துவது என்பது தான் என் பைத்தியமாகும். சுயநலத்திற் சோம்பிக் கை

வாங்கியிருக்கும் சுத்த சோம்பர் கூட்டத்தில் நானும் சேர்ந்து கொள்ள விரும்புகிறேன் என்பதையும் நான் மறைக்க முயலவில்லை. நானும் ஒரு தொழிலில் தலையிட்டுக்கொண்டு தானிருக்கிறேன். அத்தொழிலும் ஒருவித விவசாயமாகும். என் உள்ளமே வயல். இவ்வயலில் நான் உண்மையான உழவு செய்கிறேன்; பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சுகிறேன். இவ்வயலிலே, ஏழைகளுக்குப் பணிசெய்ய வேண்டுமென்ற பெரு விருப்பமாகிய விதையினை விதைக்கின்றேன். இவ்விவசாயத்தை நான் அதி ஜாக்கிரதையாக மேற்பார்த்து வருகிறேன். விளைவு நாட்டுமக்களுக்கு நன்மை தருமென்று நம்புகிறேன். இந்த விவசாயம் எனக்கு இன்பமாகவேயிருக்கிறது.

உயர்தர வாணிபம்.

தந்தை:—மகனே! உனக்கு விவசாயம் பிடிக்கவில்லையென்று கருதுகிறேன். எல்லாருக்கும் விவசாயத்தில் விருப்பம் ஏற்படும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. விவசாயத்தில் விருப்பமில்லாதவர் வாணிபத்தில் தலையிடுவதுண்டு. நீ நமது கிராமத்திலாவது அருகேயுள்ள லாகூர் நகரிலாவது ஒரு கடை வைத்து வியாபாரம் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

நானக்:—(இள நகையரும்பி) ஐயா! நான் வியாபாரம் செய்யவில்லையென்று நினைக்கிறீர்கள்? நான் ஒரு வியாபாரியாக இருக்கிறேன் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஒரு கடையும் வைத்துத்தானிருக்கிறேன். என் கடை காலத்திற்கும் தேசத்திற்கும் இசைவாகவே அமைந்திருக்கிறது. தன் மதிப்பு, தன்னறிவு, தன்னடக்கம் என்பன என் கடையிலுள்ள காரமில்லாத சரக்காகும். கிராமவாசிகளும் நகரவாசிகளும் என் கடைக்கு வரலாம். என் கடையில் சரக்கு வாங்குவோர் விசேஷ ஊதியம் பெறுவர் என்று சொல்லவும் வேண்டுமோ?

தந்தை:—ஆ! மகனே! கடையில் எப்பொழுதும் உட்கார்ந்திருந்து சொற்பமாக வியாபாரம் செய்வது உனக்குப் பிடிக்கவில்லையானால், தூர தேசங்களுக்குப்போய்ப் பெரிய வியாபாரியாகி ஓர் பெருஞ்செல்வத்திருவாளனாக - ஓர் வணிக மன்னனாக, நீ வாழலாமன்றோ? பெரிய பெரிய நாடு நகரங்களெல்லாஞ் சென்று பெரிய பெரிய மனிதர்களைச்சந்திக்கலாம். உன்னிடம் இயற்கையாகவே பேச்சுத்திறன் அமைந்திருப்பதால், இத்துறையில் உனக்கு விசேஷ சௌகரியங்கள் ஏற்படுதல் கூடுமென்று நினைக்கிறேன்.

நானக்:—தந்தையே! நான் தூரதேசஞ் சென்று வியாபாரம் செய்யவே போகிறேன். ஞானப் பொருளே நான் செய்யவிரும்பும் பண்டமாற்றமாகும். பல நாடுகளிலுள்ள பெரியோர்களையும் சந்தித்து ஞான வாணிபம் செய்து

வாக்கு வன்மையால் பெருஞ் செல்வம் ஈட்டுதல் வேண்டுமென்றே தீர்மானிக்கிறேன்.

உயர்தர உத்தியோகம்.

தந்தை:—(தளர்ந்த உள்ளத்தோடு) உனக்கு ஒன்றும் பிடிக்கவில்லையானால், மாட்சிமை தங்கிய நவாபின் துரைத்தனத்தில் நீ ஏன் ஒரு சிறு உத்தியோகமாவது பெற முயற்சிக்கலாகாது?

நானக்:—நான் ஓர் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு விட்டேன். அரசர்க்கரசனாகிய இறைவனது மகாராஜ்யத்திலே நான் ஓர் உத்தியோகஸ்தனாக அமர்ந்து வேலை பார்க்கத் துணிந்துவிட்டேன். அவன் தனது அதிகார முத்திரையை எனக்கு அளித்துள்ளான். அவனைத்தவிர வேறு அரசனையாவது எஜமானையாவது நான் ஒப்புக்கொள்வதில்லை. இறைவன் பெயரால், அவனது மக்களுக்குப்பணி செய்து கிடப்பதே என் உத்தியோகத்தின் பொருளும் பயனுமாகும்.

இவ்வாறு தந்தையும் மகனும் உரையாடிக்கொண்டிருந்ததை மறைந்து நின்று கேட்டுக்கொண்டிருந்த தாயார் பளிச்சென்று மகனிடம் வந்து, "மைந்தனே! நீ ஒரு தொழிலும் செய்ய விரும்பவில்லையென்றால், மலர்ந்த முகத்தோடு உல்லாசமாக எங்களிடம் பேசிக்கொண்டாவதிருக்கலாகாதா? நீ பன்முறையும் மோனம் பூண்டு தியானம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்தால், எனக்கு சகிக்கமுடியாத துன்பம் ஏற்படுகிறது. நான் என்ன செய்வேன்!" என்று வருந்தினாள்.

நானக்:—(தாயை நோக்கி) நான் அப்பாவிடம் உலக விஷயங்களைக் குறித்து என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன். ஆனால் இப்படிப்பட்ட சாமானிய விஷயங்களில் நான் பெற்றோர்களான உங்களிஷ்டப்படி நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

தந்தை:—மகனே! நீ நல்லபிள்ளையென்பதை நான் அறிவேன். உனக்கு இப்பொழுது ஐம்பது வெண்பொற்காசு தருவேன். நாளை நகரத்திற்குச் சென்று ஊதியந் தரும் நல்வழியில் இதனைப் பயன்படுத்தி வா. இவ்வியாபார முயற்சியை இனிது நிறைவேற்றினால், இனி உன்னை நம்பி நான் பெருந்தொகை கொடுப்பேன்.

நானக்:—நான் அப்படியே செய்வேன். என் வியாபாரம் உமக்குத் திருப்தியளிக்குமென்று நம்புகிறேன்.

நானக் செய்த முதல் வியாபாரம்.

மறுநாள் நானக் ஒரு வேலைக்காரனோடு நகரத்தை நோக்கிச்சென்றார். பத்துப்பன்னிரண்டு நாழிகை தூரம் சென்றதும், அவர்கள் ஓர் அழகிய பசுஞ்சோலையைக் கண்டார்கள். அச்சோலையில் தேச யாத்திரையாக வந்திருக்கும் பிரயாணிகள் பலர் தங்கியிருந்தனர். அவர்கள் ஏழைகள்; தென்னாட்டிலிருந்து வந்தவர்கள். குளிர் தாங்கும் உடைகள் அவர்களிடத்தில் விசேஷமாகக் காணப்படவில்லை. அக்கூட்டத்தில் வயது முதிர்ந்த கிழவர் ஒருவர் இருந்தார். அவர் கூட இருந்தவர்களுக்குப் பலவகையான அறிவுரைகளும் அறவுரைகளும் வழங்கிக் கொண்டிருந்தார். பிரயாணிகளில் சிலர் காவியாடை கட்டிய துற

விகள். அவர்கள் ஐந்து அக்கினிக்கு நடுவேயிருந்து தியானம் செய்து கொண்டிருந்தனர். சிலர் ஹடயோகிகள்; இவர்கள் உடம்பைப்பலவிதமாக இம்சித்துக்கொண்டிருந்தார்கள். மற்றவர் சாதாரணமான பிரயாணிகள்.

நானக் சிறிது தூரத்திலிருந்து இவர்களைச்சிறிது நேரம் உற்று நோக்கினர். பிறகு அவர் வேலைக்காரனை நோக்கி, "இம் மனிதர்களைப் பார்த்தாயா? நாம் இங்கே ஊதியந்தரும் 'வியாபாரம்' செய்பலாம். ஊதியந்தரும் நல்வழியில் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று தகப்பனர் எனக்கு அனுமதி கொடுத்திருக்கிறாரல்லவா? இச்சந்தர்ப்பத்தை நாம் தவற விடலாகாது. இப்பணத்தால் இப்பிரயாணிகளின் பசிப்பிணியைப் போக்குவோம்" என்று சொன்னர். வேலைக்காரன் கூறுவான்:—"சின்ன எஜமானே! உமது தகப்பனர் அதிகக் கண்டிப்புள்ளவர். நீர் செய்வதை நன்ருகயோசித்துச் செய்யவேண்டும். நானே பெரியவருக்கு வேலைக்காரனயிருப்பதுபோலவே உமக்கும் வேலைக்காரனுகவேயிருக்கிறேன். பணம் இதோ இருக்கிறது. உம் இஷ்டப்படியே செய்யலாம்" என்ருன்.

நானக் வேலைக்காரனிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டார். பிறகு அவர் அக்கூட்டத்திலிருந்த கிழவரிடம் போய் அவரை வணங்கினர். அவரது ஆசி பெற்று நானக் அவருக்கு எதிரே உட்கார்ந்தார்.

பிறகு நானக் மெதுவான குரலில் கிழவரை நோக்கிக்கூறுவார்:—"ஐயா பெரியவரே! உங்களிடம் குளிர்தாங்கும் உடைகள் விசேஷமாக இல்லையே! ஏன் போதுமான உடைகள் வைத்துக்கொள்ளலாகாது? வயது காலத்தில் தாங்கள் ஏன் இவ்வாறு கஷ்டமடையவேண்டும்?" என்ருர்.

கிழவர்:—நாங்கள் ஏழைகள் கஷ்டப்படுகிருேம். நல்ல உணவிற்கும் உடைகளுக்கும் எங்கே போவோம்? இந்த ஜன்மத்தில் கஷ்டப்படுவதால், முற்பிறவிகளில் செய்த பாவங்களெல்லாம் தேய்ந்து மாய்ந்து போகின்றன. நாங்கள் இனி நற்கதி பெறுவோம்.

நானக்:—உங்களுக்கு யாராவது உண்டியும் உடைகளும் உதவினல் நீங்கள் ஒப்புக் கொள்ளமாட்டீர்களா?

கிழவர்:—நாங்கள் கஷ்டப் படும்போது பழைய தீவினையின்பயனை அனுபவிப்பதாக அறிந்து எங்கள் பாவ மூட்டை குறைந்து வருகிறதெனக் கருதுகிருேம். பரோபகார சீலர்கள் உதவி செய்யும் போது, அது தொல்லை நல்வினையின் பயனெனக்கருதி அவ்வுதவியினையும் ஏற்றுக்கொள்ளுகிருேம். நாங்கள் கஷ்டத்தால் கலங்குவதில்லை; இன்பத்தால் இறுமாப்பு அடைவதில்லை.

நானக்:—நீங்கள் உண்டியும் உடைகளும் வாங்கிக் கொள்ளும்படி இப் பணத்தை உங்களுக்கு உதவுவேன்.

கிழவர்:—(நானக் முகம் நோக்கி) அப்பா! நீ சிறுவன். இந்தப்பணம் உன் தகப்பனருடையது. அவர் எதற்காக இப்பணத்தை உன்னிடம் கொடுத்தாரோ, அறியேன். இதை நீ எங்களுக்கு அளிப்பது நியாயமாகுமா?

நானக்:—பணத்தை ஊதியந்தரும் நல்வழியில் பயன்படுத்தி வரவேண்டு

மென்பது தகப்பனுர் கட்டளை. உங்களுக்கு உதவுவதைப்பார்க்கிலும் ஊதியந்தரும் வியாபார முயற்சி வேறென்றுண்டோ? மோசமான வியாபாரங்களை விடுத்து உயர்தர வியாபாரம் செய்வதன்றோ, அறிவுடைமைக் கழகாகும்.

கிழவர்:—(இளநகை யரும்பி) குழந்தாய்! நீ ஆண்டில் இளைஞனயினும் அறிவில் பெருங்கிழவனுகவே யிருக்கிறய். பலதினங்களும் ஏகாதசியாகவும் சிவராத்திரியாகவுமேயிருக்கின்றன. இப்பொழுது ஆடைகள் கிடைக்கவில்லையானுல், எங்களில் சிலர் நிகம்பர்களாகவும் சைனக்கடவுளாகவும் இன்னும் சில தினங்களில் பரிணமித்தல் கூடும். சிறுவனே! எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற விருப்பம் உண்மையாகவே உனக்கிருந்தால், நீயே சென்று உணவும் பொருளும் உடைகளும் வாங்கி வரலாம்.

நானக் கிழவரிடம் விடை பெற்றுக் கொண்டு, அங்கேயிருந்த துறவிகளை நோக்கி, “அழகான உங்கள் சரீரத்தை ஏன் இப்படி அழுக்கடையச்செய்து கொள்ளவேண்டும்? வாழ்க்கையில் வரும் துன்பம் போதாதென்றோ, நீங்கள் உடம்பை இம்சித்துப் புதிய புதிய துன்பங்களைப்படைத்துக் கொள்ளுகிறீர்கள்” என்று வினவினர்.

துறவிகளில் ஒருவர்:—இது துறவிகளுக்கும் யோகிகளுக்கும் உரிய புராதன வழக்கம். ஊனைச்சுருக்கி உள்ளொளி பெருக்குவதே எங்கள் தனிப்பெரு நோக்கம்.

நானக்:—ஊன் வாட வாடத் தவஞ்செய்தால் உள்ளொளி பெருகுவ துண்டோ? இறைவன் கோயிலாகிய உடம்பை நன்கு வளர்ப்பதன்றோ உயிரையும் உள்ளொளியினையும் வளர்க்கும் உத்தம உபாயமாகும்? மாசற்ற கொள்கை மனத்தில் நிலை பெற்ருல், இவ்வுடம்பே பராபரன் சந்நிதியாகி இறைபொளி காட்டுவதில்லையோ? ஒருவன் பிறருக்கு இம்சை செய்தால் என்ன? தனக்கே இம்சை செய்து கொண்டாலென்ன? இம்சை நெறியும் இன்ப நெறியாகுமோ? தீயிடையிருந்து சாவடைவதாலும் பசித்தீயால் நோவடைவதாலும் துன்பம் பெருகுவதன்றி, இன்பம் வளருமோ? பணிவினுல் இறைவனோடு மனம் ஒன்றி நின்று துணிவு கொண்டு வாழ்வதன்றோ, வாழ்வாகும்?

இவ் அருளுரைகள் துறவிகளது வறண்டயிர்ந்த உள்ளத்தில் அமுதமாகிய வான மழை போல் இறங்கின. அவர்களுக்கும் உணவும் உடையும் தருவதாக வாக்களித்தார்.

நானக் நகரத்திற்குச்சென்று அரிசி காய்கறிவகை, நெய், தயிர், முதலான உணவுப் பொருள்களும் சில ஆடைகளும் வாங்கி வந்தார். அவற்றைச் சோலையிலிருந்த பிரயாணிகளுக்கெல்லாம் பங்கிட்டு வழங்கினர். கிழவரும் பிறரும் ஆசிமழை பொழிந்து வாழ்த்தினர்கள்.

நானக் உத்தியோகத்தில் அமர்ந்தது.

நானக் தன் இல்லத்திற்குத் திரும்பி வந்தார். அவர் செய்துவந்த வியாபாரம்

இன்னதென்பதை அவர் தந்தையார் அறிந்ததும், கடுஞ்சினங்கொண்டார். மகனைக் கொடுமையாக வைது அடித்தார். தாயும் தமக்கையும் மன்றாடி வேண்டிக்கொண்டபின்னரே, அவரது வெஞ்சினம் ஒருவாறு தீர்ந்தது.

பன்முறையும் தகப்பனர் புத்திசொல்லிப் பார்த்தார். எனினும் மகனது மனம் உலக விஷயங்களை நோக்கித்திரும்பவில்லை. தியானம் முதலிய வழக்கங்களையும் நானக் துறந்தாரில்லை. தன் கையில் தகப்பனர் லௌகிக முயற்சிகளுக்காகக் கொடுக்கும் பொருளையெல்லாம் ஏழைமக்களுக்கே மனமுவந்து வழங்கி வந்தார். இவ்வாறு இருபதாம் ஆண்டில் நானக் அடியெடுத்து வைத்தார். மகனது நடையை முற்றும் வெறுத்த தகப்பனர், அவருக்காக அடிக்கடி பரிந்து மன்றாடும் தன் மூத்த மகளின் ஊருக்கு அவரை அனுப்பிவிட்டார்.

நானக் சகோதரியால் நன்கு உபசரிக்கப்பட்டார். சகோதரி வீட்டில் தாம் சும்மா இருக்க முடியாதென்றும் ஏதாவது ஒரு தொழில் முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். அவர் ஒரு கையில் கிடைத்த பொருளை மறுகையால் வழங்கிவிடுவார் என்பதை அவர் சகோதரி நன்கறிவாள். எனவே தொழில் முயற்சிக்காக அவரை நம்பிப் பணம் கொடுப்பதற்கு அவள் உள்ளம் ஒருப்படவில்லை. அவர்கள் தமக்கு வேலைபார்த்துக் கொடுத்தாலொழிய, அவ்விடத்தை விட்டு உடனே தாம் போய்விடுவதாக அவர் அறிவித்தார்.

அவர் சகோதரியின் கணவன் செல்வாக்குள்ளவன். நவாபினுடைய அரண்மனையில் அவருக்கு ஓர் உத்தியோகம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தான். அரண்மனைக்கு வரும் உணவுப் பொருள்களையும் வேறு சாமான் வகைகளையும் மேற்பார்க்கும் அதிகாரியாக நானக் நியமிக்கப்பட்டார். நியமனமானதும் அவர் உண்டியும் உடையும் ஏழைகளுக்கு அள்ளி வழங்கினர். பசித்தவர்கள் கூட்டங்கூட்டமாக வந்து திருப்தியடைந்தார்கள். அவர் தகப்பனர் இத்தகைய வள்ளன்மையைக் கேட்டு நடுங்கினர். தமது குடும்பத்தின்மீது நவாபின் கோபமும் கொடுந்தண்டனையும் ஏற்படுதல் கூடுமென்பது அவரது பெரும்பயத்திற்குக் காரணமாயிருந்தது. மகனது வள்ளன்மையால் ஏற்படும் நஷ்டமெல்லாம் தம்முடைய குலதனத்திலிருந்து ஈடு செய்யப்படுமென்றும் அவர் பயந்தார்.

உடனே தகப்பனர் குமாரரைப்பார்க்க வந்தார். அன்னமும் ஆடையும் பெறுவதற்காக வந்து கூடியிருக்கும் ஏழைகளின் கூட்டத்தைக்கண்டார்; ஏங்கினர்; நானக் மீது சீறி விழுந்தார். நானக் மரியாதையாகத் தகப்பனரைத் தமது காரியாலயத்திற்கு அழைத்துச் சென்றார். உட்காரச்சொல்லி உபசரித்தார். தகப்பனர் வைதுகொண்டே ஆசனத்தமர்ந்தார். நானக் தமது கணக்குகளை எடுத்துக் காட்டினர்.

"ஐயா! கணக்குப் புத்தகங்களைப்பாரும். நான் உண்மையில் நஷ்டமடைந்திருக்கிறேன என்பதை அறிவீர்" என்று சொன்னர்.

தகப்பனர் கணக்குகளை ஜாக்கிரதையாகப் பார்வையிட்டார்; ஆச்சரியமடைந்தார். நவாபிடமிருந்து மகன் சம்பள விஷயத்தில் இன்னும் ஆயிரம் வெண் பொற்காசுகளுக்கு மேல் வரவேண்டியதிருக்கிறதென்று கண்டார்.

திருமண வைபவம்.

ஆனல் நாளடைவில் நானக்மீது தகப்பனருக்கு மீண்டும் வெறுப்பு ஏற்பட்டது. இவன் 'துறவியைப்போலிருக்கிறன்; பண

விஷயங்களில் பொறுப்பாக நடந்துகொள்வதில்லை என்று தம் குமாரரைக்குறித்து அவர் ஓயாது குறை சொல்லிவந்தார். 'நாம் நவாபா? மகாராஜாவா? இவ்வளவு தாராளமாக நடந்து கொள்வது தகுதியாகுமா?' என்று அவர் பன்முறையும் கூறுவதுண்டு. மணஞ்செய்வித்தால் மகனுக்கு துறவிப் பித்தம் ஒழிதல் கூடுமென்றும் உலக அறிவும் பொருட்செட்டும் ஏற்படுதல் கூடுமென்றும் அவர் கருதினர்.

நானக் மணஞ்செய்துகொள்ள ஒருப்பட்டார். சோதிடர்கள் திருமணத்திற்கு நாள் வைத்தார்கள். புரோகிதர் மணவேள்வி நடத்தலுற்றார். ஆனால் புரோகிதர் முணுமுணுத்த மந்திரங்களை நானக் ஒப்புக்கொள்ளவில்லை. அம்மந்திரங்களுக்குப் பதிலாக, நானக் தேசபாஷையில் பொருள் விளங்கத்தக்க சில வாக்கியங்களை இனிய குரலில் கம்பீரமாகச்சொல்லி மனம் ஒன்றும் மணத்தின் மர்மங்களை எடுத்துக் காட்டினர்.

நானக் மணவாழ்க்கையில் ஆறு ஆண்டு கழித்தார். அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஏழாவதாண்டு இல்லறம் நடைபெறுகையில், நானக் வீண் செலவு செய்கிறரென்றும் சரியானபடி வேலைபார்க்கவில்லை 'யென்றும் ஒருவன் நவாபிடம் தெரிவித்தான். நவாப் உடனே கணக்குப்புத்தகங்களைக் கைவசமாக்கிக் கொண்டு, நிபுணர்கள் வாயிலாக நன்கு பரிசோதித்துப் பார்த்தான். அவ்வாறு சோதித்ததில், நவாப்தான் இன்னும் பணம் கொடுத்தல் வேண்டுமென்பதும் நானக் ஒரு சிறிதும் நவாபின் பணத்தை அனுபவியமாகக்கையாடாது ஒழுங்காக வேலைபார்த்து வந்திருக்கிறரென்பதும் மெய்ப்பிக்கப்பட்டன. கணக்கில் ஒருபிழையுமில்லையென்று கண்ட நவாப், நானக் தன் அரண்மனையில் தொடர்ந்து வேலைபார்க்க வேண்டுமென்று விரும்பினன். ஆனல் நானக் மறுத்துவிட்டார். தாம் கவனிக்கவேண்டிய சொந்த வேலையொன்றிருப்பதாகவும் அவ்வேலையை ஆரம்பஞ்செய்வதற்குரிய காலம் அணுகிவிட்டதென்றும் கூறிவிட்டு நானக் நவாபிடம் விடைபெற்றுச்சென்றார்.

பித்தனு? சித்தனு?

நானக் மனமெய் மொழிகளில் துறவியாக வாழத் தொடங்கினர். அவரது மனைவியும் சகோதரியும், அவர் உலக அறிவு பெற்றுவிட்டாரென்றும் இல்லறத்திலேயே நிலை பெற்றிருத்தல் வேண்டுமென்றும், வற்புறுத்திப் பார்த்தார்கள். ஆனல் அவர்களது முயற்சி வீணகப் போய்விட்டது. அப்பொழுது அவர் மாமனர் கோபங்கொண்டு தமது மாப்பிள்ளைக்குப் பேய் பிடித்திருக்கிறதென்று நவாபிடம் தெரிவித்தார். நவாப், பேயை ஓட்டும்படி, ஒரு மௌல்வியை அனுப்பினன். நானக் மாமனரும் ஒரு மந்திர சாஸ்திரியை அழைத்து வந்தார்.

மௌல்வியும் மந்திரவாதியும் மந்திரங்களை முணுமுணுத்தார்கள்; காரச் சரக்குகளைப் புகைத்து மூக்கிலே செலுத்த முயன்றார்கள். பலவகையான 'தடபுடல்கள்' செய்தபின் "ஓ, பிசாசே! நீ யார்? இந்த மனிதனை ஏன் பிடித்துப் பீடிக்கிறய்? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்கள்.

நானக் கூறுவார்:— "சிலர் என்னைப் பேயென்று பேசுகிறார்; சிலர் பித்தனென்று ஏசுகிறார்; சிலர் சித்தனென்று செப்புகிறார்; சிலர் ஏழை நானக் என்று இயம்புகிறார். மூடமக்கள் மீது கொண்டுள்ள மோகம்என்னைத் தன்னலமற்ற பேயனுக்கி விட்டது. பொதுநலங் கருதியுழைக்க வேண்டுமென்ற பித்தமே என்னைப் பித்தனுக்கி விட்டது. ஏழையேன் என்செய்வேன்? அறியாமையில் ஆழ்ந்து மூட நம்பிக்கைகளில் மூழ்கிக்கிடக்கும் உலகினை நோக்க நோக்க, என் உள்ளம்

குழைந்து குழைந்துருகுகிறது; ஏழைமக்கள் வாழ்க்கையினை நரகவாழ்க்கையாக்கும் இன்னல்களை எண்ணியெண்ணி இரங்கி யிரங்கிப் புண்ணாகும் நெஞ்சினைப் பித்தனுள்ளம் என்பதா? சித்தனுள்ளம் என்பதா? இறைவன் அறிவான்! ஏழையேன் அறியேன்'' என்றார்.

மதியிழந்த மந்திரவாதி இரட்சாபந்தனம் செய்வதற்கு ஏகாந்தமான இடத்தில் இருந்துகொண்டு ஜபஞ்செய்ய வேண்டுமென்று சொல்லித் தந்திரமாகத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போனான். வாயிழந்த மௌல்வி மாயமாக மறைந்து போனான்.

நானக் பித்தனல்லன்; சித்தனாகப் பாசாங்கு செய்கிறார் என்று சிலர் சொல்லக் கேட்ட நவாப் தமது பழைய உத்தியோகஸ்தாது பரிதாப நிலைக்கு இரங்கி, அவரைத் தன்பால் அழைத்து வரும்படி ஒரு சேவகனை ஏவினான். 'இனி நாம் நவாபிற்குக் குடியல்லோம்!' என்று கம்பீரமாக நானக் இராஜ சேவகனிடம் கூறினார். நவாப் பொங்கிய வெகுளியோடு மூன்று போர் வீரர்களை யனுப்பி நானக்கைப் பிடித்துவரச் செய்தான். இராஜ சபைக்கு நானக் வந்தபோது அவர் நவாபை வணங்கவில்லை; சிங்காதனத்தைநோக்கி 'ஸலாம்' செய்யவு மில்லை.

"நீர் ஏன் முதலாவது என் ஆணைக்கிணங்கி இங்கு வரவில்லை?'' என்று நவாப் அளவுகடந்த கோபத்தோடு உறுமினான்.

"நான் இப்பொழுது உனக்குக் குடியல்லேன்; ஆண்டவனுக்கு ஆளாவேன். இனி என் கடன் உனக்குப்பணி செய்வதன்று; ஏழைகளுக்குப் பணி செய்வதேயாகும்'' என்று நானக் அமைதியாக விடையிறுத்தார்.

"நீர் எந்த ஆண்டவனுக்கு ஆளாயிருக்கிறீர்? சர்வவல்லமையுள்ள எங்கள் ஆண்டவனுக்கா? அஞ்ஞானிகளான இந்துக்களது ஆண்டவனுக்கா?'' என்று நவாப் வினவினான்.

நானக் இளநகையரும்பி, "ஆண்டவன் ஒருவனே; இந்துக்களுக்கு ஆண்டவன் வேறு; மகம்மதியருக்கு ஆண்டவன் வேறு என்பதுண்டா? எங்கள் இறைவன் சந்நிதியில், மக்கள் அனைவரும் சமானரே! மதங்கொண்டு ஆண்டவனைப் பங்கிட்டுக்கொள்வதன்றோ அஞ்ஞானம்! பார்க்குமிடங்களிலும் கண்ணும் மனமும் சென்று சேராத இடங்களிலும் நீக்கமற நிறைந்து நிமிரும் பரம்பொருளுக்கு நவாபென்றும் ஏழையென்றும், நம்மவரென்றும் அன்னியரென்றும் வேறுபாடுண்டோ?'' என்று உற்சாகமாகப் பேசினார்.

"அப்படியானால் உன் கடவுளுக்கும் என் கடவுளுக்கும் வித்தியாசமில்லை. நீ என் எங்கள் மசூதியில் ஆண்டவனது மெய்யடியார்களோடு கலந்து ஜபஞ்செய்தலாகாது?'' என்று நவாப் கேட்டான்.

"மெய்யடியார்களோடு கூடி ஜபஞ்செய்வதில் எனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை'' என்று நானக் ஒப்புக்கொண்டார்.

நானக் இஸ்லாம் சமயத்தைத் தழுவிக்கொண்டார் என்று அவர் மாமனார் நம்பி வருந்தினார்.

வெள்ளிக்கிழமை ஜபஞ் செய்யும் வேளை மசூதியில் மகமதிய குரு ஜப வாக்கியங்களைச் சொல்லி வருகிறார். நவாப் கூட்டத்தார் வழக்கம்போல் வணக்கமாகிய கிரியைகளைச் செய்கிறார்கள். நானக் இவர்களை நோக்கிக்கொண்டே சும்மா நிற்கிறார். ஜபம் முற்றுப்பெறுகின்றது. நவாப் நானக் மீது விழியெறிந்து வெகுண்டு, 'ஓ! அஞ்ஞானியே! நீ என் ஜபத்தில் கலந்து கொள்ளவில்லை? நீ பொய்யன், புரட்டன், பித்தன்'' என்றிவ்வாறு வசைமாரி பொழிகிறான்.

நானக் நவாபை நோக்கி நகை செய்தார். "ஓ! நவாப்! உன் உடம்புதான் வணக்கஞ் செய்து கொண்டிருந்தது. உள்ளமோ இராஜ்யமெங்கும் சுற்றிக் கொண்டிருந்தது. உன் குருவோ உன்னிடம் எவ்வாறு பணம் பறிப்பதென்ற நினைவோடு கிளிப்பிள்ளை போல் ஜபவாக்கியங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். இத்தகைய 'மெய்யடியார்'களோடு ஏழையேன் எவ்வாறு கலந்து ஜபஞ் செய்தல் கூடும்?'' என்றார்.

நவாப் நடுங்கினன்; குரு நடுநடுங்கிப்போனன். தன் உள்ளம் இராச்யமெங்கும் ஓடித் திரிந்தது உண்மைதான் என்று நவாப் ஒப்புக்கொண்டான். ஆனல் 'காஸி' (குரு) உண்மையை ஒப்புக்கொள்ளத் துணியவில்லை. அவன் உள்ளம் கோபத்தால் கொதித்தது; பலபல வினக்களை அவன் சரமாரியாகப் பொழிந்தான்.

குரானுக்கும் யுக்திக்கும் பொருத்தமாக நானக் விடையிறுத்தார். பிறகு அவர் அடியாரிலக்கணம் கூறத்தொடங்கினர். நிறைந்த அறிவோடும் உயர்ந்த கொள்கையோடும் விரிந்த நோக்கத்தோடும் அவிந்தடங்கிய புலமையோடும் பிறர் துயரம் நெஞ்சிலே படப் பணிசெய்து கிடப்போரே மெய்யடியாராவர். மழித்தல் நீட்டல் ஆதிய வெளி வேடங்கள் ஒருவனைப் 'பக்கிரி'யாக்குவன வல்ல. உள்ளத்தை ஆண்டவனுக்கு உரிமையாக்குவோரே உண்மையான 'பக்கிரி'கள்; அன்னர் தம் உடம்பினையும் உழைப்பினையும் ஏழைமக்களின் பணிக்கே உரிமையாக்குதல் வேண்டும். இதுவே இந்துக்களுக்கும் மகமதியர்க்கும் பொதுவான பேரின்ப நெறியாகிய அன்பு நெறியின் சாராம்சம் என்று இவ்வாறு நானக் சொல்லி முடித்தார். நானக் அருளிய உபதேச வார்த்தைகள் தேவகானம் போன்ற தீங்குரலிற் கலந்து 'காஸி'யையும் நவாபையும் ஒருங்கே வசீகரித்து விட்டன. நவாப் 'இவரே பக்கீர்; இவரே சித்தர்' என்று கூறினன்.

நானக் சாதிவேற்றுமைகளைக் கண்டித்தது.

நானக் தன் இல்லஞ்சென்று மனைவிக்கும் சகோதரிக்கும் பலவகையான அறவுரைகளை வழங்கியபின் துறவு பூண்டு தேச சஞ்சாரஞ் செய்யப்புறப்பட்டார். அவருடைய வேலைக்காரனெருவனும் ஓர் சங்கீத வித்வானும் அவருக்கு முதற் சீடராயினர்.

மூவரும் வடதிசை நோக்கிச்சென்று மாலைப்பொழுதில் ஒரு கிராமத்தையடைந்து தாழ்ந்த வகுப்பைச்சார்ந்த லாலு என்பவனது தொழிற்சாலைக்கெதிரே ஒரு மரத்தடியில் தங்கினர். லாலு நல்ல மனிதன்; இரக்கமுள்ளவன்; பொய் சொல்லத் தெரியாதவன்; அவன் பிரயாணிகள் மூவரையும் நன்கு உபசரித்தான். அன்றிரவு நானக் அவன் வீட்டில் உணவு கொண்டு இளைப்பாறினர்.

மறுநாள், ஒரு பெரியவர் வந்திருக்கிறார் என்ற செய்தி கிராமமெங்கும் பரவியது. அவ்வூரிலுள்ள சீமானெருவன் அன்று ஆயிரக்கணக்கான பார்ப்பனருக்கு உணவும் தட்சிணையும் அளித்தான். அவன் குரு நானக்கையும் விருந்திற்கு அழைத்தான். அவர் பிராமண போசனம் நடைபெற்ற இடத்திற்குச்சென்றார்; ஆனல் உண்ண மறுத்துவிட்டார்.

"ஏன் நீங்கள் இவ்விடத்தில் உண்ணலாகாது?'' என்று பிரபு கேட்டான்.

"நீ பிறப்பால் உயர்வு தாழ்வு உண்டென்று மயங்குகிருய். எத்தனையோ ஏழையர் பசித்திருக்க ஒரு வகுப்பினர்க்கு மாத்திரம் மூட பக்தியால் உணவு கொடுக்கிருய். மேலும் இவ்விருந்து ஆடம்பரமாக

நடைபெறுகிறது. அறவழியில் ஈட்டிய பொருளைத் தக்கார்க்கு மகிழ்வோடும் பணிவோடும் உதவுவதன்றோ நல்லறமாகும். உன் உணவு சுத்தமானதன்று?'' என்று குரு நானக் சொன்னார்.

''என் உணவு துய்மையானதன்று எனக் கூறுகிறீர். தாழ்ந்த சாதியானாகிய லாலுவின் சாப்பாட்டை நீர் எவ்வாறு சுத்தமானதென்று கொண்டீர்?'' என்று பிரபு வெறுப்போடு சொன்னான்.

சாதியால் பயனில்லை யென்றும், அன்பே நலந்தருமென்றும், சாதிச்செருக்கும் செல்வச்செருக்கும் மக்களை இம்மையிலேயே உடலோடு நரகத்தில் தள்ளத்தக்க பாபங்களாகுமென்றும், ஏழைகளுக்கு இரங்கிப் பணிபுரிவதே அறமாகுமென்றும், அன்னதானத்தைப் பார்க்கிலும் அறிவை யூட்டுவதும் தொழில் முறைகளைக் கற்பிப்பதுமே அதிக அளவில் நற்பயன் தருமென்றும் நானக் சொன்னார். ராய்பாக் என்னும் பெயர் வாய்ந்த அப்பிரபு குருவின் அடிகளில் விழ்ந்து தன்னை ஓர் சீடனாக அங்கீகரிக்கும்படி பிரார்த்தித்தான். குருவும் இசைந்து, அவனை அங்கேயேயிருந்து மெய்யறம் வளர்க்குமாறு பணித்தார்.

புரோகித மதத்தைக் கண்டித்தது.

நானக் சில சீடரோடு ஹரித்வாரம் சென்றார். மனோகரமான காலை வேளையில் அழகிய ஸ்நான கட்டத்தைக் கண்ணுற்றார். ஆயிரக்கணக்கான மக்கள் நீராடி நீல வானத்தே விளங்கிய இரவியை நோக்கி நின்று கையால் நீரை வார்த்து இறைத்துக் கொண்டிருந்தார்கள். புரோகிதர்கள் அவசர அவசரமாக மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே தட்சிணையில் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள்.

குருநானக், கங்கையின் குளிர் நீரில் இறங்கி மேற்கு முகமாகத் திரும்பி நீரை மடமடவென்று வாரியிறைக்க ஆரம்பித்தார்.

ஒரு புரோகிதன்:—(நானக்கை நோக்கி) நீர் யார்? என்ன சாதி? எந்த ஊர்? எங்கே போகிறீர்?

குரு நானக்:—நான் ஓர் ஆன்மா. எனக்குச் சாதியில்லை. கருவூரிலிருந்து பேரூருக்குப் போகிறேன்.

புரோகிதன்:—நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்? கிழக்கு முகமாக நின்று கொள்ளும். நான் உமக்கு மந்திரம் சொல்லித் தருவேன். தட்சிணை எவ்வளவு கொடுத்தல் கூடும்? தட்சிணைக்குத் தக்க பலனைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

குரு நானக்:—புரோகிதனே! என் கிழக்கு முகமாக நின்று ஜலம் கொட்டுதல் வேண்டும்? இவர்களெல்லாம் என் அவ்வாறு செய்கிறார்கள்?

புரோகிதர்:—(சிரித்துக்கொண்டு) நீ யாரப்பா, பட்டிக்காட்டான்! இது கூடத் தெரியாதா? இறந்து போன தங்கள் அன்பிற்குரிய பிதிரர் பொருட்டு - மூதாதையர் பொருட்டு, இவர்கள் நீரை வாரி இறைக்கிறார்கள்.

நானக்:—ஓ, புரோகிதனே! அப்படியானால் நான் செய்த காரியமும் சரிதானே! மேற்றிசையில் என் கிராமத்திலுள்ள வயல்களில் ஒன்றினுக்கு நீர் பாய்ச்ச முயல்கிறேன்.

புரோகிதன்:— (கடகடவென்று சிரித்து) ஐயோ! பைத்தியமே! தூரத்திலுள்ள கிராம வயலுக்கு இங்கேயிருந்து நீர்பாய்ச்சுதல் கூடுமா? ஜலம் அங்கே எவ்வாறு போய்ச்சேர்தல் கூடும்?

நானக்:— பிதிர் லோகத்திலுள்ளவர்களுக்கு எவ்வாறு இவர்கள் வாரியிறைக்கும் நீர் போய்ச்சேர்கிறதோ அவ்வாறே நான் இறைக்கும் ஜலமும், பிதிர்லோகத்தைப் பார்க்கிலும் அதிசமீபத்திலுள்ள கிராம வயலைப் போயடையுமன்றோ?

புரோகிதன்:— (கோபித்து) என் இப்படி எங்களைப் பரிகசிக்கிறீர்?

நானக்:— இந்த ஜனங்களின் நிலை பரிகாசத்திற்குரியதன்று; பரிதாபத்திற்கன்றோ உரியதாகும்? புரோகிதனே! உனக்குக் கிடைப்பது தட்சிணை; இவ்வேழைகளுக்குக் கிடைப்பது என்ன?

பிறகு, குருநானக் மூட நம்பிக்கைகளின் கேடுகளை விரித்துரைத்தார். ஒவ்வொரு மனிதனும் தரகனின்றி இறைவனை யடைய முயல்வதே நன்னெறியாகுமென்று உபதேசித்தார். சில ஜனங்களும் இரண்டு மூன்று புரோகிதர்களும் குருவின் சீடரானார்கள்.

குருநானக் ஹரித்வாரத்தினின்றும் காசிக்குப் பிரயாணமானார். காசிவந்தடைந்தபின், கங்கைக்கரையி லிருந்துகொண்டு ஸ்நான கட்டங்களை நோக்கினார். ஒரு பிராமணன் பால் கலந்த அன்னத்தை உருண்டைகளாக உருட்டிவைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பட்டப்பகலா யிருந்தும் அவன் அருகே ஒரு கை விளக்கு வைத்திருந்தான்.

"நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று நானக் வினவினார்.

"என் முன்னோர்களுக்காக இப்பிண்டங்களைப் பிடித்து வைக்கிறேன்" என்று பிராமணன் சொன்னான்.

"இந்த விளக்கு எதற்காக?" என்று குருநானக் மீண்டும் வினவினார்.

"மறுலோகத்திலுள்ள இருள் நிறைந்த பாதைகளில் இவ்விளக்கு ஒளி தந்து வழி காட்டுவதாகும்" என்று பார்ப்பான் சொன்னான்.

நானக் சிரித்தார். இவ்வுலகத்திலிருந்து இச்சிறுவிளக்கின் ஒளி மறு உலகம் வரைச் செல்லும் என்று நம்புவது அறிவுடைமையாகாதென்றும், இவ்வுலகில் உருட்டி வைக்கும் பிண்டங்கள் மறு உலகத்தார் பசியைத் தீர்க்கும் என்று கருதுவதும் மூடத்தனமேயென்றும் நானக் வற்புறுத்தினார். முடிவில் அவர் இவ்வுலக வாழ்க்கையில் ஞானதீபத்தை ஏற்றுவோரே நெறி காண்பரென்றும், பிறரை நேசிக்கும் அன்பு நெறியே நன்னெறியாகுமென்றும், அந்நெறியேசென்று சாதியிறுமாப்பினை யொழித்துச் சகோதர நேயத்தோடு உலகத்தில் வாழ்வதே இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வு அளிப்பதாகுமென்றும் உபதேசஞ் செய்தார்.

இராமேசுவர யாத்திரை.

குரு நானக் வடஇந்தியாவிலிருந்து இராமேசுவரத்திற்கு வந்தார். இந்நாட்டு வேதியன் ஒருவன் நானக் பார்ப்பதால் தான் உண்ணும் உணவு அசுத்தமாய்விடும் என்று கூவினான்.

நானக்:— 'அன்னம் பிரமம்' என்று உங்கள் சுருதிசொல்லுகிறதன்றோ? இத்தகைய அன்னத்தைப் பார்ப்பதால் அது தன் தூய்மையினை இழந்துவிடுமோ?

பிராமணன்:— அது எனக்குத் தெரியாது. நீர் என் சாப்பாட்டைப் பார்த்துவிட்டால், நான் பட்டினி கிடப்பேன்.

நானக்:—திருஷ்டி தோஷம் என்பது மூடத்தனமேயாகும். அறியாமை மூட நம்பிக்கையாதியனவே தீண்டத்தகாதன; நோக்கத்தகாதன. ஓ, பிராமணனே! நீ பிறரைத்தாழ்ந்தவரென்றும் தீண்டத்தகாதவரென்றும் கருதுகிறாய்; ஜாதியிறுமாப்புள்ளவரே தீண்டத்தகாதவர் என்பதை அறியாயோ? பிறரைப் புலையரென்று இகழ்வோர் தாமே புலையராவர். பரம்பொருளின் சந்நிதியிலே பறையரில்லை, பார்ப்பாரில்லை.

பிறகு வருணாச்சிரம தருமத்தைக் கண்டித்து நானக் நீண்டதோர் கட்டுரை நிகழ்த்தினார். பிராமணன் நானக்-குருவின் சீடர்களில் ஒருவனானான்.

மெக்கா யாத்திரை.

நானக் மெக்கா சென்ற போது, அந்நகரத்திலுள்ள முக்கியமான காஸியோடு சமய விவகாரம் செய்தார். அப்பொழுது இந்து மகமதிய மதங்களிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டினார். உயிர்க்கொலை புரிந்து இரத்தஞ் சிந்துவோர் இறையருளுக்குப் புறத்தே விலகி நிற்கிறாரென்றும், சமயங்களின் சாரமே ஆராய்ச்சி வாயிலாகக் கொள்ளத்தக்கதென்றும், உண்மையின் பலவேறு கூறுகள் பலவேறு சமயங்களிலும் காணப்படுகின்றனவென்றும் கல்லும் ஒப்பிடக் கட்டுரை செய்தார்.

குருநானக் இந்தியாவிற்குத் திரும்பியபின் தமது கிராமத்திற்கு ஒரு தடவை வந்தார். பல நாடுகளிலிருந்தும் பல தலங்களிலிருந்தும் அவரைத் தொடர்ந்த சீடர்கள் கூட்டங் கூட்டமாக அவரைச்சூழ்ந்துகொண்டு, அவர் உபதேச மொழிகளால் ஆறுதல் அடைந்தார்கள். நானக் சாதிபேதங்களையும் மத பேதங்களையும் எப்பொழுதும் கண்டித்து, சர்வசமய சாரமாகிய சன்மார்க்க நெறியினையே வற்புறுத்தி வந்தார். மதவிவகாரங்களாலும் புறவேடங்களாலும் சாதிச்சண்டைகளாலும், கோத்திரச் சண்டைகளாலும் கடவுளைக் காண்பது இயலாத காரியமென்று குருநானக் பன்முறையும்உபதேசிப்பதுண்டு. வாழ்க்கையின் பலதுறைகளிலும் உண்மை நாடி உழைப்பதே இறையருள் பெறும் இராஜ பாதையாகும். உண்மைத்துறவு புறவேடங்களில் இல்லை; உள்ளத் துறவிலேதானிருக்கிறது. சாத்திர அறிவைப்பார்க்கிலும் ஆராச்சியறிவே உண்மைகண்டு ஒழுகுவதற்குத் துணைபுரிவதாகும். இறைவனுக்கும் மக்களுக்குமிடையே தரகர் வேண்டாம். இவ்வாறு உபதேச மொழிகளாலும் ஒழுக்கத்தாலும் வற்புறுத்திவந்த சமரச மூர்த்தியான குருநானக் இவ்வுலகு துறந்தபின், இந்துக்களால் இந்துவென்றும் மகமதியர்களால் மகமதியரென்றும் போற்றப்பட்டார். இவர் நிலைபெறச் செய்த மதமே சீக்கியர் மதமாக வளரலுற்றது.

தன்னரசின் பெருமை.

த. ராமகிருஷ்ண விச்வகர்மன்,

வேத மாணுக்கன்.

தன்னரசு யாண்டுளது?

தன்னரசு அல்லது சுயராஜ்யம் யாண்டுளது? ஆன்மாவினிடத்து. 'ஸ்வ' தன்னை அல்லது ஆன்மாவைக்குறித்து நிற்பது. உயிர் நிலைத்து நின்றுறையும் நாடே உண்மையான தன்னரசாம். மக்கள் உயிரின் கண் நிலவும் கொள்கைக் கேற்பவே, அன்னூர் அரசியலும் அமையும். புறத்தோற்றத்திற்கிணங்க ஏற்படுவதில்லை. ஒவ்வொரு நாட்டுக் குடிமக்களின் உள்ளக் கிடக்கையினை அடிப்படையாகக்கொண்டே, அவ்வவ் நாட்டு அரசியல் திட்டமும் கோலப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மை கருதியே வேதத்துக் குடிமக்கள் 'ராஜ-க்ருத:' (அதர்வம், ௩-ரு-எ) King-makers 'கோல் காண்பவ' ரெனக் குறிக்கப்படுகின்றனர். எனவே உங்கள் உள்ளக்கொள்கைக்கியன்றவாறே அரசியல் அமைகின்றது. நீங்களே அரசியலமைக்க உரிமையுடையவர். வைதிக சுவராஜ்ய நெறி இதுவேயாம். இந்நெறியினை ஆராய்ந்துணர்ந்து அறம் மலிந்த வேத நெறிப்பட்ட தன்னரசினை யாண்டும் நிறுவ முயன்றிடுமின்.

தன்னரசின் சிறப்பு.

யதஜ: ப்ரத்தமம் ஸம் ஃபபூவ.
ஸ ஹ தத் ஸ்வராஜ்யமியாய
யஸ்மாந்நாந்யத் பரமஸ்தி ஃபூதம்.

—அதர்வம், ௧0-எ-௩௧.

"புத்துணர்ச்சியை எழுப்புகின்றவன் முதற்கண் யாவரையுங் கலந்து வெளியிட்டுத் தானே முன்னின்று முயன்று தன்னரசினை யடைகின்றான். தன்னரசில் எவரும் மிக்காரென்ற கொள்கை நிலவலாகாது."

மறையில் இப்பா தன்னரசினுயர்வுணர்த்தியவாறும். இப்பாவின் சொற்க ளொவ்வொன்றும் ஆராய்தற்குரியன. இதில 'அஜ' என்பது Mover, Leader, புத்துணர்ச்சி யெழுப்புகின்றவன், தலைவன், இயக்குபவன், செலுத்துபவன் என்பன செல்தல், இயங்கல், இயக்கல், சுற்றுத (To go, drive, lead, move) லென்ற பொருடரும். 'அஜ்' பகுதியடியாகத் தோன்றிய நிம்மொழி. தாங்கொண்ட குறிக்கோளின் இறுதி காணச் செல்வானும், செல்விப்பானும், முன்னேறுதற்கு முயல்வானும், பிறர்க்குத் தலைமை தாங்கி முன்னின்றுழைப்பானும் 'அஜ' னென்று குறிக்கப்படும்.

குழு, இனம், நாட்டினை இயக்குதல் 'அஜ' யென்ற பெருமக்கள் செயலாகும். குழுவின் றலைவன், இனத்தின் முனைவன், நாட்டின் நாயகன் 'அஜ' எனப்பகர்தற்குரியர். உடலினின்று இடையறாது இயக்குதலான் உயிரினை 'அஜ' என நவின்றனர். உயிரின் வாழ்க்கை இதனைப் பொறுத்திருக்கின்றது. உடலியக்கம் உயிரின் தூண்டுதலால் நிகழ்வது. உடலுக்கு உயிரே தலைமை.

இவ்வாறே உலகனைத்தும் இயக்குகின்ற இறையும் 'அஜ' எனப்படும். உலகனைத்திற்கும் இறை அவனே. அவனே உலகனைத்தையும் இயக்குகின்றான். யாவற்றி

னும் முன்னிற்பானும் அவனே. இச் செயலை ஒருவனுடலில் சீவான்மா நிகழ்த்து கின்றது. இவ்வொழுங்கே நாட்டிற்கு முரியது. நாட்டினை நின்றியக்கும் நாயகன், தலைவன், முன்பனுக்கு 'அஜ' உரிமை அளிக் கப்படுகின்றது. எல்லா தேசத்திற்கும் ஆணை செலுத்தும் சிறப்பினை இவன் பெறு கின்றான்.

தேசத்தில் இவ்வாறாகத் தலைவர்களெல் லாம் யாவருடனும் ஒருமிக்கக் (ஸம்)கலந்து தங்கள் செயல்களை நிகழ்த்திக்கொண்டே வெளிப்படுவார்களாயின் தன்னரசு பெறு வர். இத்தகைத் தன்னரசினும் மிக்குயர் வாகப் பிறிதொன்றை எவராலுமாக்க விய லாது. இதுவே தன்னரசின் பெருமை.

தன்னரசு வாழ்க்கைக் குறுதுணை.

(க) இயக்கமும் உழைப்பும் (உ) ஒற்று மையும் ஒரு எண்ணத்தைத் தோற்றுவித்த லாகிய கிளர்ச்சியும் தன்னரசடைதற் கின்றி யமையாப் பண்புக்களாம். இதனை இச் செய்யுள் இனிது புலப்படுத்துகின்றது. இயக்கமும் உழைப்புமின்றிக் கலந்து சூழ்ந்து ஒரு எண்ணத்தைத் தோற்று வியாத வரையில் தன்னரசு பெற வியலாது. நாட்டு மக்கள் ஓரினமாகக் கலந்து நம்பிக் கையோடு உழைக்காதவரையிலும், நாட்டு மக்களிடையே யுள்ள பலவகை வேறுபாடு களை ஒழித்துப் பகைமை நீக்கித் தங்கள் கொள்கைகளை ஒன்றுபடுத்தாத வரையிலும் தன்னரசு பெறல் எளிதன்று. மக்களின் ஒற்றுமையாலும் உழைப்பாலும் தன்னரசு பெறப்படுகின்றது.

மக்கள் வாழ்க்கையின் முற்போக்கிற் குரிய சாதனங்க ளனைத்தினும் '**தன்னரசி**'ன் மிக்குயர்வுடைய உறுதுணை யெதுவும் இற்றை நாள்காறும் கிடையாதென்பதை இச்செய்யுள் நன்கு வலியுறுத்துகின்றது. எனவே தன்னரசு மிக விழுமிய உறுதுணை யென்பதாம். இனிய வாழ்க்கையும் உயர் வும் விரும்பும் மக்களெவரும் முதற்கண் ஒருமிக்கக் கலந்து தன்னரசு பெறுதற்கு உழைத்திடுக. தன்னரசெய்துங்காறும் இடையறாது ஓய்வின்றி உழைத்திடுக. இதனை இருக்குவேதம் குறிப்பதாவது —

தன்னரசு பெறுதற்குரியார்.

ஆ யத்வாமீய சக்ஷுஸா மித்ர வயம் ஸஸூரய:
வ்யசிஷ்டே ஃபஹுபாய்யே யதேமஹி
ஸ்வாராஜ்யே.
—இருக்கு, ரு-கூசு-சு.

"பரந்த நோக்குடையாய்! நண்ப! நீயும் யாமனைவருமாகிய அறிஞர்கள் கலந்து பல ராலும் ஆளத்தக்க விரிந்த பரந்த தன்னர சிற்கு முழுதும் பாடுபடுவோமாக."

இச்செய்யுளில் தன்னரசி னுருவமும் அதனையடையும் மக்களின் பண்பும் அறி வுறுத்தப்படுகின்றன. "ஈயசக்ஷுஸ், மித்ர, ஸூரி" என்ற மூன்று சொற்களும் தன் னரசு பெறுதற்குரியாரியல்பு உணர்த்துகின் றன.

(க) ஈய-சக்ஷுஸ்—பரந்த நோக்குடையார் தன்னர செய்துவர். மக்கள் குறுகிய நோக்கும் பரந்த நோக்குமுடைய இருபான் மையினராவர். இச்சொல் (Far-reaching sight) நெடுந்தொலை செல்லும் நோக்கினைக் குறிக்கின்றது. இடம் காலம் நிலைமைக் கேற்றவாறு நோக்கின் பரப்பு அளவிடப் படும். நெடுந்தொலையிலுள்ள பிறநாடுக ளின் நிலைமைகளை ஆராய்ந் துணர்ந்தும், முற் கால பிற்கால வியல்புகளைக் கூர்ந்து நிதா னித்தும், எல்லா மக்களின் நிலைமைகளையும் எல்லா மக்களோடு மொப்பக் காண்டலா னும் பரந்த நோக்குடையாரெனப் பகரப்படு கின்றனர். இதற்குமாறாகக் குறுகிய நோக் குடையார் தங்கள் நிலையி னியல்புகளை ஆராய்ந்தும், தங்கள் காலத்தினியல்பை நோக்கிச் செல்காலம் வருங்காலங்களை யளந் தறியாமலும், தன்னலக் கொள்கையே

உளத்திற்கொண்டு குறுகிய நோக்கால் ஆராய்கின்றனர். இக்குறுகிய நோக்குடையார் தன்னரசுக்குப் பயன்படார்; முற்குறித்த பரந்த நோக்குடையாரே தன்னரசுக்கு அருகதை யுடையராவர். (உ) இரண்டாவதாகிய பண்பினையுடையார் 'மித்ர' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றனர். எல்லா மக்களுக்கும் நண்பனாகவும், யாவர்க்கும் நலன் புரிதற்கு யாண்டும் கருத்துடையனாகவும், யாரிடத்தும் பகைமை கொள்ளாமலும் யாவரிடத்தும் அன்பு பூண்டொழுகுவான் தன்னரசுக்குத் தக்கானவன். பகைமை யெண்ணமும், நெகிழ்ந்துழைத்தலும் பொதுநலங் கருதாத் தன்னலவிருப்புமுடையான் தன்னரசுக்குரியனன்று. (ங) ஸூரய: சூரியென்பது காந்தியுடையான், மெய்யுணர்வினன், அறிஞன், ஒளியும் மெய்யுணர்வும் கல்வியுமுடையான், தன்னரசுக்குத் தக்கான். ஒளியின்றி, உணர்வின்றிக் கல்வியின்றி யிருப்போன் தன்னரசுக் குரியனன்று.

தன்னரசிற்குரிய முப்பண்புக்கள்.

இம்மூன்று சொற்களும் தன்னரசுக்குத் தக்காரையும் தகவிலாரையும் உணர்த்துகின்றன. (க) ஆழ்ந்த நோக்கு (உ) அன்பு நோக்கு (ங) மெய்யுணர்வு ஆகிய மூன்று பண்புக்களும் இன்றியமையாதன. இந்நீர்மைகளமைந்தால் தன்னரசுக் குரியராகலாம். (க) குறுகிய நோக்கு (உ) பகைமை (ங) அறிவின்மையாகிய நீர்மைகள் நிலைத்து நிற்கும் வரையிலும் தன்னரசு பெறவியலாதாம். அங்ஙனம் பெறப்படினும் முறையாகக் காப்பாற்றவு முடியாது. யாவற்றினும் மிக்குயர்வுடையதும், பிற எவற்றானும் இணைகூறவியலாததுமாகிய தன்னரசு இம்மூன்று பண்புக்களால் பெறப்படுகின்றது. எனவே தன்னரசு பெற விழைவார் முதற்கண் இம்மூன்று குணங்களையும் பெறுதற்கு முயல்தல் வேண்டும். இம்முந்நீர்மைகளின் அடிப்படைமீது தன்னரசுக் கோவில் கட்டப்படுகின்றது.

தன்னரசின் விரிவு.

தன்னரசுக்கு முன்னைய நிலைமையினை இச்செய்யுள் உணர்த்துதலோர்க. "வ்யசிஷ்டே, பஹுபாய்யே, ஸ்வராஜ்யே" என்ற மூன்று சொற்களும் வைதிகத் தன்னரசியல்பினைத் தெளிவுற விளக்குகின்றன. (க) வ்யசிஷ்ட—விரிந்த, மிகவிரிந்த, படர்ந்த, பரவிய, யாண்டுஞ் செல்கின்றதொன்றை வியசிஷ்ட வென்பர். இச்சொல்லா லுணர்த்தப்படும் விரிவு இடத்தைக் குறித்ததன்று; சிந்தனையைக் குறித்ததாகும். எல்லா மக்களின் நலனையும் காணும் நோக்கால் தன்னரசின் விரிவு உணரப்படும். தன்னரசு மிக விரிவுடையது; யாங்ஙனமெனின்:—(உ) 'பஹுபாய்ய' பலரால் ஆளப்படுவது பஹுபாய்ய எனப்படும். பலர் உடன்பாட்டின் பேரில் ஆளப்படுவது பகுபாய்யத் தன்னரசாம். எனவே இது விரிவுடையதென்று கூறப்பட்டது. ஒருவருடன்பாட்டால் அமைக்கப்பட்டியங்கும் அரசுரிமை குறுகிய அமைப்பாகும். யாதெனின், பிறனொருவன் அறிவே ஆங்கு வினை நிகழ்த்துகின்றது; இது மட்டுமன்று; பிறனொருவனது ஆளுகையின் கேடும் ஆக்கமுங் குறித்துப் பெரிதும் சிந்திக்கப்படுகின்றது. இதுவே ஈண்டுக் குறுகிய எண்ணமாகும். 'பஹுபாய்ய சுவராஜ்ய'த்தில் பலர் உடன்பாட்டிற் கேற்பப் பலர் ஆக்கங்கருதிச் சட்டம் அமைத்தல் வேண்டும். எனவே இது விரிந்ததென்று கூறப்பட்டது. எண்ணத்தின் விரிவு இதில் அமைந்திருக்கின்றது. (ங) 'ஸ்வ-ராஜ்ய' மக்களின் சொந்த உடன் பாட்டினால் அமைக்கப்படும் அரசியல் திட்டம் சுவராஜ்ய மென்று கொள்ளப்படும். பொது மக்களின் உடன்பாட்டுடன் பல நன்மக்களின் உடன் பாட்டினால் அமைக்கப்படும் அரசியல் திட்டம் 'பஹுபாய்ய சுவராஜ்ய' மென்று பகரப்படுகின்றது. இங்ஙனம் ஆராய்வதால் இவ்வரசியல் திட்டத்தோடு

பிறநாட்டு அமைப்புக்களின் வேறுபாடும் தெளியப்படும். இதில் மக்கள் தங்கள் நலங்கருதி விரும்புகின்ற சட்ட திட்டங் களை அப்படியே அவர்கள் ஏற்றுக்கொள் கின்றனர். மக்களின் சொந்த உடன் பாட்டின் பேரில் ஆளப்படுகின்ற நாடுதான் 'தன்னரசு'டையதென்று கழறத் தக்கதா கும்.

மக்களின் சொந்த உடன்பாட்டின் நுட்பம் வேதத்தில் 'மர்யாதா என்ற சொல்லால் விளக்கப் படுகின்றது. "மர்யை: மநுஷ்யை: ஆநியதே ஸ்விகிரியதே யா ஸா மர்யாதா(மர்ய + ஆ + தா)" எல்லா மக்களிடத்திலுங் கலந்து துணிந்து தன்னுடன்பாட்டால் ஏற்றுக் கொள்வது 'மர்யாதை' யாகும். தன்னுடன்பாட்டின் நுட்பத்தினை மர்யாதா என்னும் சொல்லால் வேதம் உணர்த்துகின்றது. இந்த வித மாகத் தன்னுடன்பாட்டால் அமைக்கப் படும் அரசியல் திட்டம் 'தன்னரசா'கும். இதுவே தன்னரசின் உருவம். இவ்விதம் தன்னரசின் வடிவம், அமைப்பு, பெருமை, அதனையடைவார் தகுதி முதலியன மேற் செய்யுளில் குறிக்கப்பட்டன. இன்னும்,

தன்னரசிற் குழைத்திடுக.

இத்தா ஹி ஸோம இந்மதே ப்ரஹ்ம சகார
வர்தனம். சவிஷ்ட வஜ்ரின் ஞோஜஸா
ப்ருதிவ்யா நி:சஸா அஹிம் அர்ச்சந்
நநு ஸ்வராஜ்யம்.

—இருக்கு, க. அ௦. க.

ஊன்மிகு படையோய்! இத்தகைய மகிழ்ச்சி தருகின்ற சோமன் பொருட்டு அறிஞன் ஐயமின்றி வளர்ச்சி எய்துகின் றான். நீ வலியுடன் நிலத்தின் பகைவ ரைத் தண்டிப்பாய். தன்னரசுக்குத் தக் கன செய்பவனாகச் செய்க.

மெய்யறிஞர் நல்லெண்ணங்களை வளர்த் திடுக. படையுடையான் அல்லது வலியு டையான் பகைவரை யோட்டுக. யாவருங் கலந்து தன்னரசுத் திட்டத்தின் பெருமை யினைப் பரப்புக. இது மேற் செய்யுளின் கருத்து. சாதனமுடையார் அச்சாதனத் தால் தன்னரசினை வரவேற்றல் வேண்டும். மக்களில் தன்னரசினைப் போற்றிப் புக ழாதாரெவரும் இருக்கமாட்டார்களாகலான் இதில் பங்குடையவர்களாவார்கள். தன்ன ரசு யாவற்றினும் மிக்குயர்ந்த தாகலான் போற்றற்குரியதாம். எப்பொருளினும் உயர்ந்த பொருட்களெவையும் போற்றற் குரியனவேயாகும். தன்னரசினும் மிக் குயர்ந்த பொருட்களெவையு மில்லையாக லான், அஃது போற்றற்குரியதேயாம்.

'சுவ-ராஜ்ய' என்பதற்குத் 'தன்னொளி' யென்ற பொருளொன்றுண்டு. தன்னரசுத் திட்டம் இல்லாதிருந்தால் தன்னொளி பர வாது. தன்னொளியின் பெருமையைப் பரப் புதற்குத் தன்னரசு இன்றியமையாதுவேண் டப்படும். மக்களின் ஒளி தன்னரசு நிலவ லான் பரந்து மிளிர்கின்றது. பிற அரசிய லமைப்புக்கள் ஒளியை மழுக்குவதாகும். எனவே தன்னரசே யாவற்றினு முயர்ந்த அரசியலமைப்பாகும். இத்துணை உயர்வு மிக்கது தன்னரசாகலான் யாவரும் போற் றுதற்குரியதாம்: உழைத்தற்கின்றியமை யாததாம்; பெறுதற்கரியதாம். சிந்தித் திடுமின்.

முருகனும் அழகனும்.

தமிழ்த்தொண்டன்.

தென்மொழியோ தேன் மொழியோ வென்னும் திருமொழிவளரும் தெய்வப் பழந்தமிழ் நாட்டிலே, பாண்டி நாடே பழம் பதியென்ற மணிமொழிப் பெருமான் அணியுரை யெழுந்த பாண்டிவள நாட்டில் கண்ணினைக் கவரும் இயற்கை அழகு வளஞ் சிறந்து விண்ணுற நிமிர்ந்த பெருமலைத் தொடர்பின் மருங்கில், சிறு குன்றின்மேல் கல்லெனக் கரைந்து வீழ்ந்து மெல்லெனத் தவழ்ந்தோடும் தீம்புன லோடையினையும் கொண்ட வளமருதூரில் வேளாண் குடியிற் பிறந்த பதினெட்டாண்டுப் பருவமுள்ள முருகன் என்பா னொருவ னிருக்கின்றான்.

ஒரு விதை முளைத்து வளர்ந்து மரமாகிப் பூத்துக் காய்த்துப் பழுத்து உதிர்வது இயற்கையே ஆனாலும் அவ்வித்தை ஒரு நிலத்தில் நட்ட ஒருவன் வேண்டுமாறுபோல இயங்கும் ஒவ்வொரு இயற்கைப் பொருளையும் இயக்குவிக்கும் வல்லான் ஒருவன் உண்டென்னும் முறையால், இடைவிடாது அலைந்து துன்புறும் மனம், ஒப்வு பெற்று இன்புற ஆக்கி அளித்துத் துடைக்கும் பரம் பொருளொன்றுண்டென்றும் அதனை வழிபட வேண்டுமென்றும் பண்டைநாளறிஞர் பார்த்துத் தெளிந்து நிறுவிய கொள்கைபானது சமய உண்மை மாறுபட்டு வரைமுறையுங் கடந்து பெரும் அலங்கோலமாய் தலைவிரித்தாடும் இக்காலத்தில் பிறந்த குடிப் பழந்தமிழ்ச் சமயமாம் சைவ சமய நூல் பல கற்றுணர்ந்திருந்தானெனினும் காலப்போக்கை உணர்ந்து ஆராய்ச்சித் துறையில் மனத்தைச்செலுத்தி இதுபோது தமிழ்ச்சமயப் பெருந் தலைவராய்த் திகழும் மறைமலையடிகள் முதலிய பேரறிஞர்கள் எழுதிய நூல்களையும் உலகவர்த்தமானப் பத்திரிகைகளையும் ஆங்கிலமக்கள் அறிவுப் பெருக்கால் ஆராய்ச்சித்துறையில் தலைநிமிர்ந்து நூதன கருவிகளை அமைத்து அவற்றின் துணையால் கடலிலும் வானிலும் விளையாடி மண்டலங்களின் நிலை இன்னின்னவென்று ஆராய்ந்து காண்பவற்றை உரைத்துவரும் வரலாறுகளையும் தெரிந்து அதற்கும் சமயப் புராணங்களுக்கும் ஒப்பிட்டுப்பார்த்து,

> எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்னும் மறைமொழிக் கிணங்க உண்மை இதுவெனக்கண்டு தெளிய ஆர்வமுடையவனாகவும் தமிழ் மொழியின் இயற்கையான அன்பை நிறைபக் கைவரப்பெற்று எல்லா உயிர்களிடத்தும் எல்லா மக்களிடத்தும் அன்பு பூண்டொழுகும் உயர்குணம் பொருந்தியவனாகவு மிருக்கின்றான்.

ஆங்குள்ள குன்று சிறிதாயினும் ஊருக்கு அணித்தேயுளதாய் இயற்கை வனப்புமிகும் புல்பூண்டு செடிகொடி மரங்களடர்ந்து சிறு சிறு பாறைகளையுடையதாயு மிருப்பதால் நமது முருகன் அடிக்கடி அங்குசென்று இயற்கைவனப்பிலீடுபட்ட தன் மனத்தைக் களிப்பித்து இறைவன் வன்மையையும் தெளிவுற உணர்ந்து எல்லையற்ற இன்ப மெய்தி வருவான். இங்ஙனமிருக்க ஒருபோது ஞாயிறின் வெப்பந் தணிந்து பெருமலைக்குப்பின் சிறிது மறைய, களங்கமற்று வானம் எங்கும் நீலநிறமாய்த் தோன்ற,காற்றுமெல்லென வீச, சமயச்சின்னமாம் பெருமணியொன்றைக் கழுத்திலணிந்து, நெற்றியில் நீறு நிறையப்பூசி, தூயவெள்ளாடை புனைந்து,மறைமலையடிகளியற்றிய "முல்லைப் பாட்டாராய்ச்சி" "சாதி வேற்றுமையும்

போலிச்சைவரும்'' என்ற புத்தகங்களையும் குடிஅரசில் கைவல்பசாமியார் சந்திரசேகரப்பாவலர் எழுதிய கட்டுரைத்தாள்களையும் கையிலெடுத்து இல்லங்கடந்து, குன்றினை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அங்கு எதிரே வந்து கொண்டிருந்த முப்பதாண்டுப் பருவமுள்ள பறைமகன் அண்மையில் வந்து முருகனைக்கண்டதும் தலையிலணிந்த துணியைக் கையிலெடுத்து மனம் பதறிப் பாதையினின்றும் விலகிப் பக்கத்திலுள்ள வயலிலிறங்கி நடந்தான். பார்த்தான் முருகன்; மனம் பதைத்தது. 'அந்தோ! ஈதென்ன கொடுமை! என்னைக்கண்டதும் பாதையை நீங்கிப் பக்கமாய்ச் செல்கிறான். கிராமங்களினூடே செல்லும் புதிய மகனைக்கண்டு குரைத்தோடிவரும் நாயினைக் கண்டவன் போலன்றோ தலையிலணிந்த ஆடையையும் கையிலெடுத்துப் பயங்கொண்டவன் போல் பக்கமாய்ப் பார்த்துப்பார்த்துச் செல்கின்றான். நான் உயர்ந்த மக்கள் பிறப்பில் பிறந்து அறிவு பெற்றிருக்கிறேனென்று நினைத்த வெண்ணமெல்லாம் இவன் முன் பாழாய்ப் போயினவன்றோ? எத்தகைய விலங்குகள் வந்தாலும் வலிமையால் அவற்றைத் தூக்கி மீண்டுவரும் திடம்பெற்ற உடம்பினை புடைவனாகவும் காணப்படுகின்றான். ஐயோ மிருகங்களிலும் மிகக்கொடியவனாகவன்றோ என்னை நினைத்துவிட்டனன். எல்லாவுயிர்களும் எம்மக்களும் கண்டவிடத்து அன்புடன் அருகில் வரத்தக்கபிறவி வேறு என்ன இருக்கிறதென்று நான் அறிந்தேனில்லை. பறைத்திருமகன் போலும். ஆதலால்தான் சாதிக்கொடுமையென்னும் நெருப்பால் சுடப்பட்டவனாக, உள்ளம் பதைத்து ஒதுங்குகின்றான். எனக்கு இன்று நல்லநாளென மகிழ்கின்றேன்'' என்று தனக்குள்ளே கூறிக்கொண்ட முருகன் இவனது அறியாமையைப் போக்கி உண்மையை உணர்த்தி வழிப்படுத்தல் வேண்டுமென வெண்ணி 'இங்கே வா' என அழைத்தான். அவன் மிகவும் பதறி 'சுவாமி, தெரியாமல் வந்துவிட்டேன், மன்னியுங்கள்' என்று கைகூப்பினான். முருகனுக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. 'ஐயோ சாதிக்கொடுமை மக்களை இங்ஙனமாகவன்றோ துன்புறுத்தி வைத்திருக்கின்றது! இவனுடைய வாழ்க்கையில் இன்பம் எங்ஙனமிருக்கும்! இத்தகைய செயல்களைக் கண்டு தனக்குச் சிறப்பென நினைத்தும் மகிழ்ந்தும் அங்ஙனமே நடக்க வற்புறுத்திவரும் மக்களுருவந்தாங்கிய பேய்க்குணமக்களின் ஆதிக்கம் என்றொழியுமோ தெரியவில்லையே! இவனைக் கையைப்பற்றியாவது அழைத்துச்சென்று அறியாமையை அகற்றுதல் நமது கடமை' எனக்கருதி, 'அப்பா பயப்படாதே; நானும் உன்போன்று மக்கள் பிறப்பினன்; உனக்கு இடர் விளைவிப்பவனல்ல; உயர்ந்த பிறப்பாம் மக்கள் வகுப்பில் பிறந்தும் அறியாமை யென்னும் சேற்றில் மூழ்கியிருப்பதால் என்னைக்கண்டு விலகுகின்றாய். பயம் வேண்டாம் வா' என அழைத்தான். அவன் மனந்திடப்பட்டானில்லையேனும் சிறு பிள்ளைதானே என்ன செய்யக்கூடுமென அருகில் வந்தான்; முருகன் ''அப்பா உன் பெயர் யாது, ஊர் எது?'' என வினவ, ''சுவாமி, அடுத்த நாலுமைல் தூரமுள்ள ஆகங்குரிச்சி. என் பெயர் அழகன்'' என்றான் முருகன். ''அழகா வருக. நானும் உன்னைப்போன்ற மக்கள் பிறப்பினனாதலால் சுவாமி எனக்கூறற்க. இக்குன்றுவரை சென்று வருவோம்'' என்றழைக்க முருகன் முன்னும் அழகன் பின்னுமாகச்சென்று குன்றேறிப் பாறையில் உட்கார்ந்தனர். முருகன் விரும்பியபடி அழகனும் அருகிலேயே ஒரு கல்லில் உட்கார்ந்தான்.

பாறை மீதிருந்த முருகன் மூன்று பக்கமும் பார்த்தான். ஞாயிறு மேற்றிசையில் நலமாய் மறைந்தனன். அன்று அந்திப் பொழுது அழகாயிருந்தது. திங்கள் குணதிசையில் நிறைவாய்த் திகழ்ந்தனன். வானில் நீலாடை விரித்தாற்போன்றும்

முருகனும் அழகனும்.

நிலத்தில் பைங்கூழ்க் காட்சி பூமகள் மரகத ஆடை விரித்தாற் போன்றுமிருந்தன. புள்ளினங்கள் தங்கள் இருப்பிடம் நோக்கிப் பறந்து சென்றுகொண்டிருந்தன. அணித்தாயுள்ள நெடுமலை வனப்பும் கண்ணுக்கினிய காட்சியளித்தது. காடடைந்த மக்கள் வீடடையச்செல்லுங்கால் பாடும் முல்லை, மருதப்பண் ஆகிய இசையொலிகள் செவிக்கின்பமளித்தன. பாறைக்கருகில் பண்படுத்தி வைத்திருந்த பூச்செடிகளில் அப்போது இதழ்விரித்த பூக்கள் மணம் வீசி மூக்குக்கின்பங்கொடுத்தன. 'மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே' என்னும் வள்ளலடிகள் வாக்குக்கிணங்க இளங்காற்று மலர் மணங்களுடன் மெதுவாய்த் தாக்கி உடற்கின்பம் பயந்தது. இவ்வின்பங்களால் "ஆ! ஆ! என்னே யான் பெற்ற இன்பம்" என்னுஞ்சொற்களை வாயும் வழங்கி இன்புற்றது. இங்ஙனம் ஐம்பொறிவாயிலாய் ஐம்புலன்களும் அடைந்த இன்பப்பெருக்கால் முருகன் உள்ளம் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தது.

அழகனை நோக்கி, "என்னைக் கண்டதும் தலையிலணிந்த ஆடையைக்கையிற் கொண்டு பாதையைக்கடந்து சென்ற காரணம் என்ன அறிவிப்பாய்" என வினவினன். "சுவாமி நான் பறையனன்றோ? பஞ்சமனல்லவா? உங்களைக்கண்டு ஒதுங்காதிருந்தால் இடருறுவேன். இன்னும் கீழ்ப்பட்ட பிறப்பில் பிறந்துழலுவேனன்றோ? ஒரு மாதத்துக்குமுன் எங்களூரில் மனத்திலுள்ள கவலையினால் தலை கவிழ்ந்த வண்ணமாய்ச் சென்றுகொண்டிருந்தேன். ஒரு பிராமணச்சாமி தலையில் முக்காடிட்டு வந்தனர் போலும்! நான் கண்டேனில்லை. பக்கமாகச் சென்றேன். உடனே என்னை நோக்கி 'அடா பாவி! சண்டாளா, நான் வரும்போது எதிரே எப்படி வரலாம்? கண்ணில்லையா? நீ சீக்கிரம் ஒழியாயா?' வென அளவு கடந்து திட்டியது மன்றிக் கிராம அதிகாரியிடம் சொல்லித் தலையாரியைக் கொண்டு என்னை அழைப்பித்து புளியாக்கையால் அடிக்கவுஞ்செய்தனர். என்ன செய்வேன்? யாரிடம் முறையிடுவது? பெற்றுக்கொண்டு வீடு சென்றேன். முற்பிறப்பில் என்ன செய்தேனோ இப்பிறப்பில் ஒரு குற்றமும் புரியாதிருந்தும் இத்தகைய துன்பத்தைக் கையாளுகின்றேன். கல்வியிலும் சிறிது பழக்கமுண்டு. எங்கு சென்றாலும் நாம் ஒதுங்கிக் கொள்ளுதல் நலமென்று அவ்வண்ணம் விலகிச்சென்றேன்" என்றான் அழகன். 'புளியாக்கையால் அடிபட்டேன்' என்றவுடன் முருகன் மனம் துடித்தது. முருகன் "என்ன கொடுமை! கொடுமை!" என மனமுடைந்து தெளிவுற்று, "அப்பா அழகா! பயத்தை ஒழி. நான் கூறுவதைக்கேள். என்னைச் சுவாமி எனக்கூறவேண்டாமென்று முன்னம் அறிவித்தேன். தீமை பல புரியும் மக்களைத் தெய்வம் எனப்படும் சுவாமி என்ற பெயரால் அழைப்பது தகுதியன்று. அங்ஙனம் அழைப்பதும் அதை ஏற்பதும் அறியாமையேயாகும். ஐயா என்ற சொல்லே அருமையுடையது. ஐயா என்ற சொல்லுக்கு அன்பை நல்கும் வன்மை உண்டு. காம வெகுளி மயக்கம் நீங்கிப் பற்றற்று எவ்வுயிர்க்கும் இதஞ்செய்து இறைவன் வழிபாடொன்றில் மனம் பதிந்த பெரியோரையே அடிகள் என நம் நாட்டில் கூறுவது. சாமி என்ற சொல்லும் நம் தெய்வத் தமிழ்மொழியன்று; சாமி என்ற சொல்லை எதற்கு வழங்குவதென்பது துணாமலே பெரும்பாலும் வழங்கிவருகின்றனர். படித்தவர்களும் மயங்கியே யிருக்கின்றனர். அழகா, இனிச்சாமி எனக்கூறவேண்டாம். அல்லாமலும் பறையன் என்ற சொல்லை இழிந்ததாகக் கருதுகின்றாய். அது இழிந்த சொல்லன்று. இரக்கமிலா உள்ளத்தினரால் தாழ்த்தப்பட்ட சொல்லல்லாமல்வேறன்று. பறை—சொல்லுதல் என்பதாகும். அரசனால் மக்களுக்கு அறிவிக்கப்படும் உத்தரவைப் பறையறைந்தறிவிக்கும் வழக்கத்தால்

பறையன் என்று பெயர் வந்ததேயன்றித் தாழ்ந்த சொல்லெனக்கூறுதல் முறையோ? இப்போது அரசாங்கத்தாரால் அறிவிக்கப் படும் உத்தரவுகளை வெளியிடுபவர்களை யெல்லாம் பறையர் என்று கூறுகின்றனர்? அங்ஙனம் கூறிக்கொள்ள யாரேனும் முற் படுவரோ? இல்லை. ஆதலால் தாழ்ந்ததென்று நினையற்க. அல்லாமலும் பஞ்சமன் என்று உன்னையே நீ கூறுகின்றாய். என்னே உன் மதியிருந்தவாறு? பஞ்சமன் என்பது ஐந்து குற்றங்களைப்புரிநதவன் என்பதாகும். அவை பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் ஐந்துமாம். ஐந்து குற்றங்களை யும் இயற்றியவனுக்கே பஞ்சமனெனும் பெயர் வழங்கப்பட்டதாகக் கூறுகின்ற னர். இதை நாம் ஆராய்ந்தவிடத்தும் குற்றம் புரிவதில் ஒன்றைச்செய்தாலும் ஐந்தைச் செய்தாலும் குற்றம் குற்றந்தான். மற்றத் தீமைகள் புரியாது பொய்யைமட்டும் சொல்லுகிறவன்; பொய்யுடன் கொலை அதாவது உயிர்களை வதைத்தல், ஊனருந்து தல் இவ்விரண்டையும் செய்கிறவன்; பொய் கொலை இரண்டுடன் களவு அதாவது பிறர் பொருளைத் தெரிந்து அடித்துப் பறித் தோ தெரியாமல் திருடியோ இம் மூன் றைச்செய்கிறவன்; பொய், கொலை, களவு இம்மூன்றுடன் கள் அதாவது அறி வை மயக்கும் மதுவருந்துபவன்; பொய், கொலை, களவு, கள் இந்நான்குடன் கா மம் அதாவது பிறர் மனைவிழைதல், மறுமாதர் இன்பந்துய்ப்பவன்; இந்த ஐந்து மக்களுக்கும் முறையே நாலுமா, காலேமூன்றுமா, அரையே இரண்டுமா, முக் காலே ஒருமா என்று இத்தகைய அளவுள் ள பஞ்சமர்கள் என்று கூறுதல் குற்ற முடையதாகுமா? மற்ற சாதியாருள் ஐந்தை யோ, நான்கையோ, மூன்றையோ, இரண் டையோ, ஒன்றை மட்டுமோ இயற்றாத மக் களிருக்கிறார்களென்று சொல்ல முன் வருப வர்கள் யார்? ஆச்சாரியராயினும் மடாதிபதி களாயினும் இந்த ஐந்தில் எதிலாவதொன் றில் கட்டுண்டுழலாதவர்களுண்டோ? குற் றம் புரியாது நூலியற்றப் புகுந்த விடத்தும் தங்கள் கொள்கைகளை நிலைநாட்ட முயன்ற விடத்தும் எடுத்துக்கொண்ட முறைக்குப் பொய் புனைந்து புதிய கற்பனை கட்டியும் நிக ழாத ஒன்றை உதாரணங்காட்டியும் மயக்கு கின்றனரன்றோ? அது சில மக்களுக்கு வருத் தம் தருவதாயிருப்பின், ஐந்தில் சேர்ந்துதா னே தீருகின்றது? எவ்வுயிர்க்கும் ஒருசிறி தும் தீமையியற்றாது, எம்மக்களும் தம்மக்க ளாகக்கொண்டு புனல் கால் உண்டு, எப் பொருளும் இறைவன் வடிவாய்க்காண ஒரு மனப்பட்டுத் தனியிடந்தேடி யிருக்கும் பெரியார்களைத்தவிர இவ்வுலகமே பஞ்சமர் கள் நிறைந்த உலகமென்றுதானே கூறுதல் முறையாகும். ஐந்து குற்றத்தையும் நீ இயற்றியிருக்கக்கூடுமென்று எண்ணவில்லை. நீ இழைத்த குற்றங்களைப் போல பிற மக்க ளும் இயற்றுகின்றனர். உனக்குமேற்பட் ட குற்றங்களையும் மற்ற மக்கள் ஆற்றுகின்ற னர். அங்ஙனமிருக்கப் பஞ்சமன் என ஒரு மக்கள் கூட்டம் இருக்கின்றதெனக் கூறு கிற ஒவ்வொருவரும் அக்குற்றங்களில் சில தாங்களும் இயற்றிக்கொண்டிருப்பதால் தாங்களும் பஞ்சம இனத்தைச் சார்ந்தவர்க ளென்பதை மறந்து பிறரை இழித்துக்கூறி அவர்கள் நலம் பெறுவதற்குத் துணைபுரி யாது இடர் விளைவித்துக் கொண்டிருப்பவர் களைப் பஞ்சமனிலும் பஞ்சமன் என்று கூறு தல் தகுதியா அல்லவா என அறிவுடையார் கள்கூறட்டும். ஒரு காலத்தில்ஒருவன் இத்த கைய தீயகுற்றங்களைப் புரிந்தான்; அதனால் இப்பெயரிட்டோமென்று கூறுகின்றனர். அந்த நாளிலும் ஐந்தில் எதையாவது ஆற் றாத மக்களிருந்திருக்கவே மாட்டார்கள். அங்ஙனமிருப்பினும் ஒருவன் இழைத்த குற் றத்திற்கு அவன் மக்கள் நன் மக்களாயிருந் தாலும் அன்றிக் குறைந்த குற்றம் புரிபவ ராயிருந்தாலும் அவர்களை மக்களினத்தில் சேர்ப்பித்தல் கூடாதா? அவர்களுக்கு நலந் தேடாது புறக்கணித்துத் தாழ்த்தி அவர்

களை முன்னேற வொட்டாது தடுத்து இடர் விளைவித்தல் பஞ்சமத் தொழிலன்றோ? இதனை உணராதிருப்பது அறிவுடைய பிறப்புக்கு ஏற்றதோ? இதனைச் சிறிதளவும் எண்ணிப்பார்க்க இயலாத இரக்கமிலா நெஞ்சினர், நான் உயர்ந்தவன் எனக் கச்சைகட்டுகின்றனரே? இறைவன் உண்மையன்புக்கு உரியவனல்லாது, வேடத்துக்கோ பக்க பலத்துக்கோ, வாக்கு வன்மைக்கோ, திட வலிமைக்கோ அருள் சுரக்கமாட்டான். உங்களுக்கு இழைத்த கொடுமையின் பலனாகத் தான் பிறநாட்டு மக்களால் தாழ்த்தப்பட்டு துன்புறுகின்றனர். ஒருவன் 'தேவடியாள் மகனே' என்று கூறியவிடத்து அடங்காச் சினங்கொண்டு அவனைத்தாக்க வீரங்கொண்டெழும் தமிழ்மக்கள், பொய்யுரைகளால் மக்களை மயக்கி அவர்கள் இரத்தத்தை உறிஞ்சி வாழ்நாள் போக்கும் ஒரு குழுவினர், தேவடியாள் மகன் என்னும் பொருளுள்ள 'சூத்திரன்' என்று கூறுவதைச் சிறிதும் உணர்வின்றி ஏற்றுக் கொள்கின்றனர். படித்த மக்களும் தங்களைத்தாங்களே சூத்திரர் என்று சொல்லிக்கொள்வது எவ்வளவு விந்தை! சூத்திரன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிற ஒவ்வொரு தமிழ் மகனும் வைப்பாட்டி மகன், ஒழுக்கங்கெட்டவன், அடிமைப்பட்டவன், கண்டதைப் புசிப்பவனாகவிருக்கும்போது 'நான் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன்' என்று கூறுவது சிறிதேனும் சுய உணர்வுடையார் செயலாவெனப் பார்த்தல் அறிவுடையார் கடனாகும். என்றைக்கு இந்த அறியாமை நீங்குமோ, என்று அறிவு விளக்க மெய்துமோ, என்று உணர்வு பெறுவார்களோ அன்றல்லவா பிறநாட்டு மக்களிடம் தாங்களும் மக்கள் வகுப்பினர் எனத் தலைநிமிர்ந்து கூறமுடியும்? அழகா! விலகாமல் நேரே சென்றால் இன்னல் விளையுமென்றனை. ஆனால் உன்மீது குற்றம் எதுவுமில்லை. ஒருமாதத்துக்குமுன் பார்ப்பன மகனால் புளியாக்கை அடிபட்ட பயம் உன்னை விலகும்படி செய்தது. அப் பார்ப்பன மகன் உண்மையில் உயர்வுடைய மகனாயிருப்பின் யாதொரு குற்றமுமின்றி இவ்வளவு துன்பம் விளைவித்திருக்கமாட்டான். அவனும் அவன் சொல்லைக் கேட்டபிறரும் இழிகுண முடையவர்களேயாம். நிற்க, இன்னும் கீழ்ப் பிறப்பிற் பிறந்துழலுவேனென்கின்றாய். அந்தோ பெரும் மடமைக் குளியில் விழுந்து தவிக்கின்றனை. இத்தகைய மடமையிலிருந்து விலகு. மக்களைக் கண்டு விலகவேண்டாம். இறைவன் ஒருவனைக் கீழ்மகனென்றும் ஒருவனை மேல் மகனென்றும் படைக்கவில்லை என்பதை உறுதியாக உள்ளத்தில் பதி. மக்களுக்கு மக்கள் இரக்கமின்றி விளைவித்த பெருங்கொடுமைக்கு இறைவனைக் குற்றம் கூறுவது கூடாது. மக்களைத் துன்புறுத்தும் இரக்கமற்ற மக்கள் இறைவன் பேரில் பழி போடுகின்றனர். அவன் ஒருபோதும் ஒப்புவனல்லன். அவன் அத்தீயவர்களைக் கடிகின்றான். தெய்வம் இல்லையென்கின்ற நாத்திக மக்கள்தான், மக்களைக் கொடுமைப் படுத்திக்கொண்டு, அதற்குச் சமாதானம் கூறும்போது, இறைவன் அமைப்பு எனச் சொல்லி மயக்குகின்றனர். இத்தகைய மக்களுக்கு நரகம் யாதெனத் தெரியவில்லை. அழகா! இறைவன் படைத்த மக்களில் உயர்வு தாழ்வு கிடையாது. அங்ஙனம் படைத்திருப்பானேல் கடவுளியல்புக்கு ஏற்றதல்லவாதலால் அவன் செயலல்லவென்று திடமாய்க்கொள்க. அவன் படைத்த மக்களில் நீயும் ஒருவன் என்று நிமிர்ந்து நில். படித்துள்ள நீ இவ்விருளில் கிடந்து தத்தளிக்கலாமா? மக்கள் பிறப்பு, உயர்ந்த அறிவுடைய பிறப்பன்றோ? தெளிவு பெறுதி'' என்றான்.

இங்ஙனமிருக்க முருகன் அழகனை அழைத்தேகும்போது வழியில் கண்ட ஒருவன் முருகன் தந்தையிடம்சென்று ''ஐயா! நமது முருகன் அடுத்த கிராமத்துப் பறையனுடன் மலைக்குப் போகிறான்'' எனச் சொல்லிவிட்

பறையன் என்று பெயர் வந்ததேயன்றித் தாழ்ந்த சொல்லெனக்கூறுதல் முறையோ? இப்போது அரசாங்கத்தாரால் அறிவிக்கப்படும் உத்தரவுகளை வெளியிடுபவர்களையெல்லாம் பறையர் என்று கூறுகின்றனர்? அங்ஙனம் கூறிக்கொள்ள யாரேனும் முற்படுவரோ? இல்லை. ஆதலால் தாழ்ந்ததென்று நினையற்க. அல்லாமலும் பஞ்சமன் என்று உன்னையே நீ கூறுகின்றாய். என்னே உன் மதியிருந்தவாறு! பஞ்சமன் என்பது ஐந்து குற்றங்களைப்புரிந்தவன் என்பதாகும். அவை பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் ஐந்துமாம். ஐந்து குற்றங்களையும் இயற்றியவனுக்கே பஞ்சமனெனும் பெயர் வழங்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இதை நாம் ஆராய்ந்தவிடத்தும் குற்றம் புரிவதில் ஒன்றைச்செய்தாலும் ஐந்தைச் செய்தாலும் குற்றம் குற்றந்தான். மற்றத் தீமைகள் புரியாது பொய்யைமட்டும் சொல்லுகிறவன்; பொய்யுடன் கொலை அதாவது உயிர்களை வதைத்தல், ஊனருந்துதல் இவ்விரண்டையும் செய்கிறவன்; பொய் கொலை இரண்டுடன் களவு அதாவது பிறர் பொருளைத் தெரிந்து அடித்துப் பறித்தோ தெரியாமல் திருடியோ இம் மூன்றைச்செய்கிறவன்; பொய், கொலை, களவு இம்மூன்றுடன் கள் அதாவது அறிவை மயக்கும் மதுவருந்துபவன்; பொய், கொலை, களவு, கள் இந்நான்குடன் காமம் அதாவது பிறர் மனைவிழைதல், மறுமாதர் இன்பந்துய்ப்பவன்; இந்த ஐந்து மக்களுக்கும் முறையே நாலுமா, காலேமூன்றுமா, அரையே இரண்டுமா, முக்காலே ஒருமா என்று இத்தகைய அளவுள்ள பஞ்சமர்கள் என்று கூறுதல் குற்றமுடையதாகுமா? மற்ற சாதியாருள் ஐந்தையோ, நான்கையோ, மூன்றையோ, இரண்டையோ, ஒன்றை மட்டுமோ இயற்றாத மக்களிருக்கிறார்களென்று சொல்ல முன் வருபவர்கள் யார்? ஆச்சாரியராயினும் மடாதிபதிகளாயினும் இந்த ஐந்தில் எதிலாவதொன்றில் கட்டுண்டுழலாதவர்களுண்டோ? குற்றம் புரியாது நூலியற்றப் புகுந்த விடத்தும் தங்கள் கொள்கைகளை நிலைநாட்ட முயன்றவிடத்தும் எடுத்துக்கொண்ட முறைக்குப் பொய் புனைந்து புதிய கற்பனை கட்டியும் நிகழாத ஒன்றை உதாரணங்காட்டியும் மயக்குகின்றனரன்றோ? அது சில மக்களுக்கு வருத்தம் தருவதாயிருப்பின், ஐந்தில் சேர்ந்துதானே தீருகின்றது? எவ்வுயிர்க்கும் ஒரு சிறிதும் தீமையியற்றாது, எம்மக்களும் தம்மக்களாகக்கொண்டு புனல் கால் உண்டு, எப்பொருளும் இறைவன் வடிவாய்க்காண ஒரு மனப்பட்டுத் தனியிடந்தேடியிருக்கும் பெரியார்களைத்தவிர இவ்வுலகமே பஞ்சமர்கள் நிறைந்த உலகமென்றுதானே கூறுதல் முறையாகும். ஐந்து குற்றத்தையும் நீ இயற்றியிருக்கக் கூடுமென்று எண்ணவில்லை. நீ இழைத்த குற்றங்களைப் போல பிற மக்களும் இயற்றுகின்றனர். உனக்கு மேற்பட்ட குற்றங்களையும் மற்ற மக்கள் ஆற்றுகின்றனர். அங்ஙனமிருக்கப் பஞ்சமன் என ஒரு மக்கள் கூட்டம் இருக்கின்றதெனக் கூறுகிற ஒவ்வொருவரும் அக்குற்றங்களில் சில தாங்களும் இயற்றிக்கொண்டிருப்பதால் தாங்களும் பஞ்சம இனத்தைச் சார்ந்தவர்களென்பதை மறந்து பிறரை இழித்துக்கூறி அவர்கள் நலம் பெறவதற்குத் துணைபுரியாது இடர் விளைவித்துக் கொண்டிருப்பவர்களைப் பஞ்சமனிலும் பஞ்சமன் என்று கூறுதல் தகுதியா அல்லவா என அறிவுடையார்கள்கூறட்டும். ஒரு காலத்தில்ஒருவன் இத்தகைய தீயகுற்றங்களைப் புரிந்தான்; அதனால் இப்பெயரிட்டோமென்று கூறுகின்றனர். அந்த நாளிலும் ஐந்தில் எதையாவது ஆற்றாத மக்களிருந்திருக்கவே மாட்டார்கள். அங்ஙனமிருப்பினும் ஒருவன் இழைத்த குற்றத்திற்கு அவன் மக்கள் நன் மக்களாயிருந்தாலும் அன்றிக் குறைந்த குற்றம் புரிபவராயிருந்தாலும் அவர்களை மக்களினத்தில் சேர்ப்பித்தல் கூடாதா? அவர்களுக்கு நலந் தேடாது புறக்கணித்துத் தாழ்த்தி அவர்

களை முன்னேற வொட்டாது தடுத்து இடர் விளைவித்தல் பஞ்சமத் தொழிலன்றோ? இதனை உணராதிருப்பது அறிவுடைய பிறப்புக்கு ஏற்றதோ? இதனைச் சிறிதளவும் எண்ணிப்பார்க்க இயலாத இரக்கமிலா நெஞ்சினர், நான் உயர்ந்தவன் எனக் கச்சைகட்டுகின்றனரே? இறைவன் உண்மையன்புக்கு உரியவனல்லாது, வேடத்துக்கோ பக்க பலத்துக்கோ, வாக்கு வன்மைக்கோ, திட வலிமைக்கோ அருள் சுரக்கமாட்டான். உங்களுக்கு இழைத்த கொடுமையின் பலனைகத்தான் பிறநாட்டு மக்களால் தாழ்த்தப்பட்டு துன்புறுகின்றனர். ஒருவன் ‘தேவடியாள் மகனே’ என்று கூறியவிடத்து அடங்காச் சினங்கொண்டு அவனைத்தாக்க வீரங்கொண்டெழும் தமிழ்மக்கள், பொய்யுரைகளால் மக்களை மயக்கி அவர்கள் இரத்தத்தை உறிஞ்சி வாழ்நாள் போக்கும் ஒரு குழுவினர், தேவடியாள் மகன் என்னும் பொருளுள்ள ‘சூத்திரன்’ என்று கூறுவதைச் சிறிதும் உணர்வின்றி ஏற்றுக் கொள்கின்றனர். படித்த மக்களும் தங்களைத்தாங்களே சூத்திரர் என்று சொல்லிக்கொள்வது எவ்வளவு விந்தை! சூத்திரன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிற ஒவ்வொரு தமிழ் மகனும் வைப்பாட்டி மகன், ஒழுக்கங்கெட்டவன், அடிமைப்பட்டவன், கண்டதைப் புசிப்பவனாகவிருக்கும்போது ‘நான் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன்’ என்று கூறுவது சிறிதேனும் சுய உணர்வுடையார் செயலாவெனப்பார்த்தல் அறிவுடையார் கடனாகும். என்றைக்கு இந்த அறியாமை நீங்குமோ, என்று அறிவு விளக்க மெய்துமோ, என்று உணர்வு பெறுவார்களோ அன்றல்லவா பிறநாட்டு மக்களிடம் தாங்களும் மக்கள் வகுப்பினர் எனத் தலைநிமிர்ந்து கூறமுடியும்? அழகா! விலகாமல் நேரே சென்றால் இன்னல் விளையுமென்றனை. ஆனால் உன்மீது குற்றம் எதுவுமில்லை. ஒருமாதத்துக்குமுன் பார்ப்பன மகனால் புளியாக்கை அடிபட்ட பயம் உன்னை விலகும்படி செய்தது. அப் பார்ப்பன மகன் உண்மையில் உயர்வுடைய மகனாயிருப்பின் யாதொரு குற்றமுமின்றி இவ்வளவு துன்பம் விளைவித்திருக்கமாட்டான். அவனும் அவன் சொல்லைக் கேட்டபிறரும் இழிகுண முடையவர்களேயாம். நிற்க, இன்னும் கீழ்ப் பிறப்பிற் பிறந்துழலுவேனென்கின்றாய். அந்தோ பெரும் மடமைக் குழியில் விழுந்து தவிக்கின்றனை. இத்தகைய மடமையிலிருந்து விலகு. மக்களைக் கண்டு விலகவேண்டாம். இறைவன் ஒருவனைக் கீழ்மகனென்றும் ஒருவனை மேல் மகனென்றும் படைக்கவில்லை என்பதை உறுதியாக உள்ளத்தில் பதி. மக்களுக்கு மக்கள் இரக்கமின்றி விளைவித்த பெருங்கொடுமைக்கு இறைவனைக் குற்றம் கூறுவது கூடாது. மக்களைத் துன்புறுத்தும் இரக்கமற்ற மக்கள் இறைவன் பேரில் பழி போடுகின்றனர். அவன் ஒருபோதும் ஒப்புவனல்லன். அவன் அத்தீயவர்களைக் கடிகின்றான். தெய்வம் இல்லை யென்கின்ற நாத்திக மக்கள்தான், மக்களைக் கொடுமைப்படுத்திக்கொண்டு, அதற்குச் சமாதானம் கூறும்போது, இறைவன் அமைப்பு எனச் சொல்லி மயக்குகின்றனர். இத்தகைய மக்களுக்கு நரகம் யாதெனத் தெரியவில்லை. அழகா! இறைவன் படைத்த மக்களில் உயர்வு தாழ்வு கிடையாது. அங்ஙனம் படைத்திருப்பானேல் கடவுளியல்புக்கு ஏற்றதல்லவாதலால் அவன் செயலல்லவென்று திடமாய்க்கொள்க. அவன் படைத்த மக்களில் நீயும் ஒருவன் என்று நிமிர்ந்து நில். படித்துள்ள நீ இவ்விருளில் கிடந்து தத்தளிக்கலாமா? மக்கள் பிறப்பு, உயர்ந்த அறிவுடைய பிறப்பன்றோ? தெளிவு பெறுதி” என்றான்.

இங்ஙனமிருக்க முருகன் அழகனை அழைத்தேகும்போது வழியில் கண்ட ஒருவன் முருகன் தந்தையிடம்சென்று “ஐயா! நமது முருகன் அடுத்த கிராமத்துப் பறையனுடன் மலைக்குப் போகிறான்” எனச் சொல்லிவிட்

டுச் சென்முன். அங்குவந்திருந்த ராஜமய்யரை நோக்கி சபாபதிபிள்ளை 'சாமி! நமது பையன் மனம் மாறுபட்டிருக்கின்முன். புராணங்களில் பல பொய் புனையப்பட்டிருக்கிறதென்றும், சாதி யில்லையென்றும், எல்லாமக்களும் ஒன்றென்றும், எல்லாரிடத்தும் அன்பு கொள்ள வேண்டுமென்றும் கூறுகின்முன். வேளாள மகனுய்ப் பிறந்து சைவசமயத்தின் மாண்பைக் குறைக்க மயங்கி முன்வந்து விட்டானே என்று எண்ணநேரினும் அவன் கூறுவதைப் பெரும்பாலும் ஒப்பவேண்டியதா யிருக்கின்றது. ஆனல் உலகம் ஏற்காது'' என்றுர். பார்த்தார் ராஜமய்யர், தமக்கு விரோதி பிள்ளையவாள் வீட்டிலே தோன்றி விட்டான் என்று நினைந்து ''அடடா! உமது பிள்ளை நம்மள் முருகன்தானே; ரொம்ப நல்லவன். நாட்டிலுள்ள குழப்பம் அவனைப் பிடித்துவிட்டது. ஆயினும் மிதமிஞ்சிப் போகாமல் அவனை வழிப்படுத்தல் தந்தை கடமையாகும்'' என்றுர். சபாபதிபிள்ளையும், ''இரவு நேரம் இவன் மலைக்குப்போனது தவறுதல். உடனே போய் நாமிருவரும் அவனுக்கு அறிவுறுத்தி அழைத்து வருவோ''மென அழைத்தார். சபாபதிபிள்ளை முன்னும், ராஜமய்யர் பின்னுமாகச் சென்று குன்றேறி அவர்களுக்கு மறைவாய் இருந்து அழகனுக்கு முருகன் கூறிய யாவும் செவியுற்று அழகன் கூறப்போவதையும் கேட்போமென்றிருந்தனர்.

முருகனைப்பார்த்து அழகன் ''ஐயா! தாங்களுரைத்த அரிய மொழிகளால் சிறிது தெளிவுற்றேன். அறிவுக்கும் ஒழுக்க நடைக்கும் இரக்கமான உள்ளத்துக்குந்தானே சிறப்பன்றி, தீய மனத்தினராய் தீமைபுரிபவர்களாயிருந்தாலும் பிறப்பால் உயர்ந்தவர்களென்றும் நம்மக்கள் உண்மை மனத்துடன் பிறர்க் கிதம்புரிந்து ஒழுக்க நடைபெற்றிருந்தாலும் பிறப்பால் தாழ்ந்தவன் தாழ்ந்தவனே என்றும் கூறுவது எங்ஙனம் முறையாகும்? இதை இறைவன் ஏற்பதாயின் குற்றங்கூற இடந்தருவதாகவன்றே நேரும் என நினைவுக்கு வருவதும் உண்டு. ஆயினும் என்ன பையன்? மிகுந்த பழக்கத்தால் பயம் மேற்செல்ல விடாது தடுத்து விடுகின்றது. அல்லாமலும் கிராமங்களில் அழுக்கில்லா ஆடையணிந்து மகிழ்வுடன் வெளிவந்தால் 'நெஞ்சுத் திமிருடன் நிமிர்ந்து நடக்கிறுன்' எனக் கூறுகின்றனர். வயிற்றுக் கொடுமைக்கு அவர்களிடம் செல்லும்போது தங்கள் மனக்கொதிப்பைக்காட்டித் துயரப்படுத்துகின்றனர். நாங்கள் என் செய்வோம்? கற்ற அளவில் தமிழ் நூலில் சில புத்தகங்களைப் பார்த்தவிடத்தில் வேதம் ஒன்றுளதென்றும், அது கடவுளால் அருளப்பட்டதென்றும், அதை பிரமன்முகத்திலிருந்துவந்த பிராமணர்கள் தான் ஓதல் வேண்டுமென்றும், அதுவும் பிசாசபாஷையாகிய தமிழில் இல்லாமல் தேவபாஷையாகிய வடமொழியிலிருக்கிறதென்றும், பிற்பட்ட க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் பிறதொழிலியற்றித் தேடிய பொருளை முதல் மக்களுக்குப் பணிவுடன் ஈதல்முறையென்றும், இதினின்றுமாறுபடின் பாவம் புரிந்தவர்களாய் நரகிடைத் துன்புறுவார்களென்று மிருப்பதால் பயம் திடம்பெற்று நாம் பொதுத் தடாகங்களில் முழுகினுலும், கிணற்றில் நீர் எடுத்தாலும், பொதுப்பாதையில் மற்றவர்கள் வரும்போது நடந்தாலும், வேதம் என்ன சொல்கின்றதெனக் கேட்க முயன்றுலும், பாவம் வந்து விடுமென்று பயந்து உயர்ந்த மக்கள் இழிவாய்க்கூறும் சொற்களை நெஞ்சம் புண்ணுகக் கேட்டும் இழிந்த தொழில்களைச் செய்யும்படி வற்புறுத்துவதால் அங்ஙனம் செய்தும் ஏவியவண்ணம் நடப்பதே தகுதியென அடங்கி விடுகின்றது. நகரபாகங்களில் எங்கள் மக்கள் கல்விபெற்று இப்பெருங் கொடுமைக்காளாகாது வாழ்கின்முர்களெனக் கேள்வியுறுகின்றேன். ஆயினும் என்னபயன்? கிராமங்களிலுள்ள எங்க

ளுக்கு ஈடேற்றம் ஒருபோதும் இல்லை; என்ன செய்வோ''மென்றான்.

முருகன் அழகனைப்பார்த்து, 'அழகா! வருந்தற்க; உங்களுக்கு ஈடேற்றம் உண்டு. இறைவன் அருளால் ஆங்கில ஆட்சி அமைந்திருக்கிறது. ஆனால் ஆங்கில ஆட்சியில் அம் மக்கள் நலமுடன் வாழ நம் நாட்டுப்பொருளைக் கவர்ந்து செல்வதில் மிகுந்த நோக்கமுடையராயிருப்பினும் பிற பலவகைகளில் பல நலஞ்செய்தும் கல்வியை விரிவுபடுத்தியும் வலிமையில்லா மக்கள் பயமின்றி வாழவும், மக்களுக்கு மக்கள் கொடுமை இழைப்பதை நீக்க முற்பட்டும், அரசாண்டு வருவதுடன் உங்கள் முன்னேற்றத்திற்குப்பலநன்மைகளும் செய்து வருகின்றனர். ஒரு குழுவினர் பொது நலத்துக்கு உழைக்கிறோமென்று சிலரை ஏவிவிட்டுப்பலர் அரசாங்கத்திடம் பல துறைகளிலும் நலம்பெற்று வருவதாலும் மக்களுக்குள் சாதி வேற்றுமைக் கொடுமையால் ஒற்றுமையில்லாதிருப்பதாலும் எல்லா மக்களும் ஒருமனப்பட்டு அரசாங்கத்திடம் வாதிட இயலாதிருக்கின்றது. வேற்றுமையை ஒழிப்பதற்கும் நியாயக்குழுவினர் கிளம்பி யுள்ளார்கள். மக்களுள் பேதமின்றி சமநிலைபெற்று ஒற்றுமையடைய முயலாமல் அரசினரிடம் வீண் வாதிடுதல் பயனுடையதாகுமா? சாதிப்பிணக்குகளால் நீர்ச்சண்டை நிலச்சண்டை கோயிற்சண்டை குளத்துச்சண்டை நடைபாதைச்சண்டை பதவிச்சண்டை மிகமலிந்து கணக்கற்ற பொருள் விரையமாகி அளவில்லா வழக்காளிகளும் அதிக நீதிமன்றங்களும் இருக்க நேர்கின்றன. இதனாலும் மக்கள் தரித்திர நிலையை அடைகின்றனரென்பதைப் பொது மக்கள் நலத்துக்கு உயிரைக்கூடத் துறக்க முன்வரும் பேரறிஞர்கள் எண்ணுகின்றிலர். எங்களால்தான் தாழ்ந்த மக்களுக்கு நலம் கிடைத்ததென்று சிலர் வீண் கூச்சலிடுகின்றனர். உண்மையான உள்ளத்துடன் தீண்டாமையை ஒழிக்க ஒரு திட்டத்தையும் அமைத்துத் தொண்டாற்ற முன்வந்த உலகம் புகழும் காந்தியடிகளே, "நாலு குலத்தையும் படைத்தேன், காப்பேன், யாகம் தற்பணந்தி சுரபூஜை செய்யாவிட்டால் தோஷம் என்று கிருஷ்ணன் சொன்னதாக யாரோ சிலர் சொல்லிவைத்த'' கீதையே எனக்கு முக்கியம்; நான் வருணாச்சிரம தருமமென்னும் அடிப்படையின்மேல் உட்கார்ந்திருக்கிறேனென்று சொல்ல முன்வந்தமையால்வருணாச்சிரம தருமமென்னும் பேய் அவ்வடிகள் நெஞ்சை அடைத்துத் தீண்டாமையை ஒழித்தல் என்று தான் போட்ட திட்டத்தை நிறைவேற்ற முன்வர முடியாமல் மறுதுறையில் மனத்தைச்செலுத்த நேர்ந்தது. ஆயினும்

> பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்
> சிறப் பொவ்வா செய்தொழில் வேற்றுமை
> [யான்

என்று அருளிய எவ்வுலகும் எத்தேசமும் எந்நாடும், எம்மதமும், எக்குலமும், எம்மக்களும் அன்புடன் ஏற்க நிறைவு பெற்றுத் திகழும் பொதுமறையாம் திருக்குறளுக்குரிய தமிழ் மக்கள் வாளாவிருப்பரோ? தமிழ்நாட்டில் அன்பை அடிப்படையாகக் கொண்டு எல்லாமக்களும் பேதமின்றி இன்புற்று வாழ்ந்து வந்ததை "வாழ்கிற வீட்டுக்குக் குருநாதன் அடிவைத்தான்'' என்பதுபோன்று ஆரிய மக்கள் அடிவைத்ததுமுதல் அவர்கள் சூழ்ச்சியால் பேதமடைந்து அருமைத் தமிழ் மக்கள் சுய அறிவைப் பறிகொடுத்து பிணக்குற்றுத் துன்புற நேர்ந்ததை அறிந்த தமிழறிஞர்கள் அந்நாளிலும் வாதிட்டு வந்திருக்கின்றனர்; இந்நாளிலும் முற்பட்டிருக்கின்றனர். உங்கள் மக்கள் நலத்திலும் மிக்க தீவிர நோக்கங்கொண்டு தொண்டாற்றி வருகின்றனர். விரைவில் நலம் பெற முடியும்.

அழகா! வேதம் ஒன்றுள்ளதென்றும் அது கடவுள் வாக்கென்றும் தேவபாடையாகிய

வடமொழியிலிருப்பதெனவும் பிரமன் முகத்தில் வந்த பிராமணர்க்குத்தான் அது உரியதென்றும் கூறுகின்றனே. இதில்தான் இப்போதும் தமிழ் மக்கள் உணர்வின்றி மிகவும் மூழ்கிக்கிடக்கின்றனர். வேதம் என்பது இறைவன் உளன் எனவும், அவனது இயல்பு இது, மக்கள் இயல்பு இது, மக்கள் உயிர் இன்பம் பெறுதற்கு வழி இது, மக்கள் வாழ்க்கைக்குரிய முறைகள் இன்னின்னவை, என விளக்கி ஒழுக்க நடையும், உள்ளன்பும் உயிர்கள் மீது இரக்கமும் இறைவனருள வேட்கையும், இறைவன் அருளும் கொண்ட பெரியாரியற்றிய நூலென்பது நம்மரபு. அது முன்னம் தமிழ்ப் பெரியாராலியற்றப்பெற்று மறையென வழங்கி வந்ததாயும், முதற்சங்கம் இடைச்சங்கம் கடலுள் அமிழ்ந்தபோது அது போயிற்றென்றும், அம்முறை நாட்டில் இருந்து வந்ததெனவும் அதன் சாரமே இலக்கண முறையில் வந்த தொல்காப்பியமும் இலக்கிய முறையில் வந்த திருக்குறளும் என்றும் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இதுபோது வேதமெனக் கூறுவதெல்லாம் ஆரியமக்கள் இயற்றிய வேதம் நான்கையுமே கூறுவதாகும். அது இறைவன் வாய்மொழியல்ல, மக்கள் வாய்மொழியே என்றும், அதில் யாகங்கள் பெரும்பாலும் கூறி பசு முதலிய விலங்கினங்களின் உயிரை வதைத்து உண்டு சோமபானமென மது வருந்துவதைக்காணக்கிடக்கின்றதெனவும், நெருப்புத் தெய்வம் தண்ணீர்த் தெய்வம் போகவேட்கை கொண்ட மேகத்தலைவன் அக்கினி வருணன் இந்திரனையும் சூரியன் சந்திரன் என்னும் ஞாயிறு திங்களையுமே தெய்வங்களாக வணக்கங் கூறப்பட்டிருக்கிறது மல்லாமல் தனக்கொரு தாய் தந்தையு மின்றித் தானே எல்லாவுயிர்க்குந் தாயுந்தந்தையுமாய் எப்பொருளையும் இயக்குவிக்கும் இயல்புள்ள பரம்பொருளுக்குத் தமிழ் மக்கள் முதன்மையில் பெயர்கண்ட சிவம் என்னும் சொல் யாண்டும் காணப்படவில்லை யென்றும் அவ்வேதம் தமிழ் மக்களுக்குரியதல்ல வென்றும் ஆரியமக்கள் தங்கள்வழக்கங்களைத் தழுவி இயற்றிய நூலென்றும் மறைமலையடிகள் நன்கு விளக்கியிருக்கின்றார்கள். அது பிசாச பாஷையாகிய தமிழிலில்லாமல் தேவபாஷையாகிய வடமொழியிலிருப்பதெனக் கூறுகின்றனே. அவ்வடமொழி வாடப்பெற்ற மொழியாய் அதாவது உலகவழக்கொழிந்து இறந்துபட்ட மொழியென்றும் தமிழ் எக்காலத்திலும் நூலிலும் சொல்வழக்கிலும் குன்றாது இளமை பெற்றுப் பெருகிவரும் மொழியென்றும், கேட்குங்கால், சொல்லுங்கால், நினைக்குங்கால், உள்ளத்திற்கு இன்பம் பயக்குமொழியென்றும் வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுவும் உண்மையென்றே கொள்ளத்தக்கதா யிருக்கின்றது. எனெனில் ஆரிய நூற் கருத்துப்படி கோயிலில்லாப் பிரமகுல மக்களான ஆரியர்கள், கோயினுட் புகுந்து, இறந்துபட்ட வடமொழியால் இறைவனைப் போற்றத் தொடங்கிய நாள் முதல் தமிழ்நாடு நலமிழந்து வருகின்றதெனக் கூறுதல் வேண்டும். கண்ணொளியிழந்த ஒருவன் அழகுடைய ஒருவன் ஒளியைக் கேட்டளவில் பிசாசெனக் கூறுவது போல் ஆரியமக்கள் தமிழ்மொழியை இழித்துக் கூறுகின்றனர். அன்னார் நூல்வழக்கன்றி எத்துறையிலும் தமிழை வழங்கி வரும்போது அம்முறையில் அம்மக்கள் தாம் யார் என்பதை எண்ணுகின்றாரில்லை. அதற்கு எங்கள் பெரியார் அகஸ்தியர் கையாண்டிருப்பதால் நாங்களும் வழங்குகின்றோமென்று நொண்டிச் சமாதானம் கூறுகின்றனர். அதுவும் பெரிதன்று. தமிழ் நாட்டிலே தமிழ்த்தாய் வயிற்றில் தங்கிப் பிறந்து தமிழ்ப்பாலுண்டு தமிழ் மொழியால் தாய்தந்தையர் மனத்தை மகிழச்செய்துதம் மக்கள் கூறும் தமிழ்த்தேனை உண்டு மகிழுறும் பெரும்பொருள் படைத்த சில தமிழ் மக்களும் தாய்மொழி நலம்பேணுது ஆரிய மொழி சிறப்பென மயக்குற்று வேதபாட

சாலைக்கெனப் பெரும் பொருளளித்து வருகின்றனர். அதனால் தாங்கள் நலஞ்செய்ததாக நினைந்து திருப்தி கொண்டாரெனினும், தமிழ் மொழியால் நலம் பெறுததும் ஆரிய மொழியால் நலம் பெற்றதும் எதுவென ஆராயுமிடத்து உண்மை விளங்கும். அழகா! பிரமன் முகத்தில் பிறந்தவர்களென்றும் அவர்களுக்கே வேதம் உரியதென்றும் பிற்பட்ட க்ஷத்திரிய வைசிய சூத்திர மக்கள் பிறதொழில் புரிய வேண்டுமென்றும் கூறுகின்றன. முகத்திலும் தோளிலும் தொடையிலும் காலிலும் பிறந்தார்களென்ற கட்டுரையை ஒரு சிறிதும் கொள்ளற்க. ஆரிய மக்கள் செய்த இந்தப் பாகுபாட்டினால்தான் நம் நாடு அலமந்து துன்புறுகின்றது. இமயமுதல் குமரி வரையுள்ள முப்பதுகோடிமக்கள் நிறைந்த பூமியில் மட்டுந்தான் இறைவன் நான்கு வகுப்பாகப் படைத்துவிட்டு மற்றும் விரிந்த நூற்று முப்பது கோடி மக்களுக்கு மேற்பட்ட பிறகண்டங்களில் பாகுபாடின்றிப் படைத்து விட்டனன் போலும்! அறிவால் நோக்குமிடத்து இது இழிந்த கற்பனையென விளங்கவில்லையா? ஆராய்ச்சிக்காரர்கள் முதலில் வளம் பெற்றநாடு எதுவென ஆராய்ந்து பார்த்துத் தமிழ்நாடே முதன்மையில் வளம் பெற்று அதன் துணையால் பிறநாடுகளும் வளம்பெற்றனவெனக் கூறுகின்றார்கள். ஆதியில் மக்கள் மலை முதலிய இடங்களில் வசித்துப் பேச்சின்றி அப்பால் மொழிகண்டு அறிவுபெற்று பின்னால் உழுது பயிரிட்டு வேளாண்மை செய்து வாழ்ந்தனர். பின்னர் அறிவுப் பெருக்கால் தெய்வம் ஒன்றுண்டெனத் தெளிந்து எவ்வுயிர்க்கும் இடரியற்றாது நலம்புரிதல் வேண்டுமென்ற இரக்கமுடையார்க்கு

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்ற மறைமொழிப்படி அந்தணரெனவும், மக்களுக்கும் பொருளுக்கும் குறைவு நேரா வண்ணம் காக்க முற்பட்டவர்க்கு அரசரெனவும், மக்களுக்குத் துணையாய்ப் பண்டமாற்றுத் தொழில் புரிந்தார்க்கு வணிகரெனவும், எல்லாமக்களும் உயிர்வாழ உணவுப்பொருளைக்கொடுக்க உழுது பயிரிட்டு வேளாண்மை செய்பவர்க்கு வேளாளரெனவும் மற்றும் உதவித் தொழில் புரிபவர்களுக்குத் தொழில் பேரால் வழங்கப்பெற்றும் பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற மொழிக்கிணங்கப் பேதமின்றி அன்பால் பிணைத்து இன்புற்று வாழ்ந்துவந்த நம் தமிழ்நாட்டை நான்கு சாதியாகப் பிரித்து ஏற்றத்தாழ்வு கூறி நாட்டையும் பாழாக்கியதுடனில்லாது பிறநாட்டிலிருந்து வரும் மக்களுக்கெல்லாம் அடிமைகளாக இருக்கும்படி தாங்கள் முன்னின்று நம்மக்களைச் சுய அறிவற்றவர்கள் என்றநிலையில் வைத்துவிட்டனர். அறிவுடையமக்கள் இதனை இன்னும் ஆராய்ந்துணராதிருப்பது வருந்தத்தக்கதாகும். சூத்திரன் என்ற சொல்லை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சம் துடிக்கின்றது. பார்ப்பனரல்லாத மக்களையெல்லாம் சூத்திரரென்றே முடிவு கட்டி விட்டார்கள். சாமியை நான் பாதுகாக்கின்றேன். சமயத்தை நான் பாதுகாக்கின்றேன் என்று ஓலமிட்டலறும் அறிவுடைய மக்கள், வைப்பாட்டி மக்கள், அடிமைப்பட்ட மக்கள், ஒழுக்கங்கெட்ட மக்கள், என்ற பட்டங்களை நீக்கிக்கொள்ள முன்வராமல் அலறுவதில் என்னபயன்? தமக்குக் கீழ்ப்பட்ட மக்கள் இருக்க வேண்டு மென்னும் பழக்க வாசனையால் இரக்கமென்னும் அன்பை இழந்துவிட்டபடியால் தங்களை ஒரு மக்கள் இழிவுபடுத்துவதை ஏற்றுக் கொள்கிறார்கள். அந்தோ, என்ன அறியாமை! அறிவுடைமை எங்கே? தாம் சிறை மூளி என்று கூறுகின்ற மகிழ்ச்சியினால் தம்மைச் சிலர் மூக்கறையர் என்று இழித்துக் கூறுவதைப் பொருட்படுத்தாது மயங்கித் திரிகின்றனர். தொழிலாற்ற உடல் வளையாத குழுவினர் வாழ்நாள்கழித்தற்குப்பிறமக்கள்

தொழிலாற்றித் தங்களுக்கு ஈவதே புண்ணியமெனக் கூறி வைத்தனர். வேதத்தைக் கேட்டால், பார்த்தால், சொன்னால், காதில் ஈயத்தைக் காச்சிவிடவும், கண்ணைக் குத்தவும், நாக்கையறுக்கவும் வேண்டுமென்று எழுதிவைத்த இரக்கமற்ற மக்கள் பிறர் பொருளைக் கவர்ந்துண்ணுவதற்கு மயக்க மொழி கூற வகையறியாதிருப்பரோ? தொழில்புரிவதும் பிறர்க்கிதம் புரிவதும் மன அமைதிபெற்றுஇன்புறத்தெய்வம்ஒன்றுண்டென்று உள்ளத்தால் வணங்குவதும் ஒவ்வொரு மக்களுக்கும் உரியதாகுமே யன்றி இன்னார்க்கு இத்தொழில் இம்முறை என்னும் வரை கிடையாது. மலையிலும் ஆற்றிலும் குளத்திலும் தடாகத்திலும் கிணற்றிலும் நிலத்திலும் வீழ்கின்ற மழை வானில் நின்று பொதுவாகப் பெய்வதல்லால் வானமும் பாகுபாடுகொண்டு இன்னார்க்கு இந்த நீர் எனப் பெய்கின்றதா? நிலமும் உயர்ந்தவர்களுக்கு இந்த இடம், தாழ்ந்தவர்களுக்கு இந்த இடம் என்று பிரித்துக் கொடுக்கின்றதா? மக்கள் செய்த தீமையல்லாது பூமியும், வானமும், இறைவனும் ஒருபோதும் ஏற்றத் தாழ்வு படுத்தியதில்லை. ஆதலால் பொதுப்பாதையில் நடந்தால் பாவம்; தடாகத்தில் முழுகினல் பாவம்; கிணற்றில் தண்ணீர் எடுத்தால் பாவம் என்று பயந்து முழுகாமலும்நீரருந்தாமலும், நடக்காமலும் அப்படியே அசைவற்று இருந்து மடிந்து போக வேண்டாம். பயத்தை ஒழி; எல்லாமக்களைப் போல நீயும் மக்கள்வகுப்பினனென்றுநினை; எல்லாரிடத்தும் அறிவுண்டு; இறைவன் எல்லாமக்களுக்கும் பொதுவானவன் என்று கொள். எவன் இறைவன் தனக்குத்தான் உரியவனென்றும், மற்றவனுக்குரியவனல்லவென்றும், மற்றவன் இறைவனை இந்த அளவில்தான் வழிபட வேண்டுமென்றும் கூறுகின்றானே அவனை இறைவன் வெறுக்கின்றான் என்று உண்மையில் நம்பு. அழகா! நேரமாகி விட்டது. பயத்தை ஒழித்து சுய உணர்வுபெற்று எதனையும் ஆராய்ந்து செய். ஆனல் உங்கள் மக்களை ஊன் உணவு கொள்ளாதிருக்கவும், அறிவை மயக்கும் கள் முதலிய குடி வழக்கத்தை நீக்கவும், உடம்பையும், உடையையும் தூய்மையாக வைக்கவும், மக்களை நல்வழியில் பழக்கிக் கல்வியில் தீவிர முன்னேற்றம் பெறவும் நீ தொண்டாற்ற வேண்டும். அங்ஙனம் உங்கள் மக்கள் முன் வந்தால் சிறப்படைவீர்கள். ஆங்கில அரசாங்கமும் அன்பே உருவாய்க்கொண்ட மக்களில் சிலரும் துணைபுரிந்துவருவார்கள்" என்றான். அழகனும் அவ்வண்ணமே'என்னால் கூடிய தொண்டாற்றுகின்றேன். எனக்கும் சிறிது நில மிருக்கிறது; கல்வியிலும் சிறிது பழக்கமுண்டென்பதை அறிந்திருப்பீர்கள். பிறர்க்குத் தீமை பயக்காத வகையில் பொய்யும் ஊன் உணவும் கொண்ட அளவில் தங்கள் கணக்குப்படி காலயரைக்கால் குற்றமுள்ளவன்தான். மற்ற மூன்றுவகையிலும் சார்ந்தவனல்ல; இவ்விருகுற்றத்தையும் நீக்கி விடுகிறேன்; இன்றுதான் நானும் ஒரு மக்கள் வகுப்பினனாக ஆனேன். உங்களை அம்முருகனென்றே வாழ்த்தாது இருக்க மனம் ஒருப்படவில்லை' யென்றான். அழகனைப்பார்த்துமுருகன்" அப்பா அவ்வாழ்த்து நமக்கு எற்றுக்கு? வாழ்விப்பவனுக்கே வாழ்த்து உரியதல்லாது நமக்கு வேண்டுவதன்று. உண்மையில் அன்புடன் நான்கூறியவற்றை உள்ளத்தில் பதித்தல் வேண்டும். அதுவே எனக்குத் திருப்தி. அழகா என்னிலும் வயது முதிர்ந்த உன்னை 'நீ' என்று கூறுவது கூடாதெனினும் அறியாமையால் தாழ்ந்த மகன் என்று இதுகாறும் பயத்தை அடைந்திருந்தமையாலென்று நினை. மறுமுறை காணும்போது 'ஐயா வாருங்கள்' எனக்கூறும் நிலையில் நீயும் உனது குழுவினரும் முன்னேற்றம் பெற்றிருக்கவேண்டும்" என்று சொல்லி இருவரும் எழுந்தார்கள்.

வேலை கிடையாத் திண்டாட்டம்.

ஒரு பண்டிதன்.

சாத்தி ரங்கள் சரிதங்கள் மன்னவர்
கோத்தி ரங்கள் குலங்கள் இலக்கண
சூத்தி ரங்கள் தொகுத்து விரித்துநான்
ஆத்தி ரத்தொடு கற்றதள வுண்டோ? (1)

மண்ணி லுள்ளவும் வானகத் துள்ளவும்
எண்ணி எண்ணி எழுதிய நூலெலாம்
நுண்ணி தாக நுழைந்து தெரிந்தவை
கண்ணி யம்பெறு காலமெக் காலமோ? (2)

வீடு விற்றும் விளைநிலம் விற்றும்மா
டாடு விற்றும் அணிமணி தாம்விற்றும்
பாடு பட்டுப் படித்த படிப்பெலாம்
வாடு மென்பசி மாற்றிய தில்லையே (3)

பட்டம் பெற்றனன் பண்டிதர் தம்மிடம்
மட்டி லாத மதிப்புரை வாங்கினேன்
துட்டி லாது சுழன்று கறங்குமிக்
கட்டம் நீங்கு வழியினும் கண்டிலேன். (4)

ஆயு மேலதி காரிகள் வாழுமக்
கோயில் தோறுங்கை கூப்பித் தொழுதனன்
ஓயும் நெஞ்சுக் குறுதிசொல் வாரில்லை
ஏயும் என்விதிக் கென்செய்கு வேனையோ (5)

நெஞ்சின் நூலை நினைப்பதை விட்டினி
பஞ்சின் நூலிற் பழகத் துணிகுவன்
விஞ்சு செல்வமும் மேன்மையுந் தங்குமே
நெஞ்சு வாழ்க்கையும் கேடு மொழியுமே. (6)

புருஷன் உரிமை.

காட்சி க.



நண்பர்:—சமீபத்தில் சஷ்டியப்தபூர்த்தி வருகிறதாமே? மனைவியில்லாமல் நன்றாக இருக்குமா?

மாப்பிள்ளை:—ஆமா. வயதாய்விட்டதே? எதற்குக் கல்யாணம்?

நண்பர்:—நன்றாயிருக்கிறது. பணக்காரர். மனைவியில்லாமல் பொம்மையை வைத்தா செய்கிறது? இறந்துபோனால் பெரிய குடும்பத்தில் ஒரு மனைவி வேண்டாமோ?

காட்சி உ.



வாயில் பல்லா ? பல்லில் வாயா ?

காட்சி ௫.

காதுத் துவாரத்தில் கை நுழையும் போலிருக்கிறதே!

காட்சி ச.

அடே அப்பா! எவ்வளவு பெரிய உடல்!

காட்சி ரு.

தலை மயிர் நீளமில்லை.

காட்சி ௯.



மூக்கு முழ நீளமிருக்கிறதே !

காட்சி எ.



இதுதான் சரி. பேஷான பெண்.

காட்சி அ.

கல்யாணம்.

காட்சி கூ.

புருஷன் இறந்துகிடக்கிறார்; பெண்ணின் நகைகளையும் சேலையையும் பற்றிப்பிடுங்குகின்றனர். பெண் அவைகளை விடமாட்டேனென்கிறாள்.

காட்சி க௦.



சாஸ்திரி:—விதவையைக் கட்டுப்படுத்தி வைக்காவிட்டால் உலகம் முழுகிப் போகும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

சீர்திருத்தக்காரன்:—இந்த அநியாயமான கட்டுப்பாட்டை உடைத்து இப் பெண்ணை விடுதலை செய்தே தீர்வேன்.

வைதீகன்:—மதம் போச்சு; ஜாதி போச்சு; தருமம் போச்சு.

தண்டனை.

ரா. கி. எழுதியது.

அதிர்ஷ்டம் வரும்போது யாரிடமும் சொல்லிக்கொண்டு வருவதில்லை. வெள்ளைக்காரர் கறுப்பு மனிதரைக்காப்பாற்ற அவர்களிருக்குமிடம் தேடிவருவது போல், அதிர்ஷ்டமும் ஒருவனைத்தானே தேடிக் கொண்டு வருகிறது. ஒருநாள் சென்னைக் கடற்கரைச்சாலையிலே நான் சென்று கொண்டிருக்கையில் திடீரென்று அதிர்ஷ்டத்தைச் சந்தித்தேன்.

'அடடா! உன்னை இரண்டு நிமிஷத்துக்கு முன்புதான் நினைத்தேன்' என்றது, என் பழைய நண்பர் இராமநாதஞ்செட்டியார் வடிவில் வந்த அதிர்ஷ்டம்.

'அப்படியா? நேற்றிரவுதான் நான் உன்னைப்பற்றிக்கனவு கண்டேன்' என்று பதிலுக்குப்பதில் நானும் ஒரு பொய் சொன்னேன்.

'நல்லது. ஒரு யோசனை. அதற்கு என்ன சொல்கிறாய்?'

'முதலில் யோசனை வெளியில் வரட்டும். அப்புறம் சொல்கிறேன்.'

'அதெல்லாம் முடியாது. நீ சொல்வதற்கு ஒன்றுமேயில்லை. டிக்கட் கூட வாங்கியாகிவிட்டது; நீ வரத்தான் வேண்டும்.'

'எங்கேயென்று சொல்லித்தொலை.'

'வட இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்ய.'

இப்படியாக, அதிர்ஷ்டம் என்னைப்பிடரியைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு போய் பம்பாய் மெயிலில் இரண்டாம் வகுப்பு வண்டியில் உட்காரவைத்தது.

* * * *

வண்டியில் என் நண்பர் கேட்ட ஒரு கேள்வி என்னைத்திடுக்கிடச்செய்து விட்டது. நாற்பது மைல் வேகத்தில் போய்க் கொண்டிருந்தவண்டி திடீரென்று குடை கவிழ்ந்தாற்கூட அவ்வளவு திடுக்கிட்டிருக்க மாட்டேன்.

'நீ ஹிந்தி கற்றுக்கொண்டாயாமே, உண்மைதானா?' என்றார் செட்டியார்.

'குற்றவாளி எஜமானே! மன்னிக்க வேண்டும்.' என்றேன்.

'சபாஷ்! எத்தனை காலம் படித்தாய்?'

'மூன்றுமாத காலம்.'

'சுமார் எத்தனை வார்த்தைகள் தெரியும்?'

'மூன்று வார்த்தைகள்.'

இப்போது திடுக்கிட்டார் என் நண்பர். 'நிஜமாகவா? பரிகாசம் செய்கிறாயா?' என்று கேட்டார்.

'சத்தியமாய்ச் சொல்கிறேன்.'

நண்பரின் முகத்தில் ஈயாடவில்லை. அதிர்ஷ்டம் என்னைத் தேடிவந்த காரணமும் இப்போதுதான் எனக்குப் புலப்பட்டது. எனக்கு ஹிந்தி பாஷை தெரியுமாதலால் என்னை உடன் அழைத்துக்கொண்டு போனால் வட இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தல் இலகுவாயிருக்குமென்று நண்பர் நினைத்தார் போலும்! உண்மையென்னவென்றால், நான் மிகவும் சிரமப்பட்டு ஹிந்தி படித்தது என்னவோ வாஸ்தவந்தான். புத்தகத்தைப் பார்த்துப் படித்துச் சிறிது அர்த்தமும் செய்துகொள்வேன். ஆனால் ஹிந்தி பேசுவதென்றால், ஒரு வார்த்தைகூடத் தொண்டையிலிருந்து வெளியில் வராது. வடக்கத்தியார் பேசுவ

தைத் தெரிந்துகொள்ளுவதும் இயலாத காரியம். பேசும் வார்த்தை இன்னதென்று விளங்கினலல்லவா பொருள் செய்து கொள்ளலாம்.

ஏமாற்றம் மிகுதியும் அடைந்த செட்டியார் ‘சரி, மூன்று வார்த்தை தெரியுமென்றுயே? என்னென்ன சொல், பார்க்கலாம்’ என்ருர்.

‘அச்சா, பஹுத் அச்சா, நை ஜானு’ (நல்லது, நிரம்ப நல்லது, தெரியாது.)

‘அந்த மூன்றுவார்த்தை எனக்கும் ஜானு’

‘அப்படியானல் பஹுத் அச்சா. நாமிருவரும் சரிநிகர் சமானமாயிருக்கிருேம்.’

*　*　*

வண்டி விக்டோரியா டெர்மினஸ் என்னும் பம்பாயின் பெரிய ரயில் நிலயத்தை நெருங்கியது. பம்பாயில் வண்டிக்காரர்களின் தொல்லையைக் குறித்து என் நண்பருக்குப் பலர் சொல்லியிருந்தார்களாம். எனக்குச் சென்னையிலேயே இது குறித்த அநுபவம் அதிகமுண்டு. நான்கு தடவை ரயில் நிலயத்திலிருந்து என் வீட்டுக்கு வாடகை மோட்டாரில் (டாக்ஸி) போயிருக்கிறேன். முதல் மூன்று தடவையும் மீட்டரைப் பார்த்துப் பணங்கொடுத்தேன். ஒரு முறை மூன்றரை ரூபாய்; இன்னொரு முறை நாலேமுக்கால் ரூபாய்; மற்றொரு தடவை ஐந்தேகால் ரூபாய். மீட்டர் தவருயிருக்கமுடியாதாதலின் என் வீடுதான் நாளுக்குநாள் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நகர்ந்து போய்க்கொண்டிருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். ஆகவே, அடுத்த தடவை இரண்டு ரூபாய் கண்டிப்புக் கட்டணமாகப் பேசிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தேன். சென்னையிலேயே இந்த கதியென்ருல் பாஷை தெரியாத பம்பாயில் தொல்லை அதிகமாகத்தான் இருக்குமென்றும், ஆகையினல் முதலிலேயே சத்தம் பேசிக்கொண்டே போகவேண்டுமென்றும் நாங்கள் கலந்து பேசித் தீர்மானித்திருந்தோம்.

*　*　*

வண்டியிலிருந்து கீழே இறங்கியதும் அங்கே வரிசையாக நின்று கொண்டிருந்த வாடகை மோட்டார்களின்மீது கண்ணேட்டம் செலுத்தினேம். அவற்றில் ஒரு வண்டிக்கு வந்ததும் திடீரென்று எனக்கு அளவிறந்த குதூகலம் உண்டாயிற்று. ஏனெனில் அந்த வண்டியிலிருந்த மோட்டார் ஓட்டியின் முகம் தமிழன் முகமாகக்காணப்பட்டது. உடை முதலியனவெல்லாம் வடக்கத்தியானுடையவைதான். ஆனல் முகம் மட்டும் அசல் தமிழ் முகம். தமிழ் நாட்டில் சர்வ சாதாரணமாய் அந்த முகத்தைப்பார்க்கலாம். சர்க்கார் காரியாலயத்திலும், நகரத்துத்தொழிற்சாலையிலும், மளிகைக்கடைகளிலும், கிராமத்து வயல்களிலும், வீதியிலும் சாலையிலும் அத்தகைய முகத்தை நான் எவ்வளவோ முறை பார்த்திருக்கிறேன். எனவே, ஒருகணமும் தயங்காமல் அந்த மோட்டார் ஓட்டியைப் பார்த்து சமிக்கை செய்தேன். மோட்டார் அருகில் வந்தது. சாமான்களை ஏற்றினேம்.

நண்பர் ஒருகாலை மோட்டார் படியில் எடுத்துவைத்துக்கொண்டே ‘தாஜ்மகால் ஹோட்டலுக்குப்போகவேண்டும்’ என்ருர்.

‘அச்சா’ என்று பதில் வந்தது.

என்னைத் தூக்கிவாரிப் போட்டது!

நண்பரின் தோளைப்பிடித்து இழுத்துக்கொண்டே ‘உனக்குத் தமிழ் தெரியாதா?’ என்று கேட்டேன்.

‘அச்சா!’

எத்தகைய ஏமாற்றம்!என்னல் நம்பவே முடியவில்லை. கண்ணைத்துடைத்துக் கொண்டு பார்த்தேன். இவன் தமிழன் இல்லையென்று யார்தான் எதிர் பார்த்திருக்கமுடியும்?

கட்டணம் பேசிக்கொண்டுதான் போக வேண்டு மென்னும் எங்கள் அசல் தீர்மானம் இப்பொழுது ஞாபகத்திற்கு வந்தது. இதற்குப் பிறகு நானும் செட்டியாரும் தமிழும் ஆங்கிலமுமாகக்கலந்து பேசினோம். அந்த மணிப்பிரவாள நடை படிப்பதற்குத் தொல்லையாயிருக்கு மென்று கருதி இங்குத் தமிழிலேயே எல்லாவற்றையும் எழுதி விடுகிறேன்.

நான்:—தாஸ்மஹால் ஹோட்டலுக்குப் போகவேண்டும். கட்டணம் எவ்வளவு?

வண்டிக்காரன்:—'அச்சா!'

செட்டியார்:—'பணம் எவ்வளவு கேட்கிறாய்?'

வண்டி:—'பஹூத் அச்சா!'

நான்:—'என்ன சத்தம்?'

வண்டி:—'தாஜ்மகால் ஹோட்டல்?'

செட்டியார்:—அட இழவே! சத்தம் என்ன கேட்கிறாய்? சொல்லித்தொலை!'

வண்டி:—'நை ஜானு'

சுற்று முற்றும் பார்த்தேன். இதற்குள் மற்ற வண்டிகளெல்லாம் போய் விட்டன. எனக்கு உடம்பு வியர்த்தது. கை கால் ஜில்லிட்டது.

* * *

'அடே! இங்கே பார். இரண்டு ரூபாய் தருகிறோம். சரிதானா?' என்றேன்.

'நை ஜானு, சாகிப்!'

'சாகிபாவது, நாசமாய்ப்போகிறதாவது? உனக்கு இங்கிலீஷ் தமிழ் ஒன்றும் தெரியாதா?'

'அச்சா!'

'என்ன இழவு அச்சா?'

'பஹூத் அச்சா!'

எங்களைச்சுற்றிலும் ஜனங்கள் சேர்ந்து கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் பல்லைக் காட்டி இளித்தார்கள். கன்னங்கரேலென்று காவி படிந்திருந்த அவர்களுடைய பற்கள் பார்ப்பதற்குப்பயங்கரமாயிருந்தன. எனக்கு எரிச்சல் அதிகமாயிற்று.

'அப்பனே – நாங்கள் – தாஜ்மகால் – ஹோட்டலுக்குப் போக – வேண்டும். சத்தம் – என்ன கேட்கிறாய்?' என்று நிறுத்தி நிதானமாய்ச்சொன்னேன்.

'அச்சா!' என்று வண்டிக்காரன் ஊத்த சத்தமிட்டான்.

'என்ன அச்சா?'

'தாஜ மகால் ஹோட்டல் அச்சா' என்று அவன் கத்தினான். சுற்றிலும் கூடியிருந்த சிறுவர்கள் 'கிக்கிளு கிளு' வென்று சிரித்தார்கள்.

* * *

எனக்குச்சொல்லமுடியாத கோபம் வந்தது. நண்பரை வண்டியினுள்ளே தள்ளி விட்டு நானும் ஏறிக்கொண்டேன். வண்டிக் கதவை 'தடா'லென்று சாத்தினேன்.

'எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார்!' என்றேன்.

'நல்லவேளை! அவராவது ஒருவர் இருக்கிறாரே!' என்றார் செட்டியார்.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் தாஜ மகால் ஹோட்டல் வாசலில் வண்டி நின்றது. கதவைத்திறந்துகொண்டு கீழே இறங்கினோம். பணப்பையைக் கையிலெடுத்துக் கொண்டு செட்டியார் 'எத்தனை ரூபாய்?' என்று கேட்டார்.

'ரூபயா! தஸ் ரூபயா!' என்றான் வண்டிக்காரன்.

'எவ்வளவு? ? ? ?' என்று நான் போட்ட சத்தத்தைக்கேட்டு ஹோட்டலில் இருந்தவர்கள் எல்லாம் எட்டிப்பார்த்தார்கள்.

ஆனால் வண்டிக்காரன் சாவதானமாக 'அச்சா! தஸ் ருபயா பஸ்' என்றான்.

எனக்கு வந்த கோபத்தில் கொஞ்சம் ஹிந்தியும் ஞாபகம் வந்தது. 'பத்து ரூபாய் போதும்' என்று அவன் கூறுகிறானென அறிந்து கொண்டேன்.

'அப்பனே! நீ வழிப்பறிக்கொள்ளைக்காரனுயிருக்கவேண்டும். மோட்டார் ஓட்டியாக வந்தது சுத்தத்தப்பு: ஐந்து நிமிஷ சவாரியில்லை. இதற்குப்பத்து ரூபாய் கேட்கிறுயே? இரண்டு ரூபாய்க்குமேல் ஒரு தம்பிடி தரமாட்டேன்!' என்று நான் கண்டிப்பாகச் சொன்னேன்.

'நை ஜாணு' என்றுன் வண்டிக்காரன்.

* * *

வண்டிக்காரனுக்குக் கோபம் வந்துகொண்டிருந்தது. ஆனுல் எனக்கோ முன்னமே கோபம் வந்துவிட்டது. 'இந்தப் பயல்களுக்கு இடமே கொடுக்கக்கூடாது' என்றுர் செட்டியார்.

'கூடவே கூடாது' என்றேன்.

'எனக்கு அப்பொழுதே சொன்னுர்கள். இப்படித்தான் இவர்கள் வேறு பாஷை தெரியாததுபோல் நடிப்பார்களாம். அவர்களுடைய பாஷை தெரிந்தால்தான் அவர்களுடன் விவகாரம் செய்ய முடியும். அந்த இழவுக்குத்தான் உம்மை அழைத்து வந்தேன். நீர் ஏமாற்றிவிட்டீர்.'

நண்பர் வார்த்தைகள் புண்ணில் கோலிடுவதுபோலிருந்தன. 'உன்மீது தப்பில்லை. இந்த உலகமே நன்றிகெட்டது' என்றேன்.

'கோபித்துககொள்ளாதே, அப்பா! நாம் வேறு இங்கே சண்டைபோட வேண்டாம் இவனுடன் வாதிடுவதில் பயனில்லை என்பதற்காகச் சொல்லுகிறேன். எப்படியும் அவன்தான் ஜெயிப்பான்.'

இப்பொழுது விஷயம் என்னுடைய கௌரவத்தைப் பொறுத்ததாகிவிட்டது. 'அந்த ஜம்பமெல்லாம் என்னிடம் பலியாது' என்றேன்.

'அச்சா, தஸ் ருபயா' என்று சொல்லி மோட்டார் ஓட்டி கையை நீட்டினுன்.

இரண்டு ரூபாய் எடுத்துக் கொடுக்கப் போனேன். அவனுடைய கண்களில் தீப்பொறி பறந்தது. கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு ஹிந்துஸ்தானியில் ஏதேதோ பேசினுன். நண்பர் காதைப் பொத்திக்கொண்டார். எங்களைச் சுற்றி மீண்டும் கூட்டம் கூட ஆரம்பித்தது. நான் அவனைவிடச் சத்தம்போட்டுக் கத்தினேன்.

'அடே! வாயை மூடு. அங்கேயே எவ்வளவு சத்தமென்று கேட்டேன். நீ சொல்லவில்லை.'

'நை ஜாணு'

சற்று நேரம் மௌனம்.

'என்ன சொல்கிறுய்?'

'அச்சா'

'உனக்கு அச்சாவைத் தவிர வேறென்றும் தெரியாதா?'

'பஹுத் அச்சா!'

* * *

இதற்குள் உடுப்பும் குல்லாவும் தரித்த ஒருமனிதன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு எங்களிடம் வந்தான். அவன் ஹோட்டல் வேலைக்காரன் என்று நினைத்தேன். அவனுக்குக் கொஞ்சம் ஆங்கிலம் தெரிந்தது. அதிகமில்லை. கொஞ்சந்தான். என்ன சமாசாரமென்று என்னைக்கேட்டான்.

'ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இங்கே எங்களைக் கொண்டுவந்ததற்கு இவன் பத்து ரூபாய் கேட்கிறுன். இது வழிப்பறிக் கொள்ளை என்று சொல்லுகிறேன். இரண்டு ரூபாய்க்குமேல் நான் தரப்போவதில்லை.'

மத்தியஸ்தனும் வண்டிக்காரனும் சில நிமிஷ நேரம் ஏதோ பேசிக்கொண்டார்கள். பின்னர், மத்தியஸ்தன் என்னைப்பார்த்து 'நீங்கள் சம்மதித்தீர்களாமே!' என்றுன்.

'நாங்கள் சம்மதிக்கவில்லை. பொய்!' என்றேன்.

'நிஜம்'

'பொய்'

'நிஜம்'

'எது நிஜம்?'

நான் வண்டிக்காரன் பக்கம் திரும்பி 'அடே, போக்கிரி! நான் சம்மதிக்கவில்லை. நீ பொய் சொல்கிறாய். நான் சத்தம் எவ்வள வென்று கேட்டேன். நீ சொல்ல வில்லை.' என்று கூச்சல் போட்டேன்.

வண்டிக்காரன் தலையைச் சொறிந்தான். ஒன்றும் புரியாமல் விழிப்பவனைப்போல் காணப்பட்டான். ஒரு நிமிஷம் பொறுத்து 'தஸ் ருபயா, அச்சா' என்று கையை நீட்டினான்.

'போலீஸ் காரனைக் கூப்பிடு' என்றேன். கடைசியாகப் பிரயோகிப்பதற்கென்று இந்தப் பாசுபதாஸ்திரத்தை வைத்திருந்தேன்.

'நான்தான் போலீஸ்காரன். நீர் என்னை அவமதிக்கிறீர்' என்றான் மத்தியஸ்தம் செய்யவந்தவன். நான் திடுக்கிட்டேன்.

'அப்படியானால் அவன் என்ன சொல்கிறானென்று கேள்' என்றேன்.

போலீஸ்காரன் கேட்டான். ஆனால் அவன் என்ன கேட்டானோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இதற்கிடையில் கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் பெருகி வந்தது. பல்லிளிப்பும், சிரிப்பும் அதிகமாயின.

* * *

'இங்கே பார். நாள் முழுதும் நாங்கள் இப்படியே நின்றுகொண்டிருக்க முடியாது. ஐந்து ரூபாய் வாங்கிக்கொள்' என்றேன்.

'நை ஜானா?'

'எட்டு ரூபாய்தான் வாங்கிக் கொண்டு தொலைவாயா?'

மௌனம். 'அவனிடம் சொல்லித்தொலை' என்று மத்தியஸ்தனிடம்கூறினேன். அவன் சொன்னான்.

'அச்சா, ஆட்ருபயா' என்று மோட்டார் ஓட்டி கையை நீட்டினான். வேறு வழியில்லை. கொடுத்துத் தொலைத்தேன்.

வண்டிக்காரன் போனதும் போலீஸ்காரன் கையை நீட்டினான். சரி! ஒருகை பார்த்துத்தான் விடுகிறதென்று நான் தீர்மானித்தேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக என் அவசரக்கார நண்பர் இதற்கிடங்கொடுக்க வில்லை. இரண்டு ரூபாயைத் தூக்கி அவன் கையில் கொடுத்துவிட்டார். நான் யுத்தம் தொடங்குவதற்கு முன் பகைவன் மறைந்து போனான்.

* * *

அன்று மாலை நான் தனியாக வெளிப் புறப்பட்டேன். என் நண்பர் மிகவும் களைப்பாயிருக்கிறதென்று கூறி வர மறுத்துவிட்டார். எனக்குத் தாஜ்மகால் ஹோட்டல் சாப்பாடு பிடிக்கவேயில்லை. மதராஸ் ஹோட்டல்கள் பம்பாயில் அதிக முண்டென்று கேள்விப்பட்டிருந்தேன். அவற்றில் ஒன்றைத் தேடிச் சென்றேன். அங்கு யாரைக் கண்டேனென்று நினைக்கிறீர்கள்?

ஆம்! நீங்கள் நினைப்பது சரிதான். ஆனால் நீங்கள் சற்றும் எதிர்பார்க்க முடியாத விஷயம் என்னவென்றால் அந்த மோட்டார் ஓட்டி அங்கே சுத்தமான செந்தமிழ் பேசிக்கொண்டிருந்தான்! திருநெல்வேலித் தமிழ்; தூய பண்டித நடை!

நான் அளவற்ற மகிழ்ச்சியும் கர்வமும் கொண்டேன். ஆம்; மகிழ்ச்சியும் கர்வமும். வேகமாக அந்த மனிதன் அருகில் சென்று கையைப் பிடித்துக்கொண்டேன். 'தமிழன் ஒருவன் இவ்வளவு சாமர்த்தியமுடையவனாயிருப்பது குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; கர்வமடைகிறேன்' என்றேன்.

அவன் கொஞ்சம் திகைத்துத்தான் போனான். இருப்பினும் சமாளித்துக் கொண்டு 'நீர் இங்கே வரக்கூடுமென்று தெரிந்தால் நான் வந்திருக்கமாட்டேன் இனிமேல் ஒளிப்பதில் பயனில்லை. தயவு செய்து உட்காருங்கள் என்று சொல்லி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டான்.

'இந்த வடக்கத்தியார்களையெல்லாம் இப்படித்தான் கொள்ளையடிக்க வேண்டும். நல்லவேலை செய்கிறீர் நீர்' என்றேன்.

'தாங்கள் நினைப்பது தவறு. நான் வடக்கத்தியார் அருகிலேயே போவதில்லை. தமிழர்களைத்தான் கொள்ளையடிப்பது வழக்கம்.'

'இந்த பதில் எனக்குப் பெரும் ஏமாற்றம் அளித்ததென்று கூறவேண்டியதில்லையல்லவா?

'இவ்வளவு தேசபக்தி யில்லாத காரியம் தாங்கள் செய்வதற்குக் காரணம் என்னவோ?' என்று கேட்டேன்.

'ஆதியோடந்தமாகச்சொல்கிறேன் கேளுங்கள். ரயில்வே ஸ்டேஷனிலேயே தாங்கள் என்னைத்தமிழன் என்று கண்டுபிடித்துவிட்டீர்கள். அது உண்மையே. நான் பச்சைத்தமிழன்; அதிலும் தமிழ்ப் பண்டிதன். சங்கப்பரீட்சைகளில் ஒன்று விடாமல் தேறியவன். ஆங்கிலமும் அதிகம் படித்திருக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக பி. ஏ., எம். ஏ., என்னும் பட்டங்கள் பெறவில்லை. ஆதலின் தமிழ்நாட்டில் எங்கும் முப்பது ரூபாய் சம்பளத்துக்கு மேல் கிடைக்கவில்லை. இங்கே மோட்டார் ஓட்டுந் தொழிலில் எனக்கு என்ன வருவாய் கிடைக்கின்றது, தெரியுமா?'

'தாங்களே சொல்லிவிடுங்கள்.'

நல்லது. செலவுகள் எல்லாம் போக மாதம் ௪௫௦ ரூபாய்.

தமிழர்கள் என் தமிழை மாதம் ௪௦, ரூபாய்க்குமேல் மதிக்கவில்லை; எனவே தமிழை மறந்து தமிழர்களைத்தன்டிப்பதென்று தீர்மானித்தேன். அதற்காகத்தான் மோட்டார் ஓட்டுந்தொழில் கற்றுக்கொண்டு இந்நகரத்துக்கு வந்து சேர்ந்தேன். இன்று காலை உங்களிடம் தமிழ்பேசியிருந்தால் மூன்று ரூபாய்க்கு மேல் கிடைத்திராது. தமிழ் தெரியாதென்று நடித்தபடியால்தான் எட்டு ரூபாய் கிடைத்தது.'

என் கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகிற்று. எழுந்து பண்டிதரை மார்புறத் தழுவிக்கொண்டேன். அரைமணி நேரம் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தேன். கடைசியில் போக எழுந்தபோது ஹோட்டல்காரன்ஒன்றரை ரூபாய்க்குப் பட்டியல் கொடுத்தான். என்னைத்தடுத்துப்பண்டிதர் தாமே பணங்கொடுத்தார்.

'பார்த்தீர்களா? தமிழ் பேசியதனால் வந்த விபத்தை? முக்கால் ரூபாய் எனக்கு நஷ்டம்!' என்று சொல்லிச் சிரித்துவிட்டு, நான் பதில் கூறுவதற்குள் அவர் மறைந்து போனார்.

அச்சேருத பாரதி பாடல்.

தற்காலம் பாரத மக்களின் மூளையைச் செல்லரித்து வரும் அடிமைக் கல்வியைப் பற்றி.

நெல்லை யூர்சென்றவ் வூணர் கலைத்திரள்
நேரு மாறெனை எந்தை பணித்தனன்.
புல்லை உண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும் எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரி யர்க்கிங் கருவருப் பாவதை

(2) நரியு யிர்ச்சிறு சேவகர் தாதர்கள்
நாயெ னத்திரி யொற்றர் உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடி யர், பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருதும் இவ்வகை மாக்கள் பயின்றிடும்
கலைப யில்கென என்னை விடுத்தனன்.
அருமை மிக்க............பி ரிந்துமிவ்
அற்பர் கல்வியில் நெஞ்சு பொருந்துமோ?

(3) கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வார், பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்.
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்குங் கவிபுளம் காண்கிலார்.
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவர்
வாழும் நாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்
துணியும் ஆயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லு வார்எட்டு ணைப்பயன் கண்டிலார்.

(4) கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையு மீனையும்
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில்இ லக்கணங் கண்டதும்
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்

(5) சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை கண்டதும்
பாரில் நல்லிசைப் பாண்டியர் சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்

பேர் அருட்சுடர் வாள்கொண் டசோகனார்
பிழை படாது புவித்தலங் காத்ததும்
வீரர் வாழ்ந்ததும் மிலேச்சர்தம் தீயகோள்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்

(6) அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்
முன்னம் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்கும்இந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற் றெங்ங னுணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ள மெரிவதே.

(7) சூதி லாத வுளத்தினன் எந்தைதான்
சூழ்ந்தெ னக்கு நலஞ்செய நாடியே
ஏதி லர்தரும் கல்விப் படுகுழி
ஏறி யுய்தற் கரிய கொடும்பவம்
தீதி யன்ற மயக்கமும் ஐயமும்
செய்கை யாவினு மேஅசி ரத்தையும்
வாதும் பொய்மையும் என்ற விலங்கினம்
வாழும் வெங்குகைக் கென்னை வழங்கினன்.

(8) ஐயர் என்றுந் துரையென்றும் மற்றெனக்கு
ஆங்கி லக்கலை யென்றொன் றுணர்த்திய
பொய்ய ருக்கிது கூறுவன்! கேட்பிரேல்
பொழுதெ லாம்உங்கள் பாடத்தில் போக்கிநான்
மெய்அ யர்ந்து விழிகுழி யெய்திட
வீறி ழந்தென துள்ளம்நோய் தாங்கிட
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கிஎன்
அறிவு வாரித் துரும்பென் றலைவதால்

(9) செலவு தந்தைக்கோர் ஆயிரஞ் சென்றது!
தீதெ னக்குப்பல் ஆயிரஞ் சேர்ந்தன!
நலமொர் எட்டுணை யுங்கண்டி லேன்இதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்.
சிலமுன் செய்தவ நல்வினைப் பயனாலும்
தேவி பாரதத் தன்னை யருளாலும்
அலைவு றுத்தும்நும் பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்தி டாதொரு வாறுபி ழைத்ததே.

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

இராமாயணத்தைப்பற்றிய சில குறிப்புக்கள்.

திருவாளர் ஜ. கிருஷ்ணமூர்த்தி.

இராமாயணம் எனில் இராமருடைய சரிதை எனப் பொருள்படும். பலர் இராமருடைய சரிதையைப் பல பாஷைகளில் பல விதமாக எழுதியிருக்கின்றனர். இவற்றுள் வால்மீகி என்னும் மகரிஷி எழுதிய இராமாயணமே பிரசித்திபெற்றது. இதனைப் பின்பற்றியே தமிழில் கம்பரால் கம்பராமாயணமும், ஹிந்தீவிருஷ பாஷையில் மகாத்மா துளஸிதாஸரால் ராமசரிதமானஸமும், வங்காளி மொழியில் கவி கிருத்திவாஸரால் கிருத்திவாஸீ ராமாயணமும், மாராத்தியில் கவி மோரோபந்தால் மோரோபந்த ராமாயணமும், இன்னும் மற்ற தேசிய பாஷைகளிலும் பல கவிகளாலும் இராமாயணம் எழுதப்பட்டிருக்கின்றது. வங்காளி கிருத்திவாஸாமாயணத்திலும் தமிழ் கம்பராமாயணத்திலும் மூல வால்மீகி ராமாயணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சில வித்தியாசங்கள் காணப்படினும் பொதுவாகக் கூறுமிடத்து முக்கிய கதை பாகம் மேற்கூறிய எல்லா இராமாயணங்களிலும் ஒன்றாகவே காணப்படுகிறது.

இராமாயணத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படும் மற்றப் புத்தகங்கள்.

பத்மபுராணத்தின் பாதாள கண்டத்தின் பல அத்யாயங்களில் ராமாயணக்கதை காணப்படுகிறது. இதில் லவகுசனைப்பற்றிய யுத்த விவரமும் காணப்படுகிறது. இது மூல இராமாயணத்தில் காணப்படவில்லை. பாகவத புராணத்தின் கூ—கங வரையிலுள்ள அத்யாயங்களில் உத்தர காண்டத்துடன் கூடிய இராமாயணக்கதை காணப்படுகிறது. கருடபுராணத்தின் கசஎ-ம் அத்தியாயத்தில் ராமாயணம் காணப்படுகிறது. பிரும்மபுராணம் கருச—கருஎ அத்யாயங்களில் ராமாயணக் கதை வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸ்கந்தபுராணம் மூன்றும் கண்டத்தில் ராமருடைய சரிதை எழுதப்பட்டிருக்கிறது. வாயுபுராணத்தின் அஅ-ம் அத்தியாயத்தில் இஷ்வாகு வம்சச் சுருக்க மிருக்கிறது. சிவ புராணம் தருமசம்ஹிதா கண்டம் கூ0-கூஉ அத்தியாயங்களில் சூர்ய வம்ச விவர மிருக்கிறது. பிரஹத்தர்ம புராணம் பூர்வகண்டம் சஅ-ம் அத்யாயத்தில் இராமாயண விவரம் தென்படுகிறது. விஷ்ணுபுராணம் முதற்பாகம் நான்காம் அம்சம் நான்காம் அத்தியாயத்தில் சூரியவம்சத்தைப்பற்றிச் சுருக்கமாக வரையப்பட்டிருக்கிறது. மத்ஸயபுராணத்தின் கஉ-ம் அத்யாயத்தில் சூரிய வம்ச விளக்கமிருக்கிறது. மார்க்கண்டேய புராணத்தில் இராமர் சரிதையும் குருவம்ச விவரமுமுள்ளன. தேவீபாகவதம் மூன்றும் ஸ்கந்தம் உஅ-ங0 அத்தியாயங்களிலும் எ-ம் ஸ்கந்தம்முதல் அத்தியாயத்திலும் சூரியவம்சத்தைப்பற்றிய சரித்திரம் வரையப்பட்டிருக்கிறது. மகாபாரதம்வனபர்வம் உஎங-உகூ0 அத்யாயங்களில் இராமாயணம் எழுதப்பட்டுள்ளது.

வேறு சில இராமாயணங்கள்.

வால்மீகி இராமாயணத்தைத்தவிர வேறு பல ரிஷிகளாலும் கவிகளாலும் பல இராமாயணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஆனந்தராமாயணம், அக்னிவேசராமாயணம், அத்யாத்மராமாயணம் முதலியன குறிப்பிடதக்கவை.

யோகவாசிஷ்ட ராமாயணம்.

யோகவாசிஷ்ட ராமாயணம் அத்புத ராமாயணம் இவையும் இங்கு ஆராயத்தக்க

வைகளே. யோகவாசிஷ்ட ராமாயணத்தில் வசிஷ்டமுனியானவர் ஸ்ரீராமருக்கு ஆத்மஞான விஷயமான தத்துவங்களை உபதேசிக்கிறார். இவ்விராமாயணம் வைராக்ய பிரகரணம், முமுக்ஷுப்பிரகரணம், நிர்வாணப் பிரகரணம் முதலிய சு பிரகரணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இது வால்மீகி ராமாயணத்தின் காலத்திற்குப்பின்னர் எழுதப்பட்டிருக்கவேண்டும். இதனை நாம் இராமாயணம் என்று கூறுவதைவிட வேதாந்தம் என்று கூறலாம்.

அத்புத ராமாயணம்.

இதனை இயற்றியவரும் வால்மீகி மகரிஷியே எனக் கூறப்படுகிறது. இது உஎ சர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டு கஙஅக ஸ்லோகங்களில் முடிக்கப்பட்டிருக்கிறது. மற்ற இராமாயணங்களைக் காட்டிலும் இதில் ஓர் விசேஷமிருப்பதால் இதனைப்பற்றி இங்கு சிறிது வரைய நேரிடுகிறது. முதன் முதலில் யுத்தகாண்டத்துடன் கதையை வைத்துவிட்டுக் கவி மறுபடி உத்தரகாண்டத்தை எழுதியிருக்கிறார். பின்பு இன்னும் தன் கதையைத்தொடர்ந்து அவர் இவ்வத்புத இராமாயணத்தை எழுதியிருக்கிறார் போல் காண்கிறது. அத்புத ராமாயணத்தின் கதைச் சுருக்கம் வருமாறு:—

விஷ்ணு பக்தனாகிய அம்பரீஷனுக்கு ஸ்ரீமதி என்றொரு அழகிய பெண்ணிருந்தாள். நாரதரும்பருவதரும் அவளை அடைய விரும்பினார்கள். ஆனால் விஷ்ணுவின் சேஷ்டையால் இருவரும் அபஜெயமடைந்தனர். அவர்களின் கோபத்தின் காரணமாக விஷ்ணு அயோத்தியை அடைந்து தசரதபுத்ரராக அவதரித்தார். சீதை மண்டோதரி வயிற்றிலுதித்தாள். மண்டோதரி அவளைக் குருக்ஷேத்திரத்தில் விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறாள். தற்செயலாய் அங்குவந்த ஜனகர் அவளை வளர்த்துப் பின்னர் ராமருக்கு விவாகம் செய்விக்கிறார். இதன் பின்னர் இருவரும் வனம் செல்லல் முதல் இராவண வதம் வரை முறையே வர்ணிக்கப்பட்டுள்ளது. சீதை மீண்ட பின்னர் ராமர் ஹனுமாருக்கு (ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசித்ததுபோல) ஆத்மவிளக்கம், சாங்கியம், யோகம், உபனிஷக் தர்மம் இவைகளை விளக்குகிறார். இது இவ்விராமாயணத்திலுள்ளதோர் விசேஷம். மற்றொன்று என்னவெனில், சீதை தன் மீட்சியின் பின்னர் ஸகஸ்ரஸ்கந்த இராவணனைப் பற்றித் தெரிவிக்கிறாள். உடனே இராமர் சைன்யத்துடன் அவனை எதிர்த்துச்செல்கிறார். நடந்த யுத்தத்தில் தோல்வி இராமருடையதாகிறது. உடனே சீதை காளி உருக்கொண்டு சஹஸ்ர ராவணனைக்கொன்று இராமரை மீட்கிறாள்.

வேறுசில விநோத இராமாயணக் கதைகள்

பல பௌத்த கிரந்தங்களில் இராமாயணக்கதை அல்லது அதைப்பற்றிய விஷயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை ஆராய்வோம்.

தசரத ஜாதகம்.

ஜாதகக் கதைகள் என்பவை புத்தரால் வெளியிடப்பட்ட தமது பூர்வ ஜன்மக்கதைகளென வழங்கப்படுகின்றன. புத்தர் தம் முற்பிறப்பில் இராமாக அவதரித்திருந்தாராம். வால்மீகி இராமாயணத்திற்கும் இதற்குமுள்ள வித்யாஸம் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசம்போல் காணப்படுகிறது. இப்புத்தகத்தின் கதைச் சுருக்கம் வருமாறு;—

வாரணாசியின் ராஜன் தசரதருக்குப் பதினாறாயிரம் பத்னிகளிருந்தனர். அவருக்குத் தம் பட்டமகிஷியின் மூலமாக இரு புத்திரர்களும் ஒரு பெண்ணும் உண்டானார்கள். அவர்களின் பெயர்கள் ராமர், லக்ஷ்மணர் சீதை என்பன. மூத்தபுத்திரர் ராமர் சிறந்த பண்டிதர். பின்னர் பட்டமகிஷி இறந்து விடுகிறாள். மற்றொருத்தி பட்டமகிஷியாக வந்து

விடுகிறாள். இவள் அரசனைத் தன் வசப்படுத்திக் கொள்கிறாள். அரசன் அவள் மீது அதிக அன்புகொண்டு ஒரு வரம் கொடுப்பதாய்க் கூறுகிறான். அவள் சில நாள் பின்னர் தனது மகன் பரதனுக்கு வயது வந்ததும் தன் மகனை அரசனுக்குப்படி அரசனை வேண்டுகிறாள். அரசனுக்கு ராம பண்டிதரைத் தவிர வேறு எவரையும் அரசராக்க விருப்பமில்லை. ஆதலால் இருவருக்கும் மன வருத்தம் நேரிடுகிறது. மறுபடி ஒரு நாள் அரசன் அவளுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கும்பொழுது புதிய ராணி தன் வரனை மீண்டும் வற்புறுத்துகிறாள். அரசன் இதுவும் காலத்தின் கோலமென்றெண்ணித் தேவஞனை அழைத்து இதற்குப் பரிகாரம் கேட்கிறார். தேவஞன் மாற்றாந்தாயின் கொடுமையினின்று காக்க ராமரை ௧௨ வருடம் வேறு தேசம் அனுப்பி விடுவதே நலமெனக் கூறுகிறான். ராம பண்டிதரை லக்ஷ்மணர் சீதை இருவரும் தொடர்ந்து கூடவே காட்டிற்குச் செல்கின்றனர். இதனிடையில் புத்ர சோகத்தினால் அரசர் அவ்வுலகை யடைகிறார். அப்பொழுது ராணி தன் புத்திரனை அரசனென அறிவிக்கிறாள். அங்குள்ள மந்திரி முதலானோர் மூத்தவனிருக்க இளையவன் அரசாள்வது முறையல்ல வென்கின்றனர். புத்திமானாகிய பரதன் அதே அபிப்பிராய முடையவனாகலால் அண்ணாவைத் தேடியலைந்து கடைசியில் காண்கிறான். ராமர் 'தகப்பனார் என்னை ௧௨ வருடங்களுக்குப் பின்னரே வரும்படி கூறியிருக்கிறார். இன்னும் மூன்று வருடம் பாக்கியிருக்கிறது. நீ வேண்டுமானால் லக்ஷ்மணனையும் சீதையையும் அழைத்துச் செல். அதுவரை நீ அரசுபுரிந்து வா' என்றார். பரதன் மகுடத்தைத் தன் தலையில் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. பின்னர் இராமருடைய பாதுகைகளைப் பெற்று லக்ஷ்மண சீதையுடன் நகரமடைந்து பாதுகைகளை வைத்து அரசுபுரிகிறான். மூன்றாண்டுக்குப் பின்னர் ராமர் திரும்பி வந்து தனது சகோதரியை மணம்புரிந்து கொள்கிறார். பின்பு அவர் சுகமாக ௧௬000 வருடம் ஆட்சிபுரிகிறார்.

இக் கதையைக்கூறி முடித்தபின்னர் புத்தர் கூறுவதாவது:— அவ்விராமனே யான்; பரதன் என் சிஷ்யன் ஆனந்தன்?

இக் கதை புத்தர் வாயிலாகக் கூறப்பட்டதெனச் சொல்லப்பட்ட போதிலும் அவர் காலத்திற்குப் பின்னர் அவர் சிஷ்யர்களாலேயே சிருஷ்டிக்கப் பட்டிருக்க வேண்டும். இக் கதையிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் முக்கிய விஷயம் சாக்யர்கள் தங்கள் சகோதரிகளையும் மணம் புரிந்துகொள்ளுவதுண்டு என்பதே. இதைத் தவிர லங்கா-அவதார சூத்ரம், மகாவிபஷா முதலிய ராமாயணத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படும் பௌத்த கிரந்தங்களிருக்கின்றன. அவற்றை யெல்லாம் ஆராய இச் சமயம் போதிய இடமில்லை.

வெளிநாடுகளில் இராமாயணம்.

பாபூ கேதார்நாத் மாஜும்தார் அவர்கள் வங்காளி பாஷையில் இதைப்பற்றிய கட்டுரை யொன்றை வெளியிட்டுள்ளார். அதில் சில பகுதிகளை இங்கு எழுதுகிறேன்.

பண்டைக்காலத்தில் பாரதவாஸிகள் எங்கெங்கு சென்று வந்தனரோ அத் தேசங்களெல்லாவற்றிலும் ராமாயணக் கதை காணப்படுகிறது. உதாரணமாக யவத்வீபம், பாலித்வீபம், லம்பகத்வீபம் பிரும்ம தேசம் முதலிய பல தேசங்களில் ராமாயண மொழி பெயர்ப்பு காணப்படுகிறது.

யவத்வீபத்திலுள்ள ராமாயணம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாமெனத் தோன்றுகிறது. இதில் உத்தரகாண்டமில்லை. யவத்வீபத்தில் ராமாயணம் எழுதப்படும் காலத்தில்

உத்தரகாண்டமே நம் நாட்டிலும் இல்லையெனவும் பிற்காலத்தில் இங்கு உத்தரகாண்டம் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் பல வித்வான்கள் அபிப்ராயப் படுகின்றனர். வங்காளி கிருத்திவாஸ ராமாயணத்தைப் போல யவத்வீப ராமாயண கர்த்தாவும் மூல ராமாயணத்தைப் பல இடங்களில் மாற்றி எழுதியிருக்கிறார்.

யவத்வீபத்திலுள்ள இராமாயணத்தின் பெயர் 'ராமகவி'. இது நான்கு அத்யாயங்களாக வகுக்கப் பட்டுள்ளது. 'ராமகுணத்திரங்' கத்தில் முற்கதையும் இரண்டாம் அத்யாயத்தில் ராமர் வனவாஸமும் ராஹ்வனன் (ராவணன்) சீதையைத் தூக்கிச் செல்வதும் வர்ணிக்கப்பட்டுள்ளன. மூன்றும் அத்யாயத்தில் ஹனுமான் அகலங்கா (ஸ்வர்ண லங்கா) செல்வதும் அணை கட்டுவதும் விவரிக்கப் பட்டுள்ளன. நான்காவது அத்யாயத்தில் ராம ராவண யுத்தமும் சிதி (சிதா) யைத் திருப்பிக்கொணர்வதும் நாயூத்யா (அயோத்யா) வருவதும், தேவ விஷணனை (விபீஷணனை) லங்கை சிங்காதனத்தில் அமர்விப்பதும் எழுதப் பட்டிருக்கின்றன.

யவத்வீபத்தில் உத்தரகாண்டம் தனிப் புத்தகமாக விருக்கிறது. இது பிற்காலத்தில் வாலித்வீபம் லம்பகத்வீபம் முதலியவற்றினின்றும் வெளியேறி அங்கு சென்று குடியேறிய ஹிந்துக்களால் கொண்டு செல்லப் பட்டதாகும். வாலித்வீபத்திலுள்ள ராமாயணம் வால்மீகியால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது அத்தேசத்து பாஷையா யிருக்கிறது. இப்பாஷையில் சமஸ்கிருத பதங்கள் ஏராளமாய்க் காணப்படுகின்றன. இவ்விராமாயணம் ௬ காண்டங்களாகவும் ௨௩ சர்க்கங்களாகவும் பிரிக்கப் பட்டிருக்கிறது. இதில் உத்தரகாண்டமில்லை. உத்தரகாண்டம் என்ற தனிப் புத்தகமொன்று இங்கும் இருக்கிறது. இதில் இராமருடைய மரணத்தின் பின்பு அவருடைய வம்சத்தினரின் வரலாறு காணப்படுகிறது. வாலித்வீப ராமாயணத்தின் முடிவில் முதுமைப் பருவத்தில் ராமர் வானப்பிரஸ்தாஸ்ரமத்தைக் கைக்கொண்டதாய்க் கூறப்படுகிறது. வாலித்வீபத்தில் ராஜா குஸானும் அவர்களியற்றிய ராமாயணம் தற்காலத்தில் பிரசித்தி பெற்றது. பிரும்ம தேசத்திலுள்ள ராமாயணத்தின் பெயர் 'ராமய'. அதில் ராவணனின் பெயர் 'தசகிரி'; வால்மீகியினுடைய ராவணனுக் கிருக்கும் ௧௦ தலைகளும் இருபது கைகளுமில்லை. ராவணனின் ராஜமகுடத்தில் ௧௦ அங்கம் சேர்ந்திருந்தது என்பதாம். இதனாலேயே பிரும்மதேச ராமாயணத்தில் அவனை தசகிரி என்று கூறியிருக்கின்றனர். ஸயாம் தேசத்தின் பண்டைய ராமாயணம் தற்பொழுது அகப்படவில்லை. சீன யாத்திரிகராகிய ஹ்யூ-யேன்-சங்க் என்பவர் இராமாயணத்தைச் சீன பாஷையில் மொழி பெயர்த்துள்ளார். அரபு தேசத்தையாண்ட பிரசித்த அரசர் ஹாருன்—உல்—ரசீத் இந்திய வைத்திய நூற்களாகிய சரக, சுஸ்ருத இவைகளுடன் கூட ராமாயணம் மகாபாரதம் இவைகளையும் அரபியில் மொழிபெயர்க்கச் செய்தார். பிரசித்த மொகலாய சக்ரவர்த்தி அக்பர் கவி அப்துல் காதிர் பதௌனி மூலம் ராமாயணத்தைப் பார்ஸி பாஷையில் மொழிபெயர்ப்பித்தார். பதௌனி அவர்கள் தாம் நான்கு வருடங்களில் கூடு அக்ஷரம் கொண்ட ரு௦-ஆயிரம் சுலோகங்களில் மொழி பெயர்த்துள்ளதாய் எழுதியிருக்கிறார். ஆங்கிலேயர் அரசாட்சி காலத்தில் ௧அ௦௬-லும் ௧அ௧௦-லும் ஸ்ரீராமபுரத்து மிஷனரிகள் கேரி, மார்ஷ்மேன் இருவரும் பாலகாண்டத்தையும், அயோத்யா காண்டத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர்.

இராமாயணத்தைப்பற்றிய சில குறிப்புக்கள்.

கஅஉகூ-ல் வான் ஷ்லிகேல் (Augustus William Von Schlegel) என்பவர் இராமாயணத்தின் பாலகாண்டம் முழுவதையும் அயோத்தியா காண்டத்தின் சிறிய பகுதியையும் மூலத்துடன் லத்தீன் பாஷையில் மொழி பெயர்த்துப் பிரசுரித்தார். இத்தாலியைச் சார்ந்த சிக்னர் கோரேஷியோ அவர்கள் சர்க்காரின் உதவி பெற்று சம்பூர்ண ராமாயணத்தை மூலத்துடன் கஅசഠ-ல் ஆரம்பித்து கஅசூ0-ல் மிகவும் அழகிய இத்தாலி மொழிபெயர்ப்புடன் வெளியிட்டார்.

இதனைப் பின்பற்றி ஹிப்போலைட் பூஷெ என்பவர் பிரஞ்சு பாஷையில் ராமாயணமியற்றினர். பின்னர் காசி ராணி கல்லூரித் தலைவர் புரொபஸர் கிரித் ராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

லங்கை எங்குளது?

இதுவரை நாம் தற்காலம் சிலோன் என்று வழங்கிவரும் நாட்டையே ராவணனுடைய லங்கையாக எண்ணிவந்திருக்கிறோம். சிலோனிற்குப் பெயர் சிங்களம்; லங்கையன்று. பாண்டேய் பகவத் பிரசாதவர்மா அவர்கள் ஸ்ரீ கமலா என்னும் பத்திரிகையில் லங்கா வென்ற ஓர் கட்டுரை எழுதியுள்ளார். அதில் அவர் ஆஸ்டிரேலியாவே லங்கையெனத் தீர்மானிப்பதற்குக் கீழ்க்காணும் பிரமாணங்கள் கொடுத்திருக்கிறார்:—

க. இராமாயணத்தில் எழுதப்பட்டுள்ள லங்கையின் வர்ணனை ஆஸ்திரேலியாவிற்குப் பொருத்தமாயிருக்கிறது. சிலோன் என்பது லங்கையல்ல.

உ. தந்திர கிரந்தம், மகாபாரதம், பிரம்மாண்டபுராணம், வாயு புராணம், பாகவதம், பிரஹத்சம்ஹிதா முதலிய புத்தகங்களில் லங்கையென்றும் சிங்களம் என்றும் இரு தனித்தனி தேசவர்ணனைகளிருக்கின்றன. ஆதலின் இவற்றின்படி சிங்களத்தை லங்கையென்பது பிழையாகும்.

ங. சிங்கள சரித்திரத்தில் வங்கராஜன் சிம்ஹபாஹுவின் புத்திரன் ராஜாவிஜயசிங் தன் தகப்பனரின் ஞாபகத்தின் பொருட்டு தான் ஜெயித்த இந்நாட்டிற்குச் சிங்களம் எனப் பெயர் வைத்ததாய்க் கூறப்பட்டுள்ளது. இதைக்கொண்டு பலர் விஜயசிங்கனுக்கு முன்னர் இதன் பெயர் லங்கையாயிருக்கவேண்டுமென நினைக்கின்றனர். அது பிழை. ஏனெனில் இதனினும் பண்டைய கிரந்தங்களில் சிங்களமென்ற பெயர் இருக்கிறது. இவ்வாதாரம் சரியானதல்ல.

ச. ஜாவா தீபத்தின் பண்டைச் சரித்திரத்திலிருந்து ஜாவா த்வீபத்திற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் இடையில் பல சிறு தீவுகளின் மேல் ஒரு பாலம் கட்டப்பட்டதாய்த் தெரிகிறது. அதுதான் நளசேதுவின் பாலம்.

ரு. 'வானர' மென்ற சப்தத்தின் பிரகிருத்யர்த்தம் நிஷாதம்; அதாவது மாலுமி (Mariner) என்பதாகும். ஹனுமார் ஓர் அதிசய கப்பலால் லங்கை சென்றிருக்கிறார். ஹனுமான் ஓர் பெரிய கப்பலோட்டி. தற்காலம்போலவே முற்காலத்திலும் அணை போட்டுச் செல்லும் வழக்க மிருந்திருக்கிறது.

சூ. ஆஸ்திரேலியாவிற் கருகிலுள்ள பிஜி தீவுகளின் கூட்டங்களுக்குச் சமீபத்திலுள்ள சிறு தீவுகளுக்கு சீராம் (Ceram) சந்தனம் (Sandal wood) முதலிய பெயர்களிருக்கின்றன. இப்படி ராமாயணத்தைக் குறிக்கும் பெயர்கள் சிலோனுக்கருகில் காணப்படவில்லை. கிரீக் தேசத்தவர்கள் ஆஸ்திரேலியாவை 'Golden Charsonessus' என்று கூறிவந்தனர். இது 'ஸ்வர்ண லங்கா' வென்பதைக் குறிக்கிறது.

எ. லங்கைவெகுகாலமாய்க் கண்டுபிடிக்கப்படாமலிருந்ததால் இதற்கு 'New

Holland' என்றும் 'Terra Australis Incognito'என்றும் பெயர்கள் வழங்கலாயின.

அ. மலய த்வீப பாஷையின் சரித்திரத்தில் 'ரக்ஷா' என்ற ஒரு சப்தமிருக்கிறது. இது ஆஸ்திரேலியாவையும், அதனைச் சார்ந்துள்ள த்வீபங்களில் வசிக்கும் சில ஜாதியாரையும் குறிக்கும் சொல். இது இராமாயணத்தில் வந்துள்ள ராக்ஷச என்னும் லங்காவாசிகளுடைய பெயரின் திரிபாயிருக்கவேண்டும். ஜாவா த்வீபத்தில் ராமாயண யுத்தம் நடைபெற்றதற்குப் போதிய பிரமாணங்கள் இருக்கின்றன.

க. நளன் குரங்கல்ல; அவர் பெரிய சமுத்திர இஞ்சினீயர். சமஸ்கிருத 'லாங்குல' சப்தம் கப்பலையும் குறிக்கும். ஆதலின் ஹனுமானின் லாங்குலம் ராவணனைச் சார்ந்தவர்களைக் கொளுத்தி விட்டது எனில் இப் பழைய அட்மிரலின் (Admiral) கப்பல்கள் அவர்களை நாசப்படுத்தியதெனப் பொருள்கொள்ளவேண்டும்.

சந்தேகங்கள்.

பலர் இராமாயணம், புராணங்கள் முதலியன யாவும் கதைகள்; பழைய காலத்தில் பொழுதுபோக்கிற்காகத் தெய்வங்களின் அம்சத்தைக் கலந்து எழுதப்பட்ட நாவல்கள் எனக் கருதுகின்றனர். சிலர் இராமாயணம் முதலியன சில உண்மைத் தத்துவங்களை உள்ளடக்கிக்கொண்டுள்ள காவியங்கள் என்றும், இவ்வாறு மறைபொருள் கொண்டு காவியங்கள் எழுதுவது பண்டைக் கால வழக்கமெனவும் எண்ணுகின்றனர். வேறு சிலர் வேதத்திலுள்ள சில மந்திரங்களின் பொருளை அடிப்படையாய்க்கொண்டு இக்கதைகள் கற்பிக்கப்பட்டனவென நினைக்கின்றனர். இன்னும் பலர் வால்மீகி இராமாயணமே உண்மையில் நடந்ததெனவும் மற்றவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையெனவும் கூறுகின்றனர். இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள இயற்கைக்கு மாறான பல விஷயங்களைக்கொண்டு அவைகளைக் கட்டுக்கதைகளாகத் தீர்மானிப்பதா அல்லது வேறுவிதமாய் எண்ணுவதா? இச்சந்தேகங்கள் அழிய இன்னும் காலம் வரவில்லை.

இராமாயணமும் மகாபாரதமும்.

பிரசித்த வங்காள வித்வான் ராய்பகதூர் பங்கிம் சந்திரசட்டர்ஜி அவர்கள் அனுகரணம் (பின்பற்றி எழுதல்) என்ற ஓர் வங்காளி மொழிக்கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

"நம் தேசத்தில் இருமகாகாவியங்களிருக்கின்றன. ஒன்று இராமாயணம்; மற்றொன்று மஹாபாரதம். நாம் இவற்றைக் காவியம் என்று கூறாமல் இதிஹாஸம் என்கிறோம். இவை உலகிலுள்ள எல்லாக் காவியங்களிலும் சிரேஷ்டமானவை. குணதோஷங்களில் இரண்டும் சமமே; சிறிதே வித்தியாஸமுளது. ஸாஹித்ய திருஷ்டியில் பார்த்தால் ஒன்றை மற்றொன்று பின்பற்றியதாய்க் காண்கிறது. இராமாயணத்தின் பின்னரே மகாபாரதம் எழுதப்பட்டிருக்கிறது. ராமருக்கும் யுதிஷ்டிரருக்கும் அதிக வித்தியாஸம் காணப்படவில்லை. இராமாயணத்தின் அபாரபலம் பொருந்திய ஜிதேந்திரிய சகோதர பக்தனாகிய லக்ஷ்மணன் மகாபாரதத்தில் அர்ஜுனனாகக் காணப்படுகிறான். பரத சத்துருக்கனர்களின் பிரதிபிம்பம் நகுல சகாதேவர்கள். பீமன் ஓர் தனிவிதம். ஆயினும் கும்பகர்ணனின் வாசனை சிறிது அவனிடம் காண்கிறது. இராமாயணத்தின் விபீஷணர் பாரதத்தில் விதுரர். அபிமன்யுவும் இந்திரஜித்தும் ஒரேவிதமானவர். இங்கு ராமர் தன் சகோதரன் மனைவி இவர்களுடன் கூட வெகுகாலம் வனத்திலிருக்கிறார்; அங்கு யுதிஷ்டிரர் தமது சகோதரர் மனைவி இவர்களுடன் கூட வனம் செல்கிறார். இருவரும்

இராமாயணத்தைப்பற்றிய சில குறிப்புக்கள்.

முதலில் ராஜ்பத்தையடைந்து பின்னர் வஞ்சிக்கப்படுகின்றனர். ஒருவன் மனைவி அபகரிக்கப்பட்டாள்; மற்றவன் மனைவி நடுச் சபையில் அவமானப் படுத்தப்பட்டாள். இரு மகா காவியங்களிலும் சாராம்சமாகிய யுத்தம் ஒன்றில் ஸ்பஷ்டமாகவும் மற்றொன்றில் மங்கியும் காணப்படுகிறது. இரு காவியங்களும் இளவரசன் 'ராஜ்பப்பிரஷ்டமடைந்து மனைவி சகோதரர்களுடன் வனம் சேர்ந்து பின்னர் சண்டையிட்டு வெற்றி பெற்று அரசுபுரிகிறது' என்ற மூலத்தை (Plot) அடிப்படையாய்க்கொண்டே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சிறு சிறு சம்பவங்களிலும் இவ்விஷயம் காணப்படுகிறது. லவ குசரின் வேலை மணிபுரத்தில் பப்ருவாஹனன் செய்துவிட்டான்; மிதிலையில் வில் ஒடிபட்டது. பஞ்சாபில் அதேமாதிரி வில்லால் மத்ஸ்ய பரீக்ஷை நடைபெற்றது. (சுயம்வரத்தில்) தசரதர் பாண்டு இவர்களின் பாபமும் சாபமும் சமானமாய் இருக்கின்றன. லங்காதகனம் லாக்ஷாபவனலீலையை ஒத்திருக்கிறது.

நாம் இவ்வாறு கூறுவதின் கருத்து இராமாயணமும் பாரதமும் நடைபெறவேயில்லை என்று தெரிவிப்பதற்கல்ல. இவை கட்டாயம் நடந்தன. ஆயினும் கவிகள் இவர்களின் சரித்திரத்தை எழுதும் பொழுது தம்முற் கவியைப் பின்தொடர்ந்து தமது சாமர்த்தியத்தையும் காட்டத்தக்கவாறு மாற்றி எழுதியிருக்கிறார்கள். ஆதலின் இவைகளை இதிஹாஸமெனக்கூறாமல் மஹாகாவியமெனலாம். எமக்குமகாபாரதம் ராமாயணத்தைப் பின்பற்றியதாய்க் காணப்பட்டபோதிலும், உலகில் அதை இணையற்றதென ஒப்புக்கொள்கிறேன். அதைச் சில அம்சங்களிலேதான் ராமாயணத்துடன் சீர்தூக்கலாம். ஆனால் பூரணமாய் முடியாது. மகாபாரதத்திலுள்ள கிருஷ்ணர், பலராமன், பீஷ்மர், கர்ணர், சுபத்ரா முதலிய பாத்திரங்கள் ‘இராமாயணத்தில் இல்லை. பாத்திரங்களில் ஸ்பாவத்தில் சமானம் காணப்படினும் சூக்ஷ்மரூபத்தில் வித்யாஸமிருக்கிறது. சீதையையும் துரௌபதியையும் எடுத்துக்கொள்ளுங்கள். துரௌபதியின் பிரசண்ட தேஜஸ் சீதையிடமில்லை; அது அசோகவனத்தில் ஒரு சமயம் மட்டுமே தென்படுகிறது.”

Holland' என்றும் 'Terra Australis Incognito'என்றும் பெயர்கள் வழங்கலாயின.

அ. மலய த்வீப பாஷையின் சரித்திரத்தில் 'ரக்ஷா' என்ற ஒரு சப்தமிருக்கிறது. இது ஆஸ்திரேலியாவையும், அதனைச் சார்ந்துள்ள த்வீபங்களில் வசிக்கும் சில ஜாதியாரையும் குறிக்கும் சொல். இது இராமாயணத்தில் வந்துள்ள ராக்ஷச என்னும் லங்காவாசிகளுடைய பெயரின் திரிபாயிருக்கவேண்டும். ஜாவா த்வீபத்தில் ராமாயண யுத்தம் நடைபெற்றதற்குப் போதிய பிரமாணங்கள் இருக்கின்றன.

கூ. நளன் குரங்கல்ல; அவர் பெரிய சமுத்திர இஞ்சினியர். சமஸ்கிருத 'லாங்குல' சப்தம் கப்பலையும் குறிக்கும். ஆதலின் ஹனுமானின் லாங்குலம் ராவணனைச் சார்ந்தவர்களைக் கொளுத்தி விட்டது எனில் இப் பழைய அட்மிரலின் (Admiral) கப்பல்கள் அவர்களை நாசப்படுத்தியதெனப் பொருள்கொள்ளவேண்டும்.

சந்தேகங்கள்.

பலர் இராமாயணம், புராணங்கள் முதலியன யாவும் கதைகள்; பழைய காலத்தில் பொழுதுபோக்கிற்காகத் தெய்வங்களின் அம்சத்தைக் கலந்து எழுதப்பட்ட நாவல்கள் எனக் கருதுகின்றனர். சிலர் இராமாயணம் முதலியன சில உண்மைத் தத்துவங்களை உள்ளடக்கிக்கொண்டுள்ள காவியங்கள் என்றும், இவ்வாறு மறைபொருள் கொண்டு காவியங்கள் எழுதுவது பண்டைக் கால வழக்கமெனவும் எண்ணுகின்றனர். வேறு சிலர் வேதத்திலுள்ள சில மந்திரங்களின் பொருளை அடிப்படையாய்க்கொண்டு இக்கதைகள் கற்பிக்கப்பட்டனவென நினைக்கின்றனர். இன்னும் பலர் வால்மீகி இராமாயணமே உண்மையில் நடந்ததெனவும் மற்றவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையெனவும் கூறுகின்றனர். இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள இயற்கைக்கு மாறான பல விஷயங்களைக்கொண்டு அவைகளைக் கட்டுக்கதைகளாகத் தீர்மானிப்பதா அல்லது வேறுவிதமாய் எண்ணுவதா? இச்சந்தேகங்கள் அழிய இன்னும் காலம் வரவில்லை.

இராமாயணமும் மகாபாரதமும்.

பிரசித்த வங்காள வித்வான் ராய்பகதூர் பங்கிம் சந்திரசட்டர்ஜி அவர்கள் அனுகாணம் (பின்பற்றி எழுதல்) என்ற ஓர் வங்காளி மொழிக்கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

'நம் தேசத்தில் இருமகாகாவியங்களிருக்கின்றன. ஒன்று இராமாயணம்; மற்றொன்று மஹாபாரதம். நாம் இவற்றைக் காவியம் என்று கூறாமல் இதிஹாஸம் என்கிறோம். இவை உலகிலுள்ள எல்லாக் காவியங்களிலும் சிரேஷ்டமானவை. குணதோஷங்களில் இரண்டும் சமமே; சிறிதே வித்தியாஸமுளது. சாஹித்ய திருஷ்டியில் பார்த்தால் ஒன்றை மற்றொன்று பின்பற்றியதாய்க் காண்கிறது. இராமாயணத்தின் பின்னரே மகாபாரதம் எழுதப்பட்டிருக்கிறது. ராமருக்கும் யுதிஷ்டிரருக்கும் அதிக வித்தியாஸம் காணப்படவில்லை. இராமாயணத்தின் அபாரபலம் பொருந்திய ஜிதேந்திரிய சகோதர பக்தனாகிய லக்ஷ்மணன் மகாபாரதத்தில் அர்ஜுனனாகக் காணப்படுகிறான். பரத சத்துருக்கனர்களின் பிரதிபிம்பம் நகுல சகாதேவர்கள். பீமன் ஓர் தனிவிதம். ஆயினும் கும்பகர்ணனின் வாசனை சிறிது அவனிடம் காண்கிறது. இராமாயணத்தின் விபீஷணர் பாரதத்தில் விதுரர். அபிமன்யுவும் இந்திரஜித்தும் ஒரேவிதமானவர். இங்கு ராமர் தன் சகோதரன் மனைவி இவர்களுடன் கூட வெகுகாலம் வனத்திலிருக்கிறார்; அங்கு யுதிஷ்டிரர் தமது சகோதரர் மனைவி இவர்களுடன் கூட வனம் செல்கிறார். இருவரும்

இராமாயணத்தைப்பற்றிய சில குறிப்புக்கள்.

முதலில் ராஜ்யத்தையடைந்து பின்னர் வஞ்சிக்கப்படுகின்றனர். ஒருவன் மனைவி அபகரிக்கப்பட்டாள்; மற்றவன் மனைவி நடுச் சபையில் அவமானப் படுத்தப்பட்டாள். இரு மகா காவியங்களிலும் சாராம்சமாகிய யுத்தம் ஒன்றில் ஸ்பஷ்டமாகவும் மற்றொன்றில் மங்கியும் காணப்படுகிறது. இரு காவியங்களும் இளவரசன் 'ராஜ்யப்பிரஷ்டமடைந்து மனைவி சகோதரர்களுடன் வனம் சேர்ந்து பின்னர் சண்டையிட்டு வெற்றி பெற்று அரசுபுரிகிறது' என்ற மூலத்தை (Plot) அடிப்படையாய்க்கொண்டே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சிறு சிறு சம்பவங்களிலும் இவ் விஷயம் காணப்படுகிறது. லவ குசரின் வேலை மணிபுரத்தில் பப்ருவாஹனன் செய்துவிட்டான்; மிதிலையில் வில் ஒடிபட்டது. பஞ்சாபில் அதேமாதிரி வில்லால் மத்ஸ்ய பரீக்ஷை நடைபெற்றது. (சுயம்வரத்தில்) தசரதர் பாண்டு இவர்களின் பாபமும் சாபமும் சமானமாய் இருக்கின்றன. லங்காதகனம் லாஷாபவனலீலையை ஒத்திருக்கிறது.

நாம் இவ்வாறு கூறுவதின் கருத்து இராமாயணமும் பாரதமும் நடைபெறவேயில்லை என்று தெரிவிப்பதற்கல்ல. இவை கட்டாயம் நடந்தன. ஆயினும் கவிகள் இவர்களின் சரித்திரத்தை எழுதும் பொழுது தம்முற் கவியைப் பின்தொடர்ந்து தமது சாமர்த்தியத்தையும் காட்டத்தக்கவாறு மாற்றி எழுதியிருக்கிறார்கள். ஆதலின் இவைகளை இதிஹாஸமெனக்கூறாமல் மஹாகாவியமெனலாம். எமக்குமகாபாரதம் ராமாயணத்தைப் பின்பற்றியதாய்க் காணப்பட்டபோதிலும், உலகில் அதை இணையற்றதென ஒப்புக்கொள்கிறேன். அதைச் சில அம்சங்களிலேதான் ராமாயணத்துடன் சீர்தூக்கலாம். ஆனால் பூரணமாய் முடியாது. மகாபாரதத்திலுள்ள கிருஷ்ணர், பலராமன், பீஷ்மர், கர்ணர், சுபத்ரா முதலிய பாத்திரங்கள் 'இராமாயணத்தில் இல்லை. பாத்திரங்களில் ஸ்பாவத்தில் சமானம் காணப்படினும் சூக்ஷ்மரூபத்தில் வித்யாஸமிருக்கிறது. சீதையையும் திரௌபதியையும் எடுத்துக்கொள்ளுங்கள். திரௌபதியின் பிரசண்ட தேஜஸ் சீதையிடமில்லை; அது அசோகவனத்தில் ஒரு சமயம் மட்டுமே தென்படுகிறது."

பர்மா.

சுவாமி அத்புதானந்தா.

இந் நன்னாட்டை 'சுவர்ணபூமி' (பொன்னாடு) எனவே பண்டை நூல்கள் வழங்குகின்றன. இந் நாட்டின் அருவிகளில் பொன் துகள் மணலோடு கலந்து ஓடினதே இதன் காரண மென்பர். இந் நாட்டின் கோவில்கள், கோபுரங்கள், குடைகள், பாத்திரங்கள் எல்லாம் பொன்மயமாகவே காண்கின்றன. இந்நாட்டு மக்களும் பொன்னிறமாகவே விளங்குவதோடு பொன்னாலாய ஆணகளைக் காலிலும் அணிந் துலவுகின்றனர். "பர்மோ அருவியில் பொன் மணலோடு கலந்து கிடந்தது. திங்காடோ நிலக்கரிச் சுரங்கத்தின் அருகில் பொன்மணற் குவியல்களைக் கண்டேன்" என க௮௫௭-ம் ஆண்டில் பர்மா விஜயம் செய்த ச்பியர்சு என்ற ஐரோப்பியர் கூறியிருக்கின்றார்.

ஷான் சாதியார்.

இந்நாட்டில் பலவகைப் பூர்வீகச் சாதியினருள்ளனர். ஷான் சாதியினர் இந்நாட்டை ஒருகாலத்தில் ஆண்டு வந்தனர். இவர்களின் இராஜ்யம் மீனும் பள்ளத்தாக்குகளி லிருந்து யுன் சேலன் வரை பரவி யிருந்ததாகவும் பாகான் அரசர்களுடன் கொள்வினை கொடுப்பினை கொண்டிருந்தன ரெனவும் கூறுவர். எனினும் இவ்வகுப்பார் ஆலேம்பா படையெடுத்து வெற்றி கொண்டது முதல் இவர்களின் பிரபலமான வாழ்க்கை மழுங்கலாயிற்று. இன்றும் இவ்வகுப்பினச் சிற்றரசர்கள் ஸாப்வா என்ற பெயருடன் இருந்து வருகின்றனர். பயிர்த் தொழிலில் தலைசிறந்தவராகவும் வியாபாரத்தில் தெளிந்த அறிவு வாய்ந்தவராகவும் உள்ளனர். மலைநாடுகளில் வசிக்கினும் தமக்குக் கிடைக்காத பொருட்களை வெளிநாடுகளி னின்றும் எடுத்துச் செல்வர். பண்டைய யுத்தகாலங்களில் கடுஞ்சிந்தையும் மகா கொடூர நடவடிக்கைகளும் கொண்டிருந்தனர். தோற்ற எதிரிகளை வாளிக்கிரையாக்குவது மன்றித் தம் கையிற்சிக்கும் ஆண் குழந்தைகளை யெல்லாம் கொன்று விடுவர். சமாதான நாட்களிலோ மிக்க மரியாதையுடனும் பிறர்க் குதவிபுரியும் தன்மை கொண்டவராகவும் இருப்பர். அடிக்கடி தம் இருப்பிடம் மாற்றிக் கொண்டிருக்க முற்பட்டதால் கிராமங்களிலிருந்த பலர் தனித் தனியாகக் குடியேறி வாழலாயினர்.

கரீன் ஜாதியார்.

இவ்வகுப்பார் பெருந் தொகையினராகப் பர்மாவில் வசிந்துள்ளார்கள். இவர்கள் யூதரின் நம்பிக்கையைப் பெரிதும் தழுவுவோராவர். இவர்கள் மர்டுவி முதல் டாங்கூவரை பரவியுள்ளனர். இவர்களில் ஸ்கா, ப்வோ, ப்கேப்வே, என்ற மூன்று பிரிவுகளுண்டு. இவர்கள் பாஷை சீனத்தைத் தழுவியுள்ளதென்று கூறுவர். தெய்வபக்தி மிகுந்தவர்கள், தொழுகைப் புத்தகங்கள் கொண்டுமிருந்தனர். பிற்காலத்தில் இவர்கள் நாத்திகர்களாகிக் குழப்பங்களிலும் கலவரங்களிலும் ஈடுபட்டுப் பல பிரிவுகளாகி முடிவில் கிறிஸ்து மதத்தினராக்கப் பட்டனர். இவர்கள் முற்காலத்தில் மலைநாடுகளில் வேட்டை யாடியே காட்டினங்களாக ஜீவித்திருந்தனர். ஆயினும் உண்மை பேசுவதில் மிகச் சிறந்தவர்கள்—திறன் வாய்ந்த விவசாயிகள். பிற ஜாதியாருடன் பேசுவதற்கு பெருங் கூச்சம் வாய்ந்தவர்கள்.

மணிபுரிகள்.

இவ்வகுப்பார் பொன்னர்களென்றும் காதிகளென்றும் இருவகைப் படுவர். கைத்தொழிலே ஜீவனமாகக் கொண்டவர். நடை உடைகளில் பர்மியரை ஒத்திருப்பர். விவாகத்தில் இந்து பர்மிய சடங்குகளை அனுசரிப்பர். காதிகள் பலர் புத்தமதத்தைத் தழுவியுமுள்ளார். புத்த மதத்தினருடன் புத்தமத மற்றவர் உணவருந்த இசையார். இவர்கள் மாமிச போஜனம் செய்வதில்லை. மீன் கருவாடு முதலியன மாமிசமாகக் கருதப் பெறுவதில்லை. அடக்கமும் சாந்தமு முடையவர். அதுபோலவே அச்சமும் பயங்கொள்ளித் தனமும் தலைசிறந்து விளங்கும்.

சின் சாதியார்.

இவர்களும் மலைவாசிகளாகவே யிருந்தனர்.

மிக்க உயரமான மலைகளில் வீடுகளமைத்து வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் அபிப்பிராய பேதமுடையவர்களாகிப் பல பிரிவினர்களாயினர். இவ்வகுப்பார்கட்கும் கீழ் வங்கமலை வாசிகட்கும் நெருங்கிய சம்பந்த முண்டெனவும் கூறலாகும். இவர்களின் வாழ்க்கை பண்டைய பர்மியர்களைப் பின்பற்றியதே.

சேர்பாதிகள்.

இவர்கள் பர்மிய மகம்மதியராவர். முதன் முதலாக அலோம்பரா அரசன் காலத்தில் இந்தியாவினின்று படைவீரர்களாக வரவழைக்கப் பட்டனர். பின்னர் பெரும் செல்வாக்குப் பெற்று இன்று டர்பா முழுமையும் பரவியுள்ளனர்.

பர்மா தேசம்.

பொன்விளையும் பூமியும் புத்தபிரானின் அருள் பெருகியுள்ளதுமான பர்மாவென்ற நன்னாடு,

ஒரு பர்மியக் குடும்பம்.

வங்க குடாக்கடலிற்குக் கிழக்கும், மலையா தீபகற்பத்திற்கு வடக்கும், சையாம் சைனாவினுடன் சேர்ந்தும் உள்ளதென மதிக்கலாம். இந்நாட்டின் முக்கிய நதியாகிய ஐராவதி திபேத்தின் மலைச் சார்புகளில் உற்பத்தியாகி இந்நாட்டிடை ஊடுருவிப் பாய்ந்து இரங்கோனிற் சருகில் வங்க குடாக்கலில் சங்கமமாகின்றது. இந்நாட்டிலுள்ள பெண்மக்கள் மிகச் சுறுசுறுப்பைக் கொண்டவர்களாகவும், மதமார்க்க ஒழுக்கங்களில் சிறந்தவர்களாகவும் இருப்பர். சில்லரைக்கடை வியாபாரங்கள் யாவும் இவர்கள் நன்கு நடாத்தப் பழகியுள்ளார்கள். இவர்களை மங்கோலிய பரம்பரையினர் எனக்கருதுவர். அழகும் சுத்தமும் இவர்களின் இயற்கை அமைப்பாகக் காணலாம். பட்டுடையில் மிகுந்த ஆசைகொண்டவர்கள். பெண்கள் காலில் பொன் அணிய ஆசைப்படுகின்றனரென்றால் இரத்தினங்களில் எவ்வகை ஆசையைக் கொண்டிருப்பரென்பது கூறாமலே விளங்கலாகும். கூந்தல் அழகிற்குப் பர்மியப் பெண்கள் சிறப்புரிமை கொண்டுள்ளார். பெண்களும் இடை மட்டும் தொங்கும் குடுதாக்களை உபயோகிப்பதுடன் பட்டு அங்க வஸ்திரம் அணிந்திருப்பர். காலில் செருப்பும் கொண்டையில் புஷ்பமும் இவர்கட்கு இன்றியமையாதன. சிலர் குடைகளையும் பெருஞ் சுருட்டுக்களையும் உபயோகிப்பர். வாசனைத் திரவியத்தில் பெண் மக்களுக்கு மிகப் பிரியமுண்டு. நாகரிக மிகுந்தோர் சைமடக்கு விசிறியும் உருமாலும் உபயோகிப்பர். விவாக மான பெண் தலைமயிரை நன்கு வாரி மடித்துக் சட்டுவள். விவாகமாகாதவள் தலைமயிரை நன்கு வாரி மடித்துக் கட்டுவதில் நுனிமயிரைத் தொங்கவிட்டிருப்பள். பண்டைய நாட்களில் பெண்கள் முகத்தில் ஒருவித வேரை அரைத்து ஏனைய நாட்டுப் பெண்கள் மஞ்சள் வசம்பு முதலியன பூசிக்

கொள்வது போல் பூசிக் கொண்டிருந்தனர். இவற்றைஇன்றும் கிராமாந்தரங்களிலும் எளிய மக்களிடத்தும் காணலாம். நாகரிக முறையிலீடுபட்டுள்ளோர் பவுடர் சோப்-வாசனைத் திரவியங்களை உபயோகிப்பர். ஆண் மக்கள் தலையில் பட்டுத் துண்டு கட்டுவதையும், இடுப்புவரைக் கோட்டு அணிவதையும் இடுப்பில் லுங்கி தரிப்பதையும், காலில் மேஜோடு பூட்ஸ் போட்டுக் கொள்வதையும் காணலாம்.

இந்நாட்டின் வீடுகள் யாவும் மரங்களினால் அமைக்கப் பெற்றிருக்கும். பெரும் நகரங்களில் இந்நாட்களில் பொருளாளர்கள் செங்கல் மலைக் கற்கள் முதலியவற்றால் வீடுகளமைக்க முற்பட்டு விட்டனர்.

பர்மியப் புங்கிகள் ஊர்வலம்.

இவர்களின் கோயில்களும் புங்கி மடங்களும் மரச் செதுக்கு வேலைகளினால் மிக்க நுட்பமாகவே அமைக்கப் படுகின்றன. இவைகளின் கூரைகள் ஒன்றின்மே லொன்றாய்ப் பல தட்டுகள் கொண்டவையாகும். பொன்ரேக்குகளினால் ஒட்டப் பட்ட சிறப்புகளைக் கொண்டிருக்கும். இம்மடங்களிலும் கோயில்களிலும் வசிக்கும் புங்கிகள் நகர மக்களினால் போற்றப்பட்டிருப்பர். தலை முழுமையும் மொட்டை யடித்தவர்களாகவும், வலது கை வெளியே தெரியவும் இடது கை மூடியிருக்கவும் கூடிய முறையில் மஞ்சள் அங்கவஸ்திரம் தரித்தும், இடையிலும் அவ்விதவர்ண உடையணிந்தும் இருப்பர். பலர் பாலிபாஷையில் பெரும் படிப்பாளிகளாகவும் தியாகிகளாகவும் இருப்பர். அதிகாலையில் தமது உணவுக்கு வேண்டிக்கூட்டம் கூட்டமாகக்கறுப்பு மரப்பானையை ஏந்திக் கொண்டு வீதி வீதியாகச் செல்வர். பெண்மக்கள் இவர்களுக்குப் புது உணவு அளித்து உபசரிப்பர்.

இவர்கள் உணவு யாசக விருத்தியில் அமையும் போது பேசுவதில்லை. அளித்தவர்களுக்கு ஆசீர்வாதம் முதலியன கொடுப்பது மில்லை. காசு பணப் பிச்சை யெடுக்க முற்படுவது மில்லை. ஒருவர் பின் ஒருவராய்ப் பலமக்கள் வரிசையாக ஏகுவது ஒரு கண் காட்சியாகவே இருக்கும். இக் காட்சியை அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன் தான் காணலாம். பெண்மணிகள் இவர்களை உபசரிப்பதற்கென அதிகாலையில் எழுந்து உணவு தயாரித்து வைத்துக் காத்துக் கொண்டிருப்பர். புங்கி மடங்கள் பிள்ளைகளின் பாடசாலைகளாகவே அமைந்திருக்கும். பெண் புங்கிகள் காவி உடை அணிந்து தலை மொட்டை யடித்தவர்களாக இருப்பர். புங்கி மடங்கள் பள்ளிக்கூடங்களாகச் சிறுவர் சிறுமிகளுக் கிருப்பதுடன் வெளியார்களுக்குத் தங்குமிடமாகவும் இருக்கும். பையாவென்பது கோயில்களாக அமைந்த பூசைத் தலமாகும். இரங்கோனில் ஷ்டேகான் பையா (கோயில்)

தான் சிறந்தது. இதில் ஒரு பெரும் வெண்கல மணி உள்ளது. இக் கோயிலில் உள்ள பௌத்த விக்ரக தெரிசனத்திற்குச் சென்றால் இருபுறமும் பெருந்தூரம் புஷ்பம் மெழுகுவத்தி ஊதுவத்தி பலவகைப் படங்கள் உணவுகள் சிற்றுண்டிச் சாலைகள் பொலிந்து விளங்கக் காணலாம். பிச்சைக்காரர்களும் இக்காலத்தில் பெருகி வருவது ஒரு விபரீதமாகவே உள்ளது. கோயிலைச்சுற்றிப் பெரும் அகழ் அமைந்து இவ்வமயம் தூர்க்கப்பட்டு

Great Bell - Shwe Dagon Pagoda, Rangoon.

வெண்கல மணி.

விட்டது. இரங்கோனில் பர்மா யுத்தம் நடந்த சமயம் இக்கோயில் பர்மியர்களின் தங்குமிடமானதினால் இக்கோயிலைச் சுற்றி யிருந்த மதில்கள் தகர்க்கப்பட்டு விட்டன. பல அழகிய தடாகங்கள் மீன்களையும் ஆமைகளையும் கொண்டுள்ளன. இரங்கோனில் சூளை பையா கோயில் இதற்கு இரண்டாவதெனக் கூறலாம். தென் காண்சிக்கு அருகிலுள்ள ஒரு பையாவும் சிறந்ததாகும். இங்கு பௌத்தமத புத்தகங்கள் பாலிபாஷையில் பெரும் வெள்ளைக் கற்களில் செதுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. ஷ்வேடகான் பையாவில் உள்ள வெண்கல மணியும் பல எழுத்துகள் கொண்டுள்ளது.

இப்பையாக்களைப்போல சைலா, மோல்மீன், ஈக்தட்டா, பக்கோ சகாயிங், புரோம், புகான், பாமோ, மாந்தளே முதலிய இடங்களிலும் கோயில்கள் மிக்க அழகுவாய்ந்தன, சில பண்டைய சிறப்புகளைக் கொண்டுள்ளன. இக் கோயில்களின் விக்ரகங்கள், மணிகள், கோட்டை வாயில்கள் முதலியன மிக்க விநோதமெனவே கருதப்பெறும். மேல்நாட்டினரும், உள்நாட்டினரும் அடிக்கடி யாத்திரை புரிந்து கண்டுகளிப்பர். மேல்நாட்டினர் இந்நாட்டைக் கோயில் மிகுந்த நாடெனக் கூறுவதற்கு இவையே காரணமாகும். ஆண்களைப்போல் பெண்களும் கோயில்கள் சென்று கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவர். இவர்களும் சிறந்த பக்திமான்களும் கல்விமான்களுமாகவே இருப்பர். எழுதப் படிக்கத் தெரியாத பர்மியப் பெண்களே பர்மாவில் இல்லையெனக் கூறலாம். மின்டன் அரசர் பர்மாவை ஆண்டகாலத்தில் மாந்தளே தலைநகர மாகியது. இந்நகரத்தின் கோட்டை நற்சதுரமாக ஒன்றேகால் மைல் ஒவ்வொரு பக்கமும் நீண்ட மதில்களையும் ஆழ்ந்த அகழ்களையும் இடையிடையே மரப் பாலங்களையும், அடுத்த குன்றின் மீது ஒரு பெரும் கோயிலையும் கொண்டு ஒவ்வொருவர் கண்ணையும் கவரும் இயல்புகளை வகிக்கப்பெற்றுள்ளது. மின்டன் அரசரின் பின் தீவாமன்னரின் காலத்தில் மாந்தளே கொலைக்களமாக இருந்ததெனவும் கூறலாம்,

மாந்தளே நகரம் ஆங்கிலேயர்களுடைய ஆட்சியின் கீழ் வரவே டிராம் வண்டி, இருப்புப்பாதை நிலையம், மின்சார விளக்கு, விசிறிமுதலிய சௌகரியங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், தபால், தந்தி, வங்கி முதலியவைகளாலும் சிறந்துள்ளது. பண்டைய மன்னர் காலத்தில் பர்மியப் பெண்களின் உடை நாகரிகம் மாந்தளேயிலிருந்துதான் வெளியானதென்பர். இவ்வமயம் பர்மியர்களின் நகை, உடை, நடை நாகரிகம் முதலியன இரங்கோனிலிருந் துண்டாகின்றன.

எனவே அரசன் அரசி என்பார் ஆதரித்த நாகரிகம் இந்நாட்களில் பொருள் படைத்தோர் சொல்லும் வீணாடம்பரங்களிலிருந்து வளர்கின்றன. இச்சமயத்தில் சில குடும்பத்தினர்கள் மாறுதல்கள் செய்ய முயன்று, நாகரிகத்தில் பெண் மக்கள் மயங்கிப் பொருளை வீண் விரயம் செய்யலாகாதென செல்வவந்தர்களின் குடும்பப் பெண்கள், "நகையொழித்தல்" என்ற சங்கம் அமைத்து முற்பட்டு வருகின்றனர்.

மாந்தலேயிலிருந்து ஐராவதி ஆற்று யாத்திரை மிக்க சிறந்த கண்காட்சியைக் கொண்டுள்ளது. இவ்வாற்றில் கப்பல்கள் ஓடுகின்றன. சகாயன் என்ற பண்டைய பர்மாவின் தலைநகரம் இவ்வமயம் பாழடைந்திருப்பினும் கண்காட்சிகள் பலகொண்டுள்ளது. இதற்கடுத்தாப்போல் அமராபுரா வென்ற இன்னுமொரு பண்டைய பர்மாவின் தலைநகரமும் உள்ளது. இங்குள்ள கோயில்கள் (பையாக்கள்) மிகச்சிறந்த வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளவையாகும்.

இங்கு சுமார் பன்னிரண்டு அடி உயரமான புத்தபிரானின் சிலை பொன் ரேக்குகளினால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. இதற்கடுத்தாப்போல் பாகான் என்ற ஒரு பண்டைய தலைநகரமுள்ளது. இந்நகரம் பாழடைந்திருப்பினும் பதினோரு மைல் விஸ்தீரணத்திலுள்ளது. ஆனந்த பையா சுமார் எண்ணூறு வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட பெரும் கோயிலாகும். பர்மாவின் கிராம அமைப்புகள் பெரும் விநோதமாகவுள்ளன. சில கிராமங்கள் மரம் அடர்ந்த வனங்களின் இடையில் கிடக்கும்; பல கிராமங்கள் ஆற்றங் கரையோரங்களில் அமைந்து மிருக்கும். இந் நாட்களில் இருப்புப் பாதை அருகிலும் பல கிராமங்களுள்ளன. பர்மா கிராமங்களில் எருமைகள் விவசாயத்திலும் வண்டிகளிலும் உபயோகிக்கப் பெறும்.

அடர்ந்த வனங்களில் வசிக்கும் சாதியார்கள் பலருளர். இவர்கள் நாகரிகமற்ற சாதியார்களாக இருப்பினும் விவசாயம் முதலியவைகளில் சிறப்புற்றவராகவும் அழகுவாய்ந்தவர்களாகவும் இருப்பர். தானிய விளைவு பொருள்களில் நெல் மிக முக்கியமானது. இவ் விளைவு தண்ணீரிடையிலேயே பெருகும். அறுவடை காலம் ஓட வசதிகளினால் அமையும். கணுக்கால் தண்ணீரில் உழவுகள் ஏற்படும். எனவே எருமைகள் பெரும் உதவியளிக்கும். காய்ந்த நிலங்களில் எருதுகளை உழவில் உபயோகப் படுத்துவர். சில கிராமங்களில் யானைகளை உழவி

ஒரு பர்மியப் பெண்.

லும் ரம்பச்சாலைகளில் பெரும் மரங்களை இணைப்பதற்கும் உபயோகிப்பர். சில பாகங்களில் விதை விதைப்பர். பெரும்பான்மையோர் நாற்றுகளையே நடுவர். விவசாயத்தில் குடியேறும் தமிழர்கள் மிகச் சிறந்தவர்களாவர். ஏராளமான நெல் விளைவுறுவதினால், நெல் மெஷின்களும் ஆயிரக் கணக்காய்ப் பெருகியுள்ளன. அறுவடையான

வியாபாரிகள் கவனிக்க.

—The Goodyear News.

மோட்டார் டயர் வியாபாரிகளான குட் ஈயர் கம்பெனியார் இந்தியாவில் விளம்பரஞ் செய்யும் பத்திரிகைகளின் தலைப்புக்கள் இதிலிருக்கின்றன. தமிழ்ப் பத்திரிகைகளில் 'குமரன்' மட்டுமே இருப்பதைக் காண்க.

தும் நெல்அரிசியாகி ஏற்றுமதியாகி விடும். பர்மியர்கள் கூத்துகள் விழாக்கள் அமைப்பதி லீடு பட்டுவிடுவர். இக் கூத்துக்கள் புவே எனப் பெறும். இப் பர்மியர்கள் சங்கீதத்திலும் பெரும் பாத்திரமாகக் கூடை பானைகள் முதலியன பின்னி தயாரித்து விடுவர். ஒருவித அரக்கை மேல் பூசி சாயம் இட்டுவிடுவதால் ஒழுக்கு ஏற் படாதிருக்கும். கிணறு, கேணி, ஓடை

எருமை வண்டி.

இன்பம் கொண்டுள்ளனர். புவே என்ற கூத்துக்களில் பெரும் தோற் கருவிகளையும் வெண்கலத் தாளங்களையும் கொண்டு நடப்பர். ஆண் பெண் இரு திறத்தினர்களும் ஈடு பட்டிருப்பர். சாதிய புவேயில் கூத்தினர்கள் அதிகமாக இருப்பர். இக் கூத்துக்கள் இரவுகளிலேயே நடக்கும். பர்மியர்களின் விழா நாட்களில் புவேக்கள் அமையினும் அதிகமாகக் கூடி புத்த ஆராதனையில் ஈடு படுவர். பலவகை சாமான் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் சூதாட்ட நிலயங்கள் பெருகும். குதிரைப் பந்தயங்களில் பர்மியர்கள் பைத்தியம் கொள்வது போல் இதர சூதாட்டங்களிலும் மிக மும்முரமாக ஈடுபடுவர்.

நெல் விளைவு அதிகமாகப் பர்மாவில் உள்ளது போல் பலவகை மூங்கில்களும், கமுகுகளும் வெற்றிலை தினுசுகளும் பெருகியுள்ளன. சில மூங்கில்கள் ௬௦, ௭௦ அடிவரை உயரமாக வளரும்; இரண்டு மூன்று அடி சுற்றளவு உள்ளதாகவிருக்கும். இங்கு வீடுகள் மூங்கிலிலேயே கட்டப் படுகின்றன. மூங்கில் பாய்கள் சுவர்களாகவும், தடுக்குகள் கூரையாகவும் ஏற்படுவர். மூங்கில் முதலியவைகளில் தண்ணீர் இறைக்க மூங்கில் பாத்திரங்களையே உபயோகிப்பர். பன்றி, நாய் கோழி, வாத்து முதலியன வளர்ப்பதில் பர்மியர்கள் மிகச் சிறந்தவர். பர்மியர்கள் ஆடுமாடு எருமை முதலியவற்றின் மாமிசங்களைப் புசிக்கப் பின்வாங்காதவர்களாக இருப்பினும், கொழுந்து இலைகள் யாவற்றிலும் பெரும் வாஞ்சையுடையவர். மீன்களை அழுகவைத்துப் புழுக்களாடிக் கொண்டிருக்கும் நிலைமையில் அதை நப்பி என அருந்துவர். பச்சை குத்திக்கொள்வதில் பர்மிய கிராமத்தினர்கள் பெரும் ஆசை கொண்டவர். ஆண் பெண் இருவரும் மார்பு, முதுகு, கை, புஜம் இடுப்பிலிருந்து முழங்கால் வரையிலும் பச்சை குத்திக்கொள்வர்.

பர்மாவின் காடுகள் மிக்க அடர்ந்ததும், யானை புலி, கரடி, பாம்பு, மான் காட்டுப்பன்றி, பெருங் குரங்கு முதலியவைகளுக்கு இருப்பிடமாகவும் இருக்கும். தேக்கு, பிங்கடோ, இன்ஜீன், படாக் பலா, மா, முதலிய மரங்கள் ஏராளமாக உண்டு. பலவகைப் புஷ்பங்கள் காட்டு வர்க்கங்களாகவே அடர்ந்து நறுமணம் வீச மலர்

ந்து இயற்கை வனப்புக் கொண்டுள்ளன. இனிய குரல்களுடைய சிறு பட்சிகளும் மைனு, கிளி, குயில் முதலியனவும் பெருகி உள்ளன. இக்காடுகளில் வசிப்போர்கள் பேய் பிசாசுகளில் பெரும் நம்பிக்கை கொண்டிருப்பவர். இவர்களில் ஒரு சார்பார் மனிதர்களைப் பலியிட்டு உண்டு விடுவதில் மூழ்ந்து கிடந்தனர். இக் கொடிய பாமர வழக்கத்திலிருந்து விடுபடச் செய்வான் வேண்டி பிரிட்டிஷ் அரசியலும் முயற்சிகள் கொண்டுள்ளது.

பர்மாவின் முக நதியாக ஐராவதி உள்ளது. பெரும் வியாபாரம் பாய்க்கப்பல்கள் புகைக் கப்பல்கள் வாயிலாக நடைபெறும்; வியாபாரப் போக்குவரத்து வசதிகளை இவை அமைக்கின்றன. சில இடங்களில் இந் நதி பெரும் தீவுகளை மத்தியில் கொண்டு மிதமிஞ்சிய அகலத்திலும் சில இடங்களில் குறுகியும் உள்ளது. புரோமிற்கு மேல் மிக்க அழகிய கரை ஓரங்களைக் கொண்டுள்ளது.

பர்மா ௨௦௦ ௦௦௦ சதுரமைல் சுற்றளவில் ௧௨௦௦ மைல் வட தெற்கு எல்லையிலும், ௬௦௦ மைல் கீழ் மேற்கு எல்லையிலும் கொண்டுள்ளது. சதுர மைலுக்கு ௬௦ மக்கள் விகிதத்தில் ஒருகோடி இருபது லட்சம் மக்கள் வசிக்கின்றனர். மண்ணெண்ணெய், சிகப்புக் கற்கள், தகரம், இரும்பு, கண்ணும்பு, உப்பு, மரம், நெல், ஆகியவற்றை விளை பொருள்களாகக் கொண்டுள்ளது. வெள்ளி வேலை, மரச் செதுக்கு வேலை, யானைத் தந்த வேலை, பட்டு நெய்தல், பானை செய்தல், அரக்கு வேலை, சுருட்டு சுருட்டுதல், குடை செருப்பு செய்தல், மணிகள் வார்த்தல் முதலிய கைத்தொழில்களில் சிறப்புவாய்ந்தது.

பர்மா, மேல் பர்மா கீழ் பர்மாவென பிரிக்கப் பட்டிருக்கிறது. கீழ் பர்மாவில் ௨௨ ஜில்லாக்கள் ௫ டிவிஷன்களில் அடங்கியும், மேல் பர்மாவில் ௨௧ ஜில்லாக்கள் ௬ டிவிஷன்களில் அடங்கியும் உள்ளன. டிவிஷன்களில் கமிஷனர்களும், ஜில்லாக்களில் டிபுடி கமிஷனர்களும் சப் டிவிஷனல் ஆபீஸர்களும், மயூக்குகளும் தலைமை வகிக்கின்றனர். சிற்றரசர்கள் சவாப்புவாக்கள் என ௬௭ நபர்கள் கப்பங்கட்டுகின்றனர்.

பர்மாக் குதிரைகள் மிகச் சிறந்தவை. நாட்டுப் புறங்களில் இரண்டுசக்கிரக் குதிரை வண்டிகளில் ஐந்து ஆறு நபர்கள் அமரக்காணலாம். இரங்கோனில் நாலு சக்கர வண்டிகளில் மூவர்தான் உட்காரலாம். மாந்தலே முதலிய நகரங்களில் நால்வர் அமரலாம். ரிக்‌ஷா வண்டிகள்

Tattooing a Burman.

பச்சை குத்துதல்.

தெலுங்கர்களினால் இழுக்கப் படுகின்றன. பஸ்கள் டாக்ஸிகளும் இரங்கோனில் அதிகம். இருப்புப்பாதை வசதிகள் சுமார் இரண்டாயிர மைல் தூரங்களுக்குப் பர்மாவினுள் அமைந்துள்ள. மாந்தலேயிலும் இரங்கோனிலும் டிராம் வண்டிகள் உள. மோட்டார் வண்டிகள் அநேகம். பர்மாவில் இந் நாட்களில் சிறந்த நகரம் இரங்கோனே யாகும். உலகில் துறைமுகங்களில் சிறந்ததாக அமைவதுடன் அழகிய கட்டிடங்கள் அமைந்த நன்னகரமாக இந்தியாவில் சிறப்புற்றும் வருகின்றது. பர்மாவின் எண்ணெய்ச் சுரங்கங்கள் ஏனன்சான் என்ற இடத்தில் ஏராளமாக உண்டு. அங்கிருந்து குழாய் வாயிலாகச் சிரி

யம் என்ற இடத்திற்குக் கொண்டு போய் சுத்தம் செய்கின்றார்கள். கிரியாமில் சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய்கள் பெரும் இரும்புக் கிணறுகளில் தேக்கம் செய்யப் பெறுகின்றன. மெழுகுவர்த்திகளும் பல விதமாகத் தயாரிக்கப் பெறுகின்றன. ஒரு சமயம் இவ் வெண்ணெய்க் கிணற்றில் நெருப்புப்பற்றிப் பெரும் சேதம் விளைந்தது.

பர்மியர்களின் பாஷை இமயமலைச் சார்பு பாஷையுடன் ஒலி ஒற்றுமை கொண்டுள்ளதென்பர். ஏனைய பலர் இப்பாஷையை திபெத்து பாஷையுடன் இணைப்பர். சிலர் இப் பாஷை மேல்சீனத்தினுடன் ஒற்றுமை கொண்டுள்ளதென்பர். எனினும் இப் பாஷையினர்கள் தம்மை இந்தியாவின் சூரிய வம்ச பரம்பரையினர்களாகவே கருதுகின்றனர். ஆயினும் ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவில் ஆரியர் படையெடுப்பு ஏற்படுமுன்னர் கங்கைநதி முகத்துவாரங்களில் மியம்மா பாஷை பேசிக்கொண்டிருந்த வம்சத்தினர்களுடையதென்பர். இருப்பினும் ஆதி பர்மியர்களை இந்துக்களெனவோ அல்லது பௌத்தர்களெனவோ கூறுவதற்குமில்லை. எனவே தலயங்கர் என்ற வகுப்பினர்களிடமிருந்துதான் பர்மியர்கள் ஏற்பட்டனரென்று கருதலாம். பௌத்தமத உணர்ச்சி பர்மியர்களுக்குத் தலயங்கர் வாயிலாகத்தான் கிட்டியது.

பர்மியர்கள் தேக சிரமமில்லாமல் கிடைத்ததைக்கொண்டு திருப்தி யடையும் குணாதிசயமுடையாரென ஆங்கில நூலாசிரியர் கூறியுள்ளார். உல்லாசப் பிரியர்களாகவும் தம்இஷ்டப்படி இருக்க விரும்புவோர்களாவும் காணப்படுகின்றனர். ஆயினும் பெரும் சாமர்த்தியசாலிகள். எவர்களுடன் கூட்டுறவு கொள்கின்றார்களோ அவர்களைத் தம் வசமாக்கி விடுவர். இவ்வருங்குணத்தில் ஐரோப்பிய, சீன, யூத முகம்மதிய, இந்து மக்கள் கலப்பு இவர்களிடையே பெருகிவிட்டது. இக் கலப்பில் கலந்து உற்பன்னமாகும் ஆண்கள் தகப்பனைப்போலும் பெண்கள் தாயைச் சார்ந்தும் இருப்பர். கலப்பு விவாகம், விதவா விவாகம், வயதுவந்த விவாகம் முதலியவற்றை ஆதரிப்பர். இளம்பிராய விவாகத்தைக் கண்டிப்பர். சாதிபேதம் வகுப்புப் பிரிவினை பர்மியர்களிடையே கிடையாது. கல்விநிலை மிகச் சிறப்புற்றுள்ளது. புங்கி மடங்கள் இவர்களின் கல்வி நிலையங்களாகும். சுமார் ௯00 ஜனங்களுக்கு ஒரு புங்கிமடமாக பர்மாவில் சுமார் ௪௨௭௧ புங்கி மடங்களுள்ளன. ஒவ்வொரு பர்மியனும் மஞ்சள் உடை உடுத்து புங்கிமடத்திலிருந்தே தீரவேண்டும். இச் சடங்கு பெரும் ஆர்ப்பாட்டத்தில் அமையும். இச் செலவுசெய்யக் கூடாதவர்கள் மடத்தின் ஊழியர்களாகுதல் வேண்டும். எழுதப்படிக்கத் தெரிந்தபின்னர் இல்லம் திரும்பலாம், அல்லது புங்கியாகி விடலாம்.

இரங்கோனில் மிக அழகிய ஏரி ஒன்றுள்ளது. அடிக்கடி கவர்னர் வரவேற்பிலும் வைஸ்ராய் விஜயங்களிலும் தீபோற்சவம் இங்கு நடைபெறும். இத்தகைய ஏரி இந்தியாவில் கிடையாதென்பது உண்மையாகும். இரங்கோனில் ஜெனரல் ஆஸ்பத்திரியும் அவ்வளவு விமரிசைகொண்டே யுள்ளது. கிருஸ்து கோயிலும் உயர்ந்த சிகரம் கொண்ட பெரும் கட்டிடமாகும். இரங்கோனிலிருந்து இந்தியாவுக்கு அடிக்கடி யானைகள் ஏற்றுமதியாகும். இந்தியாவைப்போல் யானைகளைப் பர்மாவில் போற்றுவார் கிடையாது. மரங்கள் அறுபடும் ரம்பச்சாலையில் யானைகள் வேலைசெய்யும். வனாந்திரப்பாகத்தில் உழவிலும் உபயோகிக்கப் பெறும். இரங்கோன் பல அழகிய வீதிகளைக் கொண்டிருப்பினும் மொகல் வீதியில்தான் தனவைசியர்களின் கடைகளும், வைரம், பவுன், வியாபாரிகளான குஜராத்திகளும் பெருகிக்கிடக்கின்றனர். வண்டிக்கணக்கான பட்டாசுகள் நாட்டுக்கோட்டையினர்களினால் புகையாக்கப்படும்; லட்சக்கணக்கான மின்சாரவிளக்குகள் அமைத்து குஜராத்திகள் மின்சாரக் கம்பெனிக்கு வருடம் ஒருமுறை உதவிபுரிவர். இரண்டு சிகரங்கள் கொண்டுள்ள கட்டிடம் சூரத்தியர்களின் பள்ளிவாயிலாகும். இதற்குக் கிட்டத்தட்ட எதிர்த்தாப்போல் ஆறு அறை முருகப்பெருமான் திருக்கோயிலுள்ளது. இங்கிருந்து பசுமந்தானிற்குத் தைப்பூச சமயம் வெள்ளி ரதம் ஊர்வலமாவது இப்பக்கத்தில் இணையில்லாத காட்சியாகும்.

ஒரு பறவையின் சிந்தனை.

திருவனந்தபுரம் திரு. எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை.

(முட்டைக்கரு)

முற்றுங்கருவாகி—ஒரு சிறு
முட்டையில் வாழ்கையிலே
சுற்றுமுலகெனக்கும்—உருண்டவெண்
தோடாயிருந்த தம்மா (1)

(கூட்டிற்குஞ்சு)

குஞ்சுப்பருவத்திலே —பிறிதொரு
கூட்டி லிருக்கையிலே
விஞ்சுமுலகினையான்—உலர்ந்தபுல்
வீடாகக்கண்டேனம்மா (2)

(சிறகு முளைக்கும் சிறுபறவை.)

இறகுமுளைக்கையிலே—பறந்திட
யானும் பழகையிலே
நிறையுமுலகெனக்குத்—தழைகொடி
நேரிடமான தம்மா (3)

(பறக்கும் பெரும் பறவை)

நீண்டவெளிவரவே—உயர்ந்தவிண்
நீலந் தெரிந்ததம்மா
ஆண்டவனன்றி எவர்—உலகை
அறிந்திட வல்லாரம்மா? (4)

[முட்டைக்கருவாயிருந்த பொழுது முட்டையினளவாகவும், கூட்டிற் குஞ்சாயிருந்தபொழுது கூட்டினளவாகவும், சிறு பறவையானபொழுது தழைகொடிகளாகவும், பெரும் பறவையாகி வெளியில் சஞ்சரிக்கத் தொடங்கியபின் இன்னதென்றுண்மையறியாதபடி நீல நிறமாகவும் இவ்வுலகம் பறவைக்குத் தோன்றியது. அது போல் மனிதனும் பருவத்துக்கேற்ற அறிவையுடையவனுயிருக்கிறன். உலக அனுபவம் முதிரும் பொழுது உண்மை ஞானம் உதயமாகின்றது.]

மலாய்நாட்டில் ரப்பர் பால் எடுக்கும் விதம்.

மரத்தில் பால் வெட்டுதல்.



பாலில் மாற்றுமருந்து போட்டுப் பக்குவப்படுத்துதல்.



இயந்திரத்தில் கொடுத்துத் தகடாக்குதல்.

கம்பர் சமாதி.

கம்பர் பெருமான் நாட்டரசன்கோட்டையில் உடல் நீத்தாரென்று தெரிகிறது. அவருடைய சமாதி இடம் அவ்வூர்வாசியான செட்டியாரொருவரால் சுமார் முப்பதாயிரம் ரூபாய்க்குமேற் செலவிடப்பட்டு தென்னஞ்சோலை தடாகம் முதலியன ஏற்படுத்தப் பெற்றிருப்பதுடன் நித்தியப்படி ஒரு கால பூசை ஓச்சர் என்பவரால் செய்யப்படுகிறது. நடுகல் மட்டுமே ஊன்றப்பட்டிருக்கிறது. விக்கிரகம் எதுவுமில்லை. நாட்டரசன் கோட்டை யென்னும் ஊர் சிவகங்கையிலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்திலுள்ளது. நாட்டுக்கோட்டையார் வசிக்கும் ஊர்களுள் இதுவும் ஒரு முக்கியமான ஊராகும். இவ்வூரில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பிறந்தவுடன் கம்பர் சமாதியிலிருந்து சிறிது மண் கொண்டுவந்து தண்ணீரில் கரைத்துக்கொடுப்பது வழக்கமாக இருக்கிறது.

கணித சாஸ்திர விநோதம்.

'நெல்லை நேசன்'

உன் வயது என்ன?

ஒரு நாள் ஓர் அரசனது அரண்மனைக்கு ஒரு பெரியவர் வந்தார். அவர் பல விஷயங்களைக் குறித்து அரசனோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அரசனுக்குத் தெரியாத சில விஷயங்களை அவர் எடுத்துரைத்தபோது அவன் மகிழ்வெய்தினான். சம்பாஷணையினிடையே, அரசன் அப்பெரியவரது வயதை அறிந்து கொள்ள விரும்பினான். ஆனால் பெரியவரது வயதை நேராகக்கேட்டறிவது தகுதியாகாதெனக் கருதிய அரசன் ஒரு வகையான கணித முறையால் அதை அறிந்து கொள்ள விரும்பினான்.

அரசன்:— பெரியவரே! நான் விநோதமான ஒரு கணககு வைத்திருக்கிறேன் அது ஒரு மனக்கணக்கு. தயவு செய்து, பன்னிரண்டு மாதங்களில் நீங்கள் பிறந்த மாதத்தின் எண்ணை மனத்தில் எண்ணிக்கொள்ளுங்கள்.

இப்போது பெரியவருக்கு வயது அறுபது. அவர் பங்குனித்திங்களில் பிறந்தவர். எனவே அவர் 'பன்னிரண்டு' என்னும் எண்ணை எண்ணிக்கொண்டார்.

பெரியவர்:— அரசே! நீங்கள் விரும்பியபடி எண்ணிக்கொண்டேன்.

அரசன்:— அதை இரண்டால் பெருக்குங்கள்.

பெரியவர்:— அப்படியே.

அரசன்:— ஐந்தைக்கூட்டுங்கள்.

பெரியவர்:— ஆம்.

"இப்பொழுது 50-ஆல் பெருக்குங்கள்"

"ஆம்"

"உங்கள் வயதைக் கூட்டுங்கள்"

"ஆம்"

"365-ஐக் கழியுங்கள்"

"ஆம்"

"115-ஐக் கூட்டுங்கள்"

"ஆம்"

"இப்பொழுது முடிவாகவுள்ள தொகை இன்னதென்று சொல்லுங்கள்" என்று அரசன் வினவினான்.

"1260" என்று பெரியவர் வியப்போடு சொன்னார்.

அரசன் அவரை நோக்கி "ஐயா பெரியவரே! உமது வயது அறுபது; நீர் பிறந்த மாதம் பங்குனி" யென்றான்.

1260 என்று தாம் கூறிய விடையிலிருந்தே அரசன் வயதையும் மாதத்தையும் கண்டு கொண்டானென்றும், அத்தொகையின் முற்பகுதியான 12 தாம் பிறந்த மாதத்தையும் பிற்பகுதியான 60 தமது வயதையும் குறித்தனவென்றும் பெரியவர் தெரிந்து கொண்டு இளநகை யரும்பினர்.

சிறுவர்களே! இது ஒரு விநோதமான கணித முறை யல்லவா? பிறர் வயதைக் கண்டுபிடிப்பதற்கு இம் மனக் கணக்கை உபயோகித்துப்பாருங்கள்.

ஒரு தொகையின் அழிக்கப்பட்ட ஸ்தானத்திலுள்ள எண்ணைக் கண்டுபிடித்தல்.

உனது நண்பன் ஒருவனை நாலு அல்லது ஐந்து அல்லது இன்னும் அதிகமான எண்களுடைய ஒரு தொகையை நினைத்துக் கொள்ளும்படி வேண்டிக்கொள்.

நண்பன் 45,938 என்னும் தொகையை நினைக்கிறான் என்று வைத்துக்கொள்வோம்.

குறித்த தொகையிலுள்ள தனியெண்களைக் கூட்டிக் கொள்ளும்படி நண்பனை வேண்டிக்கொள். $4+5+9+3+8=29$ என்று அவன் கணக்கிடுவான்.

ஆதியில் நினைத்த தொகையான 45938 லிருந்து இப்பொழுது வந்த முடிவை (அதாவது 29ஐ)க் கழிக்குமாறு விரும்பு.

$$\begin{array}{r} 45{,}938 \\ 29 \\ \hline 45{,}909 \end{array}$$

என்று நண்பன் நினைப்பான். பிறகு, இவ்வாறு கிடைத்த தொகையின் (ஐந்து) ஸ்தானங்களில் ஏதாவது ஒரு ஸ்தானத்திலுள்ள எண்ணை அழித்துவிடுமாறு வேண்டு. லைபர் அல்லது 'சுன்ன'த்தை மாத்திரம் அழிக்கக் கூடாது என்பதை நண்பன் உணர்தல் வேண்டும்.

உனது நண்பன் முதல் ஸ்தானத்திலுள்ள 4 என்ற எண்ணை அடித்துவிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம்.

எஞ்சிய எண்களைக் கூட்டுமாறு அவனை வேண்டு. $5+9+9=23$ என்று அவன் கூட்டுகிறான்.

இந்த 23 என்னும் தொகையை அவன் உன்னிடம் சொல்லவேண்டும்.

இவ் 23க்கு அதிகமாகவும் அதிக சமீபமாகவும் உள்ள ஒன்பதின் பெருக்கெண் (Multiple)ணை நீ இப்போது நினைத்தல் வேண்டும்.

ஒன்பதின் பெருக்கெண்களாவன:—

$9\times2=18$

$9\times3=27$

$9\times4=36$

$9\times5=45$

$9\times6=54$ முதலியன.

இத்தகைய பெருக்கெண்களில் குறித்த முடிவான 23ஐ அடுத்து அதற்கு அதிகமாகவுள்ள ஒன்பதின் பெருக்கெண் என்ன? $9\times3=27$ என்பது வெளிப்படையன்றோ?

இப் பெருக்கெண்ணை 27-லிருந்து குறித்த 23ஐ நீ கழித்துக்கொள்.

$27-23=4$. இந்த 4 தான் நண்பனால் அடிக்கப்பட்ட எண்ணென்றுநீசொல்லிவிடலாம். நண்பன் வியப்படைவான்.

நண்பன் 23 என்று சொன்னதற்குப் பதில் 22 என்றால் கழித்த எண் (27—22) 5 ஆகும்.

அந்நண்பன் குறித்த முடிவான எண்ணாக 18, 27 அல்லது 36 என்றிவ்விதமாகவுள்ள ஒன்பதின் பெருக்கெண்களில் ஒன்றையே கூறுவானெனின் அவன் அடித்துவிட்ட எண் 9 ஆகுமென்று கூறுவிடலாம்.

இக் கணித விநோதத்தைப் பல நண்பர்கள் வாயிலாகப் பரிசோதனை செய்து பார்ப்பது சிறுவர்களுக்கு நல்ல பொழுது போக்காகும்.

நினைத்த இரண்டு சிறு எண்களைக் கூறுவது.

முதல் ஆறு எண்களில் இரண்டு எண்களை உன் நண்பன் நினைத்துக்கொள்ளுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவ்

விரண்டு எண்களையும் இவையென்று நீ கூறி விட்டால் அது உன் நண்பனுக்கு அதிசயத்தை அளிக்குமல்லவா? இவ்வாறு செய்வதற்கு உபாயம் வருமாறு:—

உன் நண்பன் 5, 3 (ஐந்து, மூன்று) என்னும் இரண்டு எண்களையும் நினைத்துக் கொண்டான் என்று கருதுவோம்.

முதல் எண்ணை இரட்டிக்கச் செய்க என்று வேண்டிக்கொள்.

5 ஐ இரட்டித்தால் அது 10 ஆகும். இதனோடு 5 ஐக் கூட்டுக என்று சொல்.

$$10+5=15$$

5 ஆல் பெருக்குக. $15\times5=75$.

இரண்டாவது எண்ணை இப்போது கூட்டுக.

$$75+3=78.$$

உன் நண்பன் இம்மொத்தமான 78 ஐ உன்னிடம் சொல்லுதல் வேண்டும். நீ இதிலிருந்து அவன் நினைத்த இரண்டு எண்களையும் எவ்வாறு கூறுவது?

மொத்தமான 78-லிருந்து 25 ஐக் கழித்துப்பார்.

$$\begin{array}{r}78\\25\\\hline53\end{array}$$

எஞ்சிய 53 என்ற தொகையின் இடது பக்கத்து எண்ணாகிய 5 என்பது உன் நண்பன் நினைத்த முதல் எண்ணாகும்.

இவ்வாறு நீ சொன்னவுடன் உன் நண்பன் அதிக ஆச்சரியமடைவான் என்பதில் ஐயமில்லை. நீ சந்திக்கும் நேசர்கள் பலர் மூலமாக இக் கணித விநோதத்தைச் சோதித்துப்பார்.

ஓர் கூட்டல் விநோதம்.

ஐந்து ஸ்தானங்களுடைய ஒரு தொகையை ஒரு காகிதத்தில் எழுதுமாறு உன் நண்பனை வேண்டு. இந்தத் தொகையைப் பார்த்துக்கொண்டே வேறொரு காகிதத் துண்டில் நீ ஒரு தொகையை எழுதி அத் துண்டை மடித்து உன் நண்பனிடம் கொடுத்து விடுகிறாய். இத் துண்டைப் பிரித்துப் பாராமல் நண்பன் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு இரகசியமாக வைத்துக்கொள்ளும் தொகையே கூட்டலின் மொத்தமாகும்.

நண்பன் எழுதிய முதல் தொகைக்கு அடியில் ஐந்து ஸ்தானங்களுடைய வேறொரு தொகையை எழுதுதல்வேண்டும். அதற்கு அடியில் நீ அத்தனை ஸ்தானங்களுடைய ஒரு தொகை எழுதுகிறாய்—அதாவது முதல் இரண்டு தொகைகளை நண்பனும், மூன்றாவது தொகையை நீயும் எழுதுதல் வேண்டும். பிறகு நாலாவது தொகையொன்று நண்பன் எழுதுகிறான். அப்பால் நீ ஐந்தாவது தொகையை எழுதிவிடுகிறாய். இப்பொழுது ஐந்து ஸ்தானங்களுள்ள தொகைகள் ஐந்து அமைந்துள்ளன. இவ்வைந்து தொகைகளையும் நண்பன் கூட்டுகிறான். கிடைத்த மொத்தத் தொகையை நீ காகிதத் துண்டில் எழுதிக் கொடுத்த தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறான். இரண்டும் ஒன்றாயிருப்பதுகண்டு ஆச்சரியம் அடைகிறான்.

இந்தக் கணக்கின் மர்மம் நீ எழுதும் மூன்றாவது தொகையையும் ஐந்தாவது தொகையையும் பொறுத்தது தான்.

இவற்றை நீ எழுதும்போது நண்பன் எழுதியுள்ள அடுத்த மேல் தொகையின் ஒவ்வொரு ஸ்தானத்திலுள்ள எண்ணையும் ஒன்பதிலிருந்து கழித்து மிச்ச எண்ணை

உ... ...தொகையில் அமைத்தல் வேண்டும். இவ்வாறு உனது தொகைகளின் ஒவ்வொரு ஸ்தானமும் அமைதல்வேண்டும்.

ஓர் உதாரணம் பார்ப்போம். உன் நண்பன் 16,942 என்று ஒரு தொகை எழுதுகிறுனென்று வைத்துக் கொள்வோம். நீ இத் தொகையின் இடது புறத்தில் ஒரு 2 (இரண்டு) ஐச் சேர்த்து வலது புறத்திலிருந்து ஒரு 2 ஐ (இரண்டை) க் கழித்துவிடு.

நண்பன் எழுதிய முதல் தொகை
16,942

நீ இதிலிருந்து கூட்டி அறிவிக்கும் விடை
2,16,940 என்பது.

இதைத்தான் நீ துண்டுத் தாளில் எழுதிக் கொடுத்திருக்கிறுய்.

இனி இக் கூட்டல் வருமாறு:—

நண்பனது முதல் தொகை	16,942
,, இரண்டாவது தொகை	75,415
நீ எழுதவேண்டிய மூன்றுவது தொகை	24,584
நண்பன் தொகை (நாலாவது)	52,433
உன் தொகை (கடைசியாக)	47,566
மொத்தம் ...	216,940

(இம் மொத்தம் நீ முன் கூட்டி எழுதிக் கொடுத்த தொகையோடு ஒத்திருப்பது காண்க.)

உன் மூன்றுவது தொகை	99,999
(நண்பனது 2-ந் தொகை)	75,415
	24,584

உன் ஐந்தாவது தொகை	99,999
(நண்பனது 4-ந்தொகை)	52,433
	47,566

நீ எழுதும் மூன்றுவது, ஐந்தாவது தொகைகளிலேதான் மர்மம் இருக்கிறது என்பது சிந்திக்கத்தக்கது.

இரகசிய வெளிப்படை:—

இம் மர்மம் என்ன? நண்பன் எழுதிய முதல் தொகை அல்லது மூலத் தொகையோடு நீ 99,999 ஐ இரண்டுதரம் கூட்டியிருக்கிறுய்—அதாவது 99,999 × 2 = 199,99[illegible] என்னும் தொகையைக் கூட்டியிருக்கிறுய்.

இந்த 199,998 என்பது இரண்டுகுறை 200,000 (=200,000—2) ஆகும்.

முதல் தொகையின் இடதுபுறத்தில் 2ஐ சேர்த்து வலது புறத்திலிருந்து 2ஐக் கழிப்பதால், நீ மூலத் தொகையோடு 200,000 என்ற தொகையைச் சேர்த்து விடுகிறுயன்றோ?

பிரமிப்பை அதிகரிக்கும் உபாயம்.

நீ மூன்றுவது ஐந்தாவது தொகைகளை எழுவதற்குப் பதில், மர்மம் தெரிந்த-ஆனுல் விஷயம் தெரியாததுபோல் வெளியே காட்டிக்கொள்ளும் உன் கூட்டாளி யொருவன் குறித்த மூன்றுவது ஐந்தாவது தொகைகளை மேலே காட்டியவாறு எழுதிவிடலாம். நீ அறிந்துகொள்ளாமலே முதலாவது தொகை தவிர, மற்றவை எழுதப்படுகின்றன. முதல் தொகையைமாத்திரம் பார்த்து நீ கூட்டலின் முடிவைச் சொல்லிவிடுகிறுய். இது பிரமிப்பை அதிகப்படுத்துமன்றோ?

உதாரணம்:—

யாராவது ஒருவன் எழுதும் முதல் தொகை	85,312
யாராவது ஒருவனது இரண்டாவது தொகை	33,259

...ன கூட்டாளி எழுதும் தொகை	66,740
யாராவது ஒருவன் எழுதும் தொகை	48,975
உன் கூட்டாளி எழுதும் தொகை	51,024
மொத்தம் ...	2,85,310

முதல் தொகையை (85,312) மாத்திரம் பார்த்ததும் நீ 2,85,310 என்று எழுதிக் கொடுத்துவிடுகிருய்—அதாவது இடபுறத்தில் 2 ஐச் சேர்த்து வலதுபுறத்திலிருந்து 2 ஐக் கழித்துவிடுகிருய். பிறகு கூட்டலைப் பற்றி ஒன்றும் அறியாய். உன் கூட்டாளி ...ஷயம் அறியாதவனைப்போல் பாவனை ...கிருன். ஆனால் அவன் உன் ஸ்தானத்...ருந்து முந்தின தொகைகளையும் எழுதி ...டுகிருன். இதனால் வியப்பு அதிகரிக்கு ...ன்ருே?

கழித்தலும் கூட்டலும்.

மூன்று ஸ்தானங்களையுடைய ஓர் தொகையை ஒருவன் உனக்குத்தெரியாமல் எழுதிக்கொள்ளுகிருன்; ஆனால் கடைசி ஸ்தானத்திலுள்ள எண், முதல் ஸ்தானத்து எண்ணைப் பார்க்கிலும் இரண்டு (2) குறைந்திருத்தல் வேண்டும்.

அவன் 957 என்னும் தொகையை எழுதுகிருன் என்று வைத்துக் கொள்வோம். இத்தொகையின் அடியி... னங்களைத் தலைகீழாக மாற்... வாறு அமையும் தொகை... தொகையிலிருந்து கழித்து... வேண்டு. இங்ஙனம் கழிப்பத... படும் தொகையின் அடியிலே, இதன்... னங்களைத் தலைகீழாக மாற்றி எழுதி... டுதல் வேண்டும்.

உதாரணம்:—

முதலாவது கருதிய தொகை	9...
தலை மாற்றியமைத்த தொகை	75...
கழித்த மீதம்	19...
இந்த 198-ஐத் தலைமாற்றியமைக்க...	
இவ்விரண்டும் கூட்டியது	1089

என்ன தொகைகளை உபயோகித்தாலும் 1089 தான் எப்போதும் முடிவாகக் கிடைக்கும். ஆனால் இந்த விநோதம் விநோதமாவதற்கு, நீ கொஞ்சம் வேடிக்கை செய்யவேண்டும். கணக்கு முடிந்தவுடன் கிடைத்த விடையின் மூன்ருவது ஸ்தானத்து எண் என்னவென்று கேட்க வேண்டும். பிறகு கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்து தியானிப்பதுபோல் பாவனை செய்து பதில் சொல்லவேண்டும். ...லது வேருெரு தொகையைக் குறிப்பிட... அதனையும் கூட்டச்செய்து விடையளி... நன்று.

வயது கணிக்கும் விநோத உபாயம்.

1	2	4	8	16	32
3	3	5	9	17	33
5	6	6	10	18	34
7	7	7	11	19	35
9	10	12	12	20	36
11	11	13	13	21	37
13	14	14	14	22	38
15	15	15	15	23	39
17	18	20	24	24	40
19	19	21	25	25	41
21	22	22	26	26	42
23	23	23	27	27	43
25	26	28	28	28	44
27	27	29	29	29	45
29	30	30	30	30	46
31	31	31	31	31	47
33	34	36	40	48	48
35	35	37	41	49	49
37	38	38	42	50	50
39	39	39	43	51	51
41	42	44	44	52	52
43	43	45	45	53	53
45	46	46	46	54	54
47	47	47	47	55	55
49	50	52	56	56	56
51	51	53	57	57	57
53	54	54	58	58	58
55	55	55	59	59	59
57	58	60	60	60	60
59	59	61	61	61	61
61	62	62	62	62	62
63	63	63	63	63	63

...டு:—எந்தப் பத்தி அல்லது பத்திகளில் ஒருவன் வயது காணப்படுகிறதென்று கேள். ...வன் குறிப்பிடும் பத்திகளின் உச்சியிலுள்ள எண்களைக்கூட்டி வரும் ...கையே அவன் வயதாகும். உதாரணமாக, வயது 36 என்றால், அவன் ... 6-வது பத்திகளைக் குறிப்பிடுவான். அப்பத்திகளின் உச்சியிலுள்ள ... 4 + 32 = 36.

மரன் பவர் அச்சுக்கூடம்.

சிவன்கோயில் மேலவீதி, காரைக்குடி,

உயர்தர அச்சுவேலைகளில் கைதேர்ந்த அச்சுக்கூடம் இதுவே.

குறைந்த கூலிக்கு உயர்ந்த வேலை செய்யும் அச்சுக்கூடம்

இப்பகுதியில் இது ஒன்றே

ஆகையால்

உங்கள் வேலையை எங்களிடம் கொடுங்கள்.

* * *

தமிழிலும் ஆங்கிலத்திலும்

வேலைகள் செய்து திருப்திகரமாய்க் கொடுக்கப்படும்.

கல்யாணம், புதுமைகட்கு அழைப்புப் பத்திரிகைகள், கார்டு,

கவர்கள் பழப்பைகள், முதலியன

பல கலர்களில் விசேஷ வேலைப்பாடுகளுடன்

நாங்கள் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

தேர்ச்சிபெற்ற வேலையாளர்களைக் கொண்டு

வேலைகள் செய்யப்படுவதால்

கண்கவர் வனப்போடு விளங்குகின்றன.

மானேஜர், குமரன் ஆபீஸ் காரைக்குடி.

(பத்திராதிபர்) சொ. முருகப்பனால் காரைக்குடி 'குமரன்' பவர் அச்சுக்கூடத்தில்
அச்சியற்றிப் பிரசுரிக்கப்பட்டது.